உ

பரமபதி துணை.

பதினெண் சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

## விஷ வைத்திய மாந்திரீக

# ஒன்பது ஆரூடம்.

அவையாவன

1. கெருடாரூடம்
2. ஷ பஞ்சாட்சர ஆரூடம்
3. சத்தியாரூடம்
4. சிவாரூடம்
5. தேவியாரூடம்
6. நாகாரூடம்
7. சித்தராரூடம்
8. சர்ப்பாரூடம்
9. மந்திராரூடம்

இவை

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப் பெற்றது.

1922

இதன் விலை] Registered Copy Right [ரூ 2-[illegible]-0

உ

குமரன் றுணை,

தன்வந்திரிபகவான்

திருவாய்மலர்ந்தருளிய

# கெருடாரூடம்.

இஃது

கல்லிடைக்குறிச்சி சிவராமகிருஷ்ணபிள்ளையவர்கள் குமாரர்

சங்கரலிங்கம்பிள்ளையவர்கள்

மதுரைத் தாலூகா பிராட்டிபத்து கிராமத்திலிருக்கும்

ப. திருமலைமுத்துப்பிள்ளையவர்கள் குமாரர் உபாத்தியாயர்

கருப்பையா பிள்ளையவர்கள்

விருப்பத்தின்படி;

மதுரை வித்வான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

இ. ராம.

குருசாமிக் கோனர்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசி வீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1922.

*Registered Copy Right.*

உ

பரமபதிதுணை

தன்வந்திரி பகவான் றிருவாய்மலர்தருளிய

# கெருடாரூடம்

காப்பு

அருளே வடிவா யுலகீன்ற அம்மை யுமைத்தாய் பதம்போற்றி
பொருளாஞ் சிவன்மால் பதம்போற்றி புனித முருகன் றாள்போற்றி
மருவா மூலா தாரத்தின் வாழுங் கணேச னடிபோற்றி
திருவார் கெருடா ரூடத்தைச் செகத்தோ ரறியச் சொல்லுவனே.

ஆதி யுமையாட் கிறையவன்று னருளுங் கெருடா ரூடமிது
வேதம் புகழும் நந்தீசர் வினவிச் சிவனா ரருள்பெற்றே
ஓது முலகீ டேறுதற்கா யுகந்தே யென்னை யருகழைத்து
சோதித் துபதே சித்ததையுஞ் சொல்வேன் தன்வந் திரிநானே. (2)

அனந்தன் தக்கன் வாசுகியே அருளார் சங்க பாலனுடன்
இனந்தா னாக வளர்குளிக னியலும் பதுமன் மஹாபதுமன்
வனந்தா னுயர்ந்த கார்க்கோடன் வழுத்து மட்ட நாகங்கள்
கனந்தா னுயரோர் சேடனொடு கணக்கொன் பதுபே ரரவுகளே. (3)

ஆடு மிப்பே ரரவுகளி னமிச மாக வுலகமதில்
நீடும் பாம்பு பற்பலவாய் நிகழு மவற்றின் வகைதொகையா
நாடும் நல்ல பாம்பென்றும் நவிலும் படுநா கங்களென்றும்]
ஓடுங் கொடிய விரியனென்றும் உரிய புடைய னெனும்பலவே (4)

நல்ல பாம்பி னினங்களைத் தாம் நாடின் மறையோ னரசனுடன்
வல்ல வணிகன் சூத்திரனா வழுத்தும் நான்குஞ் சுத்தகுலம்
சொல்லு மவைதாங் கடித்தாக்கால் தும்பை மேனிச் சாறுழக்கில்
வெல்லுங் கருடன் வேர்களஞ்சிவிடம்போ மரைத்துக் கொடுப்பாயே

நகையா மல்வாய் பேசாமல் நசிமசி சுவாஹா வெனவேதான்
மகிழ்வாய் நூற்றெட் டுருச்செபித்து வளர்வெள் ளெருக்கின் சாபந்தீர்

புகலு மதன்பின் னிலைபறித்துப் போற்றி மிளகோர் களஞ்சியுடன்
சுகமா யரைத்துக் கொடுக்கவிடந் தொலையு மறைவா விதுசெய்யே.

நாகப் பாம்பு நாலுவகை நவிலு மவைதாங் கருநாகம்
வேக முறுசெந் நாகமொடு மிகவே தெடிதா மாநாகம்
ஏகுங் கொடிய பூநாக மெனுமா மவைகள் தாங்கடித்தால்
ஆகு முயிர்தான் மயங்கிவிடும் அதற்கு மருந்து கேட்பீரே. (7)

வேப்பி னரிசி சுத்திசெய்த வெள்ளைப் பாஷா ணந்துருசு
சாப்பா மிரதங் கெந்திபெருங் காயஞ் சுத்தி நேர்வாளம்
தாப்பா யுயர்ந்தமனோசிலையுஞ் சமனுக்காற்காற் பலம்வாங்கி
கோப்பா யெருக்கம் பால்விட்டுக் குறிப்பாய்ச் சாம மரைப்பாயே.()

அப்பால் நிம்ப நெய்யதனி லரைப்பாய் சாம மதைச்சிமிழில்
வைப்பா யிதுவே விஷமையாம் மைந்தா உழுந்துப் பிரமாணம்
கைப்பா கத்தால் வெற்றிலை கனிவாக் கொடுக்க விஷமிறங்கும்
உப்பா புளியா வாகாது ஒருவா ரத்திற் கறிந்துகொள்ளே (9)

பாசிப் பயறு பச்சரிசி பசுப்பால் மூன்றுஞ் சேர்த்தாக்கி
நேசித் தருந்தக் கொடுத்திடுநீ நிகழு மூன்று நாள்களுக்கு
பூசிப் பாக வதன்பின்பு புகழும் பசுவின் மோருடனே
ஆசிப் பாக உப்பின்றி அன்னங் கொடுத்து வருவீரே. (10)

வேறோர் மார்க்கங் கேள்மைந்தா மிளிர்செம் பருந்தின் கண்பித்தும்
பேறோர் கீரிக் கண்பித்தும் பேய்ப்பீர்க் கிசங்கு சிங்கியுடன்
போறு டுண்ணு மூலிதிசைப் பூடு சுருளி வேர்சமனும்
ஏறோர் துரிசி காந்தமிள கிரதங் காயங் களஞ்சிகொண்டே. (11)

ஆட்டி நிம்பத் தயிலத்தி லழகா யுண்டை செய்துலர்த்தி
ஓட்டில் தளிர்வெற்றிலைச்சாற்றி லுரைத்தஞ் சனந்தான் தீட்டிடவே
நாட்டிற் கொடிய விடங்களெல்லாம் நண்ணு தோடம் விடதாரி
மீட்ட வாயு மந்திரந்தான் மிகவே செபித்தாற் றீர்ந்திடுமே. (12)

கொடிய விரிய னறுவகை கொள்ளி வாயன் படுவிரியன்
வெடிவாய்ச் சுருட்டை விரியன்செவ் விரியன் பொல்லான்பெருவிரியன்
செடிவா யிவைதாங் கடித்தாக்கால் சித்தர் மூலத் தூளைவெரு
கடியான் பாலில் மூன்றுதரங் கரைத்துக் கொடுக்கத் தீர்ந்திடுமே. ()

அவுரி வேரு மிளகுமொன்று யாவின் பாலி லரைத்தருந்தக்
கவிஞர் மூன்று வேளைதரக் கடிவாய் விட்டு விடம்போகும்
கவிலும் விஷந்தீர்க் தாலும்மெய்தான் நலிய வீக்கங் கண்டிருந்தால்
சிவமா ரெருக்கம் பாற்சாணஞ் சேர்த்துப் பூசத்தீர்ந்திடுமே. (14)

எருக்கம் பாலில் நாயுருவி யியலும் நீலி தக்காளி
வருக்க மாமுச் செடியின்வேர் வாங்கி யரைத்துப் பூசிடவே
இருக்கா தேரடும் வீக்கந்தா னினியோர் மணத்தக் காளியுடன்
வெருக்காத் தக்கா ளியுங்காடி விட்டே 'யரைத்துத் துவாலையிடே.

விரியன் கடிப்புண் ணாறுதற்கு விளம்பும் உள்ளி வசம்புசுக்கு
சரியா நிறுத்துச் சிற்றெலியின் சதையுஞ் சமன்சேர் நிம்பநெய்யிர்
புரிவாக் காச்சி யெண்ணெய்புண்ணிற் போட்டு வரத்தா னாறிவிடும்
அரிகோ ழியினீ ரலைக்கடிவா யணைக்கப் புணுக ளாறிடுமே. (16)

சீறும் புடையன் நால்வகையாம் திமிருப் புடையன் வரிப்புடையன்
ஏறும் ஊது புடையன்முத லியலு மிவைதான் கடித்தலுடன்
கூறும் வாலின் முனையாலுங் குத்து மந்த விஷம்கொண்டால்
ஊறுந் தங்கிச் சிலநாள்மே லுண்டாம் படைகள் சீழ்வடிவே. (17)

புத்தான் சோறு பிடிகொணர்ந்தே புகல்நல் லெண்ணை படிகாலில்
வைத்தே யாட்டிக் காய்ச்சியுண்ண வலிய கடிவாய் தனிற்பூச
எத்தா விஷந்தா னிறங்கிவிடு மியலும் வரகி னரிசியொடு
கைத்தார் பிராம்பட் டையுமிடித்துக் களிசெய் துண்ணத் தீர்ந்திடுமே. (18)

அரிய கெருடன் கிழங்குகளுஞ் சான்பா லரைத்துண் டிடத்திரும்
இரியா நீலிபுகையூர லிலுப்பைப் பிண்ணாக் கிவைமூன்று
விரிவாய்க் கொடிக்கள் ளியின்பாலை விட்டே யரைத்துப் பூசிடவும்
திரியாக் குத்தும் வீக்கமுந்தான் றீரு மிதுதான் நன்மருந்து. (19)

பத்து வெள்ளை யெருக்கின்பூ பசும்வெற் றிலையிற்சுருட்டியும்தான்
வைத்துத் தின்னக் கொடுத்தலுடன் வசம்பின் புகையை மூக்கிலிட
தத்தும் புடையன் விடம்நீங்கும் தகவார் வீழிப்பூவைத்தான்
நைத்து மரைத்தே யொருபலந்தான் நல்க விடந்தீர்ந் தோடிடுமே.

காட்டுக்கருணைக் கிழங்குகொட்டான் காந்தைஇலுப்பைப்பிண்ணாக்கு
கூட்டி லுயர்ந்த புகையூறல் காலுஞ் சிறுநீர் விட்டரைத்து

போட்டா லுடம்பில் பூச்சதனுல் புடையன் ருக்து வீக்கமெலாம்
ஓட்டம் பிடிக்கும் நிச்சயமா வுலகோ ரறியச் சொன்னேமே. (21)

மற்றும் பாம்பி னினங்கேள்நீ வழலை பொல்லாக் கருவழலை
முற்றுங் கொடிய கொம்பேறி மூக்க னுடன்சா ணுமூக்கன்
சுற்றி வருமீர் தலைமணியன் சுருட்டைப் பாம்பு மண்ணுளியன்
உற்ற கூளைப் பாம்பொடுபுல் லுருவி சாரைப் பாம்பிவையே. (22)

வழலைபொல்லாக் கருவழலை வாய்விண் டேன்றிக் கடித்ததென்றால்
அழல்போற் காந்தும் உடல்வெயர்க்கும் அறிவை மயக்கி விஷமேறும்
கழியுங் கடிவாய் தனிலிரத்தங் கவினுர் வாயில் நீர்வடியும்
எழிலார்க் கிந்த விடந்தீர இசைந்த மருந்தை யியம்புவனே (23)

வேலிப் பருத்தி வேரோடிலை வெண்சா ரணைவே ரதனிலையும்
நீலி யிலைவேர் பெருங்காயம் நிரையா யரைத்துத் தேசிக்காய்
போலுங் கொடுத்துக் கடிவாயிற் பூசத் தீரும் நிலப்பனையும்
ஆலும் பிலிவேர் சிறுநீரி லரைத்துத் தரினுந் தீர்ந்திடுமே. (24)

குணமார் சிற்ரு மணக்கின்வேர் குன்றி மணிவேர் நிலைப்பனைவேர்
மணமார் பழயை புளிநான்கும் மங்கை சிறுநீர் தனிலரைத்து
உணவே கொடுத்தால் விடந்தீரும் உள்ளி வசம்பு தானியிலை
தணவா தரைத்துக் கடிவாயில் தடவித்தேய்க்க விறங்கிடுமே. (25)

மூர்க்க னுன கொம்பேறி மூக்கன் சாணு மூக்கனிரு
பேர்க்குங் குணந்தான் கடித்தவுடன் பெரிய மரத்துச் சியிலேறி
மார்க்க முடன்ருன் கடியுண்டோன் மயானத் துற்ற புகைகண்டால்
தீர்க்கமாக்கி றிறங்குதலாஞ் செய்கை யிவர்க்கி தறிவீரே. (26)

இந்த விடமேற் கொண்டோர்க்கிங் கினிய உபாய மொன்றதுகேள்
வந்தோர் கட்டு வைக்கலில்நீர் வார்த்துத்தெளித்து மறைவாக
விந்தை யுடனே தீயிடுகில் மிகவும் புகைதான் கிழம்பிவிட்டால்
அந்தப் புகைகண் டாவிறங்கும் அரவின் விஷமு மிறங்கிடுமே. (27)

இதுவோர் வகையாம்மருத்ததுகேள் எழிலார் பிரண்டைவேரதனைப்
பதமாவரைத்துப் பழத்தளவாப் பசுவின் பாலிற் கலந்தூட்ட
மெதுவாய் மூக்கன் விடங்கடிவாய் விட்டுப் போகும் விடதாரீ
மதியாற் கெருட மந்திரத்தை வகையாச் செபித்துத் தீர்ப்பாயே.()

சுருட்டைப் பாம்பீர் தலைமணியன் சுட்டிக்கூளை மண்ணுளியன்
இருட்டிற்கடித்தாற் சுருக்கென்றுமிருந்தே உடம்பில் தடிப்பேறும்
மருட்டுங் குட்ட முதலாக வருங்கை முடங்கு மதுதீரும்
பொருட்டோர்மருந்தை விடதாரிபோற்றிச்செய்யச் சொல்லுவமே

புங்கம் வித்தும் தான்றிவித்தும், புன்னை வித்துங் களச்சிவித்தும்
எங்கு மிறங்கு மழிஞ்சில்வித்தும் இயல்கார் போக வரிசியுடன்
பங்க மில்லாக் கடுக்காயும் பயிலு மகிழ்வித் திவையெட்டும்
தங்கும் வகைக்கோர் படிவீதந்தானே வாங்கிக் கொள்வாயே. (30)

செருவெள் ளாட்டின் நீர்திலுஞ் சிறுவர் சிறுநீ ரதிலுந்தான்
இருபா னிருபா னூறவிதமா வைத்தே யெடுத்துலர்த்தி
குருவா வடித்துக் குழித்தயிலங் குப்பி தன்னி லடைத்து வைத்தே
ஒருவெற் றிலையிற் பணவிடைதான் ஊற்றிக்கொடுக்கத் தீர்ந்திடுமே.

அந்தத் தயிலக் கடிவாயி லடவாய்த் தடவி வரத்தீரும்
இந்த முறைகை கண்டதுவாம் இதற்குத் தான்வெள்ளாட்டுப்பால்
தந்த அன்னஞ் சாப்பிடலாம் தண்ணீர் புளியும் பாகாது
வெந்த புண்குட் டங்களெ லாம்விட்டுப் போகுங் கண்டீரே. (32)

உசிலம் பட்டை யாவின்பா லூற்றிப் பிழிசா றுழாக்கு
இசைவா யேழு நாள்கொடுத்தா லியல்கை முடக்கங் குட்டமெலாம்
விசையிற் றீர்ந்து போயிடுமே விளம்பும் உப்புப் புளிதள்ளி
பசிய பருப்பும் பச்சரிசியும் பால்விட்டாக்கிக் கொடுப்பீரே. (33)

சுருளி யுவரி கொடிவேலி சுகவெள் ளெருக்கு பேய்க்குமட்டி
கெருடன் கிழங்கு முட்குரண்டி கிளரா டுண்ணு மூலியுடன்
வெருளும் அமுக்கி ராவேரும் வேலிப் பருத்தி யிவைபத்தும்
குருவாயரைத்து தூள்செய்து குடுக்கை தன்னிலடைத்துவைத்தே.

சொல்லு மந்தப் பொடியைத்தான் சுடுநீர் தன்னில் திரிகடிதான்
அல்லும் பகலு மிருபோது மருந்த விடநோய் தீர்ந்துவிடும்
புல்லி னுருவி கடிதிரப் புகழ்நீ லியின்வேர் பாலிலிடு
வெள்ளுஞ் சாரைக் கடிதனக்கு விஷமை கொடுத்துத் தீர்ப்பாயே.

இதன்மேற் சட்டித் தலைவிரிய னியங்கும் மற்றைப் பாம்புகளும்
பதமா ரோந்தி தவளைமுதல் பலவா வுள்ள சில்விஷமும்

மதமார் விலங்கு விடங்களுமா வழங்கும் பலவுந் தீர்ப்பதற்கு
விதமு மருந்துஞ் செய்முறையும் விளங்கும் படிநான் சொல்லுவனே

சட்டித் தலைய னெனும்விரியன் தாக்கி லெரியு மேல்கடுக்கும்
கட்டா முடம்பு வீங்குமிகக் களைப்பாம் விரல்கள் தான்குமுறும்
வெட்டி சுரப்பில் வலிகாணும் மேனி மிளகா மிவையிரண்டும்
தட்டி வெள்ளைக் காக்கணம்வேர் தனைச்சேர்த் தியத் தீர்ந்திடுமே 37

மண்ணி னுளியன் புழுதியுண்ணி வாய்விண் டேன்றி நக்கிவிட்டால்
கண்ணு மயங்கு முடல்வீங்குங் கடிதாய்ச் சோகை பிணிகாட்டும்
நண்ணு மெருக்கன் பால்கறந்து நன்றாய்க் கடிவாய் தனிற்பூசி
உண்ண அதன்வே ரரைத்ததனை உடனே கொடுக்க விஷந்திரும் 38)

மூக்கன் கடித்து விடங்கொண்டால் முறுகி மேனி சோம்பிவிடும்
வாக்குக் குளறுங் கடிகொடிதாம் வாய்நீர்பெருகு மயர்ப்புண்டாம்
காக்க நிலவேம் புடனரைத்துக் கடிதே கொடுத்துத் துவாலையிட
தாக்கு மீறின் பாலொடுவை தன்வேர் கொடுக்கத் தீர்ந்திடுமே. (39)

கானே திரிமைக் கூர்ப்பாம்பு கடித்தால் திரும்பத் திரும்பவது
தானே கடிக்குங் கடிகொடிதாம் தாக்கு மதனால் மயக்கமுறின்
தேனே சுக்கு மிளகரைத்துத் திருந்த வெந்நீர் தனிற்கொடுக்க
வானே பறக்கும் விடங்களெல்லாம் மருந்தை யெளிதென் றெண்ணுதே. (40)

கண்டங் கரிய வளைநாகங் கரும வினையாற் கடித்ததென்றால்
விண்டக் கொடிவே லியுந்தலையை விரிஞ்சான் வேருஞ் சமனுலர்த்தி
கொண்டத் தூளை வெருகடிதான் கொடுநீ வெந்நீர் தனிற் கரைத்தே
உண்ட உடன்போம் விடங்களெலாம் ஓடும் பேய்சில் விஷங்களுமே. (41)

ஓந்தி தவளை தான்கடித்தால் உடம்பில் தினவு மிகவுமுண்டாம்
காந்திக் காட்டாத் தியினிலையும் கறியின் கோல மேனியெல்லாம்
ஏந்தி யிடித்துக் கொடுக்கவிட மேகு மெனினும் வெயில்கண்டால்
சாந்தந் தணிந்து கடியுண்டோன் தளர்வன் மயங்கியிருப்பானே. 42

சார்ந்த வீழி கொடிவேலி தழைத்த நீலி பாலொடுவை
சேர்ந்த வெள்ளைக் காக்கணம்வேர் திகழா தொண்டை மலைதாங்கி
நேர்த்தவ் வேர்கள் சமனாக நிறுத்தே யிடித்துத் தூளாக்கி
பூர்த்தே வெந்நீ தனிற்கொடுக்க உடன்வல் விடந்தீர்ந்தோடிடுமே.

பூரான் சிலந்தி தான்கடித்தால் பொல்லாக் காந்த லரிப்புமுண்டாம்
காரார் மிளகு சாரணைவேர் கல்லி லரைத்துப் பாக்களவு
சீரார் வெந்நீர் தனில்மூன்று தினந்தா னருந்த வல்லீரேல்
பேரார் பூரான் அரணைமுதல் பிறங்குஞ் செய்யான் கடிபோமே.()

எட்டி வேரும் புங்குசங்கு மேரார் நீலி தலைசுருளி
வட்டத் துத்தி மலைதாங்கி வராலியப்பை கொடிவேலி
கிட்டு முருங்கை பழுபாகல் கிளர்பா லொடுவை வேர்கொணர்ந்து
கொட்டி யிடித்து வெருகடிதாள் கொடுக்க விடங்கள் தீர்ந்திடுமே.

கொடுப்பீரித்தூள் வெருகடிதான்குணமா யிடவோர் மண்டலந்தான்
நடப்பாம் தண்ணீ ருப்புபுளி நறுநெய் பால்க ளாகாது
விடுப்பீர் கரப்பான் பண்டமெலாம் வியனூர் பாசிப் பருப்புடனே
எடுப்பீர் முருங்கைப் பிஞ்சவரை இவையாம் வெந்நீ ரருந்துவீரே.()

கடந்தை வண்டு கருங்குளவி கருந்தேள் நட்டு வக்காலி
விடந்தான் மீறக்கொட்டிவிட்டால் மெய்தான் காந்துங்கடுத்தேறும்
சடந்தான் வீங்கு மவைதீரத் தக்க வேலிப் பருத்தியுடன்
திடந்தான் தருநற் குறிஞ்சாவுஞ் சேர்த்துப் பிழிந்து பூசிவிடே.()

வெள்ளைக் கடம்பு விரையரைத்து விடத்தின் கடிவாய் தனிற்பூசி
வெள்ளை யெருக்கந் தளிர்பாக்கை விரைவா யரைத்துக் கொடுத்திடினும்
கள்ள மில்லாக் கத்திரிக்காய் கருக வெதுப்பி அணைத்திடினும்
துள்ளப் படுத்துந் தேள்விஷங்கள் தொலைந்தே போகும் நிச்சயமே.

விண்டு தாங்கி பேய்க்கொமட்டி வேருங் கொடுநீ வெந்நீரில்
அண்டா தோடு மெருக்கன்வே ரரைத்தீயந் தாலும் விடந்தீரும்
கண்ட நட்டுவக்காலி கடிசில் விடஞ்செந் தேள்முதலா
யுண்டாம் விடங்க ளெலாம்போதற் குதவு மருந்து மிவையாமே.

நாவி குரங்கு பூனைபன்றி நரிநீர் முதலை யுழுவையுடன்
மேவுஞ் சுணங்க னிவையெட்டும் மேலே விழுந்து கடித்தாக்கால்
ஆவின் பாலில் நீலியின்வே ரரைத்துக் கொடுக்க நாள்மூன்றில்
வேவுங் கனலில் மெழுகதுபோல் விடந்தான் கழன்றுபோய்விடுமே.

புலருங் கள்ளி தனைவாட்டிப் புண்வாய் பிழிந்தால் விடந்தீரும்
சுலவுங் கெருடக் கொடியரைத்துத் துவாலை யிடினும் விடந்தொலையும்

அலரும் விழிச் சூலத்தை அரைத்தியந் தாலும் விடந்தனியும்
பலவும் வேண்டா மியாமிங்கே பகரௌடதங்கள் தெரிந்திடுமே.()

மத்தந் துளியா றெட்டுள்ளே வருந்தி நல்லெண்ணெயிற்கொண்டால்
சித்த ரெதிர்பே யோடுதல்போற் றீரா விடங்கள் தீர்ந்திடுமே
பத்தி யுடன்வெற் றிலைச்சாறு படிகால் கொடுக்க நாள்மூன்றில்
சத்தி யருளால் நாய்நரிவா தனைகள் தீரும் நிச்சயமே. (52)

கடிவா யுலைந்து புண்ணுனல் கட்டௌடதங்கேள் பருத்தியிலை
பிடியாந் தும்பை யாவரையும் பிடியாம் செம்பை புளியிலையும்
படிவா யைந்துஞ் சமனுகப் பறித்து வெதுப்பித் தானணைக்க
வடிவா யுலரும் புண்களெல்லாம் மருமம் வெளியே சொல்லாதே()

வேப்பங் கொழுந்தி னுடன்சிந்தில் வேருஞ் சிறுநீர் விட்டரைத்து
கோப்பா வுலர்த்தி வட்டாக்கிக்கொண்டே யுலர்த்திப் பொடிசெய்து
தாப்பாய் முட்டைக் காடிவைத்துத் தடவி தண்ணீர் தனில்முழுக
காய்பா யுடம்பு நன்றுகுங் கடிதே விடங்கள் தீர்ந்திடுமே (54)

வெள்ளி பாதி யிரவுதனில் மெய்தான் குளித்து மகிழ்மரத்தின்
உள்ளங் கெருட மந்திரத்தி னுறைப்பாய்ப் பிறந்த கோலமுடன்
வள்ளத் தேங்காய் பழம்படைத்து வடக்கே போகுங் கொப்பதனில்
கள்ள மின்றி நூல்சுற்றிக் காப்புக் கட்டி வருவாயே. (55)

ஆறு நாளுஞ் செபஞ்செய்து அடைவாய் வியாழ னிரவுதனில்
தேறுந் தூபதீபமிட்டுச் சிதையா தந்தக் கொப்பொடித்து
கூறு மிருகை நீளமதாக் கோலை நறுக்கிக் கடைந்தெடுத்தே
சீறும் பாம்பை யடைச்சிடுமோத் திரைக்கோல் குழலாச் செய்துகொள்ளே: ()

அலையும் பச்சைப் பாம்படித்தே அதனீ ளத்திற் கோல்நறுக்கித்
தலைமேல் வாக்கி மாவடைத்துத் தக்குங்கோ டகசா லையின்வேரைச்
சிலையால்தட்டிப் பொடியையுள்ளே செலுத்தியிருபாற் சில்லிறுக்கி
நிலைமாத் திரைக்கோல் கைக்கொண்டோர் நிபுணர் சித்த ராவாரே.()

எரசர் திசைநா கங்களெட்டு மிராகு கேது மற்றுமுள
பேரார் சேடனிவர்கேரே பிறங்கவந்து கடித்தாலும்
சீரா ரக்கோல் பூசிதுச் செபித்துக் கடியுண் டோன்றலையிற்
பாரா ரதிய வைப்பினுடன் பறந்தே விடங்க ளோடிடுமே (58)

வேயுங் கதிரோன் கிழமையத்த மிக்கு பொழுது மகிழ்மரத்தில்
வாயு திக்கில் பெலிசெய்து வடக்கே போகும் வேர்வெட்டி
காயுங் குளிசமாடியிட்டால் கையிற் பாம்புங்கடியாது
ஆயக் குளிச மிட்டுவெந்நீர் சருந்த விடங்க ளோடிடுமே. (59)

கிராணந் தீண்டு முன்பாகக் கிளருங் குடமல்லிகைவேரில்
புராண மாங்காப் பதுகட்டிப் புகழக் கிராணம் விடுமளவும்
வாராணன் திசைபார்த் துருச்செபித்து வடவேர் பிடுங்கி வெள்ளிசெம்பில்
பிராணன் படைத்து மடைத்துவைத்தேன் பெரிய சித்த னுவானே. (60

தரியா நாகங் கடித்தவுடன் தண்ணீ ரோதி முகத்தெறிந்து
பரிவாத் தலையின் மோதிரத்தைப் பதித்துக் கடிவாய் வரையிழுக்க
திரியா நாக விடங்களெல்லாந் தீரு மிதுதான் கைக்கொண்டால்
பெரியார் மெச்சும் விடதாரி பெருமை சிறந்தோ னுவானே. (61)

வேறு

சூரிய கிராணந் தீண்டுங்கால் தொடங்கி யதுதான் விடுமுன்னம்
ஆரிய நற்செவ் வலரியின்வேர் அதற்குக் காப்புக் கட்டிமறை
சீரிய தோர்ந்து செபித்ததனைச் சிதையாப் பிடுங்கிச் செம்பதனில்
ஏரிய குளிசஞ் செய்துகையி லிடுமோ திரந்தா னிதுநன்றே. (62)

வேறு

ஓங்கிடு மச்செவ் வலரிவடக் கோடும் வேரைப் பார்த்துவெட்டி
பாங்குடன் வேள்ளிக் குழல்செய்து பரிவாயதற்கு ளடைத்துவைத்து
வாங்குறு மாழியாச்செய்து வளமாக் கையி லணிந்துகொண்டு
தாங்கிடுங் கெருட மந்திரத்தைத் தனியே செபிக்க விடம்போமே. ()

வேறு

பொன்றிடும் விடந்தான் தலைக்கொண்டால் புகன்றிடு மணிமந் திரமருந்து
நன்றுற வறிந்த விடதாரி நவிலுள மயங்க வேண்டாம்நீ
மன்றிலம் மோதி ரந்தலையில் வைத்துட னிறக்கு விடமிறங்கும்
இன்றதைக் கீழே யிருந்துயர வேற்றிடின் விடந்தா னேறிடுமே. ()

பச்சிலைப் பெருமாளுப்பிலியும் பாரினில் தவசி முருங்கையுடன்
மெச்சவு ரியுங்கோ டகசாலை வேரிவை பிடுங்கி நால்வகையும்
வைச்சுயர் மெள்ளி மோதிரத்தில் வகையுடனடைத்து ச்செபித்ததனை
உச்சியில் வைத்துப் பார்க்கவிடம் உடன்கடி வாய்க்கி ழிறங்கிடுமே (65)

வேறு

பங்கம் பாளை வேரதனைப் பரித்துத் தின்ன விஷமிறங்கும்
பங்கம் பாளை யிருக்கு மில்லிற் பாம்பு பயந்து வாராது

பங்கம் பாளை வேரரைத்துப் பாம்பின் கடிவா யிடத்தீரும்
பங்கம் பாளை வேர்க்கவரம் படந்தூக் காம லோடிடுமே. (66)

பச்சைப் பாம்பு பச்சோந்தி பசிய வாலைத் தானறுக்கி
மெச்சும் வெள்ளி செம்புதனில் விளங்க வடைத்து மோதிரமாய்
வைச்சு விடதா ரியின்கரத்தில் மகிழ்ந்தே கெருட தியானமுற்றால்
நச்சுப் பாம்பைப் பிடித்திடலாம் நடுங்கி வாயைத் திறவாதே. (67)

செவ்வாய்க் கிழமை செம்முள்ளிச் செடியின் வேரைத் தான்பிடுங்கி
யுவ்வாச் செப்புக் குழலிலடைத் தொருமோ திரங்கை தனிலணிந்து
வெவ்வாய் விடநாம் கக்கடிவாய் விட்டுப் போகு மந்திரத்தால்
நவ்வா முள்ளி யிலைச்சாற்றை நசிய மிடத்தீர்ந்திடும்விஷமமே, (68)

அறைவேன் செம்பு தனையரத்தால் அராவிப் பொடிமுக் களஞ்சிக்கொண்டு
நிறையாய் வெட்டி வராலியின்வேர் நிகழ்த்துங் குழலி யதின்கூடும்
முறையா யெடுத்துபொடிசெய்து முழுதுங்குகையில் வைத்துருக்கி
இறையாம் செம்பை யெடுத்திருகைக்கிசைந்த கடகஞ்செய்தணியே

மெய்த்த கெருட மந்திரத்தை விடதா ரியுமன் பாய்ச்செபித்து
பைய்த்த கடகங் கையிலிட்டுப் பார்க்க விடந்தா னிறங்கிவிடும்
கைய்த்த பாம்பாட் டியின்மேலே கடகம் போட வரவெதிர்க்கும்
உய்த்த பிடாரன் தலையில்வைத்தே யுருவப் பாம்பும் நடுங்கிடுமே.()

நிலத்தி லுயர்ந்த காட்டாத்தி நிகழ்த்துங் குட்டி விளாவேரும்
நலத்தின் வண்டு கொல்லியுடன் நவிலு மவுரி வெள்வேலும்
வலத்தில் கடகஞ் செய்தணிந்து வலிய கெருட தியானமிட்டால்
குலத்தி லுயர்பாம் பானாலும் கூசா தெடுக்கக் கடியாதே. (71)

ஆடா தோடை கரிப்பாலை யவுரி குன்றி மாதளையும்
சேடார் தருகோ டகசாலை சிறியாணங்கை கழற்கொடியும்
மோடார் தருசா ரணையீசன் மூலி யுடன்கற் பூரவல்லி
காடா ரிவ்வோர் பதினொன்றும் கடகஞ் செய்து கைக்கணியே.(72)

சுற்றுங் கடகங் கையிலிட்டுச் சுகமாச் செபித்துப் பாம்பெடுக்க
பற்று மலகு திறவாது படத்தைத் தூக்கி யாடாது
கற்றவ் விடங்கள் தலைக்கொண்டால் கடகம் உச்சி தனில்வைக்க
எற்றுங் கடிவாய் தனில்விடந்தா னிறங்கும் பார்த்துக் கொள்வீரே (73)

சிறியா ணங்கை கொடிவேலி சிவந்த வேலி தலைசூடி
பறியா நீலி வெண்கொஞுஞ்சி பண்பார் வெள்ளைக் கிலுகிலுப்பை
நறியா வெள்ளைக் கிருந்தியுமா நாகத் தின்வேர் மலைதாங்கி
மறியார் தின்னப் பாலையுடன் வளர்பன் னென்றுங் கொண்டுவந்தே.

சார்ந்த வெள்ளி தனில்வெள்ளித் தகட்டில் குளிசங் தானடி
நேர்ந்த கெருட மந்திரத்தை நினைத்துக் கடகங் கையிலிட்டே
யார்ந்த பாம்பை யெடுக்கநிமிர்ந் தாடா தெதிரா தடங்கிவிடும்
கூர்ந்த கடகந் தலையில்வைத்தால் கொடிய விடங்கள் தீர்ந்திடுமே. (75)

கூரார் தொண்டை யளிச்சட்டி குப்பை மேனி கொடிவேலி
பேரார்பேய்ப்பீர்க்குஞ்சுரையும் பேய்க்கொம்மட்டி முடக்கொத்தான்
ஊரார் வேலிப் பருத்தியிவை பொன்பான்வேரு முருப்போட்டே
வாரார் கடகஞ் செய்துதலை வைக்க விடந்தான் றீர்ந்திடுமே. (76)

கிரி க்ரடி காக்கைபன்றி கெருடன் பூனை வல்லூரு
பாரிக் கூகை யுடன்பச்சைப் பாம்பின் மலங்கள் கொண்டுவந்து
சூரிற் பஞ்ச வனப்பட்டால் சுற்றி யெரித்துச் சாம்பலெடு
சீரிற் சிறிதந் நீற்றையிடச் சீறும் விடங்க ளாடாதே. (77)

திசைதாங்கிடும்பாம் பெட்டுடனே சேடன்கேதோ டிராகுவெல்லாம்
இசைகூர் அந்நீ றெறிந்தாக்கால் எதிர்க்கா தோட்டம் பிடித்திடுமே
தசைகீ ழிறக்கி அந்நீற்றைத் தடவின் விடந்தா னிறங்கிவிடும்
விசையா யேற்றித் தடவினுடன் விடமேலேறு மதுபாரே. (78)

வெள்ளை நீலக் கடம்பின்வேர் வெட்டிக் குளிசந் தானடி
தெள்ளிக் கெருட மந்திரத்தைத் தியானஞ் செய்து கையிலிட்டுக்
கொள்ள விடம்போம் நீரிலதைக் குளிப்பித் தெறிய விடந்தீரும்
அள்ளி அவ்வேர் பாக்களவி லரைத்துக் கொடுக்கத்தான்போமே()

விரியன் கடிக்கு மிப்படியே விரைந்து கொடுத்தால் விடந்தீரும்
விரியன் கடிக்குக் காய்ச்சியிதை விரைந்து கொடுக்கவேண்டுமப்பா
விரியன் கடிக்கு மருந்தைத்தான் மேலும் பூசித் துவாலையிடு
விரியன் வீக்கந் தான்மாறி விடமுந் தீர்ந்து போயிடுமே. (80)

அந்த வேரைக் குளிசஞ்செய் தரவின் முன்னே செபித் தெறிந்தால்
எந்த விதத்து மோடாம லிறந்த பாம்பு போற்கிடக்கும்

விந்தை யாக எலிகடிக்கவ் வேர்வெந் நீரி லரைத்தருவின்
மூந்த வாந்தி யெடுத்துவிடம் முரிந்து வெளிப்பட்டோடிடுமே (81)

வடிவா ளரவம் வாழ்புற்றில் வளர்கிழ்க் காய்நெல் லியின்வேரை
கடிதாய்ப் பிடுங்கி யரவுகண்டால் கடிக்க வருமவ் வேர்கொணர்ந்து
அடைவாய்க்குளிசஞ் செய்துசெபி தணிந்தோன் முன்புபொல்லாத
கொடிதாம் நாக மிறந்ததுபோற் கொட்டமடங்கி கிடந்திடுமே (82)

சிறியா ணங்கை யிலேயோடு திகழ்கோ டகசா லேயினியேயும்
பறிவரக் கசக்கி கையிற்பூசிப் பாம்பை யெடுத்தாற் கடியாது
நெறியாற் செபித்துக் குளிசமிட்டு நெடுங்கை கொண்ட விடதாரி
அறிவாற் பாம்பி னெடுப்பினவன் முன் னலது திறவாதே. (83)

செத்துக்கிடக்குங்கெருடனைத்தான் தேடியெடுத்துக்கொணர்ந்திரண்டு
பைத்த சிறகுமறுத்தெடுத்து பகரு நாற்ற மறவுலர்த்தி
வைத்து விசிறி போற்செய்து வகையா யதற்குப் பூசைசெய்து
வித்தாங் கெருட மறைபோதி வீச விஷங்கள் தீர்ந்திடுமே. (84)

குறிப்பாச் சொலுமோ திரங்கடகம் குளிசமூன் றுஞ் செயுமுறையே
உறைப்பா யறைவேன் கேள்மைந்தா உரைத்த தினநே ரங்களிலே
பிறப்பாங் கோல முடன்குளித்துப் பிறங்கப் போய்ச்சாபந்தீர்ந்து
சிறப்பாய்த் தேங்காய் பழம்படைத்துத் தீப தூபங் கொடுப்பாயே.

தேவை யறிந்து மந்திரத்தைச் செபித்து மனது சுத்தமுடன்
காவிற் கன்னி நூற்றிடு நூற் காப்புக கட்டிப் பூசித்து
பூவி லார்க்குந் தெரியாமற் புதுவேர் கொணர்ந்து செய்தணிந்தால்
மேவும் விடதா ரியின்முன்பில் விடம்பேய்வெருவி யோடிடுமே (86)

வலிய பாம்பி னினம்பலவும் வாய்விண் டிடும்பல் விடங்களுடன்
நலிபன் னூறு சில்விடங்கள் நவில்செவ் வட்டை செம்பூரான்
மெலிவண் டோந்தி தவளைமுதன் மேலுஞ் சிலந்தி சிலவிடங்கள்
கலிசெய் கடிக்கும் விடங்களெல்லாங் கடிதீர்த் திடுமோ றுரைத்தேனே

மத்த மழிஞ்சில் வெண்குன் றி வாளந் தில்லை வித்தைந்துஞ்
சித்தர் கெவுரி தாரமனோ சிலைபொன் மெழுகு நெறிவிஷமே
சுத்தி லிங்கம் காவிபச்சை துருசு கெந்தி திரிகடுகு
சத்தன் சாரம் ரசஞ்சீனக் கார மிவைகதான் பதினோறே, (88)

வகைக்கோர் களஞ்சி வரங்கிக்கல் வத்தி விட்டுப் பழச்சாற்றில்
திகைக்கா தரைத்துப் பீங்கானில் சிவனைப் பூசித்தடைத் துவைத்தே
பகைக்கும்விடந்தான் கொண்டவர்க்கோர்பசும்வெற்றிலையிற்பணவிடைதான்
உகப்பாக் கொடுநீ விஷமெல்லா மோடு முண்மை யறிவாயே (89)

இந்த மருந்து போலுனக்கிங் கெவருஞ் சொல்லார்நான்சொன்னே
விந்தை யாகக் கொடிகட்டி விருது பெறநீ கொடுத்திடலாம்
நைந்தே விரியன் கடியானை நக்கல் துட்ட நாகவிடம்
எந்த விடங்க ளானாலும் இறங்கி யோட்டம் பிடித்திடுமே. (90)

கடியால் வந்த திமிர்குட்டம் கைகால் முடக்கம் முதலாக
வெடிவாய்சீழார் புண்களெலாம் விட்டுப் போகும் நிச்சயமே
படிவா ரிந்த விஷமையைப் பாரி லெவருக்குஞ் சொல்லாதே
நடமார் சிவன்ற னுமைக்கந்த நாளிற் சொன்ன மருந்திதுவே. (91)

இசையு மருந்தின் பத்தியந்தா னெண்ணெ யுப்பு புளிகடுகு
முசிய ஆகா தொருவாரம் முயங்கு பகப்பத் தியமாதம்
பசுவின் பால்பச் சரிசிபச்சைப் பயற்றப் பருப்புஞ் சேர்த்தாக்கி
நசையோ டுண்ண லாமுழுக்கு நாள்தொட் டெல்லாம் உணலாமே()

விரியன் வழலை மூக்கனின்ன விடங்கள் கொண்டு மூர்ச்சையுற்றால்
மரியா முனஞ்சிந் தியின்மாவை வாங்கிக் கசஞ்சு கொடுநீரும்
துரித மாக மூக்கிலந்த துளிரை நசிய மிடக்குணமாம்
அறிய மறைவேர் மருந்திவைதாம் அம்மைக் கரன்சொல்லியவாறே.

வேறு.

படவரா முதலா வுள்ள பாம்புகள் கடியும் வேறிப்
புடவிவாழ் விடங்கள் முற்றும் போக்கமார்க் கங்கள் சொன்னோம்
திடமிது நாங்கை கண்ட செய்கையாம் மிதற்கு மூலங்
கடவுளாற் கருட விஞ்சை கழறிய தினிக்கேள் மைந்தா. (94)

பஞ்சபூத மந்திரம்

பூமியில் சிவ்வை நீரில் புகழ்தரும வவ்வைத் தீயில்
ஓமதைச் சுவாவைக் காலில் உயாவெளி ஹாவைத் தீட்டி
ஆமதை செவிப்பாய் நீநூ றுயிரம் உருவுள் ளத்தில்
சேமமா மட்டகர்ம சித்துக ளுண்டாம் பாரே, (95)

மந்திரம் வரையுந்தானங்கள்.

பாரெழுத் தரையிற் சேர்க்கப் படுவிடக் கீழி றங்கும்
நீரெழுத் துதாஞ் சேர்க்க நீங்கிடும் வல்விடந்தான்

எரன லெழுத்து ரத்தி லெழுதிடக் கடுகிட் டோடும்
ஆரொலி யெழுத்தைங் கண்டத் தமைத்திடின் நஞ்சு மீளும்
சேருவா னெழுத்தை நெற்றி தீட்டிடக் காளம் போமே. (96)

கெருட பஞ்சாட்சரம்.

அருட்சிவ ஓம்சு வாஹா ஆகிய கெருட பஞ்சாட்
சரத்தையைம் பூதங் கட்பால் தாமதிந் தவற்றை நேரே
கருத்தரை வயிறு மார்பு களம்நுத லேந்தி டத்தும்
நிரைத்துருப் போட்டு பார்த்தல் நெரியதாம் விடதா ரிக்கே. (97)

கெருடபஞ்சாட்சர வலிமை,

முறைதெரி விடதா ரிக்கு முன்கதிர் முன்ப னிப்போல்
நிறைவலி யிரியின் முன்னே நெடுங்கரி போலோர் பூனைக்
கிறையெதி ரெலிபோல் வேங்கைக் கெதிர்பசுப் போலும்பொல்லாக்
கறைவிடம் பயந்தின் னேனைக்கருடனைக் காணும் பாரே. (98)

கெருடபஞ்சாட்சரத்தாலாம் பேறு.!

அத்தகைக் கெருட பஞ்சாட் சரத்தையு மைந்து லெட்சம்
பத்தியா யுருத்தான் போட்டுப் பரகரு டோகஞ் செய்த
வுத்தமன் தான்மா யோகன் ஓங்கவன் றனக்கே காயஞ்
சித்தியாம் புத்தி முத்தி திருவரு ளுண்டாம் பாரே. (99)

கெருடபஞ்சாட்சர தியான முறை.

கெருடமந் திரந்தி யானம் கிரிகைமுன் றினும்வல் லானே
கெருட னு மவமுன் பாம்பு செலிமிகக் கொடுகி டக்கும்
கெருடன்முன் தானே பொல்லாக் கெடுவிட மெல்லாந் தீரும்
கெருடபஞ் சாட்ச ரத்திற் கிளத்துமிவ் வுண்மை தானே. (100)

சிதம்பரச் சக்கரமறை.

செம்மையிவ் வைந்தெ ழுத்தும் லம்நம சிவய வென்றும்
வம்மசி வயந வென்றும் ரம்சிவ யநம வென்றும்
யம்வய நமசி யென்றும் ஹம்யந மசிவ வென்றும்
எம்மையாள் சிதம்ப ரச்சக் கரமறை யிவையாங் காணே. (101)

பால்வணம் அமிழ்த ரூபம் பகர்சுடர்க் கண்கள் செம்பொன்
போல்வண மடிபு யங்கப் பூண்சதுர்ப் புயமுத் தாரம்
வால்வண மதிக்கி ரீடம் வளர்பர கருடா ரூடர்
சால்வணங் கருட பஞ்சாட் சாமதா மென்னூல் பாரே. (102)

இந்நூலிற்கண்டவாறு அநுட்டிப்பவருக்கு வேண்டப்படும் மந்திரங்களுஞ் சக்கரங்களும் அடுத்து வரையப்பட்டிருக்கின்றன

# மூலமந்திர எந்திர பூஜர்விதி.

சகல சர்ப்ப விஷங்களையு மிறக்குவதற்குப் பஞ்சபூத தேவதைகளில் பிரமதிபானப் பிரதிவிச் சக்கரம்.




பிரதிவி மந்திரம்.

ஹரிஓம் நம்நங் கிலி ரீங் சுவாஹா,

பூஜாவிதி.

சுக்கிரவாரத்தில் அதிகாலையி லெழுந்து ஸ்நானஞ்செய்து பொற் பட்டுத்தி சூரியனை வணங்கி மெழுகிக்கோலமிட்ட ஓரிடத்தில் தருப்பையாசனத்தில் வடக்குமுகமாக இருந்துகொண்டு நெய் விளக்கின் முன்னே அளவுப்படியுள்ள ஒரு வெள்ளித் தகட்டிலே சக்கரத்தை வரைந்து பாலபிஷேகஞ்செய்து தேங்காய்பழம் வெற்றிலைபாக்குகளைப் படைத்து, தூபதீப நைவேத்தியங்களுங் கொடுத்து சாக்ஷாத் பிரமதேவனை மானசமாகக் கண்டுகொண்டதாகப் பாவித்துப் பூசித்து ரேசக பூரக கும்பகமுஞ்செய்து தாமரை மணி கொண்டு மந்திர செபஞ் செய்யவும். தினம் 1008 உரு வீதம் ஒரு மண்டலஞ் செபித்து வரவும். உரு50000 முற்றுப்பெறவும் மந்திர சித்தி கைவரும்.

சிகிச்சைமுறை.

விஷந்தீண்டப்பெற்றவனுடைய உந்திக் கமலத்திற்குமேல் சிரசு வரைக்கும் சக்கரத்தை வரைந்து ஒரு பிரம்புகொண்டாவது வேப்பிலை கொண்டாவது இம்மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு தட்டி இறக்கிப் பார்க்க விஷமிறங்கும். பிரமகடாட்சமும், சாசுவதி கடாட்சமும் உண்டாகும். தொட்ட காரியங்கள் சித்தியாம்.

## சகலசர்ப்ப விஷங்களையு மிறக்குவதற்குப் பஞ்சபூததேவதைகளில் விஷ்ணு தியான அப்புச் சக்கரம்



அப்புமந்திரம்

ஹரிஓம் ஸ்ரீங் ரீங் சிம் மங் சுவா ஹா

### பூஜாவிதி.

சனிவாரத்தில் அதிகாலையி லெழுந்து ஸ்நானஞ் செய்து நீலப் பட்டுடுத்தி அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு மெழுகிக் கோலமிட்ட ஓரிடத்தில் மான்தோ லாசனத்திலே கிழக்குமுகமாக இருந்துகொண்டு அளவுப்படியுள்ள ஒரு பஞ்சலோகத் தகட்டிலே சக்கரத்தை வரைந்து பால் தேன் முதலான அபிஷேகங்களைச் செய்து தேங்காய் பழம் வெற்றிலை பாக்குகளைப் படைத்து தூபதீப நைவேத்தியங்களுங்கொடுத்து விஷ்ணுபகவானை மானசமாகக் கண்டுகொண்டதாகப் பாவித்து பூசித்து ரேசகபூரக கும்பகமுஞ் செய்து துளசிமணிகொண்டு மந்திரசெபஞ் செய்யவும். தினம் 1008 உரு வீதம் ஒரு மண்டலம் செபித்துவரவும். உரு 50000 முற்றுபெறவும் மந்திரசித்தி கைவரும்.

### சிகிச்சைமுறை

விஷந் தீண்டப்பெற்றவனுடைய உந்திக் கமலத்திற்குமேல் சிரசுவரைக்கும் சக்கரத்தை வரைந்து ஒரு பிரம்புகொண்டாவது வேப்பங் குழைகொண்டாவது இம்மந்திரத்தைசொல்லிக்கொண்டு தட்டி இறக்கிப் பார்க்க விஷமிறங்கும். விஷ்ணு கடாட்சமும் மகாலட்சுமி கடாட்சமும் சகல வசீகரமுமாம்.

சகல சர்ப்ப விஷங்களையு மிறக்குவதற்குப் பஞ்சபூத தேவதைகளில் உருத்திர தியான தேயுச் சக்கரம்.



தேயு மந்திரம்

ஹரிஓம் அங்உங்ரீம் ஐயும் கிலியும் சௌவும் நமசிவய சுவாஹா.

பூஜாவிதி

ஆதிவாரத்தில் சூரியாஸ்தமான சமயத்தில் ஸ்நானஞ் செய்து செம்பட்டு வஸ்திரந் தரித்துக்கொண்டு அநுஷ்டான முடித்து மெழுக்கிக் கோலமிட்ட ஓரிடத்தில் புலித்தோலாசனத்தில் வடக்கு முகமாயிருந்துகொண்டு நெய்விளக்கின் முன்னே அளவுப் படியுள்ள ஒரு தாமிரத்தகட்டில் சக்கரத்தை வரைந்து பால் தேன் இளநீர் முதலான அபிஷேகங்களைச் செய்து தேங்காய் பழம் வெற்றிலை பாக்குகளைப் படைத்து தூபதீப நைவேத்தியங்களுங்கொடுத்து மனத்தை பொருப்படுத்திக்கொண்டு உருத்திர மூர்த்தியைக் கண்டுகொண்டதாகப் பாவித்துப் பூசித்து ரேசக பூரக கும்பகமுஞ் செய்து உருத்திராட்சமணிகொண்டு மந்திர செபஞ் செய்யவும். தினம் 1008 உரு வீதம் ஒரு மண்டலம் செபித்து வரவும். உரு 50000 முற்றுப்பெறவும் மந்திர சித்தி கைவரும்.

சிகிச்சை முறை

விஷந் தீண்டப்பெற்றவனுடைய உந்திக் கமலத்திற்குமேல் சிரசுவரைக்கும் சக்கரத்தை வரைந்து ஒரு பிரம்புகொண்டாவது வேப்பந்தழையினாலாவது இம்மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு தட்டியிறக்கிப்பார்க்க விஷமிறங்கும். விஷமிறங்கும்போது தெற்கு முகமாக இருந்துகொள்ளவும். மேற்குமுகமாகவு மிருந்துகொள்ளலாம். சத்துரு செயமும், சிவகடாட்சமும், சருவ ஞானமும் உண்டாகும்.

சகல சர்ப்பவிஷங்களையு மிறக்குவதற்குப் பஞ்சபூத தேவதைகளில் மகேஸ்வர தியான வாயுச் சக்கரம்




வாயுமந்திரம்

ஹ்ரீஓம் ஐயுங்கிலியும் சௌவும் சரஹணபவ தேவாயநம.

பூஜாவிதி.

சோமவாரத்தில் சூரியாஸ்தமன சமயத்தில் ஸ்நானஞ் செய்துநீலாம்பரந்தரித்து அநுஷ்டான முடித்துக்கொண்டு மெழுகிக் கோலமிட்ட ஓரிடத்தில் கிருஷ்ணாசனத்தில் வடக்குமுகமாகவிருந்துகொண்டு தாமரை நூலிட்டேற்றிய நெய்விளக்கின்முன்னே அளவுப்படியுள்ள வெள்ளித்தகட்டிமேலே சக்கரத்தை வரைந்து பால் முதலிய அபிஷேகங்களைச் செய்து தேங்காய் பழம் வெற்றிலைபாக்குகளைப் படைத்து தூபதீபநைவேத்தியங்களுங்கொடுத்து மகேஸ்வரனைக்கண்டுகொண்டதாகப் பாவித்துப் பூசித்து ரேசக பூரக கும்பகமுஞ்செய்து உருத்திராட்சமணிகொண்டு மந்திரசெபஞ் செய்யவும் தினம் 1008 உரு விதம் ஒரு மண்டலஞ் செபித்துவரவும். உரு 50000 முற்றுப்பெறவும் மந்திரசித்தி கைவரும்.

சிகிச்சைமுறை.

விஷந்தீண்டப் பெற்றவனுடைய உந்திக் கமத்திற்குமேல் சிரசுவரைக்குஞ் சக்கரத்தை யொட்டி ஒரு பிரம்புகொண்டு இம்மந்திரஞ்சொல்லித் தட்டியிறக்கிப் பார்க்க விஷமிறக்கும். இம்மந்திரம் உருவேற உருவேற இவன் நல்லவைக்கண்டால் பேய் பிசாசுகளும், முனி மோகினிகளும் அஞ்சியொடுங்கி அடங்கி ஓடிவிடுவார்கள். கருமதோஷங்களும் நிவாரணமாம்நவக்கோள்களுநல்லபலன்களையே தரும்

சகலசர்ப்பவிஷங்களையு மிறக்குவதற்குப் 'பஞ்சபூததேவதைகளில் சதாசிவ தியான ஆகாயச் சக்கரம்.




ஆகாச மந்திரம்.

ஹரிஓம் யங் ரங் சிம்சிம் சுவாஹா.

பூஜாவிதி.

மங்களவாரத்தில் உதயகாலத்தில் ஸ்நானஞ்செய்து பச்சைப் பட்டுடுத்தி அநுஷ்டான முடித்து மெழுகிக் கோலமிட்ட ஓர் சுத்தமானஇடத்தில் கிருஷ்ணாசனத்தில் வடக்குமுகமாகி இருந்து கொண்டு தாமரை நூலிட்டேற்றிய நெய்தீபத்தின் முன்னரே பொற்றகட்டில் சக்கரத்தை வரைந்து பஞ்சகவ்வியாதி அபிஷேகங்களைச் செய்து தேங்காய் பழம் வெற்றிலை பாக்குகளுடன் ஐங்கனி ஐந்தமுது முதலியன படைத்து தூபதீபாராதனை கொடுத்து சதாசிவமூர்த்தியைக் கண்டுகொண்டதாகப் பாவித்து பூசித்து ரேசகபூரக கும்பகமுஞ் செய்து உருத்திராட்சமணி, படிகமணிகளால் மந்திரசெபஞ் செய்யவும். தினம் 1008 உரு விதம் ஒரு மண்டலஞ் செபித்து வரவும். உரு 50000 முற்றுபெற்றால் மந்திரசித்தி கைவரும். சிவஞானயோகீசுவரனுதற்குரியபக்குவமுமவனுக்கேயுண்டாகும்

சிகிச்சைமுறை

விஷந்தீண்டப்பெற்றவனுடைய உந்திக்கமலத்திற்குமேல்சிரசு வரைக்கும் சக்கரத்தை ஒட்டிக் கண்ணுற்பார்த்து மந்திரஞ் செபித்துஊதையாற்றடவ விஷமிறங்கிவிடும்.

## பொதுவிதி

மந்திரவாதி குருவருள்பெற்று சுபதினத்தில்தொடங்கி மண்டலபூஜை முடித்து மந்திரவாதஞ் செய்யக்கடவன்.

## முடிவுரை.

இதுவரை பஞ்சபூத மந்திரம் செபம் பூசனைகள் விவரமாகச் சொல்லப்பட்டன. இனி கெருட மந்திரம் செபம் பூசனைகளின் விவரங்களை கெருடபஞ்சாட்சராரூடத்தில் நன்கு கண்டுகொள்க.

## சர்ப்பங்களின் ஜாதிவிவரம்.

காசிபப்பிரஜாபதிக்கு தக்ஷப்பிரஜாபதியின் புத்திரியாகிய கத்துருவை வயிற்றிற்பிறந்த நாகரனைவரும் பிர்மஜாதியென்ற சொல்லைப் பெறுவர். பெறினும் பிர்மஜாதிக்குரிய ஒழுக்கமுடைய நாகர்தாம் பிர்மஜாதியாவர். அவர் சத்துவ குணத்திக்கமுள்ள வெள்ளிய நிறத்தைப் பெற்றிருப்பர். சாந்தகுணமில்லாமல் கோபாவேசத்தை மேற்கொண்டு நீதிவழிப் படுநாகர் க்ஷத்திரியராவார் இந்நாகர் சத்துவத்தில் இராசத குணத்தை மேற்கொண்டு செம்பொன்னிறத்தைப் பெற்றிப்பார். பிறருக்குபகாரமு முபத்திரவமுஞ் செய்யாமல் தன் காரியத்திற் கண்ணுமிருக்கும் நாகர் வைசியரெனப்படுவார். இவர் சத்துவத்தில் சுத்த தமோகுணத்தை மேற்கொண்டவராய் மஞ்சள் வருணத்தை பெற்றிருப்பார் தாமே வாழப்பார்ப் பாராயிருத்தலோடு பிறரது வாழ்க்கையிற் பொறாமையுமுடைய நாகர் சூத்திர ஜாதியாவர். இவர் சத்துவத்தில் கேவல தமோகுணத்தை மேற்கொண்டவராகி இந்திரனது குதிரையின் வாலை விஷமூட்டிக் கருப்பாக்கி கார்க்கோடகனும், அவனுக்குதவியாயிருந்த பதுமனுமாகிய இருவருந் தந்திரசாமர்த்தியத்தினாற் கறுப்புநிறம்வாய்ந்த சூத்திரர் ஆகவே பிராமணரிற் பிராமணர், பிராமணரிற் க்ஷத்திரியர், பிராமணரிற் வைசியர், பிராமணரிற் சூத்திரராகி எண்வகை நாகரும் பிராமணரே யாதலறிக. இவ்வெட்டு நாகர்களில்,

## பிர்மஜாதி.

அனந்தன் குளிகன் எனனுஞ் சர்ப்பங்கள் வெள்ளிய நிறத்தைப்பெற்றிருக்கும் அவை சனிவாரமிரவிலும ஆதித்த வாரங் காலையிலும் இரையெடுக்க வெளியில்வரும். அதுசமயம் எதிர்ப்பட்டவர்களை முன் பக்கத்திலும் வலதுபக்கத்திலும் அவை தீண்டும். அக்கடி விஷத்தினால் வாதம் அதிகரிக்கும்.

## க்ஷத்திரியஜாதி

வாசுகி சங்கபாலன்என்னுஞ் சர்ப்பங்கள் செம்பொன்னிறம் பெற்றிருக்கும். அவை சனிவாரம் பகலிலும் சோமவாரம் பகல் இருபது நாழிகை வரையிலும் இரையெடுக்க வெளியில்வரும். அந்தச் சமயம் எதிர்ப்பட்டவர்களை இடதுபக்கத்திலும் வலதுபக்கத்திலும் அவை தீண்டும். அவ்விடத்தினால் பித்தம் அதிகரிக்கும்.

## வைசியஜாதி.

தக்கன், மகாபதுமன் என்னுஞ் சர்ப்பங்கள் மஞ்சள் நிறத்தன. அவை சுக்கிரவாரத்தன்றும் மங்களவாரத்தன்றும் பகல் இருபது நாழிகைக்குமேற்பட்டு அஸ்தமிக்கும்வரை இரையெடுக்க வெளியில்வரும். அது சமயம் எதிர்ப்பட்டவர்களை இடப்புறத்திலும் பின்புறத்திலும் அவை தீண்டும். அந்த விஷத்தினால் கபமானது அதிகரிக்கும்.

## சூத்திரஜாதி

பதுமன், கார்க்கோடகன், என்னுஞ் சர்ப்பங்கள் கறுமைநிறத்தன. அவை புந்திவாரத்திலும் குருவாரத்திலும் பகல் பதினைந்து நாழிகைக்குமேல் தீபசமயம்வரை இரைபெடுப்பதற்கு வெளியில் வரும். அது சமயம் எதிர்ப்பட்டவர்களை இடதுபக்கத்திலும் பின் பக்கத்திலும் அவை தீண்டும். அவ்விஷத்தினால் கபமும் தொந்திப்பும் அதிகப்படும்.

இந்தநான்கு ஜாதி சர்ப்பங்களில்எது கடித்ததென்று தெரிந்து அந்தந்த அரவுகடிக்குத் தகுந்த மந்திரங்களாலும் மருந்துகளாலும் விஷத்தை மீட்க முயலுதல மந்திரவாதிகளின் கடமை.

படமெடுத்தாடுஞ்சர்ப்பங்களுக்குரிய பற்கள் நான்கில் மேல்வாயலகிலிரண்டு பற்களும், கீழ்வாயலகிலிரண்டு பற்களும்இருக்கும். முலாவது பல்லுக்கு காளியென்றும், இரண்டாவது பல்லுக்கு காளாஸ்திரியென்றும் மூன்றாவது பல்லுக்கு நீலியென்றும், நான்காவது பல்லுக்கு நீலகண்டியென்றும் பெயர்.

மேல்வரிசையிலிருக்கப்பட்ட இரண்டுபற்கள் காளியென்றும் காளாஸ்திரியென்றும், கீழ்வரிசையில் இருக்கப்பட்ட இரண்டு பற்கள் நீலியென்றும் நீலகண்டியென்றும் சொல்லப்பெறும். பற்கள் நான்கும் தூண்டிபோல் வளைந்தனவாயும், சிறுதுவாரமுள்ளன வாயுமிருக்கும். ஒருவனுக்குப்பாம்பு தீண்டினால் விஷந்தும்பி

கிற்கும் பல்லினது துவாரத்தின்வழியாகக் கக்கப்பட்ட விஷம் கடிவாயில் வந்தவுடனே இரத்தவோட்டத்தைத் துணைப்பற்றிக்கொண்டு பாதாதிகேசபரியந்தம் பரந்து மபக்கத்தைச் செய்யும். அவ்விஷப் பெருக்கைக்கொண்டு ஒவ்வொருபல்லி னடியிலுமிருப்பதுக்கு விஷப்பையென்றுபெயர்.

1. கடிவாயில் புள்ளடிபோற்கடியும் பனிநீர்போல் விஷநீருங்காணப்பட்டால் காளியென்ற பற்பட்டதென்றறியவும்.

2. கடிவாயில் முக்கோணம் போற்கடியும் மஞ்சள்நீர் போல விஷநீருங்காணப்பட்டால்காளாஸ்திரியென்ற பற்பட்டதென்றறியவும்.

3. கடிவாயில் முள்ளைதைத்ததுபோற்கடியும் செங்கீர்துளி போல் விஷநீருங்காணப்பட்டால்காளாஸ்திரி யென்றபற்பட்டதென்றறியவும்.

4. கடிவாயில் விற்போன்ற கடியும் கழுநீர்போல் விஷ நீருங் காணப்பட்டால் நீலகண்டி யென்ற பற்பட்டதென்றறியவும்.

## விஷநிவர்த்தி.

ஹரிஓம் - கணபதி - ஐயுங் கிலியும் சௌவும் மசி நசி நசி மசி. கிர் கீர் கிா என்று ஆயிரத்தெட்டு உருவேற்றி சித்தியாக்கி வைத்துக்கொண்டு சகலரோகங்களுக்கும் விஷங்களுக்கும் நூற்றெட்டு உருச்செபித்துப் பார்த்தால் குணமுண்டாகும்.

## மற்றொரு மந்திரம்.

ஹரி ஓம்—றங் - கங்-செங்-கணபதி-யநமசிவ வரத வரத வசிய வசிய. நமாவென்று ஆயிரத்தெட்டு உருச்செபித்து. சித்தியாக்கிக் கொண்டால் புத்திர சந்தான விருத்தியும் செல்வமும் மேன்மேலும் உண்டாகும்.

## கெருடாரூடம் மந்திர எந்திர பூஜாவிதி.

## முற்றிற்று.

---

வாடிப்பட்டி வைத்தியம் முத்துவேலுப்பிள்ளை யவர்களிடமிருந்துவாங்கிய ஏட்டுபிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது

உ

குமரன் றுணை,

தன்வந்திரி பகவான்

திருவாய்மலர்ந் தருளிய

# கெருட பஞ்சாட்சர

ஆருடம் மந்திர சக்கரத்துடன்

மதுரைத் தாலூகா பிராட்டிபத்துக் கிராமத்திலிருக்கும்
ப. திருமலைமுத்துப்பிள்ளையவர்கள் குமாரர் உபாத்தியாயர்
விஷரோக மாந்திரீகர்

கருப்பையா பிள்ளையவர்கள்

விருப்பத்தின்படி

மதுரை வித்வான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

இ. ராம.

குருசாமிக் கோனர்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசி வீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1922.

*Registered Copy Right.*

உ

பரமபதிதுணை.

### தன்வந்திரி பகவான் திருவாய் மலர்ந்தருளிய

# கெருடபஞ்சாட்சராரூடம்.

## மந்திரசக்கரத்துடன்.

காப்பு.

திருவரு ளாலே அஷ்ட திக்குளோர் தாமீடேற
கெருடபஞ் சாட்ச ரத்தைக் கிளர்த்தினே னதைய றிந்து
தருவினி லோங்கும் பஞ்சாட் சரத்தையே தியானித் துய்ய
மருவிய ஓற்றைக் கொம்பன் மலரடி சென்னி சேர்ப்பாம். (1)

வஞ்சகங் கபடு நீக்கி மனமதைச் சுத்த மாக்கி
சஞ்சல மகற்றித் தானே தனியிடத் திருந்து கொண்டு
அஞ்செழுத் ததனை யோதி அருளினாற் சித்தி பெற்றால்
விஞ்சைமந் திரத்தி னாலே விஷங்களை நீக்க லாமே. (2)

பத்தியாற் கெருட பஞ்சாட் சரமதைப் பதன மாக
சித்திதான் செய்த பேர்க்குச் செல்வமுஞ் சிறப்பு மோங்கும்
வித்தக ரவர்முன் பாந்தள் விஷங்களும் நடுங்கி யோடும்
புத்திமா னவர்தஞ் செய்கை புண்ணிய மாகும் பாரே. (3)

உறுதியா வுமைக்கெம் பெம்மான் உரைத்தவிம் மந்திரத்தாற்
பெறுபொருள் குருவாற் கண்டு பிசகாமற் கடியுண் டோனை
மறுவற மீட்டும் பேர்கள் வரன்பதி யடைவ ரென்றே.
யறுதியா வேதஞ் சொல்லும் அரனாணை யுண்மையீதே. (4)

சத்தியாம் கெருட பஞ்சாட் சரத்துள தியான மூலம்
மத்தியாம் ஹரீஓம் நல்லம் மம்மொடு வம்ம தாகும்
சித்தியாம் சிம்ரம் வம்யம் சேர்ந்தியல் யமஹம் மோடு
சுத்தியாம் சிவஓம் பட்சி சுவாகாவென் றுணரு வாயே. (5)

அருள்வடிவுமைத்தா யெங்க ளாண்டவன் றன்னைப்பார்த்
பெருமநீ பூண்ட சர்ப்பம் பிறழ்விட முளவா மன்றோ (தெம்
மருவனை நல்ல பாம்பாய் வயங்கினு முமிழ்நஞ் சோட்டத்
திருகெரு டாரு டப்பஞ் சாட்சா மறைசொல் லென்றாள். (6)

அம்மைதன் வினவுக் கீசன் அகங்கனிந் தறைந்த வுண்மை
செம்மையாய்க் கேட்ட நந்தி தேவாநல் லருளி னாலே
எம்மையு மறவா நன்றோ ரெனக்குரை செய்த வாறே
மும்மையு முணருந் தன்வந் திரியியான் மொழிகு வேனே. ()

வெண்பா.

தொட்ட வெழுத்தைத் தொடாத வெழுத்தருகே
விட்ட வெழுத்தை விதிப்பிரால்—முட்டமுட்டப்
பார்த்தவிட மெல்லாம் பஞ்சாட் சரவிதியாம்
காத்திருந்து கொள்வீர் கரு.

இதன் கருத்து.

தொட்ட வெழுத்து நகாரம், தொடாத வெழுத்துசிகாரம் விட்ட வெழுத்துமகாரம்ஆனதால்அம்மந்திரம் நசிமசியெனவாகும்

படமெடுத் தாடுஞ் சர்ப்பம் பாருல கதனி லெட்டாம்
திடமுள விடப்பற் கொண்டு சீறியே பாய்ந்து தீண்டும்
இடமிரி விரியன் பாம்பா றினமவை கடிக்குஞ் சாடி
மடமொடு கிடக்கும் வேறு மருள்விரி யனும்நான் காமே. (9)

புடையனி லாறே யாகும் பொருந்துமண் ணுளியி லாறு
தடையிலாச் சாரைப் பாம்பு தரணியில் மூன்றே சாதி
இடையிலாச்சுருட்டைப்பாந்தள் இயல்புடன் நான்கேயாமல்
கடையிலாக் கூளைப் பாம்பில் நவிலின மிரண்டாம் பாரே. ()

வந்துகொம் பேறு மூக்கன் வகையிரண் டாகும் வேறு
பந்தசா ளுக மூக்கன் பாரினி லிரண்டே சாதி
சந்ததம் வழலைப் பாம்பு தம்மினம் ஆறே யாகும்
பிந்துதண் ணீர்ப்பாம் பிற்குப் பிலமிலை வகைதா மாறே. (11)

வயங்கிடும் பச்சைப் பாம்பு வகையிரண் டாகு முன்பின்
இயங்கிரு தலைய னென்றும் எழில்மலைப் பாம்பைந் தாகும்

தயங்குபூ நாக மொன்றும் தரையினி லறுபா னுன்கும்
மயங்கிடா திவைதேர்ந் தோனே வல்விட தாரி யாவான் (12)

மற்றுள சில்வி ஷங்கள் வகைபல பலவே ருகும்
உற்றபல் விஷங்க ளுக்கோ ஒழுங்குற மருந்து சாந்தி
பற்றுநன் மந்தி ரங்கள் பலவிதிற் சொள்ளே மன்பால்
முற்றுநீ ரறிந்து செய்தால் முறையெலாம் பலித மாமே. (13)

## சித்தி செயதுகோள்ளு முறை.

ஹரிஓம், நம்லம், மம்வம், சிம்ரம், வம்யம், யம்ஹாம், சிவஓம், சுவாஹா. என்னுங்கெருட பஞ்சாட்சர மந்திரத்தை லெட்சமுருப் போட்டுச்சித்திசெய்து கொண்டால் அறுபத்தினன்கு விஷங்களில் எவ்விதமானாலும் இவனைக்கண்டவுடன் அஞ்சியொடுங்கி யோடிப் போகும்.

## மந்திரம்.

கெருடசித்தி செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணமுள்ளவர்கள் முதலாவது குருவருளைப்பெற்று அவரது ஆணையை மறவாதவரும், வஞ்சகங்கபடு முதலிய தீச்செயல்களை நீக்கினவரும், சித்த சுத்தியுள்ளவரும், சஞ்சலமகற்றினவருமாகப்பயிலல்வேண்டும். அப்பயிற்சியுள்ளவர்கள் நதிக்கரை யோரமாகவாவது, ஆலயத்திலாவது தனிமையாகவிருந்துகொண்டு மேற்கண்ட மந்திரத்தை லெட்சமுருவேற்றிக்கொள்ள விஞ்சை சித்தியாம்.

## விஷம் 64-க்கு விவரம்.

படமெடுத்தாடக்கூடிய சர்ப்பங்களில் அஷ்டநாக வர்க்கமெட்டும், விஷந்தங்கிய விரியன் பாம்புகளின் வகையாறும் சில்விஷந்தங்கிய கிறுவிரியன் வகைநாலும், புடையன் பாம்புவகையாறும், மண்ணுளிப் பாம்புவகையாறும், சாரைப்பாம்பு வகைமூன்றும், சுருட்டைப்பாம்பு வகைநாலும், கூழைப்பாம்பு வகையிரண்டும், கொம்பேறு மூக்கன் வகையிரண்டும், சாணக மூக்கன் வகையிரண்டும், வழலைப்பாம்பு வகையாறும், நீர்ப்பாம்பு வகையாறும், பச்சைப் பாம்பு வகையிரண்டும், இருதலைமணியனொன்றும், மலைப்பாம்பினம் ஐந்தும், பூநாகமொன்றும் ஆகமொத்தம் அறுபத்தினலுமாம்.

### விஷநிவர்த்தி மார்க்கம்.

இந்த அறுபத்திறைறு விஷங்களையும் மருந்துமந்திர முதலான வைகளாலும், ஓமசாந்தி முதலான மார்க்கங்களாலும், பார்த்து நிவிர்த்தித்தல் வேண்டும். நல்லபாம்பின்கடிக்கு ஒரு பற்பட்டால் மந்திரத்தினுலும், இரண்டு பற்கள் பட்டால் மந்திரம் மருந்துகளி னுலும், மூன்று பற்கள்பட்டால் மந்திரம் மருந்து குடோரிகளாலும், நான்கு பற்களும் பட்டால் மருந்து மந்திரங் குடோரி ஓமசாந்திக ளுடன் கருட பாவனையினுலும் பார்ப்பது விடதாரிகளின் கடமை, சிலவிஷங்களுக்கு நூல்களிற் சொல்லியபடி ஔஷதங்களினுல் பார்த்தல் வேண்டும்.

### மந்திரவாதியின் பிராரம்பம்.

வீட்டைவிட்டுவிஷகடியுண்டவன் வீட்டுக்குப்போகும்போது மந்திரவாதியானவன் ஓம் ஓடுவதே மாதேஸ்வரா சுவாஹாவென்று 108 உருச்செபித்து சத்திபதிதலைப் பெற்றுக்கொள்ளுதலுடன் போகக்கடவன். அவனுக்கெதிர்ப்பட்ட பிசாசுகளனைததும் விலகி விடும். அப்பால் வீட்டுக்குள் சென்று விஷகடிகொண்டவனருகே யிருந்துகொண்டு ஓம் நிர்தே வமைி தும்தசி-சுவாஹாவென்று 108 உருச்செபிக்கில் கடிவாயின் வலிநீங்கும். ஓம் நமோ நீலகண்டி மணி கண்டி விம்சுதையகண்டி ஓம் பிரளய பிரளய சுவாஹா என்று 108 உருச்செபிக்கில் வீட்டிலுள்ள பூதபேய்களெல்லாம் விலகிவிடும். ஓம்நாகதுதி-சங்-பவ்-வவ் சுவாஹாவென்று வேப்பிலையால் 1008 உருச்செபித்து மந்திரிக்க விஷமிறங்கிவிடும்.

### அடுத்த செய்கை-

ஓம் நமோ செய செய அனந்தா அரவிஷா விஷஞ்சீக்கிரம் பிரளய பிரளய ஓம் சுவாஹாவென்று 1008 உருச்செபித்து வேப்பிலையால் மந்திரிக்க விஷமிறங்கிவிடும்,

### மற்றொரு விதம்.

ஓம் நமோ கிறீம்கிறீம் ஆவேசு ஆவேசு கிறுங்கிறுங் குறேம் ரா-ரீங்- வாதேய-தேய நீவிசய சுவாஹா வென்று இஷ்ட தேவ யை நினைத்து வேப்பிலையால் 1008 உருப்போட்டு மந்திரிக்க விஷமிறங்கிவிடும்.

### கடினவிஷநிவர்த்தி மார்க்கம்.

"ஓம் அருணே சுவாஹா" வென்று வேப்பிலையால் (ஐஅ) உருச்செபித்து குடோரியாடில் கடினமான விஷங்களுமிறங்கிவிடும் அதுவுமன்றி "சிவஓம் சிவாஹா" வென்று (கூஅ) உருச் செபித்து வேப்பங் குழையால் மந்திரிக்க விஷமிறங்கிவிடும்.

### இதுவுமது.

விஷகடி யுண்டவனிடங் கிட்டப்போயிருந்து "ஓம்கெருடா கிருங்-கிருங்-ஆவேசு ஆவேசு சுவாஹா" வென்று வேப்பங்குழையினால் (ஈஅ) உருச்செபித்துப் பார்க்க விஷங் கடிவாயில் வந்து நிற்கும். அப்பால் "கெருடனுக்கினையாய், அனந்தனுக்கினையாய், வாசுகியாக்கினையாய், பற்பனுக்கினையாய், மஹாபற்பனுக்கினையாய், சங்கபாலனுக்கினையாய், தக்ஷகனுக்கினையாய், கார்கோடகனுக்கினையாய், குளிகனுக்கினையாய் விஷம் பிரளய பிரளய விஷம் பவ் பவ் வென்று வேப்பங்குழையினால் (ஐஅ) உருச்செபித்துப் பார்க்க விஷமிறங்கிவிடும்.

### கருடவிஞ்சை சித்திசெய்முறை.

சிவந்த கொடிதான நெற்றிக்கண்ணும், தழல்போன்ற நிறமும், நீண்ட கைகளும், பருத்ததோள்களும், பெருந்த சமூக்தும், அழகியவுடலும், திருமுடிச்சிரசுமாயிருக்கும் பாகருடனைத் தியானஞ் செய்து இடது முன்கையிலனந்தனையும், வலது முன்கையில் வாசுகியையும், இடையில் தக்ஷகனையும், கழுத்துக்குக் கார்கோடகனையும், வலது காதுக்கு பற்பனையும், இடது காதுக்கு மகாபற்பனையும், தலைக்குச் சங்கபாலனையும், உச்சிக்குக் குளிகனையும், மார்பிலாதிசேடனையும், இரண்டு கால்களிலிராகுகேதுக்களையும், தரித்தவனாகக்கண்டு விஷத்லைதக் கடுகடுத்துப் பார்க்கிறதாகவும், கண்களில் நெருப்புச் சுவாலிக்கிறதாகவும் மனதிற் பாவித்து கடித்த பாம்பின் படத்தைக்கெருடன் கைக்கிறதாகவும், ஷெ விஷத்தைக் கெருடன் வாங்கிவிட்டதாகவும் நினைத்து காலை உச்சிமாலை யிந்த நேரங்களில் மேலேகண்ட மந்திரத்தால் உபாசித்து வருகிறவனுக்கு உருவேற உருவேற கருடவிஞ்சைகைவரும். அங்ஙனஞ் சித்தி செய்து கொண்டவனே விடதாரியாவன். அவன்முன் நெருப்பிற் பட்ட புழுவைப்போல் விஷம் நில்லாதோடும். விஷம் மீட்குங் காலத்தில் தானந்தப் பாகருடனாகவும், பாம்புகடியுண்டவனை கருடனால் கைக்கப்படுகிற பாம்பாகவும், கடிவாய் பாம்பின் வாயாகவும் பார்வையானது விஷத்தைவாங்குகிற பாவனையாகவும் பாவித்துப் பார்த்தல்வேண்டும்.

### மற்றொரு முறை.

சுவேதவண்ணராய், சுகசிலாம்பரதரராய், தெசுத்ருமூர்த்தியாய் பத்மாசனராய், வலதுகையிற் சின்முத்திரையை யுடையவராய், இடதுகையில் மூவிலைச்சூலமேந்தியவராய், மற்றொருகையில் மழுவும் மற்றோரிடக்கையில் மானுந்தரித்தவராய், நெற்றிக்கண்ணை திறந்தவராய், இருக்கும் ஓம் நீலகண்டாயநம என்னும அஷ்டாட்சரசொரூபியை அவனிவனுசப் பாவித்துகடியுண்டவனைக் காமராஜனுகவும், தான் அக்காமராஜனை யெரித்தபரமேச்வரனுகவும், கருதி, காமராஜனை அவனன்று பார்த்த பார்வைபோலும் ஏற இறங்கப் பார்த்து நீலகண்டங் காட்டின் கடியுண்டவன் சீவித்து விஷங்கரிந்தொழியும். இம்முறைநைகவந்தவன் மகாயோகீசுவரனுவான்.

### திருநீறிட்டு விஷமிறங்கப் பார்த்தல்.

திருநீறு செல்வந்தருநீறு உண்மைக்குருநீறு நன்மையருள்நீறு மகாமந்திரநீறு, அந்திசந்தி மேலோரணிதருநீறு, தரித்திட்டேன் தரித்திட்டேன், யானைத்தோல்போர்த்தும், புலித்தோலுடுத்தும், அன்பருக்கின்பந்தரும் அண்ணலிட்டநீற்ற நானிட்டேன், யானைத்தோலணிந்தேன், புலித்தோலுடுத்தேன், புயங்கப்பணிபூண்டேன் செயநாகபடம் விரித்து தீநாவையடக்கி விடமிறங்க நானிட்டதிருநீறு விஷமட்டதிருநீறு ; திரிதிரிகணபதி நீயிட்டதுபோலாக முரிமுரிகணபதி திரிபுரமெரித்த சிவனே விஷமெரி விஷமெரி விஷமிறங்கச்சிவா. என்று 1008 உருச்செபித்து திருநீறுபோட்டுத் தீர்த்தமுங்கொடுக்க விஷமிறங்கும்.

### இதுவுமது-

ஓம்ஹூம் சத்தி உத்தம சத்தி
ஓடிவா சத்தி ஓடிவா சத்தி
கடுகிய கணபதி முடுகிய கணபதி
கடிவிடு கடிவிடு சீக்கிரங் கடிவிடு
நாலு திலைமும் நாகர் நாடும்
ஓடிய நாகம் வேகத்தின் மீள
நமசி வாய நமசி வாய
வானிலேறினும் பூமியி லோடிவா
வாலை புவனை பத்திர காளியே

ஊனி லேறினும் ஓடிவா ஓடிவா
ஓம்நம சிவாய ஓங்கார காளி
ஆங்கார காளி ரீங்கார காளி
நீங்காத பச்சை நிறமுடை யாளே
ஆங்காரத் துள்ளே அடங்கிடு தாயே
பரமே சுரனைப் பார்க்கிலும் பாரினில்
பெரியோ ரொருவரு மில்லை யில்லை
அவனோ டாடிய அருளமைந்த் தாயே
விஷமீ ளென்றேன் மீளென் றேன்நான்
நீரா ளுகி மீளச் செய்ய
ஒருரு ளைத்தே ரேறி யுலகை
வலம்வரு முன்சித் தத்தில் நிற்கும்
சிவசூ ரியநமா திரிபுர மெரித்தோய்
தேவ தேவ வருள்மகா தேவ
பார்பார் விஷத்தைத் தீர்தீர் சுவாஹா.

என்று 1008 உருச்செபித்து சித்திசெய்துகொண்டு இம்மந்திரத்தை ஒருதரஞ்சொல்லித் திருநீறுபோட்டுத்தீர்த்தமுங்கொடுக்க உடன் விஷமிறங்கும்

### இதுவுமது.

இடது கையில் விபூதியை வைத்துப்பரத்தி அதில் இதனடியிற் கண்ட சக்கரத்தை யெழுதி ஓம் சிவசுவாஹா சிவசுவாஹா இன்ன பேரின் உடலைப்பேணி உயிரைக்காத்து விஷந்தீர் தீர் தீர் என்று 108 உருச்செபித்து கண்ணுற் பார்த்து வாயினலூதி கையினற் றடவி யிறக்கி திருநீறு போட்டுத் தீர்த்தமுங் கொடுக்க உடன் விஷம் இறங்கும்.

### இதுவொரு குருமுறை.



மாசற்ற சோதி மறைப்பவர் தேடிய வான்பொருளே
தேசத் தவர்சிரிப் பாரே சிறுவிடந் தீண்டிச்செத்தால்
ஈசற் கடியான் இவன்சொற் கடங்கி யிறங்குநஞ்சே
நீசத்துக் கெட்டாய்போ ஓகெட்டாய் போவென்று நீக்கினனே.

ஊழாற் பரகரு டப்பார்வைக் காடா தொடுங்கரவங்
காழார் சிவனணி மாலணே யாம்நல்ல கட்செவியால்
ஆழாக் கரிசி புதுச்சட் டியிலிட் டதுபதமாங்
கூழா யிடுமுன் விடம்நீங்கு மீது குருவுரையே, என்றபடி செய்து விடமிறக்குவது ஒரு குருமுறையாம்.

## மற்றொரு முறை.

கடுகிய கணபதி முடுகிய பார்வையால்
கடிவிடு கடிவிடு கடிவிடு சுடிவிடு
ஓம் பிராணுபாநமோநமா ஓம் மதியோம்நமோநமா
விடுவிடு விடுவிடு ஈசுராயா நமநமா. இந்த மந்திரத்துக்குத்

தூதனைப் பெருச்சாளியாகவும் கடியுண்டவனைக் கஜமுகனுகவும் தன்னை மூத்தநயினுராகவும் நினைத்துத் தியானித்துப் பார்க்க உடனே விஷமிறங்கும்.

## மற்றொரு முறை

ஓம் சிவ சிவா ஓம் குமரி குமரீ, ஓம்.சண்டப் பிரசண்ட பிரளயகாலாயா நமநம; பட்டுருவத் தொட்டெரிந்த முத்தலை வேற்கை கொண்டுதாக்கு தாக்கு; திரிவிஷம் படுபடு நசிநசி, என்று 108 உருச்செபித்துப்பார்க்க விஷமிறங்கும்

## தடை கட்ட.

என்கை இலகுகை இலகுகை, யில்லையில்லை நெருப்புக்கை நெருப்புக்கை, நெருப்புக்கையிலெடுத்த நீளப்பாம்பே நீறுநீருய்க் கிடக்க நீயும் வைக்கோலாய்க்கிடக்க, உள்ளங்கையின் கீழுங்கப் பரை மேலுங்கப்பரை, என்கட்டு ஆதிபரமேசுவரன்கட்டு இக்கட்டு இக்கட்டுக்கடவாதே, ஆதிபரமேசுவரனறிய நீகட்டுக்கடங்கிக் கிடக்கச்சிவா. என்று திருநீற்றை யோதிப்போட்டால் நல்லபாம்பு அடங்கிக்கிடக்கும்

## தடை முறிப்பு.

ஆதிபைரவி ஆனந்தபைரவி ஓம்நமநம அலகொடு அலகுநீங்கி ஆறொடு மடுவுநீங்கி, இலகொடு இலகுநீங்கி யெங்கேவந்தாய் கெருடா சங்குமுறி சக்கரமுறி முப்பத்திமூன்றெலும்புமுறி ஓம் சிவசிவ நமோநமா ஓம் நமசிவாயா நின்கட்டை முறிமுறி ஓம் நம சிவாயன் கட்டைமுறித்தான் ஓபாம்பே நீசெல் செல் விரைந்து செல்லச் சிவா. என்று மந்திரித்துப்பார்த்தால் பாம்பு புறப்படும்

## மற்றொருமுறை கட்டுமந்திரம்.

சுற்றிக்கொண்டான் கருடன் சூழ்ந்துகொண்டான் கருடன், தாமரைவளையத்தில் தங்கிய பாம்பே தார்மகளாணை போகாதேபாம்பே, மாமகளாணை போகாதேபாம்பே வானவர்கோபம் வந்திடுமுனக்கே புச்சந்துணிப்பான் புலோமசை கொழுநன் தச்சன்உளியால் தலையையறுப்பான், உப்பைப் போற்பல்லுதிர்ந்துகெடுவாய் செப்பைப் போல்வாய் மூடித் திகைப்பாய், நாலு வபயினும் நஞ்சு தங்காது வாயையடக்கி மடக்கிக்கிடக்கச்சிவா. என்று 1008 உருச் செபித்துச் சித்திசெய்துகொண்டவன் இம்மந்திரத்தை ஒருதரஞ் சொல்லிப்பார்க்கின் பாம்பு கட்டிலடங்கிக்கிடக்கும்!

## தடை முறிப்பு.

நாட்டிற்கேகிடு நகருக்கேகிடு காட்டிற்கேகிடு கடிதாவேகிடு உன் மந்திரம்சேர வேகுவேகு கட்டுவிட்டேன் கட்டுவிட்டேன் கடிதிச்சபையைக் கடந்துபோபோ பூமகளாணைபோபோ போபோ பூமகளாணைபோபோ போபோ, கிழக்குநோக்கிப்பார்த்தேன் கீழ்த்திசை கட்டினேன் தெற்குநோக்கிப் பார்த்தேன் தென்திசை கட்டினேன், மேற்கு நோக்கிப்பார்த்தேன் மேல்திசை கட்டினேன் வடக்கு வழிவிட்டேன் ஓடு ஓடு சிவா. என்று செபித்துப்பார்க்க பாம்பு போய்விடும்.

## மற்றொருமுறை கட்டுமந்திரம்,

இடக்கையொதுக்கி வலக்கையெடுத்தான் மலைதனில் செழிப்பான செங்கழற்பெருமான்கையில் பிரம்பைவாங்கினேன்; முன்னே மூன்றுவரை வரைந்தேன் பின்னேமூன்றுவரை வரைந்தேன் இடத்தேமூன்றுவரை வரைந்தேன் வலத்தே மூன்றுவரை வரைந்தேன் இவ்வரைகடவாதே. வெளியேறாதே. வெளிப்படின் எழுத்தாணி கொண்டுன்கழுத்தைத் துணிப்பேன். கூனிக்கிழ்ப்பல்லால் முறித்துக்கறிக்கும் கெருடனிழலில் நீ அடங்கிக்கிடக்கச் சிவா. என்று செபித்துப்பார்க்கின் பாம்பு கட்டிலடங்கிக் கிடக்கும்.

## தடைமுறிக்க.

சுற்றி முன்னடிச்சூழ்ந்துவருங் கெருடன் உற்றிடுங் கோயிலிலொடுங்கிக்கிடக்கும்பாம்பே நாட்டிற்கேகிடு நகரிற்கேகிடு நடுவீட்டினுள்ளிருக்கும் பத்திரகாளியாணை போடிப்போகச் சிவா. என்று செபித்துப்பார்க்கின் பாம்பு கட்டுவிட்டோடும்;

### வேறொரு விதம் விஷமிறக்கும் பார்வை.

கடித்தது சிவன், கடியுண்டது சத்தி, கடிவாய் யோனி, தாக்கிய பல்லிலிங்கம், ஏறினவிஷம் சுக்கிலம், இரத்தக்கலப்பு சுரோணிதக்கூட்டம், தங்குமிடம் கருப்பை, இந்த விதமாகப்பாவித்து ஓம் ஆம் ஈம் நமசிவாயஞணே விஷமிறங்கச்சுவாஹா என்று 1008 உருச்செபித்துப்பார்க்க கருப்பத்திலுள்ள பிள்ளை பிறந்தாற்போலும் கடிவாய் வழியே விஷமிறங்கிவிடும். இதற்கு விபூதியினாலாவது வேப்பங் குழையினாலாவது பார்வை பார்க்கலாம்.

### கொடிக்கால் பயிர், குழிப்பயிர், நன்செய்ப்பயிர், புன்செய்ப்பயிர், தோட்டப்பயிர் இவற்றில் விழுந்த

### புழுக்களை விலக்குமார்க்கம்.

நசியமா வென்றிடுநீ நன்னீற்றைப் பூச்சி
நசியமசு வென்றசொற்கே நாடா—நசியமசு
மூக்கோணத் துள்ளிலங்கா மூலமொடோங் காரமிட்டே
யக்கோணம் சேர்க்கின மங்கு. என்றபடி. முக்கோண

மிட்டு உள்ளே (அங்) என்று மூலாட்சரமெழுதி அதனைச் சுற்றி யோங்காரமிட்டு அவ்வெந்திரத்தை மடைப்பள்ளிச்சாம்பலிலாவது குயவன் சூளைச்சாம்பலிலாவது அமைத்து ஓம் நசியமசு என்னு மந்திரத்தை இலட்சமுருச்செபித்து எந்தப் பயிரிற்போட்டாலும் புழு விலகும். வண்டரிக்கும் பனையிலச்சக்கர மெழுதிக்கட்டி ஓலையிற் சாம்பலைத்தூவினல் மேல்வண்டுகளரிக்கமாட்டா. இது கைகண்ட ஒரு முறை.

### வேறொருமுறை விஷந்தீர்க்கும் பார்வை.

கீழேபார்த்தான் கெருடன், கீழேழுலகமுமுருளப் பார்த்தான் கெருடன், மேலே பார்த்தான் கெருடன், மேலேழுலகமுமுருளப்பார்த்தான் கெருடன் சங்குருளச்சக்கரமுருள அங்குருள ஆகாசமுருள பணிவிஷமிறங்கச் சுவாஹா. என்று வேப்பந்தழையினால் 1008 உருச்செபித்துப்பார்க்க விஷமிறங்கும்.

### மற்றொரு முறை.

தீயவிஷமே செங்குரங்கே சீறிவாவா சூரியனைக்கவ்விக்கொண்டிறங்கினும்போலுமிறங்கு இறங்கு. அவ்விறங்கு சவ்விறங்கு செவ்

விறங்கு சிவசிவா இறங்கிறங்கு என்று 1008 உருச்செபித்து எருக்கிலைகொண்டுகுழையடித்து உச்சி நெஞ்சு கொட்டுக் கடிவாயிலிறக்கிப்பார்க்க விஷமிறங்கும், கடிவாயுலொட்டும் சக்கரம்.




சில்லறை விஷங்களுக்கு.

ஓம் இறீம் ஹறம்யம் இறங்கு இறங்கு என்று 1008 உருச்செபித்து புறமடைத் தண்ணீர் 'ஓதிபெறியச் சில்விஷங்கள் வேகமடங்கி யிறங்கிவிடும்.

தேள் விஷ ந்தீர்க்கும் பார்வை.

கொட்டியதேளே கொடுவிடத்தேளே
கொடுக்குமுள்ளாற் கடுவிடுந்தேளே
நெட்டைநெடும்பனை யேறியதேளே
நீலவிடத்தை யிறக்கிடுந்தேளே
குட்டைத்தேளே கூர்க்கருந்தேளே
கொடுங்காலிரண்டுஞ் சிவந்திடுந்தேளே
கட்டுவெக்காலி யாகியதேளே
நானாவிதமாம் பருமணித்தேளே
பருத்ததேளே செவ்வியதேளே
பதினெட்டுத்தேளுக்கு மிராசத்தேளே
ஒருத்தன்பனையேறி யிறங்கினாற்போலு
உடல்விட்டிறங்கிடு உடனேயிறங்கிடு
வருத்தப்படுத்தாதே நசிமசி நசிமசி.

வலிமையடக்கினேன் நசிமசி நசிமசி
திருத்துமந்திரம் நசிமசி நசிமசி

தீர்தீர் தீர்தீர் நசிமசி நசிமசி. என்று தொடங்கி மந்திர அடிகளைவேப்பந்தழையால் 108 உருச்செபித்துப்பார்க்க உடன் விஷமிறங்கிவிடும். முதலிற்போல் முடிவிலும் இம்மந்திரம் முழுவதுஞ்சொல்லிக் குழையைப் பிரித்துக் கைமாறிபெறிந்துவிடவும்.

## பட்சிதோசம் நிவர்த்திக்கும் பார்வை.

ஒருகடல் இருகடல் முக்கடல் நாற்கடல்ஐங்கடல் அறுகடல் எழுகடல் ஆகச்சத்த சாகரங்களின் தீர்த்தமிது; வடவாலவிருட்சத்தின் கீழிருக்குஞ்சிவன் பார்த்தான்; ஓ சண்டாளபட்சியே உன் தோஷத்தாலுச்சி குழியவாகாது வாகாது. திருவெண்ணீற்றுச் சிவன் பார்த்தான்: ஓடுஓடு சண்டாளபட்சி தோஷமே, கண்ணேறேஓடுஓடு நாவாறே ஓடுஓடு, சகலதோஷங்களுமோடிப்போகச்சிவா. என்று புறமடைத் தண்ணீரில் அறுகம்புல்கொண்டோதிப்பார்த்து மூன்று முறை முகத்திலெறிய பிள்ளைப்பிணிகளெல்லாம் நீங்கும் உரு 108.

## மருந்துகளின் விவரம்.

வேலிப்பருத்திச் சமூலம் சுக்குமிளகு திப்பிலி இவற்றை அரைத்துக் கடிவாயிற் பூச சகலவிஷங்களும் தீரும்.

ஆவுரிவேர் கிஷாயம் வைத்துக் குடித்துவிட்டுப்பின்னர் அந்த வேரைப்பிடுங்கி பச்சரிசிகளை நீருற்றியுரைத்துக் கொதிப்பித்துக் கடிவாயில் பூச சகல விஷங்களும் நீங்கும்.

விஷமூங்கிலில் சாலியக் கன்னிகையால் நூற்கும் நூலில்கருப்பூட்டிக் காப்புக் கட்டிக் கிரகணகாலத்தில் பூசித்துக் கெருடமந்திர தியானமுஞ் செய்து அவ்விஷ மூங்கிலின் அடிக்கிழங்கைப்பிடுங்கி அம்மியில் வைத்து அரைத்து வில்லைதட்ட உலர்த்திப்பொடி செய்து பேய்ச்சுரைக் குடுக்கையிலடைத்து வைத்துக்கொண்டு ஆணுக்குப்பெண் சிறு நீரிலும், பெண்ணுக்கு ஆண் சிறு நீரிலும் கலந்து கொடுக்கச் சகல விஷங்களும் நீங்கும்.

சிறுகுமிட்டியில் சாலியக்கன்னிகை நூற்றநூலில்கருப்பேற்றி கிரகண காலத்திலாவது ஞாயிற்றுக்கிழமையிலாவது காப்புக்கட்டி

பூசித்து கெருடமந்திர தியானமுஞ்செய்து அச்சிறுகுமிட்டிவேரை பிடுங்கி உலர்த்திப் பொடித்து வைத்துக்கொண்டு ஆண் பெண் சிறுநீரில் மாறிக்கலந்துகொடுக்க எவ்விஷமும் தீர்ந்துபோம்.

எருக்கன்மொட்டுச்சாறும், முள்முருக்கின் வேர்ப்பட்டைச் சாறும், மூக்கில் கசக்கிப்பிழிய தேள் கடிவிஷமிறங்கிவிடும்.

சருஞ்சிரகம் மிளகுகளைப் பசுவின்மோர் விட்டரைத்துக் கலக்கிக் கொதிக்கவைத்துக் கடிவாயில் தடவத்தேள்முதலிய சில் விஷங்களெல்லாந் தீரும்.

ஒருமண்கலயத்தில் வெற்றிலைச்சாறு விட்டு பெருங்காயத்தை உரைத்து வழித்துக்கடிவாயிற் பூசத்தேள் முதலிய சில் விஷங்களெல்லா முடனே யிறங்கிவிடும்.

மயிலிறகு கோழியிறகு இவ்ற்றை இடித்துப் பொடிசெய்து நெய்யிற்குழப்பி நெருப்பிலிட்டுப் புகைகாட்ட சில் விஷங்களை வேகமடங்கி வியர்வைவழி வெளிப்பட்டுக் குணமுண்டாகும்.

மஞ்சள் உப்பு தைவேளை மூன்றுமரைத்துக் கடிவாயிற்றடவ விடம் நீங்கும்.

### கண் கல்லெடுக்க.

ஓசக்கமாதேவி! மடந்தைப் பெண்ணே! உன்னை வேண்டிக்கொண்டேன், சக்கமாதேவியாணை கண்ணுள் கிடக்குங்கல்லே உபத்திரவியாதே உபத்திரவியாதே வாவா ஓடிவரச்சுவாகா. என்று முறுகில் வெண்ணையைவைத்து ஆகிருஷிக்க உடன்கல்வந்துவிடும். உரு 1008.

### காதுகுத்துக்கு.

காதுக்குத்தே கருவிக்கண்டேன் பார்க்கவந்த பரமனாணை தீர் தீர் தீர் புத்தோடு வட்டவடிக்காதினுள்ளே யிருக்கும் வாயுவே வலது புறக்காதுவிட்டு இடது புறமாகவும், இடதுபுறக்காதுவிட்டு வலதுபுறமாகவும் ஒதுங்காதே ஒதுங்காதே உள்ளே நிற்காதே நிற்காதே. ஒடுஒடு வாயுவே ஒடுஒடு என்று 108 உருச்செபித்து காதை பிடித்துத் தட்டித்தடவக் காதுக்குத்து நீங்கும்.

### விலக்கம் நிற்க.

கல்லணைவற்றி கடலணைவற்றி கடலுமுகிலும் அடங்கநீர்வற்றி ஞற்போலும் வற்ற வற்ற வற்ற வற்ற வற்ற வற்ற ஓம் காளி ஓம்

புராசி ஓம் துவாலையடங்கச் சிவா விலக்கம் நிற்கச்சிவா என்று 108 உருச்செபிக்கத் துவாலை யிறைக்கிறது நிற்கும். வயிற்றில் ஒட்டச் சக்கரம்




பரகருட தியானம்.

விஷகடி கொண்டவனுயிர் சிவபிரானது பீடமாகவும் விஷகடி கொண்டவனுடம்பு அப்பீடமமைக்கப்பட்டிருக்கும் சிம்மாசனமாகவும் ஏறியவிஷங்கள் அச்சிம்மாசனத்தின்மீ தலங்கரிக்கப்பட்டிருக்கும் வாடாத நறுமலர்மாலையில்வந்துவீழ்ந்து முழக்கும் வண்டுகளாகவும், திருமுன்னர் வந்திருக்குங் கருடாரூடனாகிய விடதாரி திருமாலாகவும் அவனுடைய பார்வையாகிய குழையடி கருடன் தனதிறக்கையினடியால் விசிறுகிறதாகவும், அவ்விறக்கையினின் றுண்டாகுந் தண்ணியகாற்றிலடிபட்டு வண்டுகள் மடிந்தொழிந்தனவாகவும் பாவித்துத் திருமால்துதிசெய்கிற பாவனையாக மனதிலெண்ணி ஹரி ஓம் சிவசிவா சர்வதோஷங்களும் நசிமசி, ஓம் நமசிவாய நமசிவாய நமோநம. நீ வாழ்க, உனது பீடம் வாழ்க, உனது சிம்மாசனம் வாழ்க வாழ்க. என்று 108 உருச்செபித்து வேப்பந்தழைகொண்டு விஷந்தீண்டப் பெற்றவன் மெய்யிற்பட்டும் படாமலும் தெற்கு நோக்கி வீசிப்பார்க்கவும்; உடன் விஷமிறங்கிவிடும் இது நிச்சயம் நிச்சயம்.

விபூதிப் பார்வை.

ஓம் நமசிவய நமசிவய, ஓம் ஹும் யம் ரம் வம் லம் ஸம் நமோநம: ஓம் லிங்க லிங்க சிவசிவ ஓம் சுவாஹா சுவாஹா நமோநம: ஓம் சிவ பக்ஷியே விஷ்ணுபக்ஷியே விசுவபக்ஷியே கருடபக்ஷியே.பார்பார் பார் விஷந்தீர் தீர்தீர் என்று உரு 108 செபித்து.

ஓம் ஹும மகாதேவாய பூஷ்பாணி பூஜையாமி,
ஓம் யம் வீமதேவாய தூப ஆக்ராபயாமி,
ஓம்ரம்ருத்திரதேவாய தீபமதர்சயாமி,
ஓம்வம் சர்வவிஷ்ணுதேவாய நைவேத்யம் சமர்ப்பயாமி,
ஓம் வம் பவதேவாய கெந்தாந்தரயாமி,
ஓம் பம் சூரிய தேவாய ஓம் சௌம் சந்திர தேவாய,
ஓம்ஸம் ஸர்வாதமனேபசுபதி சர்வோப்சாரனசமர்ப்பயாமி
என்றுவிபூதிபோடசர்வ விஷங்களும் சர்வதோஷங்களும் நிவர்த்தி.

# மூலமந்திர எந்திர பூஜாவிதி.

சாதிநாகவிஷங்களையும் பலவகையில் விஷங்களையும் இறக்குவதற்குப் பஞ்சபூத வேதைகளில் பிரமதியானப் பிரிதிவிச் சக்கரம்.



ஸீதாராம த
வாசக ச

பிரிதிவி மந்திரம்.

ஹறிஓம் அவ்வும் சிவயநம சுவாஹா

பூஜாவிதி.

ஆதிவாரத்தில் அதிகாலையி லெழுந்து ஸ்நானஞ்செய்து பொற் பட்டுடுத்தி சூரியனை வணங்கி மெழுகிக்கோலமிட்ட ஓரிடத்தில் தருப் பையாசனத்தில் வடக்குமுகமாக இருந்துகொண்டு நெய்விளக்கின் முன்னே அளவுப்படியுள்ள ஒரு வெள்ளித்தகட்டிலே சக்கரத்தை வரைந்து பாலபிஷேகஞ்செய்து தேங்காய்பழம் வெற்றிலைபாக்குப் படைத்து, தூபதீப நைவேத்தியங்களுங் கொடுத்து சக்கரத்தைப் பிரம தேவனை மானசமாகக் கண்டுகொண்டதாகப் பாவித்துப் பூசித்து ரேசக பூரக கும்பகமுஞ்செய்து தாமரை மணிகொண்டு மந்திர செபஞ்செய்யவும். தினம் 1008 உரு வீதம் ஒரு மண்டலஞ் செபித்து வரவும் உரு 50000 முற்றுப்பெறவும் மந்திரசித்தி கைவரும்.

செய்கை முறை.

விஷந்தீண்டப்பெற்றவனுடைய உந்திக்கமலத்திற்குமேல்சிரசு வரைக்கும் சக்கரத்தை வரைந்து ஒருபிரம்பு கொண்டாவது வேப் பங் குழைகொண்டாவது இம்மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு தட்டி இறக்கிப்பார்க்க விஷமிறங்கும் பிரமகடாட்சமும், சரசுவதி கடாட்சமும் உண்டாகும். சகலகாரியங்களுஞ் சித்தியாம்.

**சாதிகாக விஷங்களையும் பலவகை சில்விஷங்களையு மிறக்குவதற்கு பஞ்சபூத வேதைகளில் விஷ்ணுதியான அப்புச் சக்கரம்.**




அப்பு மந்திரம்.

ஹரிஓம் அவ்வும் சிவா சுவாஹா.

பூஜாவிதி.

சோமவார அதிகாலையி லெழுந்து ஸ்நானஞ் செய்து நீலப் பட்டுடுத்தி அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு மெழுகிக்கோல மிட்ட ஓரிடத்தில் மான்தோ லாசனத்திலே கிழக்குமுகமாக இருந்துகொண்டு அளவுப்படியுள்ள ஒரு பஞ்சலோகத் தகட்டிலே சக்கரத்தை வரைந்து பால்தேன் முதலான அபிஷேகங்களைச் செய்து தேங்காய் பழம் வெற்றிலை பாக்குகளைப் படைத்து தூபதீபநைவேத்தியங்களுங் கொடுத்து விஷ்ணுபகவானை மானசமாகக் கண்டுகொண்டதாகப் பாவித்து பூசித்து ரேசகபூரக கும்பகமுஞ்செய்து துளசிமணிகொண்டு மந்திரசெபஞ் செய்யவும் தினம் 1008 உருவீதம் ஒருமண்டலம் செபித்துவரவும் உரு 50000 முற்றுப் பெறவும் மந்திரசித்தி கைவரும்.

செய்கை முறை.

விஷந்தீண்டப் பெற்றவனுடைய உந்திக் கமலத்திற்குமேல்சிரசுவரைக்கும் சக்கரத்தை வரைந்து ஒரு பிரம்புகொண்டாவது வேப்பங் குழைகொண்டாவது இம்மந்திரத்தைச்சொல்லிக்கொண்டு தட்டி இறக்கிப்பார்க்க விஷமிறங்கும் விஷ்ணு கடாட்சமும் மகாலட்சுமிகரமும் சகல பாக்கியமும் உண்டாகும்.

சாதி நாக விஷங்களையும் பலவகை பில்விஷங்களையு மிறக்குவதற்கு பஞ்சபூத தேவதைகளில் உருத்திர கியான தேயுச்சக்கரம்.




தேயுமந்திரம்.

ஹ்ரீஓம் அவ்வும் யவசிமந சுவாஹா.

பூஜாவிதி.

மங்களவாரத்தில் அதிகாலையில் ஸ்நானஞ் செய்து செம் பட்டு வஸ்திரந் தரித்துக்கொண்டு அநுஷ்டான முடித்து மெழு கிக் கோலமிட்ட ஓரிடத்தில் புலித்தோலாசனத்தில் வடக்குமுகமா யிருந்துகொண்டு நெய்விளக்கின்முன்னே அளவுப் படியுள்ள ஒரு தாமிரத்தகட்டில் சக்கரத்தை வரைந்து பால்தேன் இளநீர் முத லான அபிஷேகங்களைச் செய்து தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு களைப் படைத்து தூபதீப நைவேத்தியங்களுங்கொடுத்து மனத் தை யொருப்படுத்துக்கொண்டு உருத்திரமூர்த்தியைக் கண்டுகொ ண்டதாகப் பாவித்துப் பூசித்து ரேசக பூரக கும்பகமுஞ் செய்து உருத்திராட்சமணிகொணடு மந்திர செபஞ்செய்யவும் தினம் 1008 உரு வீதம் ஒரு மண்டலஞ்செபித்து வரவும் உரு 50000 முற்றுப் பெறவும் மந்திரசித்தி கைவரும்.

செய்கை முறை.

விஷந்தீண்டப்பெற்றவனுடைய உந்திக்கமலத்திற்குமேல்சிரசு வரைக்கும் சக்கரத்தைவரைந்து ஒருபிரம்புகொண்டாவதுவேப்பந் தழையினலாவது இம்மந்திரத்தைச் சொல்லிக்கொண்டுதட்டியிறக் கிப்பார்க்கவிஷமிறங்கும் விஷமிறங்கும்போது தெற்குமுகமாக இரு ந்து கொள்ளவும் மேற்குமுகமாகவுமிருந்து கொள்ளலாம். சத்துரு செயமும், வெகடாட்சமுமுண்டாம் ஆடாத பேய்பிசாசுகளுமாடும்

சாதி நாக விஷங்களையும் பலவகை சில்விஷங்களையு மிறக்குவதற்கு பஞ்சபூத தேவதைகளில் மகேஸ்வர தியான வாயுச் சக்கரம்



வாயுமந்திரம்-

ஹரிஓம் அவ்வும் வசியசிவா சுவாஹா

பூஜாவிதி.

குருவாரத்தன்று அதிகாலையிலெழுந்து ஸ்நானஞ் செய்து நீலாய்பாராந்தரித்து அநுஷ்டான முடித்துக்கொண்டு மெழுகி கோலமிட்ட ஓரிடத்தில் கிருஷ்ணாசனத்தில் வடக்கு முகமாகவிருந்து கொண்டு தாமரை நூலிற்யேற்றிய நெய்விளக்கின்முன்னே அளவுப்படியுள்ள வெள்ளித் தகட்டிலே சக்கரத்தை வரைந்து பால்முதலிய அபிஷேகங்களைச் செய்து தேங்காய் பழம் வெற்றிலை பாக்குகளைப் படைத்து தூபதீபநைவேத்தியங்களுங்கொடுத்து மகேஸ்வரனைக்கண்டு கொண்டதாகப் பாவித்துப் பூசித்து ரேசக பூரக கும்பகமுஞ்செய்து உருத்திராட்சமணிகொண்டு மந்திர செபஞ் செய்யவும் தினம் 1008 உரு வீதம் ஒருமண்டலஞ் செபித்து வரவும் உரு 50000 முற்றுப்பெறவும் மந்திரசித்தி கைவரும்

செய்கை முறை.

விஷந்தீண்டப்பெற்றவனுடைய உந்திகமலத்திற்குமேல் சிரசுவரைக்குஞ் சக்கரத்தையொட்டி ஒருபிரப்புகொண்டு இம்மந்திரஞ் சொல்லித் தட்டியிறக்கிப் பார்க்க விஷமிறங்கும் இதனால் குளிர் முதலான சுரங்களும் நிவாரணமாகும்

சாதி நாக விஷங்களையும் பலவகை சில் விஷங்களையு மிறக்குவதற்கு பஞ்சபூத தேவதைகளில் சதாசிவ தியான ஆகாசச் சக்கரம்




ஆகாசமந்திரம்

ஹரீஓம் அம் ஆம் கூம் சிவ சிவ வாவா சிவஓம் சுவாஹா

பூஜாவிதி.

சுக்கிரவாரத்தில் உதயகாலத்தில் ஸ்நானஞ்செய்து பச்சைப் பட்டுடுத்தி அநுஷ்டான முடித்து மெழுகிக்கோலமிட்ட ஓர் சுத்தமான இடத்தில் கிருஷ்ணாசனத்தில் வடக்குமுகமாகி இருந்துகொண்டு தாமரை நூலிட்டேற்றிய நெய்த்தீபத்தின் முன்னரேபொற்றகட்டில் சக்கரத்தை வரைந்து பஞ்சகவ்வியாதி அபிஷேகங்களைச் செய்து தேங்காய் பழம் வெற்றிலை பாக்குகளுடன் ஐங்கனி ஐந்முது முதலியன படைத்து தூபதீபாராதனை கொடுத்து சதாசிவ மூர்த்தியைக்கண்டு கொண்டதாகப் பாவித்துப்பூசித்து ரேசகபூரக கும்பகமுஞ்செய்து உருத்திராட்சமணி படிகமணிகளால் மந்திர செபஞ்செய்யவும் தினம் 1008 உருவீதம் ஒருமண்டலஞ்செபித்து வரவு உரு 50000 முற்றுப்பெற்றால் மந்திரசித்தி கைவரும் மந்திரவாதி குருவருள்பெற்று சுபதினத்தில் தொடங்கி மண்டலபூஜை முடித்து மந்திரவாதஞ் செய்யக்கடவன்

(செய்கை முறை.) விஷந்தீண்டப்பெற்றவனுடைய உந்திக்கமலத்திற்குமேல் சிரசுவரைக்கும் சக்கரத்தை ஒட்டிக் கண்ணுற்பார்த்து மந்திரஞ் செபித்து வேப்பிலையினால் மந்திரிக்க விஷமிறங்கிவிடும்.

பரமபதிதுணை.

# திருநீலகண்ட தியானம்.

அட்டமா நாகந் தம்மி லரவெது தீண்டி னாலும்
திட்டமா நீல கண்ட தியானமந் திரத்தால் தீரும்
இட்டமாம் பூரோம்ஹ்ரீம்டம் மெனத்தினஞ் செபித்துவந்தால்
துட்டபல் விஷங்கள் முற்றுஞ் சொல்லாம லோடும்பாரே. ()

புண்ணிய புருஷர்களுக்கும், பெரியோர்களுக்கும், மகாயோகேசுவரர்களுக்கும், திருநீலகண்டரேயாவர். அவரே ஓம்நீலகண்டாயநம என்னும் அஷ்டாட்சரசொரூபியாவர். அவரது மந்திரம்பூரோம்ஹ்ரீம்டம் மூன்றெழுத்துக்களேயாகும். அம்மந்திரத்தை இலட்சமுருச்செபித்துசத்தி பதிலைப்பெற்றுக் கொண்டவன் மகாயோகீஸ்வரனாகின்றான் அவனுக்கு எல்லாச்சித்திகளுங்கைவரும் அவன்முன்பில் கொடுவிடப்பாம்புகளோ, சில்விடங்களோ, பேய்பிசாசுகளோ, வன்பிணிகளோ, கருமதோஷங்களோ, ஏவல்பில்லிசூனியங்களோ தலைக்காட்டாதோடும் அஷ்டகரும வித்தைகளில் வல்லவனென்று பிரசித்தனாகுவோனுமவனே இந்நீலகண்ட விஞ்சைவல்லானிடத்தி லெதிர்க்கவல்லாரெவருமிலர் இவன் செய்யும் எந்த விஞ்சையையுந் தடுக்க எவராலுமாகாது இவன் விஞ்சை எதிரிக்கட்டுக் கடங்கக் கூடியதுமன்று எதிரியும் நீலகண்ட விஞ்சை வல்லானாயிருப்பனேல் அவனிவனை நீலகண்டப்பெருமானாகவே கண்டாலுய்வான் அவ்வண்ண மிவ்விருவரும் நீலகண்டப்பெருமானால் தடுத்தாட்கொள்ளப் பட்டு உறவினராகி வாழப்பெறுவர். அத்தகைய இப்பரவிஞ்சையின் வலிமையைச் சொல்லுகின்றோம்.

சதுர்ப்புஜமுடையவராய் மானு மழுவுந்தரித்தவசாய் விளங்கும் நீலகண்டபெருமானை நினைத்து திரியாட்சரத்தை நூறுருச் செபித்துப் பார்க்க அஷ்டநாகத்தின் விஷமெதுவானாலும் உடனே யிறங்கிவிடும்.

2. ஆத்துமா பால்வண்ணமாய் சதுர்ப்புஜத்தையுடைய நீலகண்டனுமாகி மூன்றெழுத்தை நூறுருச் செபித்து விபூதிதரிக்கசாய் விஷாணமாகும்.

3. சந்திரமண்டலத்தினடுவே யிருக்கிறவராய் அமிர்தசந்திரனைச்சடையிற் றரித்தவராய்ப்பாவனைசெய்து திரியாட்சரத்தை108 உருச்செபித்து வேப்பங்குழைபடித்துப்பார்க்க விஷமிறங்கிவிடும்.

4. சந்திரமண்டலத்தின்மத்தியி லிருக்கிறவராய் மூன்றுகண்களுடையவராய் இடப்பாகத்திலிருக்கும் பார்வதி சமேதராய்ப் பாவித்து மூன்றெழுத்தை 108 உருச்செபித்து குழையடித்துப் பார்க்க அஷ்ட நாகங்களின் விஷமுமிறங்கிவிடும்.

5. சந்திரமண்டலத்தினடுவே யிருக்கிறவராய் அமிர்தநித்தியராய்ப்பாவித்து மூன்றெழுத்தை 108 உருச்செபித்து விபூதிபோட விஷமிறங்கிவிடும.

6 சந்திரமண்டலத்தின் மத்தியிலிருக்கிறவராய் அமிர்தசந்திரனைச்சடையிற் றரித்தவராய்ப்பாவித்து ஜலத்தைவாங்கி திரியாட்சரத்தை நூற்றெட்டுருச் செபித்து கடியுண்டவன் சிரசில் அமிர்த புரோக்ஷணஞ் செய்து உள்ளுக்குங்கொடுக்க விஷமிறங்கிப் பூரணமான சுகமுண்டாகும்.

7. அமிர்த சந்திரனுக்கு மத்தியிலிருக்கிறவராய் அமிர்தகும்பத்தைக் கையில் வைத்திருக்கிறவராய்ப் பாவித்து திரியாட்சரத்தை 108 உருச்செபித்து தீர்த்த புரோக்ஷணஞ் செய்து உள்ளுக்குங் கொடுக்கச் சகல விஷங்களும் நீங்கும்.

8. விஷமீறித்தலைக்கேறி மூர்ச்சித்து அடங்கி அயர்ந்துகிடக்கிறவனை கோடி வஸ்திரத்தினாலே பாதாதிகேசபரியந்தம் உருத்தெரியாமல் மூடி அமிர்தகும்பத்தினாலே வாங்குகிறதாகப்பாவித்து திரியாட்சரத்தை 108 உருச்செபித்து சிரசிலே அமிர்த புரோட்சணஞ்செய்து மூடியிருக்கிற வஸ்திரத்தை சிரசிலிருந்து பாதமட்டிலும் சுழித்தெறிய விஷமிறங்கிநித்திரை தெளிந்தெழுபவனைபோல் எழுந்திருப்பான் உடனே ஒருகுடஞ்சலத்தை அமிர்தவருஷமாய்த் தியானித்து அபிஷேகம் பண்ண மயக்கம் யாவும் தீர்ந்துவிடும்.

9. பால் வண்ணமாய் இரண்டு புயமுடையவராய் பாவித்து திரியாட்சரத்தை 108 உருச்செபித்து சிரசிலே பிரம்புகொண்டு தட்டி விறக்க விஷமிறங்கிவிடும்.

10. ஒருபிரப்பிலே அடி நடுமுடிகளில் மூன்று அட்சரங்களையு முறைப்பெழுதி பால்வண்ணமாய் இருந்து சிரசுமுதல் பாதம் வரைக்கும் தட்டியிறக்க விஷமிறங்கிவிடும்.

11. சந்திரமண்டலத்தில் தங்கநிறமாய்ச் சரீரமெல்லாம் அமிர்தவருஷம் வருஷிப்பதுபோல இடைவிடாமல் நனைக்கிற பரவனையாய் நாலுபுயங்களும் மூன்று கண்களுமுடையவராய்ப் பிரசன்ன முடையவராய் கோமள தேகமாய்த் தானவனுகப்பாவித்து விஷமேறிக்கிடக்கிறவனை திரியாட்சரத்தினலே பிரம்புகொண்டு தட்டியிறக்க விஷமிறங்கிவிடும்.

12 தியானஞ்செய்யும் மந்திரவாதிபோகமுடியாத இடத்தில் முன் செபித்துவைத்திருக்கிற பிரப்பில திரியாட்சரத்தை 108உருச்செபித்து ஒருவன் அல்லது ஒருத்தியிடங்கொடுத்து அந்தஆளைக்கொண்டு கடியுண்டவன் சிரசிலிருந்து பாதமட்டும் அந்தப்பிரம்பினல் இறக்கித்தடவும்படி செய்தால் உடனே விஷமிறங்கிவிடும் தான் வெளியே போகுங்காலத்திலும் அப்படிப்பட்ட பிரம்பை வீட்டிற் கொடுத்து விஷமிறங்கும்படி கட்டளையிட்டுப்போகலாம்.

13 சகல சில் விஷங்களுக்கும் வீக்கத்துக்கும், சகல ரோகங்களுக்கும், புண்எரிச்சல் முதலானவைகளுக்கும், மாந்ததோஷங்களுக்கும் திரியாட்சரத்தை 108 உருச்செபித்து வேப்பங்குழையடித்துப் பார்க்க எந்ததோஷமும் நீங்கிச்சுகமுண்டாம்.

14 விபூதி மண்ஜலம் வேப்பங்குழை இவற்றில் முதலட்சரத்தைத்தாபித்துத் தடவிப்பார்க்கச் சுரமுதலியரோகந் தீரும்.

15 மனிதர்களுடைய அங்கங்களில் எந்த இடத்திலேனும் உண்டாகும் உரோகங்களுக்கு முதலட்சரத்தை விபூதியிலே எண்ணெயிலே யெழுதி அந்த அட்சரத்தை 1008 உருச்செபித்துத் தடவ நிவாரணமாகும்.

சுரத்துக்கும் விஷத்துக்கும் பாய்ச்சுவித்தை.

16 சுரம்பிடித்தவன் சிரசில் முதலட்சரத்தை ஸ்தாபித்து மூன்றெழுத்தைச்செபித்து அவனைத்தடவி தூணிலே மரத்திலே யேற்ற அச்சுரம் அவனில் நீங்கி ஏற்றின இடத்தில் பாயும் விஷங்கடியுண்டவன் சிரசில் இந்தப்படி ஓட்டி முன்போல் செபித்துக்கைகொண்டிறக்கி யேற்றினவிடத்தில் விஷமும் பாயும்.

## தூணில் மூட்டுவித்தை.

17. முதலட்சரத்தைத் தூணிலே மரத்திலே ஒட்டி அந்த அட்சரம் ஒட்டின இடத்தில் விஷங்கடித்தவனை மூன்றுதரமுட்டச் செய்து முதலட்சரத்தையே செபித்துப்பார்க்க விஷமிறங்கிவிடும். இது செல்வச் செருக்கால் வணக்கமின்றிப் பெரியாரை மதியாதிருக்கும் மூடப்பிரபுவுக்கும், துற்சனனுக்குஞ் செய்யத்தக்கது.

## கேர்ப்ப முண்டாக.

18. கெர்ப்பமுண்டாகாத மலடிகளுக்குப் பசுவினெய்யிலாவது பாலிலாவது திரியாட்சரத்தை ஜெபித்து ஒவ்வொரு நாளுங் காலையிலொருகரண்டிவீதம் ஒருமாசங் கொடுக்கப்பிள்ளை யுண்டாகும் 19 அப்படியில்லாவிட்டால் ஒருபடி பசுவினெய்யில் திரியாட்சரத்தை 1008 உருச்செபித்து காலை மாலையாக மூன்றுமாதங்கொடுக்கப் பிள்ளையுண்டாகும் 20 பஞ்சகவ்வியத்திலே திரியாட்சரத்தை தினம் 108 உருச்செபித்து ஒருமாதம்வரை காலையிற்கொடுத்தால் உடனே பிள்ளையுண்டாகும், 21 பூதம் பேய் கெந்துருவகிரகம் இவற்றிலேதாவது ஒன்று பிடித்தவர்களுக்குப் பசுவின் வெண்ணையை அல்லது விபூதியை ஒருமாதம் 108 உருச்செபித்துக் கொடுக்கப்பிள்ளையுண்டாம்.

## சேத்து விழுகிற பிள்ளைகளுக்கு.

22 பசுவின் பாலிலே திரியாட்சரத்தைத் தினம் 108 உருச்செபித்துக் கெர்ப்பமானவுடன் ஒருமாதங் கொடுக்க உயிருடன் பிள்ளை பிறக்கும்.

## இடையில் காய் விழுந்தால்.

23 பசுவின்பாலும் தேனும் கூட்டித் திரியாட்சரஞ்செபித்து ஒருமாதம் தினம் காலை மாலை கொடுக்கப் கருப்பம் பூரணமாகிப் பிள்ளை பிறக்கும்.

24 பசுவின் பாலில் சந்தனத்தைக் குழப்பித் திரியாட்சரத்தைத் தினம் 108 உருச்செபித்து மூன்று முழுகின நாளிலேயிருந்து மூன்று மாதம் காலைமாலை கொடுக்கப் பூரணகெர்ப்பமாய்ப் பிள்ளை பிறக்கும்.

## மற்ரொரு விதம்.

25 ஜலத்திலே திரியாட்சரத்தை 108 உருச்செபித்து ஒருமாதங்கொடுத்து உப்பில்லாமல் சாப்பிடும்படி செய்தால் தீர்க்காயுளுள்ள பிள்ளை பிறக்கும்.

### மற்றொரு விதம்.

26. அரைத்த மஞ்சளிலே பிருதிவிச்சக்கரமெழுதி மத்தியிலே மகாரமெழுதி இரண்டாமட்சரத்தை விந்துவுடனே கூட்டி 1008 உருச்செபித்து ஒரு மண்டலங் குளித்தால் இருசியாயிருக்கிற பேருக்குத் தனமுண்டாம்.

### மற்றொரு விதம்.

27 வெள்ளித் தகட்டிலே பிரதிவிச் சக்கரமெழுதி அதனடுவே இரண்டாமட்சரமெழுதி பூஜாவிதியுடன் 1008 உருச்செபித்து மங்கிலியத்துடன் எந்திரத்தைக்கட்ட உடம்பு பூரித்து தனமுமுண்டாம் கெர்ப்ப முண்டாகிக் குழந்தையும் பிறக்கும்.

### தேஜஸ் உண்டாக.

28 பசுவின் கோமயங்கொண்டுவந்து அதிலே மகாரமெழுதி அதனுடன் முதலட்சரங்கூடஎழுதி திரியாட்சரத்தை ஆயிரமுருச் செபித்துச் சருவாங்கமும் பூசிக்குளிக்க உலர்ந்தசரீரம் புஷ்டியாகி அழகுண்டாகி சரீர காந்தியாயிருப்பார்கள்.

### ஆரோக்கிய முண்டாக.

29 புரசபத்திரத்திலே சிகாரமெழுதி அதனடுவே மூன்றுமட்சரமெழுதி பூசைவிதி முடித்து திரியாட்சரத்தை 1008 உருச் செபித்து வெள்ளிக்குழலிலடைத்து தரிக்கப் புஷ்டியும் ஆரோக்கியமுமுண்டாம்.

### முயலகன் நிவிர்த்திமார்க்கம்.

30 ஒருசெம்பில் தண்ணீர்வைத்து நிற்கிற சூரியகிரணராய் திரி நேத்திரராய், சூலமும் வாளும் சக்குமாந்தடியுமுடையவராய், திகம்பரமேகலையும் நாகாபரணமும் விரிந்தசடையும் அக்கினிமாலையுந் தரித்தவராய், கையிலேந்தியகபாலத்தையுடையவராய், இடதுகாலால் முயலகனை மிதித்தவராய் விளங்கும் பரமேசுரபாவனைபண்ணிக்கொண்டு அவனிவணங்கி நின்று திரியாட்சரத்தை 1008 உருச் செபித்து ஒரு கும்ப ஜலத்தையபிஷேகம்பண்ண முயல்கண்டவலிப்புள்ளவர்கட்கு அவ்வலிப்பு விலகிச் சுகமுண்டாகும்.

31 அந்தப்படி பத்துநாள் அல்லது பன்னிரண்டுநாள்கட்கு நாள்தோறும் ஜலத்தில் 3000 உருவேற்றி ஒவ்வொரு காலையிலுமபிஷேகம் செய்துவந்தால் கடினமான குமரகண்ட வலிப்புத்தீரும்.

32 புரசபத்திர முதலான தகடுகளிலே ஸ்ரீகோண மெழுதி அதனடுவே மூன்றுமட்சரத்தை யெழுதி அதன் மத்தியிலே முயலகன் பிடித்தவன் பெயரையும் அவன்வியாதியையுமெழுதி அதை சுற்றி ஐம்பத்தோரட்சரங்களையும் விந்துவுடனே வரைந்து அதற்கு மேலே பிரணவத்தினால் வளைந்து பூசை பண்ணி 1008 உருச்செபித்து எந்திரத்தைச் சிரசிலே தரிக்க நிவாரணமாம்.

மூன்றேழுத்தினுண்மை.

உருப்பெறும் புரோமென் றுக்கா லுடல்காக்கப் பட்டு நன்றும்
கருப்பெறும் நிரீமென் றுக்கால் கடுநீக்கப் பட்டு நன்றும்
மருப்பெறும் டம்மென் றுக்கால் வாழ்வாக்கப் பட்டு நன்றும்
திருப்பெறும் மூன்றெழுத்தால் சிவன்செய லெல்லாம் நன்றே.

சக்கரமுறை.

வட்டமிட் டதிலோங் காரம் வரைந்தவட் டத்தின் மேலே
யிட்டுமுக் கோண்மேற் சுற்றி யினுமொரு வட்ட மிட்டவ்
வட்டமே லிதழ்நான் கிட்டு வட்டமொன் றதன்மேலிட்டவ்
வட்டமே லிதழைந் திட்டு வரைமிசை யிருநாற் கோணே. (3)

உரம்பெற வுள்ளி தழ்நான் குள்ளினுங் குருமுன் வைத்துப்
பரம்பர மேட்டி யோடு பரப்பிர மம்மே விந்தம்
திரம்பெறத் தீட்டி மத்தி திசுழுமைந் திகழ்க ளின்சுண்
சுரங்கண பதிவேள் காரி துர்க்கைவா ணியைநிறுத்தே. (4)

மேலிரு நாற்கோ ணின்கீழ் விதிதிசை யிதழ்க ளெட்டன்
பாலினும் வயிராக் கியம் பகர்தரு மிச்சை ஞானம்;
மாலிரு நிதிகள் சிந்தா மணிமடம் அறிவிவ் வெட்டாஞ்
சீலிய சத்தி பீசந் தீட்டிடு முறையே மைந்தா. (5)

இடைவெளி பெருந்திக் கெட்டி லெழுதஓம் நமவென் றப்பா
அடைவினிச் சக்கரத்தை யன்புட னருச்சித் தேத்தி
நடைதவ றாமல் மெய்யே நவின்றுவன் கோபம் விட்டா
னுடையவ னருட்கா ளாகி யுனக்குநற் பேறுண் டாமே. (6)

முற்றிற்று

இனிமேல் எந்திர மந்திர பூஜாவிதிகள் கூறப்பட்டுள்ளன.

# திருநீலகண்டம்.

## எந்திர மந்திர பூஜாவிதிகள்.



### மந்திரம்.

"ஓம் குருகுரு குருகுரு நமோநமா, ஓம் கம்ஸம்க்ஷம் தூம் சம் நமோநமா, ஓம்வைராக்கிய சத்தாயநமோநமா, ஓம்காருண்யா நமோநமா, ஓம் ஞானஸ்வரூபி நமோநமா, ஓம் சங்கநிதி தேவாயா நமோநமா, ஓம்சிந்தாமணிதேவாயா நமோநமா, ஓம்மகேசுராயா நமோநமா, ஓம் விஞ்ஞான சத்தாயா நமோநமா, ஓம் நீலகண்டாயா நமோநமா, ஓம் நமோநமா சுவாஹா.

### பூஜாவிதி.

சுக்கிரவாரத்தில் ஸ்நானமுதலான நித்திய கர்மங்களைமுடித்து வெள்ளிய வஸ்திரமுடுத்து வடக்கு முகமாக மான் தோலாசனத்திலிருந்து, படிகமணிகொண்டு வெள்ளித் தகட்டில் வரையப்பட்ட மேலேகண்ட சக்கரத்தை நெய் விளக்கிற்கு முன்பில்வைத்து பிச்சிப்பூ முல்லைப்பூக்களால் நாள் ஒன்றுக்கு மேலேகண்ட மந்திரத்தை 1008உருவீதம் செபித்துதேங்காய்பழம்!வெற்றிலைபாக்குகள்படைத்து மண்டல பூசைசெய்துவர சருவவிஞ்சைகளும் கைவரும் அஷ்டலட்சுமிகடாட்சமும் சிவஞானமும் உண்டாம். இவன் தொட்டாலும், நிழல்பட்டாலும் சருவ விஷங்களும் நிவர்த்தியாம்.

முற்றிற்று.

உ

பரமபதிதுணை

# கெருடாரூட பத்து.

—⋊(*)⋉—

காப்பு

ஓம்நமோநா ராயணயா வென்று மேலோர்
உரைக்குமஷ்டாட் சரப்பொருளா யுருக்கத் தோடு
தாம்நமோவென் றேத்துமன்பர் நயந்த வெல்லாந்
தருமுதலாய் பூப்பிராட்டி நீளா தேவி
யாம்நமோகை வடிவாஞ்சி தேவி மூவர்க்
காளனுமா யஷ்டசெல்வந் தருவோனாகி
தேம்நமோதைப் பெரியதிரு வடியை யாண்டு
சிறந்தகெரு டாரூடர் பாதங் காப்பே.

பூரணமே பதினாறு கலைகள் சேரும்
பொருந்தருக்கர் பன்னிருவர் புகழ்ந்து சேரும்
காரணமே கருமுகில்போல் மேனி சேருங்
கருணைகொளட் டாட்சரந்தான் கலந்து சேரும்
வாரணமே யிலக்குமிமா ரெண்மர் சேரும்
மதிமுகம்போ னின்றிலங்கும் மாயா நேயா
ஆரணமே ஸ்ரீராமா கெருடன் மீதி
லன்புடனே யேறிவந்திங் கருள்செய்வாயே. (1)

மந்திரமும் அட்டசித்தும் வழியாய்ச்சேரும்
வாழ்கிரக மொன்பதின்மா மகிழ்ச்சி சேரும்
கந்திருவர் கணநாத ரிராசி வர்க்கங்
கருதுகலை ஞானமெல்லாங் கையிற் சேரும்
நந்திமுதல் தேவர்களால் நன்மை சேரும்
நமவோம்நா ராயணயா நமகாப் பாக
அந்தாமீ திலங்குகின்ற கெருடன் மீதி
லன்புடனே யேறிவந்திங் கருள்செய்வாயே. (2)

மூலமுத லாறெழுத்தும் நீதா னாகும்
மூன்றெழுத்தின் முப்பொருளும் நீதா னாகும்
சீலமுறும் ஓம்ஙம்மம் சிம்வம் யம்மாஞ்
சிவனுடைய திருநாமம் நீதா னாகும்
காலமிலா மும்மூர்த்தி வடிவாய் நின்று
கருணைதரும் அம்உம்மம் நீதா னாகும்
ஆலவிஷங் கையேந்துங் கெருடன் மீதி
லன்புடனே யேறிவந்திங் கருள்செய் வாயே. (3)

நவ்வென்றும் மவ்வென்றும் ஓம்சிவய வென்றும்
நமநமவோம் சிவசிவஓம் யாராரா வென்றும்
சிவ்வென்றும் வவ்வென்றும் ஓம்யநம வென்றும்
ஸ்ரீங்காரம் ஓங்காரம் இரீங்கார மென்றும்
உவ்வென்னும் ஓம்நமோநா ராயணாயா வென்றும்
உன்பாத முச்சரித்தே னுகந்தெனைநீ யாள்வாய்
அவ்வென்னும் அயன்தந்தாய் கெருடன் மீதில்
அன்புடனே யேறிவந்திங் கருள்செய் வாயே. (4)

உதிக்கின்ற சிவச்சுடரோன் நீயே யாகும்
ஓம்அவ்வும் உவ்வுமவ்வும் நீயே யாகும்
பதிக்கின்ற ஐந்தெழுத்தும் நீயே யாகும்
பச்சைமுகில் மேனியனே பணிந்தே னுன்னை
விதிக்கின்ற மெய்ப்பொருளே காக்குந் தேவே
விளங்கெனக்கு மெய்த்தவமே விரும்பித் தாதா
அதிர்க்கின்ற திருநடனக் கெருடன் மீதில்
அன்புடனே யேறிவந்திங் கருள்செய் வாயே. (5)

வேதமுத லாயிருந்து சிங்க ரூபம்
விளங்கக்கொண் டிரணியனை வதைத்தாய் நீயே
பூதமுத லாயிருந்த புனித நேயா
புகழ்ந்தவர்க்குத் துணைவருவோய் யசோதை மெய்பா
நாதமுத லாய்விந்து வாகியுயிர்க் கெல்லாம்
நயந்தருவோய் நிறைந்துநின்ற நாதா வேதா
ஆதவன்போல் விளங்குமுயர் கெருடன் மீதி
லன்புடனே யேறிவந்திங் கருள்செய் வாயே. (6)

முக்கோணம் நாற்கோணம் மொழியைங் கோண
முச்சுடர்க்கோண் அறுகோண மெண்கோ ணந்தான்
சக்கோணம் நாற்பத்து மூன்று கோணம்
சண்முகமுஞ் சிதம்பரமுஞ் சக்கரங்கள்
இக்கோண மெலாமறிந்து பூசிப் போர்க்கே
யிறைவனாய் நீயிருந்தே யிரட்சித் தாலும்
அக்கோண மறியோர்க்குங் கெருடன் மீதில்
அன்புடனே யேறிவந்திங் கருள்செய வாயே. (7)

பச்சைமுகில் மேனியனே யுனக்கே யிந்தப்
பாரிற்பத் தவதாரங் கூற லுண்டு
மச்சமொன் றுங் கூர்மமொன் றும் நரசிங்க மொன் றும்
வராகமொன் றும் குறளொன் றும் இராமன் மூன் றும்
துச்சாரி கண்ணனென் றுங் கற்கியொன் றுமாகத்
தோன் றிநின்ற யுன்சொருப மறிவா ருண்டோ
அச்சமறுத் தெனையாளக் கெருடன் மீதி
லன்புடனே யேறிவந்திங் கருள்செய் வாயே. (8)

வேதியனாய்த் தோன்றிவந்தாய் மாப லிக்கு
விண்ணவர்க்காய் நரசிங்க வடிவ மானாய்
மாதவனா யாதவனாய் கிருஷ்ண னானாய்
மகராஜன் திருமகனாய் வந்து வாழ்ந்தாய்
சாதியிலா வைகுண்ட பதியாய் வேதன்
தானாகிச் சுத்தருசங் கார னாகி
ஆதிமுதற் பொருளேநீ கெருடன் மீதில்
லன்புடனே யேறிவந்திங் கருள்செய் வாயே. (9)

மாயவனே யருள்கனிந்தென் அருகே வாவா
வஞ்சனைகள் பறந்தோட நெஞ்சில் வாவா
வாயாம்பூ நிறத்தோனே கனவில் வாவா
கரியமுகில் மேனியனே கருத்தில் வாவா
நாயகனே யென்னாவி லிருக்க வாவா
நாடோறும் பணியுமென்னை யாள வாவா
ஆயர்குலங் காப்பவனே கெருடன் மீதில்
லன்புடனே யேறிவந்திங் கருள்செய் வாயே. (10)

முப்புரங்க ளெரித்தவனே யிப்போ வாவா
மூவருமாஞ் ஜகந்நாதா முன்னே வாவா
எப்பொழுதுந் துதிப்பவருக் கிறையே வாவா
ஏழைபங்கி லிருப்பவனே யிரங்கி வாவா
ஒப்பதில்லா மணிவிளக்கே யோடி வாவா
ஓம்நமோநா ராயணையா வுகந்து வாவா
அப்பனேநல் லருள்வடிவே கெருடன் மீதில்
லன்புடனே யேறிவந்திங் கருள்செய் வாயே. (11)

துளபமணி மார்பமுகா சுகத்தைத் தாதா
சுருதிபுகழ் மெய்ப்பொருளே வரத்தைத் தாதா
களபமணி திருமார்பா கடாட்சந் தாதா
கருதரியமாயவனே கருணை தாதா
பளகறுநற் சிவயோகி பவுஷி தாதா
பத்திமுத்தி சித்தியருள் பாதந் தாதா
அளவதில்லா மெய்ப்பொருளே கெருடன் மீதில்
லன்புடனே யேறிவந்திங் கருள்செய் வாயே. (12)

கெருடாரூட பத்து
முற்றிற்று.

வாடிப்பட்டியைச் சேர்ந்த போடிநாயக்கன்பட்டியி லிருக்கும் அப்பாவுபிள்ளையவர்கள் குமாரர் வைத்தியம் முத்துவேலுப் பிள்ளையவர்களிடமிருந்த ஓலையேட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குமரன் றுணை,

உமாமகேஸ்வரி அகஸ்திய முனிவருக்குத்

திருவாய்மலர்ந்தருளிய

# சத்தியாரூடம் ா.

மந்திர சக்கரங்களுடன்

மதுரைத் தாலூகா பிராட்டிபத்துக் கிராமத்திலிருக்கும்
ப. திருமலைமுத்துப்பிள்ளையவர்கள் குமாரர் உபாத்தியாயர்
விஷரோக மாந்திரீகர்

**கருப்பையா பிள்ளையவர்கள்**

விருப்பத்தின்படி,

**மதுரை வித்வான்**

## த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று


**மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்**

**இ. ராம.**

## குருசாமிக் கோனர்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசி வீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1922.



*Registered Copy Right.*

உ

பரமபதிதுணை.

உமாமகேஸ்வரி, அகஸ்திய முனிவருக்குத்

திருவாய்மலர்ந்தருளிய,

# சத்தி ஆரூடம்.

## மந்திர சக்கரங்களுடன்

### காப்பு

அண்டசரா சரங்களுமாய் வேறு மாகி
யானந்த வடிவாகி யருளா மென்னைக்
கொண்டவொரு சத்தனுமா யென்னல் நாளுங்
கூத்தாட்ட வாடிமகிழ் கூத்த னாகி
தண்டுழவத் திருமாலை யோர்பாற் காட்டிச்
சங்கரநா ராயணனாய்த் தானு னாகி
கண்டமிருண் டருள்சிவனென் தவன் தாள் போற்றிக்
கருதுசத்தி யாரூடங் கழறு வேனே. (க)

### நூல்.

ஆரூடந் தனையறிதற் காசை கொண்ட
வகத்தியனே சித்தரில்நீ யதிக னப்பா
ஒரூடஞ் சொல்லுகின்றேன் எனக்கெங் கோமான்
உரைத்துவிது மறைநந்தி யொருவ னன்றிப்
பாரூடா ருளசறிந்தா ருனக்குச் சொல்வேன்
பத்திரம்பாம் பினங்களிலே யனந்தன் தக்கன்
சீரூருங் குளிகன்வா சுகிமா பத்மன்
சிறந்தசங்க பாலன்கார்க் கோடன்றானே. (உ)

தானென்ற பத்மனுடன் அட்ட நாகம்
சலவிரிய னிரத்தவிரி யன்வன் குட்டை
யானென்ற குறுவிரியன் பெருவிரிய னோடு
மவிர்தருகத் திரிவிரியன் புல்விரியன் ஆறும்
வானென்ற கொம்பேறு மூக்கன் சாரை
வழலைகரு வழலைசா ணாக மூக்கன்
யானென்ற புடையனொடு காட னோலைப்
பாம்புமயக் காமுறுக்கு மணிய னாமே. (௩)

மணியிரத்த மண்டலிநீர்ப் பாம்பி னோடு
மண்டலியுஞ் சொறியனெரி செஞ்சோ ரானும்
துணியனெனு மாநாகம் மண்ணுளியன் மட்டை
துய்யகருஞ் சோரனுடன் தேளுஞ் செய்யான்
கணிதமிகு மழற்சிலந்தி வண்டுபூரான்
கரும்பனசை யோந்தியொடு கறுத்த செய்யான்
பணிதிசொறித் தவளைபில வங்கம் பூனை
பச்சைநிறப் பாம்புபெருச் சாளி தானே. (4)

தானரணை நட்டுவாக்கா லியுநா கூரன்
தகையவெலி பதினெட்டும் நரியும் நாயும்
ஊனெழிக்கும் பூநாகஞ் சிவந்த அட்டை
யுலகத்தி லினும்பலவாம் விஷமுண் டாகத்
தானருளிச் செய்தவயன் படைப்பி னாலே
தடையுண்டா யிடரைன்பாற் சத்ரிவேண்டிப்
பானுவிவர் பூவுலகில் சித்தர்க் கோதும்
படிநந்திக் கருள் நூலைக் கும்பன் கண்டான். (5)

ஔஷதங்களின் வரலாறு

கண்டுகறைக் கண்டருமே யுமையாட் கன்று
கைமுறையாய் நசியமொடு கலிக்கங் கற்கஞ்
சிண்டுமுண்டாந் தயிலந்தூ ளிலேகி யங்கள்
திடமான குடோரியொடு குளிகை சுன்னம்
பண்டுகுழம் போடொத்தால் துவாலை பூச்சு
பலவிதமா மருந்துகளும் பார்வை மூன்றும்
விண்டனரே யானுமந்நூல் பெறுவே னென்று
விரைந்துகும்பன் வேண்டிடத்தா யறைந்திட் டாளே. (6)

அறைந்திட்டாள் குறிகுணங்கள் சாதி வாழ்க்கை
அரவின்பல் தூதனிலட் சணங்க ளெல்லாம்
துறந்திட்டாள் நாள்நட்சேத் திரத்தின் செய்கை
ரூத்திரமாய்ச் சித்தருக்கா ரூடந் தன்னில்
நிறைந்திட்ட வகையறியா ராரு டங்கள்
நீணிலத்தில் வெகுபேர்கள் பாடிப் போட்டார்
இறந்திட்ட மந்திரதந் திரங்கள் கோடி
செப்பினவு மிம்முறைபோற் செவ்வாகாதே (7)

செவ்வியவிச் சத்தியா ரூடம் போலச்
செப்பவில்லை நவின்மூன்று சித்தர் தாமும்
இவ்வுலகில் குருமுறையாய்க் காட்டவேணு
மில்லாட்டாற் பாவம்வரும் நரகில் வீழ்வார்
கவ்வுகடி நோயாளிக் கிவர்கை யாலே
காட்டியிட்ட அவுடதமுங் காலனாகும்
அவ்வகைக ளானவெல்லா மறிந்து நன்று
பாரய்ந்து பார்ப்பவனே பையனாமே, (8)

ஐயமில்லை யாசான்கை யறிவுண்டானால்
அவனல்லோ சித்தரைப்போ லாடி வெல்வான்
பொய்யல்ல சத்தியா ரூடப் போக்குப்
புத்தியுள்ள பேர்களல்லோ புலன்காண் பார்கள்
செய்வதற்கோ இதுசுலுவா மொன்றும் வேண்டாம்
சித்தத்தாங் காரமெனுந் திரத்தைத்தள்ளி
பையவே குருமுறையாய்ப் பார்ப்பா ராகில்
பராபரையான் வந்துகருப் பகருவேனே. (9)

பகரவொண்ணா தொருகோடி கோடா கோடி
பணமீந்தும் நாதாக்கள் பகர்ந்தி டார்கள்
இகலறமிச் சாத்திரத்தைக் கவர்வா னாகி
வீரேழு பிறப்புமட்டும் நரக மெய்தும்
அகமொழித்தே யொழுக்கமுட னாசா னுக்கிங்
கன்னமிட்டு மடிபணிந்தும் அடிமை யாகில்
ஜெகமறியச் சித்தெல்லாஞ் சித்தி யாகும்
சேர்த்துநிற்கு மிவன்றனக்குச் சிவனொப் பாமே. (10)

ஒப்பாகு மனோன்மணியா ளுரைத்த நூலை
யுரைக்கவொண்ணா துலகத்தி லறிவில் லார்க்குக்
கைப்பொருளென் றிக்கருவைக் கண்ட பேர்க்குக்
காசினியி லெப்பொருளுங் கையிற் காணும்
தப்புவதொன் றேனுமில்லை தப்பொட் டாது
சாவதுபோம் விதியாளி தனக்குச் சிக்கும்
அப்படியா மென்றுசொல்லி யசந்தி டாதே
அகோரருத்தி ராஞ்சனத்தை யறையக்கேளே. (11)

### அகோரருத்திராஞ்சனம்.

கேளிரதம் பேய்ப்பீர்க்கின் சாற்றில் தோய்த்துக்
கெடியாக வாளமொடு துத்தம் தாரம்
நீளவே வெண்கார மிவற்றை வாங்கி
நேராக விவையைந்துஞ் சமனாய்க்கூட்டி
மாளவே பேய்ப்பீர்க்கின் சாற்றா லாட்டி
வழித்துருட்டி நீகயிறு வைத்துக் கொண்டு
பாழ்விடங்கள் தீண்டிமண்டைக் கொண்டாற் கண்ணிற்
பதிக்கவிஷம் பொறிப்பட்ட பஞ்சாந் தானே. (12)

### மற்றொரு கலிக்கம்

தானென்ற விந்துப்பு இரதம் காயத்
தகட்டினரி தாரமிவை சமனாய்க் கூட்டி
ஏனென்று சொல்லாமல் பேய்ப்பீர்க்கின் சாற்றி
லிறுகவரைத் துண்டைசெய்தே யெடுத்துகொண்டு
நானென்று கண்ணுவிடு வுமிழ்நீ ராலே
நாகமது நாலெயிறும் நாட்டி னாலும்
வானென்ற வண்டமதில் பரிதி கண்ட
வாடைதரும் பனிப்போலே வாங்கும் பாரே, (13)

### சித்தாந்த பீரிமாத்திரை

பாரடா சித்தாந்தப் பீரி யுண்டை
பாடுகிறேன் மகிழ்தேவ தாளி வித்து
நேரடா பேய்ப்பீர்க்கின் வித்து சூதம்
நேர்வாள மிவ்வையைந்துஞ் சமனாய்க் கூட்டி
ஏரடா சம்பீரச் சாறு விட்டு
எட்டுநா ளூறவைத்தும் எட்டாம்நாளில்
சீரடை பயரதுபோ லரைத்துருட்டித்
திரமாக நிலலுலர்த்தி வைத்துக் கொள்ளே. (14)

வைத்துக்கொள் விஷந்தீண்டிச் சீவன்போனால்
வாகான கையான்சா றெருக்கஞ் சாற்றில்
ஒத்தவொரு குளிகைதனை யுரைத்துக் காதில்
ஊற்றியடை மறுசெவியில் காந்தல் காணும்
மெத்தவுமே காணாட்டா லமுரி தன்னில்
விரைந்தரைத்தே யோருருண்டை விழியிற் போடு
முத்தியதாய்ப் புதுச்சிலை நனைத்து மூடில்
மூன்றேகால் நாழிகையில் மூளிப்பான் காணே. (15)

சுடுகோடு மீட்டான் குளிகை.

காணப்பா காலகடி யெங்கே போச்சு
காசினியில் விஷமிஞ்சிச் சாவா ரில்லை
வீணப்பா வெண்ணாதே வேகம் மெத்த
விருதுகட்டிப் பார்ப்பதற்கு விரைந்து நில்லு
ஊணப்பா யின்னமொரு குளிகை சொல்வே
னுறுதியிது சுடுகாடு மீட்டா னப்பா
மாணப்பா நாவிரசங் காயங் கோஷ்டம்
வாளவித்து மழிஞ்சில்வித்தும் வாங்கு நீயே (16)

நீயோய்பேய்ப் பீர்க்கொடுவாஞ் சிரையின் வித்தும்
நிரைசமனாய்த் தேசிக்காய்ச் சாறு விட்டு
ஓயாம லொருசாம மரைத்து ருட்டி
உண்டைசெய்து நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு
தீயான காலவிஷந் தலைமேற் கொண்டால்
சிறுநீரி லுரைத்திடுவாய் கண்ணி லேதான்
ஓயாத விஷமொடுங்கிப்பயந்தே யோடும்
ஒளியாம லுற்பனமா வுரைசெய் தேனே, (17)

சங்காரவயிரவனுண்டை.

செய்வகைகேள் சங்கார வடுக னுண்டை
செப்புகிறேன்: பூவந்தி யெட்டிக் கொட்டை
பொய்காயம் மிளகிலுப்பைப் பிண்ணாக்கோடு
புகழான தக்காளி வேரழிஞ்சில் மூலம்
வைசமனாய் வாங்கியதை வஸ்து வாலே
வடிமெழுகு போலரைத்து மணிபோற் செய்து
கைமுறையா வுரைத்ததனைக் கண்ணிற் போடக்
காலகடி மீளுமடா கருதிப் பாரே. (18)

கிரீடியாராஞ்சனம்.

கருதிப்பார் கிரீடியாரஞ்சனத்தைச் சொல்வேன்
கைகண்ட முறையிதுநெல் லிடையாஞ் சூதம்
பொருதப்பா அவுரிச்சார் விட்டே ஆட்டிப்
போட்டிடுவாய் நெல்லினிடை கண்ணி லேதான்
அரீதப்பா காலனென்ற விஷங்கள் மிஞ்சி
யடங்கியே கிடந்தாலு மலறியோடும்
விருதப்பா போட்டுப்பா ரிதுவோ கெட்டி
வெகுசுளுவு வெகுசுளுவு விஷங்கள் போச்சே. (19)

பேய்ப்பீர்க்குத்தூர்,

போச்சுதடா சாயம்பேய்ப் பீரகனை தூர்க்குப்
பூசித்தால் கதிரவனுட் பூசித்தே தான்
வாச்சுதடா வலஞ்சுற்றி யதைக்கொ ணர்ந்து
வைத்துக்கொள் மஞ்சாடி யளவு தானும்
சாச்சுதடா நல்லெண்ணை தன்னி லேதான
தருகாம லீந்திடவுஞ் சணகே ரத்தில்
மாச்சுதடா விஷமென்னப் பட்ட வெல்லாம்
மார்த்தாண்டன முன்பனிப்போ லாகுங் காணே. (20)

ஏப்பனுகி மாத்திரை.

காரவே யேரம்ப ஞதியுணடை
கழறுவேன் வாலேரசங் துருசு துத்தம்
தோணவே சிலை தாரம் வெள்ளை லிங்கக்
துடியான கௌரி கெந்தி காயஞ் சுக்கு
பூணவே மிளகு சித்தர் மூலம் வாளம்
புகழ் கெந்த தாளிவித்து தேவ தாரம்
கோணவே சேவகனுர் கிழங்குந் தாயைக்
கொன்ருனும் வெள்ளைக்காக் கணமுங்கூட்டே. (21)

கூட்டுவா யாகாச கெருடன் கிரி
கொடியபித்தும் மயில்பித்தும் வெள்ளாட்டின் பித்தும்
மாட்டுவாய் பச்சைப்பாம் பின்கழுத்தும்
வளமான ரசமேனிச் சாற்ருலாட்டி
தேட்டமா யிவை யெல்லாம் வேறெடுத்துத்
தெளியவே மேனிச்சா ரதனுற் பின்னும்
ஆட்டுவாய் கல்வத்லிட்டுச் சாமம்
அரைத்துண்டை செய்துவைப்பா யடக்கந்தானே (22)

அடக்க மெழப்ப

அடத்தியதை கண்டெழுப்ப வகையைக் கேள்நீ
யடைவாக வுச்சியுயி ரடங்கு மாகில்
திடத்துடனே பார்த்து நன்ருய்க குடோரியாடித்
தேய்த்திவொ யொருகுளிகை தேய்த்துப் பின்னும்
குடத்தின்வா யோடமூத்தித் தீயை மூட்டிக்
கொளுத்திடுவாய் கொடிய விஷங் குலைந்தே யோடிச்
சடத்தைவிட்டுப் போனவுயிர் வந்து தோன்றுஞ்
சபைமெய்க்கு முண்மையிது நாடிப்பாரே. (23)

நாடிமைந்தா வெண்கார மழிஞ்சில்வேர் கோஷ்டம்
நல்லவெள்ளைக் காக்கணம்வேர் காய்ப்பழமுங் கூட்டி
வாடலின்றிச் சமனாக வரைத்து வைத்து
வல்விஷங்கள் தலைக்கொண்டாற் கொள்ளுப் போலே
மோடியுடன் கொடுமூக்கில் நசியங் கண்ணின்
முழியிலிடு விஷங்களெல்லாம் முறிந்தே யோடும்
பாடுபட வேணுமென்றால் பாரு பஞ்ச
பாணமெனு மிக்குழம்பின் துடியைத் தானே. (24)

பஞ்சபாணக்குழம்பு.

துடியிரதம் பூவந்திப் பழம்நேர் வாளந்
துருசுசம னாநிறுத்துத் தேங்காய்ப் பாலில்
வடிமெழுகு போலரைத்துக் கரண்டி தன்னில்
வைத்தெரித்துக் குழம்பான வாறு பார்த்துக்
கெடியாக வாறவைத்து மேதிக் கொம்பில்
கெட்டியாய் விஷங்களுக்குப் பதனஞ் செய்து
திடமாகப் பயறளவு வெற்றிலையில் நல்கித்
தீர்க்கமுட னாவினுமே தேய்த்தி டாயே. (25)

சிந்தாமணி இலேகியம்.

தேய்த்திடுவாய் விஷந்தணிந்து பேதியாகுந்
தீர்ந்தபின்பு மோரன்ன முண்ணச் சொல்லு
நேர்த்திகொள்சிந் தாமணிலே கியத்தைக் கேளு
நினைவாகக் காஞ்சிரையின் பழத்தை வாங்கிப்
பார்த்ததின்றோ டகற்றியுள்ளில் வித்தைப் போக்கி
பழச்சாறு படியதனில் மேனி மத்து
மாத்திரமோ தலைவிரிச்சான் வேளை நீலி
வளர்வேலிப் பருத்தியும்பேய்ப் பீர்க்கு மாமே. (26)

ஆமடா வகையொன்றுக் கெண்சிரங்கை
யாட்டிபெடுத் தேகுழம்பில் விட்டுக் காய்ச்சி
ஓமடா குறுகிவரும் பதத்திற் போட
வுரைத்தசனி நாயிறுடன் கெந்தி சூதம்
சேமடாவெண் ணாவிலிங்கந் துரிசு துத்தம்
நெறிவிஷமும் மிளகுசுக்கு வாளமோடு
ஏமடா தாரம்வகைக் கோர்வி ராகன்
எடுத்திடித்தே யக்குழம்பி னுள்ளே போடே. (27)

போட்டுமெயக் கரண்டியினுற் கிண்டிக் காய்ச்சி
புகழாகத் திரள்பதத்தில் கல்வத் திட்டு
நாட்டியநல் லெண்ணெயது விட்டும் ஆட்டி
நலமான லேகியத்தை மேதிக் கொம்பில்
பூட்டியும்நீ பத்திரமாய்க் கடிகள் பார்த்துப்
புகட்டிவிடு குன்றுமணி யளவ தாக
நாட்டினிலே விஷமிருத்துச் சாவா ரில்லை
நல்லதடா லேகியத்தா னுடிப் பாரே, (28)

சஞ்சீவி யுண்டை.

பாரடா வுயிர்தருஞ்சஞ் சீவியுண்டை
பகருகிறேன் துரிசுதுத்தம் மிளகுஞ் சேர்த்து
நேரடா வாளமந்த நிறைக்குப் போட்டு
நினைவாக எலுமிச்சம் பழத்தின் சாற்றை
வாரடா மூன்றுநா ளூற விட்டு
வடித்தெடுத்து நாலாநா ளச்சாற் ருலே
சேரடா வரைத்துண்டை செய்து கண்ணில்
தேய்த்துவிட யெவ்விஷமும் தீர்ந்து போமே. (29)

நீலகண்ட சூரணம்.

தீர்ந்துபோம் நீலகண்ட சூரணத்தைச்
செப்புவேன் வாளமது பலமோ நாலு
காய்ந்தபேய்ப் பீர்க்கின்வித்துப் பலமோ நாலு
கறிமிளகு பழமொன்றே கால்தான் சுக்கு
ஒய்ந்தபல மதுவொன்று நாபி முக்கால்
உயர்கெவுரி விராகனிரண் டுண்மையாக
ஆய்ந்தவெள்ளைப் பாஷாண மிருவி ராகன்
அரிதாரம் விராகனிரண் டபினி ரண்டே. (30)

இரண்டுழக்கு நல்லெருக்கின் பால்பே யத்தி
யின்பால்தான் படியரைக்கால் படியா லம்பால்
திரண்டுவரும் படியரைக்கால் கொடிக்கள் ளிப்பால்
சேர்த்துமுறை யரைக்காலாந் தில்லைப் பாலும்
முரண்டுடைய காட்டெருமைப் பாலா ழாக்கு
முதுசீந்திற் பாலரைக்கால் படியா ழாக்கே
அரண்டருமுத் தமதாளிப் பாலுங் கூட்டி
அத்துடனே முன்சொன்ன மருந்தைப் போடே. (31)

போடதனி லூறவே யூறிப் போகும்
போற்றியப்பா லெட்டாநா ளுலர்த்திக் கொண்டு
வாடாமற் சூரணித்து வைத்துக் கொண்டு
மருந்ததனைக் காசிடைதான் மூக்கி லூதி
யிடாக வமுரியிலே யிரண்டு காசி
யிஜடபோட்டுத் தான்கலந்து கொடுவுள் ளுக்கு
நாடாது காலவிடம் நடுங்கி யோடும்
நாதாக்க ளுணர்வார்கள் நல்ல வித்தை (32)

விநாயக நசியம்.

வித்தைதரு விநாயகனார் நசியங் கேளு
மிளகுள்ளி வசம்புகுன்றி யுப்புக் காயம்
சித்திதருங் கழற்சியுடைப் பருப்புங் கூட்டிச்
சிறுநீரி லேதோய்த்து நசியம் பண்ணு
பத்தியுடன் பிழிபவிடம் பறந்துபோகும்
பண்பாக நவநீத குளிகை கேளு
சுத்திரசந் தனைமேனிச் சாற்றா லாட்டிச்
சுழல்நாவி வெண்காரங் கூடக் கூட்டே. (33)

நவநீத குளிகை நசியம்.

கூட்டியே சமனாகத் தேங்காய்ப் பாலில்
குமுறவரைத் தொருசாமம் வழித்துக் கொண்டு
தீட்டியே பயறளவே யுள்ளுக் கீவாய்
தீராத விஷமெல்லாந் தீர்ந்து போகும்
தாட்டிகமாய் நசியமொன்று சொல்லக் கேளு
தானெருக்கம் பழுப்பின்சா றமுரி யோடு
பூட்டியே காயமதிற் சேர்த்துக் கொண்டு
புகுதவிடு நாசியிலே விஷங்கள் போமே. (34)

குடோரிக்குழம்பு.

போமடாவோர் குடோரியெனும் குழம்பு சொல்வேன்
புதியரசம் வெண்காரம் வாளம் நாவி
ஆமடாமுன் போலேநீ முரிசூ தத்தை
அடைவாக வகைநாலுஞ் சமனாய்க் கூட்டி
ஓமடாகோ வின்பாலா லவற்றை யாட்டி
யுகந்துவைத்துப் பயறளவே யுள்ளுக் கீவாய்
நாமடாபொய் சொல்லவில்லை யரன்சொல் மெய்யாய்
காடிப்பார் விஷமெல்லாம் நடுங்கிப் போச்சே. (35)

போச்சுதடா மதகிரீடிக் குழம்பு சொல்வேன்
புதியரசம் வெண்காரந் துருசு கெந்தி
ஆச்சுதடா தேங்காயின் சிரட்டை சுட்டு
அஞ்சுமுள்ள இடைகண்டு வாளங் கூட்டி
வாச்சுதடா கோவின்பால் விட்ட ரைத்து
வைத்துக்கொள் பணவிடைதான் வகையாய் நல்கு
ஏச்சுதடா விடமெங்கே கிரீடி கண்டா
லிறங்கிவிஷம் விட்டோடு மிறந்திடானே. (36)

சஞ்சீவிக்குழம்பு.

இறந்தவரை யெழுப்புஞ்சஞ் சீவி கேள்நீ
யிரதம்வெள்ளை காவிகெந்தி துருசு தேங்காய்
துறந்தசிரட் டையின்கரிவெண் கார மெல்லாந்
தூடியாக வகைவகைக்கு விராக னூறு
சிறந்திடுவாய் நேர்வாளம் பலமூன் றேகால்
சேர்த்திடித்துக் கோவின்பால் விட்டு ஆட்டி
அறந்தழைக்குங் குழம்பதனைப் பதத்தில் வாங்கி
யடைத்துவைப்பாய் மேதியுடைக் கொம்பில் தானே. ()

தானமின்றிக் காலவிடந் தலைக்கொண் டாலுந்
தயங்காதே பணவிடைதான் சணத்தில் நல்கு
ஆனவந்தச் சஞ்சீவிக் குழம்பு கண்டா
லரைக்கணத்தில் விடந்தரிக்கா தகன்று போகும்
கானகத்திற் றிருடனிலிம் மருந்துட் போகிக்
காலவிஷந் தனையடித்துக் கதற வோட்டும்
மானுறுகைப் பிரானருளாற் கோடா சூரி
வன்குழம்பைச் சொல்லுகிறேன் மகிழ்ந்து கேளே. (38)

கோடாசூரிக் குழம்பு.

கேளிரதந் துரிசுகெந்தி யுறுபாஷாணங்
கெடியாக வெருக்கம்பால் வார்த்த ரைத்து
மீளவதை வழித்துநன்றாய் வைத்துக் கொண்டு
மிஞ்சியதோர் விஷந்தனக்குக் காசு வீதஞ்
சாளிகைகின் றெடுத்துநல்கி யுண்ணச் சொல்லு
சடுதியிலே விஷங்களெல்லாந் தாமா யோடும்
வாளதுபோற் கொடுஞ்சுருக்கு நஞ்சிற் பாய்ந்தான்
மாத்திரையைச் சொல்லுகிறேன் வரிசை கேளே. (39)

வரிசையதாய்ச் சொல்லுகிறேன் நாவி சூதம்
வளமான துரிசுதுத்தம் வாளந் தாரம்
தரியாத சிலைகுன்றிப் பருப்பும் வெள்ளைச்
சாரணைவேர் மகிழ்ப்பருப்பு பச்சைப் பாம்பின்
சிரங்கூட்டிச் சரிசமனுப் பழத்தின் சாற்றைத்
தெளிவாக விட்டரைநீ கல்வத் திட்டு
உரிமையுடன் வெண்காரங் கூடப் போட்டே
உகந்துதிரி நாளரைத்தே உண்டை பண்ணே, (40)

பண்ணியே நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு
பாரரவந் தீண்டிவிஷந் தலைமேற் கொண்டாற்
திண்ணமா யுச்சியிலும் நுதலி லேயும்
திடமுடனே பிடரியிலுங் கன்னத் தேயும்
நண்ணுறநீ கீறிவைத்து கட்டி னுக்கால்
நாகவிட முதற்பலவும் நசித்துப் போகும்
புண்ணியமா மலைதகர்த்தான் குளிகை கேளு
புதியதுத்தந் துரிசுசிலை காயந் தானே. (41)

மலைதகர்த்தான் குளிகை.

தானென்ற வாளமரி தாரங் கெந்தி
சாதிலிங்கம் நாவிவெள்ளை கெவுரி சூதம்
ஏனென்ற தொட்டியொடு எலிப்பா ஷாணம்
எரிமிளகு குதிரைப்பற் பாஷா ணந்தான்
வானென்ற திப்பிலியோ டிவைக ளெல்லாம்
வளமாகச் சமன்கூட்டி மேனிச் சாறு
நீநினைவாய் விட்டரைத்தே யுண்டை பண்ணி
நிழலுலர்த்தி மிளகுபொடி தன்னிற் சேரே. (42)

கருடாஞ்சனம்.

சேர்த்துவைத்து முன்முறைபோல் குடோரி யாடிச்
செப்பமுட னதினழுத்த விஷங்கள் போச்சு
கீர்த்திபெறக் கெருடாஞ்ச னத்தைக் கேளு
கெருடக்கல் விந்துப்பு துரிசு துத்தம்
நேர்த்திகொளஞ் சனக்கல்வெண் காரந் தாரம்
நீங்காத முருங்கைவித்து சுக்கு சூதம்
பார்த்திபனே மிளகொடுதிப் பிலியுஞ் சங்கும்
பண்பான துருசுகெந்தி செம்பு மாமே. (43)

செம்புடனே வகைவகைக்குப் பலமொவ் வொன்று
திறமான வாளமது பலமி ரண்டு
அம்புவியி லிவைகூட்டி யிஞ்சிச் சாறு
மடைவாகத் தேசிக்காய்ச் சாறும் விட்டு
கெம்பிரமா யரைத்துருட்டி மணிபோற் செய்து
கெடியாக நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு
வெம்பியதோர் விடந்தீண்டி மண்டைக் கேறில்
விரைந்துரைத் துக் கண்ணிலிட விஷங்கள் போச்சே. ()

பரஞ்சோதிமை.

போச்சிந்தப் பரஞ்சோதி மைக்கும் நஞ்சு
புகழான மகிழவித்தும் அழிஞ்சில் வித்தும்
வாச்சிந்த வெண்குன்றிப் பருப்பு வாளம்
வகைநாலோ டுள்ளிகுக்கில் கெவுரி தாரம்
நீச்சிந்த நவச்சாரந் திரிகடுகு நாவி
நெறிவிஷம்வெண் காரமனோ சிலையி லிங்கம்
ஆச்சிந்தப் பொன்மெழுகு தில்லைமணி யிரண்டு
மழகாஞ்சி னக்காரம் துருசும் வாங்கே. (45)

வாங்கியே வகைவகைக்குக் களஞ்சி வீதம்
வளமான கெந்திரச மொவ்வொன் றுக்கும்
ஒங்குமெலு மிச்சினுடைப் பழத்தின் சாற்றை
யுறுதிபெற விட்டரைப்பா யைந்து நாள்தாம்
பாங்குடனே யிரவில்வைத் தெடுத்துக் கொண்டு
பண்பாக வாய்குவிந்த பீங்கா னுக்குள்
தாங்குமன்பால் வைத்தடைத்து மெடுத்தே நித்தம்
தயவாகப் பணவிடைவெற் றிலையி லீயே. (46)

ஈய்ந்திடவே குஷ்டவகை பதினெட் டும்போம்
மெரிவிரியன் வகையாறும் நாக மெட்டும்
காய்ந்திடுமண் டலிநாலும் விடங்கள் பூரான்
கதறுமடா செவ்வெட்டை முதலை மூஷி
ஆய்ந்தரணை விற்புருதி யாறு மோடு
மப்பனே சன்னிபதின் மூன்று மோடும்
சேர்ந்தபிணி பலவுந்தீ மெழுகாய்ப் போகும்
திறத்தபரஞ் சோதிமையின் திடமாங் கரணே. (47)

திடமான மையிதுதான் தேச மெல்லாஞ்
ஜெயஸ்தம்பம் நாட்டிவைக்கும் விருது போடு
விடமீட்க வல்லருனக் கெதிரி யில்லை
வீணாக வுலகுதனில் மைதான் மெத்த
படியாதே யிம்முறைபோ லெதுவுமில்லை
பார்ப்பதற்கே யிதுசுளுவு பண்பாய்ப் பாரு
நொடிக்குமுன்னே நோய்விஷங்க ளோடிப் போகும்
நாலுண்டு காலமட்டுங் கீர்த்தியாமே. (48)

நாட்பட்ட விஷத்துக்குண்டை.

கீர்த்தியுள்ள வெள்ளெருக்குச் சிறியா நங்கை
கெடிவெள்ளைக் காக்கணம்வே ரிவைகள் மூன்றும்
பார்த்திபனே வகைக்குப்பாக் களவ ரைத்து
பரிவான தேசிக்காய் போல்வெல் லத்தில்
சேர்த்திப்பார் மெய்த்திடவே மைந்தா கொள்ளு
திகழ்குருவை யரிசியன்ன முண்ணச் சொல்லு
மூர்த்திதரு நாட்சென்ற விஷங்கள் போச்சு
மூன்றுநா ளிராப்பகல்பத் தியமாம் பாரே. (49)

விரியன்கடித்த புண்ணுக்கு மருந்து.

பத்தியப்பா வட்டையிலே வேக வைத்துப்
பண்பாக வெந்நீறிற் கழுவிப் போடு
வெற்றிதரு மவ்விலையை நன்றாய்க் கட்டு
விரியனது கடிவீங்கி வெடித்த புண்கள்
சுத்தமதா யாறிவிடுஞ் சொன்னேன் கேளு
சூராதி சூரனைத்தான் சொல்வே னப்பா
நித்தியமா மிராச்சொல்லான் பலமே வாங்கி
நீடியபேய்ச் சுரைச்செடியை நின்று பாரே. (50)

சூராதிசூரன்,

பாரதில்வே ரேர்கொடியு மனுகா மற்றூன்
பருதிதினங் காய்குடைந்தே யிராச்சொல் லானைச்
சேரவே வைத்தடைத்துச் சதையால் மூடிச்
செடிசெத்து வுலருமட்டும் போட்டுப் பாரு
வாரமதி லெடுத்துவந்து வைத்துக் கொண்டு
வசம்புபுளி விரையளவா அரைத்து நீரில்
ஊறவே நாக்கிலிட்டு முள்ளுக் கீந்தால்
ஓடும்டா விஷமுரிந்து முடலை விட்டே. (51)

விட்டுவிடுங் களிக்குழப்பு சொல்லக் கேளு
விரைபோக்கிப் பழையபுளி பலமே வாங்கி
திட்டமதாய்க் காஞ்சிரையின் றார்கு டைந்து
செவ்வாயி லுள்வைத்துச் சிரையால் மூடி
திட்டமதாய் மண்டலந்தா னிருந்த பின்பு
செவ்வாயிலேயெடுத்து மேதிக் கொம்பில்
கட்டிவைத்துக் கொள்ளதிலே கைபோ டாமல்
காஞ்சிரையின் கம்பதினால் காண்டி வாங்கே (52)

சூரனெண்ணெய்

வாங்கிவிடு புளியம்விரை யளவு தானே
வாகான வல்விஷங்கள் மேவிற் றானால்
தாங்கியதை நாக்கதிலே தடவும் போது
தட்டுக்கெட் டோடுமடா தலம்விட் டேதான்
போங்குநன்றாஞ் சூரனெண்ணெ யுரைக்கக் கேளு
புங்கினெண்ணெய் வேப்பெண்ணெய் விளக்கு நெய்யும்
பாங்குடனே நல்லெண்ணெ யிலுப்பை நெய்யும்
பண்பாக வகைக்குமுக்காற் படிதான் வாங்கே. (53)

படியிரண்டா வின்பாலொன் றரையாக் காய்ச்சிப்
பாலிலெண்ணெய் விட்டுடன்முப் புரண்டி மேனிச்
செடிகொற்றான் முத்திருக்கஞ் செவியுங் கூட்டி
சேரவகை யொன்றுக்குப் பலமி ரண்டே
டிவெள்ளை யெருக்கின்பால் படியே வாங்கி
யதிலரைத்தும் அவ்வேளைப் பிழிந்துகொண்டு
வடிகட்டி விடுஎண்ணெய் தன்னிற் பாதி
வண்டுகொல்லிப் பட்டைபல மொன்று போடே. (54)

போடுமாம் பட்டைபலம் இரண்டு கெந்தி
புகழ்கெவுரி துரிசுதூத்தந் திப்பிலியின் மூலம்
ஈடிாதங் கருவங்க மேழுமொவ்வோர் விராகன்
ஈருள்ளி பலமிரண்டு வெள்ளையரி தாரம்
நாடிய வெண் காரமிவை வகைக்கரையாம் விராகன்
நலமான எரிமிளகு கடுகி னோடு
வாடாது வகைவகைக்கு விராகனிரண் டரையாம்
வளமாகப் போட்டுவாய்மகிழ்ந்து தானே (55)

தன்னிலே கடுகுரோ கணியுந் தானும்
தயவாவொன் றரைவிராக னிடைதான் போட்டு
முன்னுரைத்த வேர்க்குடிநீர் விட்டு நீதான்
முறையாக மருந்தையெல்லா மரைத்துப் பின்னும்
நன்னயமா யெண்ணெய்தனிற் போட்டு நன்றாய்
நயமுடனே தீயெரித்துப் பதத்தில் வாங்கிக்
குன்றாமல் நந்தியுடைப் பூசை செய்து
கூட்டிவைத்தோர் காசளவு கொடுத்தி டாயே. (56)

கியாழம்

கொடுத்தபின்பு பத்தியந்தான் கெட்டி கெட்டி
கூசாதே கடுகெண்ணெய் மேலி லிட்டுப்
பிடித்துவிடு கைபாதஞ் சூடு கொண்டால்
பின்னுமூன்று நாள்விட்டு நாலா நாளில்
திடத்துடனே கொடுப்பைசிறு கீரை வேரைத்
தெளிவான கழுநீரில் வேக வைத்து
விடுத்துமந்தக் கியாழத்தை விரைந் திறுத்து
விசேஷமாய் நெய்யைவிட்டு விரும்பித் தாக்கே, (57)

தாக்குவாய் மறுநாள்பால் பழ்யி ரண்டு
தயங்காமற் காய்ச்சியதைத் தயிராய்த் தோய்ந்து
ஆக்கமாம் வடிகட்டி யந்த நீரில்
அடைவாகசு ருள்ளிநற்சி ரகமுங் கூட்டி
ஊக்கமா யரைத்துநன்றாய்க் குழப்பிக் கொண்டு
உண்டுவரச் சொல்லப்பா விரண்டு நேரம்
தூக்கியதோர் கடிவிடங்கள் தொண்ணூற் றாறும்
தூரற்ற மரம்போலத் தொலைந்து போச்சே. (58)

எலிவிஷம் பதினெட்டுக்கும் மந்தாரகாசம் சுவாசகாசங்களுக்கும் மருந்து.

போச்செலி மூவா றுக்கும் பொருந்திய மருந்து கேளு
காச்சிடு புங்கு வெள்ளைக் காக்கணம் பிராய்வேர் மூன்றும்
ஆச்சிது சமனுக் கூட்டி யரைத்தாவின் பாலிற் கொள்ள
மாச்சுது சுவாச காச மந்தார காசம் போமே. (59)

போமடா புத்தி யாய்நீ பெருங்குளப் பாலை மூலம்
ஆமடா முன்னாள் பாலி லருந்துபத் தியநா ளாறே

ஓமடா எலிவி ஷங்க ளோடுமே புளிப்பு மாற்றி
நாமடா சொன்னோம் பாலில் நலம்பெறக் கொண்டு வாவே (60)

கொண்டுவா வசம்போ டுள்ளி கூட்டிநல் லெண்ணெய் விட்டு
விண்டுமே யெரித்து மூன்று நாட்கொள்பத் தியநா ளாறே
பண்டெலிப் பதினெட் டுந்தான் பறந்திடும் பண்ப தாக
அண்டர்கள் போற்ற வின்ன மறைகுவே னெலிக்குத் தானே. (61)

தானொரு புதுசட் டிக்கன் சதுர்ப்படி தண்ணீர் விட்டு
ஏனவா லிலைப்ப மூப்பு மேமெட்டுக் காவிச் செம்புங்
கானநன் னீரிற் போட்டுக் காய்ச்சியே யுழக்குத்தண்ணீர்
ஓநமா வென்று சொல்லி யுண்டிடு மூன்றுநாளே. (62)

நாளது கொடுமூன் றுறு நாட்களும் பத்தி யங்கா
மீளுவு மெலி விஷங்கள் விலகுமே தொண்ணூற் றுறும்
மாளவே யோடிப் போச்சு மந்திரம் வாலை யாகும்
நீளவே செபித்துப் பூசை நீசெய்து குடிக்கச் சொல்லே. (63)

சொல்கரு வேலந் தோட்டின் சாறுள்ளி யுப்பு முக்கு
நல்லெண்ணெய் தன்னை விட்டு நவச்சாரம் பணந்தான் போட்டு
மெல்லவே யுழக்காக் காய்ச்சி விழைந்துண்ணப் பேதி காணும்
வல்லெலி பதினெட் டுந்தான் வலியவிட் டோடிப் போமே (64)

ஓடிடு மமுக்கு ராவேர் ஓர்எனு மிச்சங் காய்போல்
மாடியே யரைத்துப் பாலிற் குடியெலி பதினெட் டும்போம்
சாடிய துரிசு மூன்றுஞ் சாத்திர பேதி ரண்டும்
ஈடிலா விராகன் வீதம் எருக்கலம் பால்விட் டாட்டே. (65)

ஆட்டிநீ வழித்தே யுண்டை யாக்கிவெற் றிலையின் சாற்றில்
கூட்டியே கொடுக்கச் சொல்லு விஷக்குலந் தோடிப் போகும்
நாட்டினி லுரைக்கொ ணாது நாட்சென்ற எலிகட் செல்லாம்
வாட்டிய புங்கம் பட்டை மிளகுவெள் ளுளிவ சம்பே: (66)

வசம்பது கூட்டித் தேசிக் காய்பழச் சாற்று லாட்டி
நிசம்பெறக் கொதிக்க வைத்து நீகொடு தீரும் தீரும்
விசம்படு விளாப ருத்தி வேருமெள் ளெண்ணெய் விட்டு
குசம்படக் கொதியிட் டுண்ணு குறட்டெலிவிஷநீர்போமே. (67)

நீர்முள்ளி விரைய ரைத்து நிறையநல் லெண்ணெய் விட்டு
சேரவே கிண்டி யுண்ணச் சேரெலி விஷம்போம் சுக்கு
கார்சிறு மிளகு தேசா வரங்களிப் பாக்குஞ் சேர்த்து
கூர்கரு வேலம் பட்டைக் குமரியின் சருகுபோடே. (68)

போடுநீ வகைவ கைக்குப் பொருந்துகாற் பலம்போட் டொன்றாய்
நாடியே கொடுக்கச் சொல்லு நற்புள்ளி மானின்றேலை
ஓடியே கருகச் சுட்டு வயராவின் பாலிற் கொல்லு
வாடபத் தியமே வேண்டாம் வருமெலி கடியும் போமே. (69)

வண்டுகடிக்கு மருந்து

போமடா பிராய்ப்பட்டை யிடித்துக் கொண்டு
புகழ்தருவை மாக்குளக்கட் டையைநீ பண்ணி
நேமமாய்ப் புடச்சட்டிக் குள்ளே வைத்து
நீநினைவாய்க் கீழ்மேலும் பட்டை மூடி
ஆமடா வேடுகட்டி யவித்தி றக்கி
யப்பனே யெடுத்துக்கொண் டருந்தச் சொல்லு
நாமடா சொன்னவண்டு கடிக ளெல்லாம்
நாசமா மின்னமொரு வகையைக்கேளே. (70)

இதுவுமது

வகையாகப் புற்றின்மேல் வீழி வேர்த்தோல்
வாங்கிவந்தா வின்பால்விட் டரைத்துக் கொண்டு
புகையாதவ் வாவின்பால் தன்னிற் கொள்ளப்
போகுமடா யின்னமுங்கேள் வீழி தன்னில்
தொகையாவாய்ப் பேசாம லிலைப றித்துத்
துவைத்தாவின் பாலிற்கொள் சுகமதாகும்
நகையாநாள் மூன்றுகொளப் பத்தியநா ளாறே
நாட்சென்ற வண்டுகடி நாச மாச்சே (71)

ஆச்சுதடா பூவரசம் பட்டை வாங்கி
யடைவாக மேற்புறணி தள்ளிப்போட்டு
நீச்சிதடா வெந்நீரி லரைத்துக்கொண்டு
நீமூன்று நாட்கொள்பத் தியநா ளாறும்
எச்சிதடா நாட்சென்ற சில்வி ஷங்க
ளெல்லாம்போம் வண்டுகடி கரப்பான் தீரும்
போச்சிதடா பத்தியந்தான் கெட்டி கெட்டி
புத்தியில்லா மட்டைகட்குப் பொய்யாய்ப் போமே. (72)

பொய்யிதல்லப் பூவரசின் பத்தி ரத்தைப்
போட்டிடித்துக் காடிதனிற் கட்டச் சொல்லு
மெய்யிதிச்சாப் பத்தியமண் டலங்காத் தாக்கால்
வெகுசுளுவா முன்சொன்ன விஷங்கள் தீரும்
ஐயனே யிம்முறைதான் தொட்டுக் காட்டில்
ஆடலாங் கொடிக்கட்டி யாட லாகும்
செய்வதுபத் தியும்வயிராக் கியமு முற்றுத்
திறமாக விருந்தாக்காற் சித்த ரொப்பே. (73)

வெடிப்பு வெள்ளைகட்குத் தயிலம்

ஒப்புடனே சொல்லுகிறேன் தயிலப் போக்கை
ஓகோகோ சேங்கொட்டைத் தயிலத் தோடு
வெப்பமுறு வெள்ளெருக்குத் தயிலம் புங்கு
விரைத்தயிலஞ் சிவன்வேம்புத் தயிலங் கூட்டி
செப்பமதா யிவைநாலுஞ் சமனுச் சேர்த்து
தினமுமொரு காசிடைமண் டலமே கொள்ளு
அப்படியே காயத்தில் வெடிப்பில் வெள்ளை
யதிற்றடவு தினசரியஞ் சாறு நாளே. (74)

அஞ்சாறு நாட்சென்று லுடம்பு வீங்கும்
அப்பனே யேரண்டத் தெண்ணெய் மூழ்கு
மிஞ்சாதே புகைபுளியத் தள்ளிப் போடு
வேண்டுமென்றால் மிகக்கோழிக் கறியே கூட்டு
நெஞ்சாரச் சொல்லுகிறே னுள்ள மட்டும்
நீகேளு நல்லெண்ணெய் புண்ணாக் காகா
வஞ்சகங்கள் சொல்லவில்லை விஷங்க ளான
வகைவெள்ளை புண்புரைகள் வெடிப்பும்போமே (75)

வெடிப்புடனே குஷ்டவகை மேக சூலை
வெப்புநோய் தழுதணையாம் விதங்கள்தாமும்
கடுப்புகளு மோடிவிடுங் காலகடி யென்ற
கடுவிஷங்க ளானவகை யெல்லாம் போகும்
தடிப்புடனே வெள்ளைவகை யுள்ளவெல்லாம்
சடத்தைவிட்டு மப்பாலே தள்ளி யோடும்
திடத்துடனே யோடுமடா நோய்க ளெல்லாம்
தேகமது வச்சிரமாம் தெளிவுண் டாமே. (76)

ஆமடா குஷ்டவகை பதினெட்டுக்கு
　　மறைகிறேன் சித்தாதிக் குழம்பதொன்று
ஓமடா துரிசுதுத்தம் வகையொவ்வொன்றுக்
　　குத்தமனே பலநாலு தாளகமு மாரும்
போமடா நேர்வாள மரைப்படியுங் கூட்டிப்
　　புகழாக வரைப்படியா மணக்கின் முத்து
நேமமுட னிவ்வகைக ளெல்லாஞ் சேர்த்து
　　நேர்த்தியாய்த் திருகுகள்ளிப் பால்விட் டாட்டே. (77)

ஆட்டியே கலசத்தி லொருபா லப்பு
　　யாகாச விரவிமுன்னே வைக்கும் போது
நாட்டிலே சொல்லாதே தயிலம் வீழும்
　　நலமான மேதிக்கொம் பதனில் மாட்டு
தாட்டிகமாய் குஷ்டவகை பதினெட் டுக்கும்
　　தானெடுத்தே யீர்க்கால்வெற் றிலையில் பூசி
பூட்டிவிடு பேதியுண்டாம் பிறகப் பாநீ
　　புண்ணியமோ ருடன்சோறும் புகட்டச் சொல்லே. (78)

சொல்லக்கேள் பாவட்டை மூலம் வாங்கி
　　துடியாமவ் விலைச்சாற்று லாட்டிக் கொண்டு
நல்லெண்ணெய் நாழிவிட்டு வேக வைத்து
　　நல்லபத மாகவரும் போது நீதான்
வெல்லுகருங் குந்துருக்கம் பொடித்துத் தூவி
　　மிக்கவே வடிகட்டி யுள்ளுக் கீந்து
வல்லமையாம் மேலிட்டுப் பூசு பூசு
　　வகையாகப் புளியுப்புந் தள்ளிப் போடே. (79)

குஷ்டத்துக்கு விளக்கெண்ணெய்.

தள்ளிவிடு இன்னமுங்கேள் நல்லெண் ணெய்தான்
　　சாதகமாக் குறுணிமத்தஞ் சாறுதாழி
மெள்ளவே பொடுதலையுஞ் செருப்படியுங் கூட்டி
　　மிளகரைத்து நாரத்தங் காய்போல் சேர்த்தே
உள்ளபடி விளக்கெண்ணெய் விட்டுக் கிண்டி
　　யூதியெரித் தேபதத்தில் வடித்துக் கொண்டு
கள்ளமில்லை கொடுத்துவிடு மேலும் பூசு
　　கைப்புபுளி பூசினிக்காய் சுரையா காதே. (80)

ஆகாது தவறுதல்பத் தியத்திற் கெட்டி
யடியோடே யோடிவிடுங் குஷ்ட ரோகம்
நோகாது தேகமது கற்றா ணுகும்
நுணுக்கமடா சொல்லார்கோ டிகனீக் தாலும்
வாகாகக் கெருடாஞ்ச னத்தைக் கேளு
வனமிளகைச் செம்பருந்தின் முட்டைக் குள்ளே
மோகமதாய்த் தானடைத்து மூன்று நாளு
முக்கியமாய்ப் புதைத்ததனை மூடிவையே. (81)

வையதனைத் தலைவிரித்தான் சாற்றாலாட்டி
வழித்துவைப்பாய் மேதிக்கொம் பதனி லேதான்
வெய்யவிடந் தலைகொண்டு மிஞ்சிற் றானல்
விழியிரண்டி லேயெழுத விஷங்க ளோடும்
ஐயனே சொல்லக்கே ளஞ்ச னத்தை
யாருமுறை செய்யார்க ளவனி மீது
துய்யபிரா னன்றுசொன்ன முறைதா னப்பா
சூட்சமதாய் மனதில்வைத்துப் பாரு பாரே (82)

நசியம்

பாரப்பா காஞ்சிரையின் வேர்கொ ணர்ந்து
பரிவாகப் பெருங்காயங் கூட்டிக்கொண்டு
சேரப்பா காட்டெருமைப் பால்விட் டாட்டி
சேர்த்தரைத்தே யுண்டைபண்ணித் தியானஞ் செய்து
ஊரப்பா விடங்கடித்த வாயிற் பூச
வுயர்ந்தவிடந் தலைக்கொண்டு உயிர்விட் டாலும்
தீரப்பா வுரைத்துவிடு மூக்கி ரண்டில்
தீர்க்கமா வெழுந்திருப்பான் திடமாய்ச் சொல்லே. (83)

கலிக்கம்

சொல்லக்கேள் சகலவிஷக் கலிக்கந் தானும்
துடுக்கடா அண்டவெள்ளைக் கருவினுள்ளே
நல்லமகி ழிஞ்சிவித்து அருசு துத்தம்
நலமான முருங்கைவித்து மரைப்புங் கூட்டி
மெள்ளவே மிளகதுவும் பலந்தான் கூட்டி
மிகச்சமனுப் பழச்சாற்று லாட்டிச் செப்பில்
வல்லமையா வுண்டைபண்ணி வைத்துக்கொள்நீ
வல்விஷங்கள் தீண்டிமண்டைக் கொண்டாற் கேளே. (84)

சேளடாவெற் றிலைச்சாறு சிறுநீ ராதல்
கிருபையுடன கண்ணிலிட்டு மூச்சி கீறி
மீளவொரு வுண்டைகையான் சாற்று லாட்டி
வேக்மதாய்த் தேய்த்தலுடன் தியானஞ் சொல்லு
மாளுமடா விஷங்களெல்லாம் மருந்தோ நன்று
வயித்தியர்க்கு வெகுசுளுவு வேக மெத்த
நாளுமிதைப் போற்றிவந்தால் விஷத்தி னாலே
நலிவதில்லை நலிவதில்லை நான்சொன் னேனே. (85)

பிரப்பங்கோல்.

சொன்னதுதா னென்னவென்றாற் சுடலை தன்னிற்
தூக்கிவைத்துக் கட்டையின்மே லிடுஞ்சா மெய்யின்
மன்னியவாய் தனிற்காவிச் செம்புக் காசு
வைத்துமே மார்புதனில் வங்கம் வைத்து
மின்னிடவே தகடடித்துப் பிரப்பங்கோலில்
மிக்கவே வொருதலையிற் பூணுய்க் கட்டி
பன்னியதோர் வங்கமதைத் தகடாய்த் தட்டி
பரிவாக மறுதலையிற் பதித்திடாயே (86)

பதித்திட்ட பிரப்பங்கோல் தன்னை வாங்கிப்
பாம்புப்பெட் டியின்மேலே தட்டும் போது
கதித்திட்ட நாகமது காணு தப்பா
கனமாகப் பெட்டிதனை மறுகால் மூடிக்
குதித்திட்டு வங்கமிட்ட புறத்தால் தட்டிக்
கொடியபெட்டி தனைத்திறக்கக் கோபங் கொண்டு
அதிர்த்திட்ட நாகமது நின்றே யாடும்
அப்பனே யதிசயத்தை யறிந்து பாரே (87)

மோதிரம்

பாரடா மோதிரமு மொன்று செய்யப்
பகருவேன் கேளப்பா பாரின் மீது
நேரடா பச்சோந்தி பச்சைப் பாம்பு
நெடியவால் முனையிரண்டும் நறுக்கிக் கொண்டு
சீரடா கதிரவனுள் செம்பைத் தட்டி
சிவசிவா வென்றொருமோ திரத்தைச் செய்து
ஆருடனுஞ் சொல்லாமல் முனைவா லிரண்டும்
அப்பனே மாறும லதனுள் வையே (88)

வைத்ததனை மோதிரம்போ லுருட்டிக்கொண்டு
வலதுகையின் பெருவிரலில் மாட்டி நீதான்
பைத்திடவே நாகமதைத் தூக்கும்போது
பழுதையைப்போல் கிடக்குமடா கடியா துன்னை
எந்தலத்தில் மிதித்தாலும் கடிங்கா தையா
இதுவல்லோ சித்தர்கையி லிருக்க வேணும்
மெத்தநல்ல யிம்முறைபோற் கண்ட தில்லை
வெகுசுளுவு வெகுசுளுவு விரைந்து பாரே (89)

செம்முள்ளி மோதிரம்

பாரப்பா செம்முள்ளிச் செடிக்கு நீதான்
பரிவாகச் செவ்வாயில் காப்புக் கட்டி
நேரப்பா மறுசெவ்வாய் பிடுங்கும் போது
நினைவாகப் பூசித்துப் பலி கொடுத்து
சீரப்பா சாபத்தை நிவர்த்தி செய்து
திறமாக வடக்குறுவேர் தன்னை வாங்கி
காப்பா தாம்பிரத்தின் தகட்டி னுள்ளே
தான்வைத்து மோதிரம்போ லுருட்டிக் கொள்ளே (90)

உருட்டியதோர் மோதிரத்தை வைத்துக் கொண்டே
யுயர்ந்தவிடந் தீண்டிற்றென் றோடி வந்தால்
மருட்டியந்த மோதிரத்தைக் குடத்தின் மீது
மாட்டியே நீரிறைக்க விரைந்தே யேறும்
அருட்டியதோர் விஷந்தன்னை யிறக்க வேண்டி
லவ்வளைய மோதிரத்தை யெடுத்துக் கொண்டு
பிரட்டாம லத்தழையைக் கசக்கிக் கொண்டு
பிழிந்துவிடு வலக்காதில் பிலக்கத் தானே (91)

பிழிந்துவிடப் போகுமடா அட்ட நாகம்
பெருவிரிய னுடன்விஷங்கள் பேசா தோடும்
அழிந்துவிடும் விஷங்கசொல்லா மவனிமீதில்
அரைநாழி தருகாதென் றரனார் சொன்னார்
கழிந்துவிட மந்திரந்தா னென்று சொல்வேன்
கழறுவது மரிதப்பா சிரங்கொண் டாலு
மொழிந்திடும்ஓம் கெருடசிவாய நமகா வென்று
வுறுதியாய் மனமதுறைத் தோது வோதே. (92)

ஓதுவா யொருலக்ஷஞ் செபித்துக் கொண்டா
லோடிவரு வான்கெருட னுறுதியாக
வாதையின்றி விஷந்தனையே வாங்கு வான்காண்
மகத்தான மந்திரந்தான் மவுன மாக
நீதமுட னோதுவதுஞ் சிவன்கோயில் சுடலை
நெறிதவறு நதிக்கரையில் நீ யிருந்து கொண்டு
போதமுட னந்திசந்தி செபிக்க வேணும்
புண்ணியமா மந்திரத்தின் புதுமை தானே. (93)

செவ்வலரிவேர்.

தானமதாய்ச் செவ்வலரி வேருக் கப்பா
சாம்பிறுணித் தூபமிட்டுக் காப்புக் கட்டி
ஞானமுடன் கதிரவனுள் பலிகொ டுத்து
நலமாக வேர்பிடுங்கிக் குளிச மாடி
நீநினைவாய் வைத்துக்கொண் டுலக மெய்க்க
நியமமுட னொருதலத்தி லிருந்து கொண்டு
எனமுற ஓம்சிவய நமநா ராயணாயா
என்றியல்பா யிலட்சமுரு வேற்றிக் கொள்ளே. (94)

உருந்திரமா உருவேற அரவம் வந்து
உயர்ந்தவிடந் தனைக்கவர்ந்து வாங்கிப் போகும்
திருந்தவுமே ஒருநூறு செபிக்கும் போது
திறமாகப் புற்றைவிட்டு வந்தே யாடும்
அருந்தவஞ்செய் முனிவோர்கள் செய்யும் வித்தை
அதிசயமா மிதையுலகி லாருஞ் சொல்லார்
பொருந்துமன்பார் வணக்கமுறுகன் மதியு முள்ள
புதல்வர்களுக் குரைத்திடுவார் புநிதர் தாமே. (85)

தாமகிழ்ந்து புரோம்நீம்டம் உருவி லட்சம்
சாற்றுபுரோம் பிரளயசு வாகா வென்று
நேமமுட னேயுரைநீ யிரண்டு லக்ஷம்
நினைவாக வுருவேற்றிச் செபித்துக் கொண்டு
ஓமென்று நூற்றெட்டா யுருவைச் சொல்ல
ஓடிவிடும் விஷங்களெல்லா முடலை விட்டே
தாமிதங்கள் வாராது விடந்தீண் டாது
சவுமியமா மந்திரத்தின் திறனீ பாரே. (96)

திறமாகக் குருமுறையாக் காண வேணும்
தீதற்ற பெரியோர்க்குத் திறமாய்க் காணும்
அறம்வேணு மில்லாட்டால் விழலாய்ப் போகும்
ஆத்தாளைப் பூசித்தா லாகு மாகும்
உறவென்று சாஸ்திரத்தைக் காட்டொண் ணாது
உலகத்தில் மாக்களுக்குச் சொல்லொண் ணாது
நறுமலரும் வாசமும்போற் சீஷன் கண்டாற்
நன்றாக வருடமொன் றில் மனஞ்சோ தித்தே. (97)

சோதித்தே யிம்முறைபோ லுபதே சஞ்செய்
சுத்தபரி பூரணத்தாய் சொல்வாள் சொல்வாள்
ஆதியென்ற சத்தியா ரூடத் தைப்போல்
ஆருமுறை செய்யவில்லை யப்பா கேளு
நீதிமுறை தப்பாமல் பார்ப்பா ராகில்
நிச்சயமா யிம்மருந்து முன்நின் றூடும்
பேதமில்லை கதிமோட்சம் பெற்று வாழ்வாய்
பெரியதன முண்டாகும் ப்ரபல மாமே. (98)

ஆமடா சத்தியா ரூடக் தன்னி
லஞ்சனமாத் திரைக்குழம்பு லேகி யங்கள்
ஓமடா வேர்குளிச மோதி ரந்தான்
உத்தமமா மந்திரங்கள் குடோரி வித்தை
நாமடா சொல்லிவிட்டோம் விஷத்தி னாலே
நலிவொன்றும் வாராது சாவோ யில்லை
போமடா விஷமெல்லாம் புகைபோ லோடும்
புண்ணியந்தா னுமடா புகழுண் டாமே. (99)

உண்டாகு மொருநினைவா யிருக்க வேணு
முறுதியுள்ள பேர்களுக்கே உரைக்க வேணுங்
கண்டவிடந் தன்னிலே பேசொ ணாது
கசடருக்கோ வொருக்காலுங் காட்டொ ணாது
வண்டரா யிருப்பவருக் குரைக்கொ ணாது
வாய்மதமே பேசுவோர்க்குஞ் சொல்லொ ணாது
திண்டுமுண்டு பேசிவரும் சண்டா ளர்க்கு
தீக்ஷையதை யொருக்காலும் செப்பொ ணாதே. (100)

செப்பெனவே வந்துவந் தனேகள் செய்து
ஜெகஜாலக் கூத்தாடித் திரிவார் மட்டை
அப்புறம்போய்ப் பொய்யென்பா ரறிந்தோ மென்பா
ராருமெனக் கெதிரியில்லை யென்பார் பாரு
தப்புரைசெய் மாக்களுக்குச் சாற்றி டாதே
சபித்திடுவார் சித்தரப்பா க்ஷணத்தி லேதான்
ஒப்புவது மனதறியா தோது வாயே
லுனக்குவருஞ் சாபமென்று முரைத்திட் டேனே. (101)

உரைத்திட்டேன் மனதறிந்தே யோது வோது
ஓகோகோ பராபரையா ளுரைத்த வித்தை
நிரைத்திட்டார் மனத்துணின்று நிர்த்தஞ் செய்வாள்
நீடுழி காலமட்டு மவனே சித்தன்
அரைதிட்ட அவிழ்தத்தின் வகைகட் கெல்லாம்
ஆகுமடா பத்தியந்தான் கெட்டி கெட்டி
விரைதிட்டு மனதுபற்றிப் பார்க்க வல்லோன்
வேதியனுக் கொப்பெனவும் விளங்கி னேனே. (102)

விளங்குவவ ராத்திரி எனைப் பூ சித்தால்
விஞ்சையெல்லாம் பலிதமுற்று விசயம் உண்டாம்
வளங்குலவு விசயதச மிக்க ளுசான்
வழங்குவிஞ்சை கைக்கொளியா திறைசு கேசன்
உளங்கொடென்றும் உலகிலிதை நடப்பித் தான்மூ
வுலகாண்டான் அத்தகைய பூசை கேள்நீ
களங்கமிலாப் பிராமிசெய்யாள் விசயை யாய்நான்
காட்சிநல்கி யருள்செயிதைக் கைவி டாதே. (103)

கைக்கொளுநீ வட்டத்தின் மேல்முக் கோணம்
கண்டதன்மேல் நவகோணம் அதன்மேல் வட்டம்
வைக்கவறு கோணமதன் மேல்மேழ் வட்டம்
வட்டமிசை ஒன்பதிகழ் அதன்மேல் நான்கு
திக்குகளில் வழியொடிரு கோடார் வட்டம்
திட்டியொரு தாம்பிரசக் காத்தை வைத்து
மிக்ககன்னி யாமாசம் பூர்வ பட்சம்
விளங்குபிர தமைமுதலாப் பூசை செய்யே. (104)

செய்துவந்தச் சக்கரத்துள் வட்டத் துள்ளே
சிவவெழுதி ஓங்காரம் வளைத்துக் கட்டி
எய்தமுக்கோ ணத்துகிராம் ஹரீம்ஹரோமென்
றெழுதுநவ கோணத்துள் ஸ்ரீம்இ ரீமோ
டெய்தலருள் ஹிரியும்ஐயுங் கிலியும் சவ்வும்
ஒங்குசவ்வும் கிலியும்ஐயும் ஒழுங்காச் சாத்து
கொய்தடைவே ஓம்சிவய நமவென் றுாறு
கோணத்துள் ளீடுவெளியைம் பூதந் தீட்டே. (105)

தீட்டுசம்மோ டப்பால்மே லிதமொான் பானில்
திகழ்விசயை சீதேவி பிராமி நாட்டு
கோட்டையுள்ளோம் நமோநமவென் றிடைவெ ளிக்கண்
குறித்திடுகோ ளியைக்கீழ்வா சலில்நி றுத்து
தாட்டிகவுக் கிரன்தெற்கில் மேற்கில் ஏக
தந்தன்வல் லவைவடக்கில் இருக்க வைத்து
நீட்டபச்சைச் சடையோன்சூழ் காக்க மேல்கீழ்
நெடுவேலன் காக்கவென்றுள் நினைந்து பேணே. (106)

பேணிடும்ஓம் ஐம்கிலிம்சௌம் சௌம்கி லீம்ஐம்
பிராமீவா வாக்குவிலா சனீவா ஓம்அம்
வாணீவா சுவேதகம லாச னீவா
வாவந்தென் வாக்கினிற்க சுவாஹாவென்று
பேணிடுமுன் மூன்றுதினம் இடைமுந் நாளும்
பேசுமுன்மந் திரத்தொடுசீ தேவீ வாஊண்
பாணிமுதல் தருமம்மே வாவி ரக்த
பங்கசையோம் உம்சுவாஹா என்று போற்றே. (107)

போற்றிடுபின் மூந்நாளும் ஸ்ரீம்இ ரீம்ஹ்ரீம்
புகன்றபின்மந் திரங்கடையிற் கூட்டிக் கொண்டே
ஆற்றலருள் மம்விசயை சுவாஹா வென்றே
யன்புகொண்டு தியானித்துப் பூசிப் பாய்நீ
நோற்றதவ மெனக்குவப்பா யுடனே தோன்றி
நூலறிவு வலிமைவென்றி நல்கு வேனுன்
வீற்றிருந்து நீதானே சித்தி யெட்டும்
விளையாடு வாயுண்மை விரித்திட் டேனே. (108)

விரித்திட்ட சத்தியா ரூட மான
விருத்தமொரு நூற்றொன்பான் வேத மாகும்
பொருத்தமுறு மகத்தியனே யுனக்குத் தந்தேன்
புகழாக நீவாழ்க வாழ்க வாழ்க
திருத்தமுற விதைத்தேர்ந்து செய்வோர் வாழ்க
சிவன்வாழ்க சிவனருள்சேர் சித்தர் வாழ்க
கருத்துடையோர்க் குண்மைவடி வாகி நாளுங்
கதித்தசத்தி யாரூடம் வாழ்க முற்றே. (109)

சத்தியாரூட சாஸ்திரம் முற்றிற்று.

# சத்தியாரூட இயந்திரமந்திர பூஜாவிதி.

சத்திக்கணபதி இயந்திரம்.




உச்சாடன மந்திரம்.

ஓம்சிவசுதா, ஓம் சத்திசுதா, ஓம் சித்திபுத்திகாதலா
ஓம்வல்லபைப்ரியா, ஓம்சரவணபல ஜ்யேஷ்டா,
ஓம்சர்வாபீஷ்டவரதா, ஓம்கணபதேநமநம: ஓம்கிலீம்சவ்வும்.

பூஜாவிதி.

கந்நியா மாசத்தில், பூர்வபட்சத்தில், பிரதமையன்று சத்தி பூசைதொடங்கும்நவராத்திரியாரம்பத்தில்இயந்திரத்திருமேனியில் மேலைவாசலிலே நிறுவப்பட்டிருக்கும்விநாயகப்பெருமான்திருமுன் பிலமர்ந்து தேங்காய்பழம் வெற்றிலைபாக்குகள் படைத்து அறுகம்

புல்கொண்டு இம்மந்திரத்தை 108உருச்செபித்து அருச்சித்துஎன்னுடைய பூசனைக்கு விக்கினமின்றி யனுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்தித்து முதலாவது.பிள்ளையார் திருவருட்பிரசாதம் பெற்றுக் கொள்ளவேண்டியது. அப்பால், வடக்கு வாசலுக்குவந்து,

வல்லபைதியானம்.

ஓம் மூலாதாரதேவி, ஓம்சருவவிக்கின விநாசனீ,
ஓம்சருவசக்தபரிபாலனீ, ஓம்சருவசித்திகாரணீ,
ஓம்வல்லபேசீநமோநம: என்று செம்பரத்தம் பூவால் 108 உருச்செபித்து அருச்சித்து பிரார்த்தித்துக் கொள்ளவும்.

## வீரபத்திரர் இயந்திரம்.




மந்திரம்.

ஹாஓம்நமசிவாயா, ஆதிபரமேசுவர புத்திராயா, அகோர வீர பத்திராயா, காகாநுசாயா, காரிபததிரகாந்தாயா, நரசிம்மமர்த்தனயா நமோநம:; ஓராயிரஞ் சிரசுகளும் ஈராயிரஞ்செவிகளும் மூவாயிரங்கண்களும் நாலாயிரம புசங்களுமுடைய உக்கிரேசாநமோநம; ஓகோரதனுசாஸ்தாயாநமோநம:; ஓ அக்கினிவர்ணயா நமோநம:; ஓகுரோதாயா சருவபூதபிரேதபிசாசுகளையுங் கட்டுகட்டுகட்டு; ஓம் ஆம்அவ்வும் சுவாஹா. என்று தெற்குவாசலுள்ள வீரபத்திரரைத் தியானித்து (உரு 108 பூசெவ்வலரி) அருட்பிரசாதம் பெற்றுக் கொண்டு கீழ வாயிலுக்கு வந்து.

87,88 PAGE MISSING IN BOOK

உ

குமரன் றுணை,

உமாமகேஸ்வரிக்குச் சிவபிரான்

திருவாய்மலர்ந்தருளிய

# சிவாரூடம் ௱௰அ.

மந்திர சக்கரங்களுடன்

மதுரைத் தாலூகா பிராட்டிபத்துக் கிராமத்திலிருக்கும்
ப. திருமலைமுத்துப்பிள்ளையவர்கள் குமாரர் உபாத்தியாயர்
விஷரோக நிவிர்த்தி மாந்திரீகர்

**கருப்பையா பிள்ளையவர்கள்**

விருப்பத்தின்படி;

மதுரை வித்வான்

**த. குப்புசாமி நாயுடு அவர்களால்**

பரிசோதிக்கப்பெற்று

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

இ. ராம.

**குருசாமிக் கோனார்**

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசி வீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1922.

*Registered Copy Right.*

௨

பரமபதிதுணை.

# சிவாரூடம் ௱௰௮.

### பிராரம்பம்.

ஒளிவடிவா யெங்குநிறை யுமையே கேள்நீ
யொளியினிலா முலகிலுள்ள வுயிர்க ளெல்லாம்
தெளியமுன்னாள் சுராசுரர்க ளொன்றாக் கூடித்
திருப்பாலாழி யினமிர்தங் கடையுங் காலை
களிகொளமிழ் தெழுமுனெழும் விஷத்திற் கஞ்சிக்
கைகுவித்தோர்க் காக்கநஞ்சை யடக்கி யாண்ட
வளிவளரும் நீலகண்ட விஞ்சை யான
வணிகொள்சிவா ரூடமிதை வழுத்து வேனே. (1)

### திருப்பாற் கடற்கடைதல்.

வழுத்தரிய பாற்கடலி னமிர்தம் வேண்டி
வானவருந் தானவரு மந்த ரத்தை
யெழுத்தசைய தோள்வலியால் பெயர்த்து நாட்டி
ஏர்தருவா சுகியைநெடு நாணாப் பூட்டி
பிழுக்திரண்டு புறத்துநின்று கடைந்தா ரந்நாள்
இடர்ப்படுவா சுகிபொறுக்கா துமிழ்ந்து நஞ்சை
விழுத்தவந்த விடங்கொதித்துத் தொடர்த லாலே
வெருண்டுநம்பால் வந்துசரண் புகுந்திட் டாரே. (2)

### விஷபானம்.

புகுந்தவர்கள் மாளாமல் விடத்தை நங்கைப்
போதினில்வந் தமைந்திருக்க வடக்கி யுள்ளம்
மகிழ்ந்ததையோர் விளையாட்டா வுண்ணுங் கால்நின்
மலர்க்கைகொண் டென் கழுத்திலணி யாக வைத்தே
யுகந்தனை நீ யதனாலே நீயும் நின்பால்
உதித்திலகு முலகமுங்கண் டுவகை கூரக்
திகழ்ந்ததுவே நீலகண்ட மதில்மூன் றெட்டுச்
சிட்சைரட்சை யெழுத்திரண்டு திறனு வுண்டே. (3)

### நீலகண்ட அஷ்டாட்சரம்.

உண்டான விருதிறனி லுலகங் காக்கும்
ஓம்நீல கண்டாய நமவென் றெட்டுங்
கண்டான மொழிகேளம் மறையால் நீல
கண்டோகஞ் செய்பவர்நா னுவா ரென்றால்
பண்டான வதன்பெருமை யளபப தாமோ
பலகலையும் வேதமுமா சமமுந் தம்முள்
கொண்டான மந்திரநா யகமாய் முத்தி
கொடுக்குமதன் பொருளாய்நான் குலவு வேனே. (4)

### நீலகண்ட திரியாட்சரம்.

பொருளாய நான்தானே மூன்றெ ழுத்தின்
பொருளாயெல் லாம்வல்ல சித்த னானேன்
அருளாய அம்மறைதான் புரோம் நிரீம்டம்
ஆமதனை யறிந்தவரே சித்த ராவார்
தெருளாய முத்திலேவே லதுவே யாகும்
சித்தருக்கும் புண்ணியராய்ச் சிறந்தோர் யார்க்கும்
குருவாய யானேயாங் குருவே யன்பால்
கொடுக்கப்பெற் றவரதுகைக் கொள்ள லாமே. (5)

### நீலகண்ட சொருபம்.

ஆகுமந்த மூன்றெழுத்தின் பொருளாம் நானே
அமிழ்தமதி மண்டலத்தி னடுவ தாகி
யேகமதாய்ப் பால்வண்ணம் நீல கண்டம்
இலங்குபிர சன்னமுகங் குமார் தேகம்
வாகுறுமான் மழுவபய வரத மார்ந்து
வளர்ந்தசதுர்ப் புஜமுக்கண் ணுடைய மேனி
யோகிசதாய் மதிதரித்த சடையோ னாகி
யுமையுமிடப் பாகங்கொண் டொளிர்கின் றேனே. (6)

### நீலகண்டோகியின் பெருமை.

ஒளிர்தருநான் தானமிர்த வடிவ னென்பால்
உள்ளவரை நாண்பூணூல் குண்ட லங்கள்
மிளிர்தருகங் கண்மிவைநா கங்க ளாகும்
விளங்குமிந்த மேனியென்னைப் பொருளாக் கொண்டு
குளிர்தருமந் திரமாமூன் றெழுத்தோ கங்கைக்
கொண்டென்னில் வேறுகாச் சித்தன் முன்னே
தளிர்தருமெவ் வுயிர்களுமே விடம்பேய் நோயால்
சாகாவாழ் வடைவரிந்தத் தரணி யோரே. (7)

அமிர்தத்தின் பெருமை.

ஊரேநீ யட்டமிச்சந் திரனைச் சூடி
யுயர்மதிகண ணுக்கொளுமந் தணனு யாகி
வீரேயார் பாம்புகள்சா காம லுங்கொல்
விடக்கோட்பட் டான்சாகா மலுஞ்சூ லத்தால்
சீரேயெய் தமிர்தமதித் துளியைச் சற்றே
தெரிக்கினஞ்சி கட்டுவிடுஞ் சேட னாதி
யாரேனூர் வீறொடுங்கி யடங்கி நிற்பார்
அமிழ்தறிந்த அறிவோரா ருயிர்காப் பாரே. (8)

புண்ணியச் செயல்.

காப்பாகு மமிழ்தங்கற் கண்டுந் தேனுங்
கனிரசமும் பாலுங்கைத் திடத்தித் திக்கும்
கோப்பாகு மதையறிந்து கொண்ட யோகி
கொல்லாத விரதமுற்றுக் குருவைப் போற்றி
வாய்ப்பாமூன் றெழுத்தாமுத் தலைவேல் வீசி
மானிடர்க்கு விடம்பேய்நோய் வருத்தந் தீர்த்தால்
மூப்பான அறமாகு மிதனில் வேறே
மூவுலகு மில்லையறம் மொழிந்திட் டேனே. (9)

பாவனை.

மொழிந்தபடி யெனைமதிமண் டலத்திற் கண்டு
முகமகமாய்ப் பால்வண்ணம் நீல கண்டம்
வழிந்துகுளி ரமிழ்தமய முதனுன் தானாய்
வயங்குசிவ பாவனைசெய் தமிழ்த கும்பம்
பொழிந்ததைக்கொண் டருள்தருமுன் றெழுத்து மெண்ணிப்
போற்றிநித்த மயுதமுருப் போட்டுப் பூசை
சழிந்தொருமண் டலமுடித்துக் கைகண் டோன்தான்
கண்டசிவா ரூடவிஞ்சை காட்டு வானே. (10)

பூசனைமுறை.

காட்டுசிவா ரூடவிஞ்சை வல்லா னன்பு
கனிந்தென்னைப் பூசிக்கு முறைதான் கேள்நீ
யீட்டுதவன் தூயதனி யிடத்தில வைகி
யெண்டிசையு மூன்றெழுத்தை நாட்டிக் கட்டி
கோட்டுநெடு கவட்டுருவாக் குலவு மென்னைக்
குறித்துவிண்ணில் ஹம்மென்று மலரர்ச் சித்தே
யூட்டுபுகை யமமென்று வளிக்கும் அங்கிக்
கொளித்தீபம் ரம்மென்று முதவு வானே, (11)

### இதுவுமது.

உதவுவன்மம் மென்றுகைவேத் தியம்நீர்க் கன்பாய்
ஓங்குகெந்தம் பிரிதிவிக்கு லம்மென் றீவான்
கதிரினிடை சிவ்வும்நம திங்கட் கண்ணும்
கழறுமுயி ரிடையவ்வுந் திகத்தி நின்றே
யிதமருளும் பசுபதியாம் எனைப்பூ சித்தே
யியானவனு மியோகமுற்றுப் பரோமாஞ் சத்தி
விதைநிகர்த்த நிகிமொடடம் மேவி யொட்டா
விளங்குமன்ன மறைமூன் றுஞ் சித்திப் பானே. (12)

### நீலகண்டச்சச்கரம்.

சிந்தனை தான் கோடின்றி வட்டா டல்போற்
சிதையாமல் நிலைபெறச்சக் கரத்தைக் கேள்நீ
முந்துறமுக் கோணநடு சிகாரம் வைத்து
மூன்றெழுத்துஞ் சுற்றியிட்டோங் கார மிட்டே
யந்தணனெண் கோண்வெளியிட் டதன்மேல் வட்டம்
அமைத்தெண்கோண் மிசைமூன் று மமைத்தே யுள்ளில்
நந்தலில்ஹம் யம்ரம்வம் லம்சி வாய
நமலடைத்தா றிடத்தைம்பத் தொன்று நாட்டே. (13)

### ஐம்பத்தோரட்சரம்.

ஒன்றுநெற்றி ஹகாரமிரு கண்ணில க்ஷம். ளம்
உயிர்பதினா றுறுங்கண்டத் துள்ளந் தன்னில்
நின்றிடுங்கட் டாந்தம்பன் னிரண்டு முந்தி
நிற்குண்டப் பாந்தம்பத் தெழுத்துங் கீழே
மன்றசுவா திட்டானத் துறும்பா லாந்தம்
வயங்காறு வாசாந்தம் நாலும் மூலம்
நன்றருளும் பத்தோரக் கரம்மைந்த
நல்லுடற்கா ருதாரக் கோட்டை யுண்டே. (14)

### இதன் பொருள்.

நெற்றியில்—ஹ 1
கண்களில்—க்ஷ ள 2
கண்டத்தில்—அ ஆ இ ஈ உ ஊ ர்உ ர்ஊ ல்உ ல்ஊ எ ஐ ஒ ஔ அம் அ: ஆக 16.
இதயத்தில்—க க்க ங்க கா ஙீ ச ச்ச ஜ ஜா ஞ ட ட்ட ஆக 12.
உந்தியில்—ண்ட டா ண த. தத ந்த தா ந ப ப்ப ஆக 10.
சுவாதிஷ்டானத்தில்—ம்ப பா ம ய ர ல ஆக 6.
மூலத்தில்—வ ச ஷஸ ஆக 4. (ஆகத்தானம் 6க்கு அக்ஷரம் 51,



அட்ட நாகங்கள்.

உண்டான சக்கரத்தை வரைந்தே யுள்ளில்
உறுமட்டாட் சாங்கணிக்குஞ் சிவாரூ டன்தான்
தொண்டான மக்களெல்லாஞ் சித்த னென்று
தொழுதுநிற்க ஆச்சரியத் தொழில்கள் செய்வான்
வண்டான குளிகன்வா சுகிய னந்தன்
மகாபற்பன் பற்பன்கார்க் கோடன் தக்கன்
கொண்டாட வல்லசங்க பாலனெட்டுக்
கோளரவுஞ் சித்தனெதிர் கும்பிட் டேகும், (15)

கையிற்றடவி விஷமிறங்குதல்.

கும்பிடுமே யரவுசிகிக் கோளி ரண்டுங்
கோமானு மாலணையாஞ் சேடன் றானும்
அம்புவியி லெத்தகைய பாம்பு தீண்டி
னாலுமிந்தச் சிவாரூட சித்தன் பார்த்து
நம்புசிவ பாவனையை விடாதே யிங்கு,
நவின்றதிரி யட்சரநா றுருத்தான் போட்டுக்
கிம்புரிக்கை யாற்றடவின் விடந்தா னீங்குங்
கேடின்றித் துயின்றெழல்போற் கிளம்புவானே. (16)

### மூன்றெழுத்தின் பெருமை.

களம்பிபதி யுக்கிரமாய் வருமாலாலக்
கெறுவடக்கிக் களர்நீல கண்டோ கத்தன்
விளம்பியமூன் றெழுத்தெண்ணிப் பார்த்திட் டாலும்
விஷமிறங்கென் றிட்டாலும் விளங்குங் கையால்
வளம்பெறத்தொட் டிட்டாலும் விடக்கோட் பட்ட
மகன்விடந்தீர்ந் தெழுந்துள்ள மகிழ்வான் விஞ்சை
யுளம்படியா கத்துறையிற் பயில வாஞ்சை
யுறினுமிம்மூன் றெழுத்தானஞ் சொழிக்க லாமே. (17)

### சித்தன்செயல்.

மூன்றெழுத்தின் பொருளறிந்த யோக சித்தன்
மூவுலகு மெச்சுசித்தி யெட்டும் வல்லான்
ஆன்றுளநா லாயிரத்து நானூ றேடும்
அவிர்தருநாற் பானெட்டுப் பிணிகளெல்லாம்
தான்றுணிந்து பார்த்திடலால் தொடலாற் சொல்லால்
தனையடைந்தார் தமைவிட்டு நீங்கச் செய்வன்
தோன்றுவிடம் போற்பிணிபோற் பேய்க்கோள் முற்றும்
தொலைத்திடுவன் என்றிறைவன் சொல்லி னனே. (18)

### அம்மைதிருவாய்மொழி.

இறைதிருவாய் மலர்மொழித்தே னிமய கன்னிக்
கினிப்பவிரு செவிவாயுண் டின்பம் பூத்தாள்
வெறிமலர்வாய் மலர்ந்தருளாய் எங்கோ மானே
விளம்புசிவா ரூடமிதை வினயத் தோடும்
நெறிவினவி நீலகண்ட மந்திரந் தான்
நிகழ்த்துமுத்தி சித்தியிரு நிலைபேற் றிற்கரப்
பொறிகளெட்டும் மூன்றுமெனப் பொலிந் திண்டின்
பொருளாநீ யொருவனின்ற புகழோர்ந் தேனே. (19)

### இதுவுமது.

ஓர்ந்தேனே யெட்டெழுத்துஞ் சுருக்க மாக
ஓதினைமூன் றெழுத்தைவிரித் துலக முய்ய
நேர்ந்தேனே யதுசெவியாய் நிறைக்க யானும்
நீலகண்டோ கத்தனதால் நிலத்தில் வாழ்வான்
கூர்ந்தேனே மைந்தருமம் மந்தி ரத்தாற்
குவலயத்தில் விளையாடல் கூடு மென்றாய்
ஈர்ந்தேனைப் பழித்ததமிழ் மணக்கும் வாயால்
இயம்புவதையென் றனள் அருளா விறைசொல் வானே. ()

ஸீதாராம தபோவன வாசக சாலை.

அருளாலே சிவாரூட மாமிந் நூலை
யருள்குருவென் னுரையைநம்பி யகந்தை யின்றிப்
பொருளாசை விடுத்தெனையே பொருளாக் கொண்ட
புண்ணியமூன் றெழுத்தையெண்ணிப் பூசை செய்து
வெருளாதே யியன்றமட்டும் விவேக னாகி
விளம்புசிவ பாவனையும் விழைந்து நின்றே
தெருளாலா யிரமுருவால் விடந்தான் தீர்க்கத்
திருமென்ற னாணையிது திண்ணந் தானே. (21)

அமிர்தகும்ப பாவனை

திண்ணமிதோர் சிறுசெம்பிற் செலங்கை கொண்டு
திகழமிழ்த கும்பமதாப் பாவித் தன்பாய்க்
கண்ணியமூன் றெழுத்தினை நா றுருச்செ பித்துக்
கடிவிடக்கோட் பட்டுமண்ணிற் கிடப்போன் சென்னி
புண்ணியநீர் புரோட்சிக்கில் விடந்தா னீங்கிப்
புகலரிய மூர்ச்சைதெளிந் தெழுந்தி ருப்பான்
கிண்ணியினீர் இருசிரங்கை யுள்ளுக கியக்
கேடின்றி நல்லசெய்ம் கிளத்து வானே. (22)

கோடிமுடிக்கிழித்து விஷமிறக்குதல்.

செய்திவந்து சொல்லநெடு நேர மாகித்
தீயவிடந் தலைக்கொண்டு மீறி மூர்ச்சித்
துய்தியின்றி யயர்ந்துவிடக் கோட்பட் டானை
யொருகோடி வெள்ளியவத் திரத்தால் முடிக்
கைதரும்பா லனையைவிடா தமிழ்த கும்பங்
கைக்கொடுமூன் றெழுத்தினை நா றுருச்செ மித்துக்
பெய்தமிழ்தஞ் சிரசினின்று பாத மட்டும்
பிறங்குதுணி கிழிக்கவிடம் பெயர்ந்து போமே. (23)

மந்திரநீராட்டல்.

விடம்பெயர்ந்து துயின்றெழல்போல் விழித்தோ னுக்கு
மேலுமொரு குடநீரை யமிழ்த மாகத்
திடம்பெறப்பா வித்துமறை செபித்தே யாட்டத்
திருமவன் மயக்கமெல்லாஞ் செய்தி சொல்வான்
நடம்பயிலென் மூன்றெழுத்தால் நஞ்சி றக்கி
நன்மைசெய்வான் வழியொன்று நவின்றிட் டேன்மேல்
இடம்பெறுநல் லறிஞரெலா மின்ப மாக
வின்னுமொரு வழியியப்பா வியம்பு வேனே. (24)

### பிரம்பினுல் விஷமிறக்குதல்.

இயம்புவிடந் தீர்க்கவல்லா னெளிய சாதி
யிடத்தடுத்துத் தொட்டுப்பார்த் திடவேண் டாமல்
சயம்புவென்னில் வேற்றுபா வனைவி டாதே
தழைபிரம்பொன் றெடுத்துமதை சபித்துச் சென்னி
வயம்புகலு மூன்றெழுத்தும் வரைந்தே தாழ்த்தி
வல்விடத்தை யிறக்கினிறகி லிகிடுமிம் மார்க்கம்
புயம்புளகந் தருமிதனைப் புந்தி கொண்டோன்
போற்றுவிட காரியென்றும் புகழ்கொள் வானே. (25)

### இதுவுமது விஷமிறக்குவித்தல்.

கொண்டுவிட ந்தான்மயங்கிக் கிடப்போன் சென்னி
கொப்பூள்கால் களினடைவே மூன்றெழுத்தும்
கண்டுபிரம் பாலெழுதிச் சிரசு தொட்டுக்
கால்வரையப் பிரம்பினைத்தாழ்த் தியுமியி றக்கி
விண்டுளமூன் றெழுத்தினையுஞ் செபித்துப் பார்க்க
விடந்தீருந் துயின்றெழல்போல் விழித்துப் பார்ப்பன்
தொண்டுசெய்வோன் கைப்பிரம்பைச் செபித்து நல்கித்
துணிந்திறக்கு விப்பினுநஞ் சிறங்கிப் போமே. (26)

### எப்டுவகையாக விடமேறுமென்பது.

இறங்குநல்ல பாம்பினந்தீண் டிடும்பல் நஞ்சம்
எட்டுவகை யாவேறு மெட்டுந் தீர்ந்தே
யுறங்கியெழு பவனெழுந் துய்யு மாாக்கம்
உரைத்திட்டே னுலகின்ற வுமையே யின்பம்
பிறங்கிடநீ யருளால்வேண் டிடுமோர் மார்க்கம்
பேசிடுவே னதுதான்வே றுளபல் சாதி
மறங்கொள்நச்சுப் பிராணிகளின் விடங்க ளெல்லாம்
மார்புதட்டித் தீர்த்துவைக்கும் வகையாங் காணே: (27)

### பிரம்படிப் பார்வை.

ஆகுவெலி சுந்தரிமுட் சுருளி நான்கோ
டணில்முதலாம் பிராணிகள்தாங் கடித்திட் டர்க்கால்
சாகலின்றிச் சாதலிற்கொப் பளங்கள் வீக்கந்
தடிப்பிருமல் புண்விரிதல் முதற்பல் சேட்டை
வேககசுர முதலுளபல் நோய்கள் காட்டும்
விடவெளிக ளவற்றுளஆவ் விடங்கள் தீர்வான்
ஏகனிலாய் மந்திரித்துப் பிரம்பு கொண்டே
யிறக்கிடிற்றீர்ந் திடுமிதுமூன் றெழுத்தின் வீறே. (28)

### இதுவுமது.

தீர்ந்திடுநீர் நாய்நிலனுய் மரநாய் ஓநாய்
செந்நாய்கோ ளுய்முதற்பல் நாய்கள் பூனை
சார்ந்தவினம் பலநாவி சம்பு கீரி
தலைகவிழ்த்தே வாங்குடுப்பு குரங்கு முன்னு
நேர்ந்தபல கடிகளினுல் விடங்கொண் டாலும்
நீள்பிரம்பு கொண்டுமுன்னே நிகழ்த்த வாறே
யாரந்தசிவ சொரூபனுமாய் மந்தி ரித்தே
யடித்திறக்கி னுல்விடங்க ளகன்று போமே. (29)

### மண்ணுப்பூச்சுப் பார்வை.

விடக்குழவி சிலந்திவண்டு பூச்சி பொட்டு
விட்டிலதே னீதும்பி மீவட்டை வாளி
முடகடிச்செந் தூகளிவையும் நீர்வாழ் பூச்சி
முற்றவுமாஞ் சில்விடங்கள் கடித்த வென்றால்
இடக்குமண்ணை யெடுத்துமறை மூன்று லோதிக்
கெடாதசிவ பாவனையில் நின்று பார்த்தே
யடக்கமுறப் பூசிடினவ் விடங்களெல்லாம்
அடியற்ற மரம்போலே யகன்று போமே. (30)

### இதுவுமது

போமிரட்டைத் தலைமணியன் சுருட்டை சாரை
புல்லுருவி கண்கொத்தி புடையன் ஓலை
தாமிரட்டுக் கண்மூக்கண் வரியன் வெள்ளித்
தாரசன்சட் டித்தலையன் விரிய னுதி
யாமிரட்டெண் ணுன்கினப்பாம் புகளு மொவ்வோ
ரரவுகளி னுட்பிரிவா மனைத்தும் நக்கிக்
கோமிரட்டுஞ் சிலவிடங்கள் குடிபோ குங்காண்
கூறியவா றேதிமண்ணைப் பூசத் தானே. (31)

### குழையடிப்பார்வை

மண்ணிடைத்தான் மணந்தரசின் மருங்கு நீங்கா
வாழணங்கின் மலடிகட்கு மகவை நல்கும்
அண்ணலிற்போய்ப் பகையாரி வருஞ்செல் வத்தில்
ஆர்தருவேப் பின்குழைகொண் டடித்துப் பார்க்க
எண்ணிலவாம் பல்லிகள்பூ ரான்கள் செய்யான்
எறுவிட நட்டுவக்கா லிகள்வண் டேள்கள்
நண்ணரணை முதலியவாற் கடித்தல் கொட்டல்
நக்கலினு லுறுவிடங்கள் நசித்துப் போமே. (32)

### திருநீற்றுப்பார்வை.

விடங்கழலும் சுரமுதற்பல பிணிகள் நீங்கும்
வெம்பிளவை கொப்புளங்கள் வெடித்துப் போகும்
அடங்கியகன் றிடுங்கொடிய பேய்க ளெல்லாம்
அண்ணலுறுந் திருநீற்றை யள்ளி யின்ப
நடங்குலவும் நானவனு நின்று கொண்டு
நன்மறைநூற் றெட்டுருத்தான் நவின்று பார்த்துத்
திடங்குயில்வாய் கொண்டூதித் திருக்கை நீற்றைத்
தீர்த்தீரென் றிடவிதுதான் சிவநோக் காமே. (33)

### தண்ணீர்ப்பார்வை.

தீர்தீரென் றுல்விடநோய் பேய்கள் தீரும்
தீக்கண்ணே றெரியறைவிப் புருதிக் காய்ச்சல்
தீர்தீரென் றேதிருநீ றிட்டுப் பார்க்கத்
தீருமறை வலியாற்கைக் குழந்தை கட்குத்
தீர்தீரென் றெறியவுந்தண் ணீரை யோதி
சிறுதட்டல் குழிபறைதோ டங்கள் தீரும்
தீர்தீரென் றிடுநீற்றால் நீரால் வன்னோய்
தீர்த்திடலிவ் விஞ்சைகற்ற திறனுங் காணே. (34)

### சிவாருடன் வலிமை.

விஞ்சையிதாற் பாலவண்ணம் நீல கண்டம்
விளங்குபத்ம கரம்பஞ்சாச் சரனங்க ளார்ந்து
தஞ்சமதாம் உமாசமேத மான நம்மைச்
சதாகாலந் தியானித்து வரும வர்க்கே
அஞ்சலென்று நாமுன்னே நின்று நாளும்
அவர்விரும்பும் நன்மையெல்லா மருளிச் செய்வோம்
வஞ்சகரும் சூனியரும் பில்லி செய்யும்
வம்பருந்தா மிவர்க்கெதிரில் மடங்கு வாரே. (35)

### இதுவுமது.

இவர்க்கெதிரி யேவல்விட்டால் அந்த யேவல்
ஏவியவன் தனைத்தாக்கு மிந்த லோகத்
திவர்க்கெதிரி யில்லையிவர் ஐந்த டக்கி
யியல்கமனம் போனினைத்த திவரச் செய்வார்
இவர்க்கெதிரிற கயல்போற்பார்த் திவரச் செய்வார்
இசையுயர்கோ ழியிற்றீண்டி யிவரச் செய்வார்
இவர்க்கெதிரின் றியம்பலினல் எல்லாஞ் செய்வார்
என்னையொத்த விவர்க்குமுன்னின் றெதிர்ப்பார் யாரே

### புறத்துறுப்புநோய்தீரப் பார்வை.

முன்னின்றோ ருள்ளங்கால் புறங்கால் கெண்டை
முழங்கால்கால் விரல்நகங்கள் குதிக ணுக்கால்
துன்னுமுட்டு முட்டுக்கால் குறங்கே யாடு
தொடையிருப்பு மலவாயில் குறிவி ரைப்பை
மன்னுமடி வயிறுகொப்பூ ழுரைப்பெ ருத்து
வயிறிடுப்பு விலாநெஞ்சு மார்பு கொம்மை
பின்னேமுது கங்கைபின்கை விரல்ந கங்கள்
பிறங்குமணிக் கட்டுமுட்டு முழங்கை யக்குள். (37)

பன்னுறுதோள் கந்துகுரல் வளைக ழுத்து
பன்னவுண் ணுவிதழுண் ணங்கீழ் வாய்வாய்
கன்னமடல் காதினடி கவுள்கண் பக்கம்
கண்ணிமைகீழ்க் கண்புருவம் புருவ மத்தி
யுன்னதமா மூக்குநெற்றி யிடரி சென்னி
யுறுகோலி யெனுமறுபான் புறத்துறுப்பில்
என்னபிணி யுறினுமுத லெழுத்தை யூன்றிர்
யானவனுப் பார்த்திடத்தீர்ந் தின்பார்வானே. (38)

### அகத்துறுப்பு நோய்திரத் தோட்டுப்பார்த்தல்.

இன்புருவா மிவர்தொடின்மும் மூளையைந்தா
விவர்பொறிசெந் நீருறையு ளென்னும் நெஞ்சம்
மன்பதைகல் மண்ணுரைவெள் ளீரல் நான்கு
வயங்குகுலை வயிறுகழுத் துட்கால் வாயே
கொன்பெறுங்கீழ் குடர்மலங்கல் தீனி சின்னக்
குடல்மடமா மணிக்குடல்க ளேழ்மூந் நாடி
தென்பெரிய குழல்குருபூ தத்தா துக்கள்
திகழ்காற்சிப் பீற்றெலும்பு காறை யென்பே. (39)

வன்புறுமுள் ளென்புமுது கென்பு சென்னி
வளர்கைகால் பொருத்தெலும்பிவ் வெட்டு மாக
முன்பிவருள் ளுறுப்புமுப்பத் தாறி லென்னே
முன்வினையா லெத்தகைநோய் மூளத் திட்டாலும்
அன்புடன்மூன் றெழுத்துமடி நடுமு டிக்கண்
அமைத்துள்ளங் கருத்தித்தீர் தீரென் றோதித்
துன்பறப்பார்த் திடப்பெற்றோன் நோய்கள் தீர்ந்து
தூயசிவ னருள்பதிந்து துலங்கு வானே. (40)

### அம்மையைப் புகழ்தல்.

அருள்வலியால் மூன்றெழுத்தால் சிவாரூ டன்றான்
ஆருயிர்க்கு விடம்பேய்நோய் அறப்பார்த் தின்பம்
தருவழியி துரைத்தனனென் சார்பி னீங்காத்
தனித்துணையே யெனைப்பெறுநற் றாயே யான்றான்
பெருமையுறப் பெறுமகளே யினுமோர் மார்க்கம்
பேசுகின்றே னுலகமுய்வாய் பிறங்கக் கேள்நீ
ஒருமையுற்றுப் பாய்ச்சுவித்தை யதுதா னாகும்
ஊன்றிப்பா ராச்சரிய மதிற்றா னுண்டே. (41)

### பாய்ச்சு வித்தை.

ஆச்சரியத் தெதிருளதோ ராளில் தூணில்
அடுத்துளகல் லினின்மரத்தி லெதிலா னாலும்
காய்ச்சல்களா தியநோயோ விடமோ கொண்ட
காளைதலை யெழுதுபுரோங் கைதொட் டங்கே
யோச்சவனைத் தடவியவன் பிணிதான் தாவி
யொட்டுமதில் முட்டவிடி னொழியும் நோய்தான்
பாய்ச்சுவித்தை யிதுவாகுங் குறும்பர்க் கிந்தப்
படிசெயலாந் தவர்க்கிதுதான் செயலா காதே. (42)

### கருப்பநோய் விவரம்.

செய்வினையாற் காய்விழுதல் சேய்பி றந்து
செத்திடுதல் பெறுமலடாய்த் திகழ்தல் செந்நீர்
வைவதற்கா ளாய்க்கழித்தல் வழித்திந் நான்கு
வழியாலு முளமளங்கும் மடந்தை மார்தாம்
உய்வழியாக் கருமுதிர்ந்து சாவாப் பிள்ளை
யுண்டாய்ப்பெற் றுதித்தபிள்ளைக் குகந்த தாயாய்
நைவுறுசெந் நீரோடே துடல்நோய் தீர்ந்து
நலம்பெறுமார்க் கங்களைமேய் நவிலு வேனே. (43)

### காய்விழாதபடி செய்தல்.

மேலைவினை யாலிளங்காய் வீழு மாதர்
மீதிரங்கிச் சிவாரூட வித்தை வல்லான்
காலையிலான் பாலொடுநெய் தேனுங் கூட்டிக்
கருத்துறுபா வனையைநன்றாக் காத்துக் கொண்டு
வேலைவிட முண்டவெனைப் பொருளாக கொண்டே
விளங்குறுமூன் றெழுத்தினொரு றுருச்செ பித்து
மாலைபதா லொருமாதங் கொடுக்கப் பேய்நோய்
வல்வினைதீர்ந் தழியாச்சேய் வழங்கு வாரே. (44)

### தீர்க்காயுசுப் பிள்ளைபெருவித்தல்

சேயுதிக்கும் பொழுதிலுஞ்சின் ஞள்கி டந்தும்
செகத்துதிக்குஞ் சரமகவாச் செனிக்கப் பெற்ற
தாயுளத்தில் துயர்தீரச் சாவாச் சேய்கள்
தாமுதிக்கச் சிவாருடன் தானுட் கொண்டால்
நோயுதரந் தனில்தீர வினைகள் தீர
நோன்மைவிடா தான்பாலில் மூன்றெழுத்தால்
வாயுருரு றேற்றியொரு மாதம் நல்கின்
வாணுள்கூர் மக்கள்நல்கி மகிழு வாளே (45)

### மகப்பேறுவித்தல்

மகிழ்ந்திடுவாள் மலடியுந்தான் மக்கள் நல்க
வாழ்வுயர்த்தும் ஆனந்தும் வாங்கி வந்து
திகழ்ந்தசிவ பாவனையை விடாதே நின்று
தினந்தொறுநூ றுருச்செபித்துக் காலை மாலை
புகழ்ந்திடுநேரன் பாகவொரு திங்கட் கீயப்
புண்ணிமெய் யாகிநல்ல புதல்வர்ப் பெற்று
சகந்தனிற்றூய் மாரெதிர்முன் கூசும் நெஞ்சந்
தனிற்கூசர் துவகைகொண்டு தான்சொல் லாளே. (46)

### துவாலையை நிறுத்தி மகப்பேறுவித்தல்

தான்கருவா யிருக்குங்கால் துவாலை யோடுந்
தாய்வயிற்றுப் பிள்ளையழி யாது தோன்ற
வூன்கழியுங் கழிவுநிற்க நீரில் அங்கி
யுறுமுக்கோ ணெழுதியுள்ளில் சிம்ரம் விட்டு
மான்கரத்தென் பாவனையோ டுருநூ றோதி
மகிழ்ந்தாட்டி மாதமொன்றிற் கிருபோ தூட்டித்
தீன்கனிந்துப் பின்றியுண்ணச் செய்தாற் றோடந்
தீர்ந்துமக வுயிர்த்துள்ளஞ் செழித்தார் வாளே. (47)

### மாதர் மலடுதீர.

உளங்கனிந்த வுத்தமர்க்கிம் மார்க்க மாகும்
உமைப்பினிற்கு மத்திமர்க்கு மூன்று மாதம்
களங்கரிய வெனைநினைந்தா னெய்யிற் சந்தங்
கலந்துமுந்நா ழியின்முந்நூ றுருச்செ பித்தே
விளங்கவிரு போயொவ்வோர் கரண்டி யூட்ட
வினைபிணிபேய்க் கோணீங்கி மலடு நீங்சித்
துளங்குமகப் பெற்றெடுத்துத் துதிப்ப வாழ்வார்
தொல்லுலகி லதமருகருச் சொல்லு வேனே. (48)

### அதம்மார்தர் மலடுதீர

அதம்மின்னார்க் கிருநாழி யரிசி தன்னை
யந்திசந்தி நூறுருப்போட் டருத்தி யுப்போ
டிதமுறுசஞ் சீவகா ணியுங்கூட் டாதுண்
டிருக்கவைத்தா லொருமதியிற் கருப்ப முண்டாம்
பதமெனுநல் லெண்ணெயையோ தயிரோ வோதிப்
பருகநல்கி னாலுமக வுண்டா மிந்த
விதமுலகில் மலடியென விகழப் பட்ட
மெல்லியருக் கிரங்கியிதை யிசைத்திட் டேனே. (49)

### பேய்க்கோள்தீர.

இசைபெருகு மிராக்கதர்க்டிக் குலதே வாக
வியல்பிரம ராட்சசுகந் தருவர் தெய்வம்
வசையுறுசீ ரியக்கர்குல தெய்வ மாக
வளரியக்கி யலகைகொள்ளி வாய்ப்பே யாதி
திசைபிசகி யெதிர்ப்படலாற் பிடித்தோ பார்த்தோ
தீனமுறி னதுதீர்வான் சிவாரூ டன்றான்
பசைகொடுநா டொறுமுருநூ றேற்றி வெண்ணெய்
பருகவொரு மதிக்கீயப் பறந்து போமே. (50)

### பேய் விரட்டுதல்.

மதியொடுள்ளங் கைக்கொடுநீ றதிற்றீ வீடு
வரைந்துநடு நிறுத்துடம்பேய் வல்லா னுச்சி
பதியதும்பால் தீயெழுத்தாம் ரம்முந் தீட்டு
பயில்தழலிற் பூத்ததிரு நீற்று மேனி
கதிதுடிவேல் கேடகம்வாள் கைகள் நான்கும்
கண்மூன்று முடையவுருத் திரனும் நானுய்த்
துதிபெறுமூன் றெழுத்தோதிப் பார்த்துப் போடத்
துட்டப்பே யானாலுந் தொழுது போமே. (51)

### வஞ்சனை விலக்கல்.

பேய்க்கோட்கள் வஞ்சனைகள் பில்லி யேவல்
பிறங்குபொல்லாச் சூனியங்க ளெதுவா னாலும்
மாய்க்கவுருத் திரனும்நா னாகிக் காய்ந்து
மந்திரித்துப் பார்க்கினெல்லாம் மடங்கிப் போகும்
தீய்க்கிரக தோடமறுங் கும்ப நீரில்
தீமனைமுன் போலெழுதிச் செபித்தே யாட்டின்
வேய்க்கடம்வாழ் சிதமானன் விளங்குஞ் சித்தன்
மேலான பதத்திலிவன் மேவு வானே. (52)

இரட்சா பந்தனம்.

வானும்பேய்க் கோள்நீக்கம் வழுத்தக் கேட்டாய்
மகாதேவி மேற்காப்புக் கட்டுக் கேள்நீ
நானும்பா வனைவல்லான் நாற்கோ ணத்தை
நாட்டியொரு புரசிலையில் நடுடம் விட்டு
நோனும்பா லோங்காரஞ் சுற்றிக் கட்டி
நுவல்தூப தீபநைவேத் தியங்கள் செய்து
தேனும்பூ சனைபுரிந்தத் தகட்டை வெள்ளி
செம்பொன்னில் அடைத்தணியத் திருவுண் டாமே. ()



பெண்களுக்கு காப்பு.

திருவுடைய பெண்களுக்குக் கழுத்தி லிந்தத்
திருக்காப்புக் கட்டிடத்தான் தீரும் நோய்கள்
அருவுடைய பேய்களெல்லாம் அகலும் புத்தி
யதிகரிக்குந் தேகாரோக் கியந்தா னுண்டாம்
மருவுமுடற் புஷ்டியுண்டாம் இருது வாரா
மகட்கொழுங்காய் இருதுவரும் மார்புங் காணும்
கருவுமுண்டாங் காந்தியுண்டாம் அடுத்த டுத்தே
கவினுறுமக் களைப்பெற்றுக் களிகூர் வாரே. (54)

ஆண்களுக்குக் காப்பு.

களிகூரும் ஆடவர்க்குக் கையி லிந்தக்
காப்பணிந்தால் பேய்பிணிகள் காணா தோடும்
ஒளிகூரும் உடம்புநன்றாந் தாது புஷ்டி
உண்டாகுஞ் சித்தியுண்டாம் உலகம் போற்றும்
அளிகூரும் அழகுமக்கட் பெற்று வாழ்வார்
அருமறையின் பொருளறிவார் அறிஞ ராவார்
நளிகூரு மிந்தரட்சா பந்த னந்தான்
நலந்தரமண் டலமூன்றும் நவின்ற பேறே. (55)

### மஞ்சள்க்துழிட்பு.

பேறுயரும் பச்சைமஞ்சள் அரைத்த தன்கண்
பிரிதிவிவீ டெழுதிநடு மகாரஞ் சாத்தி
கூறுமிரண் டாமெழுததைவிந்து வோடுங்
கூட்டிவைத்தா யிரத்தெட்டுச் செபித்து மூலம்
வீறுடனே யந்திசந்தி யொருமா தந்தான்
மின்னாரைக் குளிப்பித்தால் மெலிவு நீங்கும்
ஏறுமிரு தனமுண்டாம் அழகு முண்டாம்
இருஷியுமக் களைப்பெறுவ ளின்பார் வாளே. (56)




### கோமயக்துழிப்பு.

ஆரேனு மெலிந்தமகன் அங்கந் தேற
ஆன்மயத்திற் சதுரமிட்டுள் மகார மிட்டுச்
சிரோமுள் புரோமுமிட்டா யிரத்தெட் டன்பாய்த்
திரியெழுத்தும் ஓதிமதி குளிப்பித் தாக்கால்
போரேறுப் புஷ்டியுள்ளோ னாகி வாழ்வன்
புனிதமுறுங் கோமயத்தின் முழுக்கி னாலே
வாரேறுந் தனத்திழையார் வசிய மாவர்
மங்கையர்கரு மாகுங்கோ மயமு ழுக்கே (57)




### விபூதி யோதிக்கொடுத்தல்.

கோமயவெண் ணீற்றினைமூன் றெழுத்தா லோதி
கொடுக்கினொரு திங்களுக்குள் மகவுண் டாகிச்
சேமமுடன் வதுவரர்கள் செழித்து வாழ்வார்
திருநீற்றிற் சதுரமிட்டு ஸ்ரீம்உள் ளிட்டு

ஓமதனைச் சுற்றியிட்டா யிரத்தெட் டன்பாய்
உயர்மூலம் ஓதியிட்டுப் பார்த்துண் பித்தால்
பூமகள்நோக் குண்டாகும் புகழுண் டாகும்
பொல்லாச்சொப் பனம்பிணிபேய் போகுங் காணே. ()



வெண்ணெயோதிக்கொடுத்தல்

பிணிபகல வெண்ணெயையா யிரத்தெட் டோதிப்
பெண்களுக்குக் கொடுத்தாக்கால் பிள்ளை யுண்டாம்
மணியகல வருந்துமைந்தன் அந்த வெண்ணெய்
வாங்கியுண்டால் திங்களிலாண் மலடு நீங்கும்
கணியபுரு ஷோத்தமனென் றில்லாள் மெச்சக்
கனிவுயரும் ஆண்மையுண்டாம் கவினு முண்டாம்
பணியவல்ல மூன்றெழுத்தின் வீறி தென்றான்
பரமசிவன் பார்வதிகேட் டின்ப மானாள். (59)

அம்மை திருவாய்மொழி.

பார்வதிதா னுலகமெல்லா மாகி வேறாய்ப்
பல்லுயிர்க்கின் பருள்சத்தி யாத லாலே
கார்வளர்கண் டனைப்பணிந்தெங் கோவே யிந்தக்
காசினியி லுயிர்க்கருள்நே யந்தான் தோன்றச்
சீர்வளரிச் சிவாரூடம் அருளிச் செய்யுந்
திறனுணர்ந்தேன் இவ்வுலகில் தீரா நோயாக்
கூர்வலிப்பா முயலகனென் றுண்டே யந்தக்
கொடுநோய்த்தீர் வருள்கென்றான் கோன்சொல் வானே

வலிப்புநோய் தீர்க்குமுறை.

சொல்லவெது வுள்ளதுவோ அதைநீ கேட்டாய்
தொல்லையுயிர்க் கிரங்குநெஞ்சில் துளிர்த்த அன்பால்
வல்லவிகேள் உச்சியெல்லின கதிர்போல் மேனி
வாள்சூலம் வலத்திடத்து மழுவுந் தண்டும்

புல்லியநாற் புயமரவா பரண முக்கண்
போற்றுசுக்கி லாம்பரஞ்செஞ் சடைக்கா டார்க்கே
கொல்லவல்ல முயலகனை மிதித்தா டென்னைக்
கூடுசித்தன் எதிர்வலிப்புக் குடிபோங் காணே. (61)

இதுவுமது.

வலிப்பதனால் வருந்திடுவோன் வலிதே யன்பாய்
வணங்கியென்னைக் காத்தியென்று வந்தா னானால்
சலிப்பதின்றித் தீருமென்று சிவாரூ டன்றான்
சலகும்ப மமைத்ததின்மூன் றெழுத்துஞ் சாத்திப்
பலிப்புறப்பூ சித்துருவா யிரந்தான் போட்டு
பன்னிரண்டு நாளைக்குத் தினமு மாட்ட
கெலிப்புறுகாக் காய்வலிப்புக் குமர கண்டம்
கிள்ளைமுயல் வலிப்பனைத்தும் விட்டுப் போமே. (62)

இதுவுமது.

முயலகனைத் தினமுமிதித் தாடு மென்றன்
மூன்றெழுத்தின் கடையையொரு புரசி லைக்கண்
நயமுறவைத் தக்கினிவீ டெழுதி யுள்ளே
நலிபிணிப்பேர் மற்றவன்பேர் முதலை நாட்டி
யயலினைம்பத் தோரெழுத்தும் விந்து வோடே
யடைத்ததனைப் பிரணவத்தால் வளைத்துக் கட்டிக்
கபவுயமண் டலபூசை முடித்துக் காப்புக்
கட்டமுய லகநோய்தான் கழன்று போமே, (63)



இதுவுமது.

நோயகலத் தகடுவைத்துப் பூசை செய்ய
நுவன்றவொரு மண்டலமும் நாடோ றுந்தான்
தூயபஞ்ச கவ்வியத்தில் பூசை முன்னே
துதியுருறா றமைத்ததைமுச் சிரங்கை யூட்டி
நேயமொடுத் தூளனமா யுடம்பு முற்றும்
நீறணியி னிவாரணமாம் முயல கன்றான்
மேயவருள் சிவாரூடன் சிவமா னனே
விளங்கியவன் வழிகாத்து விளக்கு வேனே. (64)

மதிமயக்கந்திர.

விளங்குசிவா ரூடன்றான் முப்பு ரத்தை
வென்றமல னயவென்னில் வேறில் லாதே
துளங்குமகாக்குழைசெஞ் சடைவெண் ணீறுத்
தூளனமாப் பூத்தசெந்தீ வணம் பாவித்தே
யுளங்கடுத்துக் கண்சிவந்து மிதிக்கின் அன்றே
யோடுமுய லகன்போலுன் மத்தந் தீரும்
வளங்குபலா யிரஞ்செபித்துப் பால்நெய் தேனே
வழங்கினுமோர் மதியின்மதி மயக்கம் போமே., (65)

அம்மை திருவாய்மொழி.

மதிமுகியே யுத்தமர்மத் திமர்கட் குத்தான்
வகுத்தசிவா ரூடமிது வயங்கி தைத்தான்
துதிபெறவே நீலகண்ட மெனவி ரித்துச்
சொல்லிடுவேன் கெருடாரு டமுஞ்சொல் வேன்மேல்
திதிபெறவே என்றுமலர் வாய்ம லர்ந்தான்
சிவபெருமான் சிவைகேட்டிச் சிவாரு டத்தில்
விதிவழிபா வனை கிரியை மந்தி ரங்கள்
விதித்தனையே மருந்துநல்க வேண்டு மென்றாள், (66)

நல்லபாம்பு வகை.

வேண்டுமுமை யேகேள்நீ மேதி னிக்கண்
விளங்காணைக் கடங்குநல்ல பாம்பி னங்கள்
பூண்டுளநாற குலமாகும் கடையோர் சாதி
புகலிவைகக் கிடும்விடங்கள் பொல்லா நஞ்சாம்
நீண்டவைந்து குலவிடமும் மந்தி ரித்தே
நீக்கிடலாம் நீக்கவல்ல சிவாரு டன்றான்
ஆண்டவன்மா வனைமுதிர முதிர சித்தன்
ஆவனவன் ஆளமருந் தையுஞ்சொல் வேனே. (67)

### விஷமை.

ஆளவல்ல விடதாரி சுத்தி செய்த
தாய்வெள்ளைப் பாஷாணம் துரிசி வாளம்
வர்ளிரதம் கெந்திமனோ சிலையே நிம்ப
மாத்துவித்து பெருங்காயம் எட்டும் நேர்நேர்
தாளிரண்டு களஞ்சாக நிறுத்தெ டுத்தே
சாமமொன்று வெள்ளெருக்கின் பாலா லாட்டி
மீளநிம்ப நெய்யாலோர் சாம மாட்ட
விஷமையா மதைவழித்தோர் சிமிழி லாக்கி. (68)

### காளகண்டமைக்குப் பத்தியம்.

ஆகருமிந்த விஷமைய்யிற் பயறு போலே
அருளினொரு வெற்றிலையில விடங்கொண் டோற்கு
காக்குவிஷ மைவிஷத்தைக் கண்டித் தோட்டும்
காளகண்ட மைய்யிஃதென் னாணை யாலே
பூக்கமுள தாமிதிதை யூட்டி னுக்கால்
உப்புபுளி யொருவாரத் தினுக்கா காது
நாக்குருசி யாம்பாசிப் பயறுன் பாலாம்
நறும்பச்சை யரியுணுநாள் மூன்றிற் காமே. (69)

### விரியன் கடிதீர்க்குமருந்து.

ஆயபல விரியனினத் தெதுவுந் தீண்டில்
அருளுயர்செஞ் சித்திரமூ லத்தா ளைத்தான்
ஆயதிரி கடியெடுத்தான் பாலிற் சேர்த்தே
யருத்தினஞ்சி கெட்டோடு மவுரி வேரை
ஆயமிள கொடுசேர்த்தான் பாலி லாட்டி
யருத்தினுநஞ் சொழியுமெருக் கின்பால் சாணம்
ஆயவிரண் டனைக்கூட்டிப் பூச வீக்கம்
அகன்றிடும்புண் ஆறிடும்நாள் மூன்றில் தானே (70)

### புடையன் கடிதீர்க்குமருந்து.

புண்ணிவரும் கொடியதுள்ளுப் புடைய னாதி
புடையனினத் தெப்புடையன் கடித்தா லுந்தான்
மண்ணிலுயர் வெற்றிலையில் வெள்ளெ ருக்கின்
மலரைவைத் துண் டிடவசம்பின் புகையை மோப்ப
திண்ணியநஞ் சறும்வீழிப் பூப்ப லந்தான்
சிதைத்தரைத்தீத் தாலுமறும் வலிபுண் தீர
கண்ணியகொட் டாங்கரந்தை யினுப்பைச் சக்கை
காண்கரணை யுகைபசுநீ ராட்டிப் பூசே. (71)

### வழலை கடிதீர்க்குமருந்து

ஆடெரிகால் வழலையினத் தெதுவும் பற்றின்
அறிவைமயக் கிடுமிரத்தங் காட்டுங் காந்தும்
நீடவுரி கிரீடம்வெள்ளைச் சாரணைத்தூர்
நிகழ்த்திலைகள் பெருங்காயம் நிரைசேர்த் தாட்டி
நாடெலுமிச் சளவருத்திக் கடிவாய் பூச
நஞ்சொழியும் பழம்புளியோ டாவினீரில்
கூடுநிலப் பனைகுன்றி சிற்றா டத்தூர்
கூட்டியரைத திடினும்விடங் குடிபோம் பாரே. (72)

### கொம்பேரிமூக்கன் கடிதீர்க்குமருந்து.

பாரினிலோர் கொம்பேரி மூக்கன் சீறிப்
பாய்ந்துகடித் தேறிடுவன் மரத்தின் வைக்கோல்
தூரிலிட்டுப் புகைகாட்டி லவனும் நஞ்சும்
தொடர்ந்திறங்குஞ் சுகமுறுமப் பாம்பைச் சார்ந்த
ஆரியநஞ் செதுவுமறும் பிரண்டை வேரை
யாவின்பால் தனிலரைத்துப் பழம்போ லூட்ட
காரியநஞ் சினையுடயபிற் காணு தோட்டக்
கழறியவிம் மருந்துமிகக் கடுமை காணே. (73)

### இருதலைமணியன் முதலியவிடங்கள்தீர.

காணுமிரு தலைமணியன் சுருட்டை கூளை
கடுவார்மண் ணுண்ணி கடிக்க நக்க
ஏணுறமெய்த் தடிப்புபற்றுக் குட்ட மாதி
யெழுந்தான்றி புன்னைகழ லிறங்க மிஞ்சில்
வேணுறகார் புகாகடுக்காய் மகிழ்புங் கெட்டு
விரைகளுமொவ் வோர்படிகோ சலத்தின் மாதம்
மாணுறவூ றியபினெடுத் துலர்த்தித் தைலம்
வடித்திலையிற் களஞ்சருந்தத் தீரும் பாரே. (74)

### இதுவுமது.

திருமதைக் கடிவாயிற் றடவி வந்தாற்
சிக்கறவே தீர்ந்திடுமோர் குப்பி தன்னில்
அருமதை யடைத்துவைத்துப் பேணல் வேண்டும்
அறுந்தினுப்புப் புளிதண்ணீ ராகா தாவின்
சீருறுபால் சோறுவெந்நீரில் சேர்க்க லாகும்
செப்பிமிப்பத் தியத்தொடுசிற் பட்டை பாவில்
ஏருறுசா றெடுத்தாழாக் காழாக் குண்ண
ஏழ்நாழிற் குட்டமுடக் கெல்லாம் போமே. (75)

இதுவுமது.

எல்லையில்சீர் வெள்ளெருக்கு முட்கு ரண்டி
யிலங்கவுரி கொடிவேலி பேய்க்கு மட்டி
வல்லமெரு டன்கிழங்கு சுருளி யுத்தா
மணியாடுண் ணுமூலி யமுக்க ருவேர்
வெல்லவல்ல பத்தினையு மிடித்துத் துளாய்
விளங்குகுடுக் கையிலடைத்து வெந்நீர் தன்னில்
சொல்லிவிரற் கடியந்தி சந்தி நல்ல
சொல்லாமல் வல்விடநோய் தொலைந்து போமே. (76)

சொறிதவளை முதலிய வூறற்கடிகள்தீர.

வலியசொறித் தவளைமுத லூறல் நல்கும்
வருக்கவிட முற்றுமற நீலி வேலி
வலியமலை தாங்கிவெண்காக் கணமா தொண்டை
வளர்வீழி பாலொடுவை வேர்க ளேழும்
வலியசம னுலர்த்திடித்தத் தூள்வெந் நீரில்
வழங்குதிரி கடியதனை யுண்டோன் மேனி
வலியவொளி திகழ்தரும்நோ வெல்லாம் போகும்
மற்றதுண் ணுங் காலுப்பும் புளியுந் தள்ளே. (77)

எலிவகை.

காலுவிடப் புண்டரங்கா பிலஞ்சு வேதங்
கஷாயதந்தம் உந்துருகோ கிலங்க போதம்
ஆலுமிலா லசமரிதம் சபளத் தோடு
மருணமிர சாலமசி தங்கி ருஷ்ணம்
வாலுயரும் பலினிசித ரஞ்ச பாலம்
வளர்குணக மெனும்பதினெட் டெலிக்கூட்டங்கள்
ஏலுறுநாய் எலிப்புலிகீழ் மாக்கள் வீக்க
ளிவைக்கஞ்சிப் பகல்வளைவாழ்ந் தெழுமி ராவே. (78)

எலிகடி தீர்க்குமருந்து.

இராவிவைதாஞ் கிந்துமதம் பட்டால் வீக்கம்
இவர்கிரந்தி யரோசகமா தியவுண் டாமேல்
தராவிடந்தா னெளிதாமேர பொல்லா தாகும்
தடிப்பிருமல் புண்வீக்கங் கொப்ப ளாதி
கராளமெலா முண்டாக்கு மிவைதாந் தீர
கரும்பொன்னைக் காய்ச்சியெலு மிச்சிற் றேய்த்து
பராவுறுமப் பழச்சாறு மூன்று சேரைப்
பருகநல்கின் எலிகடிகள் பறந்து போமே ()

இதுவுமது.

நல்கிடுவாய் ஆதளைவித் தரைத்தான் பாலில்
நசித்துவிடங் கழற்காய்போற் றடிப்புத் தீரும்
நல்கிடுவாய் புங்கந்தோ லெருமை மோரில்
நனைந்தூறி யரைத்ததுவுந் தடிப்புத் தீர்க்கும்
நல்கிடுவாய் மாம்பட்டை யுலர்த்தி டித்து
நறுநெய்யிற் கலந்ததுவுந் தடிப்புத் தீர்க்கும்
நல்கிடுவாய் காலைதொறுஞ் சேரை சேரை
நாள்பத்துக் கிவைக்குப்புப் புளிகள் தள்ளே. (80)

இதுவுமது.

தள்ளாட்டுத் தலைக்கனமுங் கொப்ப ளங்கள்
தடித்தெழுந்துன் டங்காட்டு மெலிக டிக்கு
முள்ளாட்டும் பாவட்டைத் தழையுந் தோலும்
முறைசமனு வுலர்த்திடித்தத் தூளை நெய்யில்
உள்ளாட்டிப் பாக்களவு கலந்து நல்கின்
உடன்தீருங் கொடுவேலி வேரின் பட்டை
வெள்ளாட்டுப் பாலிலரைத் தருத்தி னாலும்
விடங்கழலுந் தேகாரோக் கியமுண் டாமே. (81)

இதுவுமது.

விடந்தீர்க்கும் பலாசிலையை யரைத்து ருட்டி
வெண்ணெயில்நல் கிடவிளை யிருமல் தீரும்
விடந்தீர்க்கும் பலாசத்தூர்ப் பட்டை யாட்டி
வெண்ணெயில்நல் கிடவிளை யிருமல் தீரும்
விடந்தீர்க்கும் அழிஞ்சில்வேர்ப் பட்டை யாட்டி
வெந்நீரில் தாவிளை யிருமல் தீரும்
விடந்தீர்க்கு மிவைபெறுமிச் சங்காய் போல்
வேளையைந்தா றுணர்ந்திய வேண்டுங் காணே. (82)

இதுவுமது.

ஈந்திடுதிப் பிலிபேய்ப்பீர்க் கின்வேர் சீந்தி
விலைகள்ளிச் சாற்றிலரைத் தெலிநோய் தீரும்
ஈந்திடிலைக் களளிமுள்ளி வேர்க ளாட்டி
யியல்காடி தனிலதுவு மெலிநோய் தீர்க்கும்
காந்திடொருப் பூடுபிடி யழிஞ்சிற் பட்டை
கறிவசம்பு நான்குமுரி நிம்ப நெய்யில்
காந்திதர வரைத்திட்டுக் காய்ச்சி வைத்துக்
கரசுடைநல் கிடவலிய கடிகள் போமே. (83)

### இதுவுமது.

வலிமையுள்ள அவுரியின்வேர் அரைத்துப் பாலில்
வழங்கொருபாக் களவெலிகஞ் சிறங்கிப் போகும்
வலிமையுள்ள அமுக்கருவே ரைத்துப் பாலில்
வழங்குதின மூன்றினஞ்சு வாங்கிப் போகும்
வலிமையுள்ள மூன்றெழுத்தால் வெண்ணெ யோதி
மாற்சாலந் தனையழைத்துக் கடிவாய் தன்னில்
வலிமையுள்ள டம்மெழுதி வெண்ணெய் வைத்து
வந்துநக்க விடினெலிநோய் மாண்டு போமே. (84)

### இதுவுமது.

போதமுடன் களச்சிங்வ வாகை கொன்றை
புகழ்வாத மடக்கிவெள்ளை யெருக்குப் பாலை
சாதியிலைச் சாறும் வகைக்கா ழாக்கு
தளிர்கரிப்பான் சாறெண்ணெ யுரிவ கைக்கு
யோதுமிவை யொன்றேமுக் காழு ழிக்கு
மொருகளச்சி சிவதையரைத் தொன்றாய்க் காய்ச்சி
யாதலுறு தயிலங்கா சிடைய ருத்த
வாகுபதி னெட்டினஞ்சு மற்றுப் போமே. (85)

### கோல்லா விரதம்.

நஞ்சுடைய தெனினுமில்வாழ் எலியால் நன்றும்
நாய்பூனை முதல்நன்றி மறுமை தேற்றும்
மிஞ்சுநல்ல பணிக்ளறி வுடைத்தன் பாக்கும்
விடக்குளவி சிலந்திகளால் சிறக்கு மில்லம்
எஞ்சுபல்லி குறியுணர்த்தும் இவைமுன் வீட்டி
லியாமமைத்தோ மொன்றையொன்றுங் கிரையாக் கொ
நெஞ்சுவப்பா ரிவைகண்டு மேலோர் துன்பம் (ள்ளும்
சேர்வறியார் கொல்வர்கொல்லார்க் கின்ப மாமே. (86)

### நாய் நரிகடிதீர.

கொல்லாதார் கொன்றதையுந் தின்னு தாரே
கொல்லாநோன் புடையவர்நங் குமார ராவார்
அல்லாதார் மாயைமக்க ளாகு மாக்கள்
அவிர்தருநாய் நரிமுதல கடிகள் தீர
கல்லாதா ரெனினுநல்ல நீலி வேரைக்
களச்சியளவ ரைத்தருந்த விட்டுப் போகும்
இல்லாதார் வெற்றிலைச்சா றுமழக்கிய்ந் தாலும்
ஏகும்நஞ்சு மூன்றுதின மீயத் தானே. (87)

### இதுவுமது.

மூன்றுதினம் விழியுடைச் சமூல மாட்டி
மூழுங்ககல்கி னுலுவிடம் முறிந்து போகும்
ஆன்றகெரு டக்கொடியைக் கடிவாய் தன்னில்
அரைத்திடநஞ் சிறங்கிடும்புண் ஆறிப்போகும்
ஊன்றுகள்ளி தனைவாட்டிப பிழிந்தா லும்புண்
உலர்ந்துவிடு மானுலுஞ் சிவாரு டன்முன்
சான்றநம்மூன் றெழுத்தையெண்ணிப் பார்க்கும் பார்வை
தன்னாலே மருந்துநன்று மிறங்கும் நஞ்சே, (88)

### தேள் முதலியனகடிதீர.

நல்குவிடக் கடிவாய்ப்புண் ணுலேந்து ரொந்தால்
நவுலயன்மூக் கினிற்பிறந்த பருத்தி தும்பை
பல்குபுளி செம்பைபொன்னு வரையில் வைந்தின்
பச்சிலைகள் சமன்கொணர்ந்து வெதுப்பிக் கட்ட,
ஒல்கிவிடப் புண்களெல்லா மாறிப் போகும்
உடம்புமுற்றும் புண்ணறத்தேய்த் தாட லாகும்
வெல்கடித்தேள் முதலநஞ்சு கார நீரால்
விட்டுப்போ முடனதுதான் குருமருந்தே. (89)

### குழவி வண்டுமுதலிய கடிகள்தீர.

குருவான குழவிவண்டா தியசெந் துக்கள்
கொட்டுவிடம் பங்கம்பா லையின்வேர்க் கோடும்
தருமேரைச் சங்கின்வே ரரைத்து வெந்நீர்
தனிலுணப்போம் குறிஞ்சாவே லிப்ப ருத்தி
யுருவாருந் தளிரரைத்துப் பூசத் தீரும்
யுயர்தகரை விரைமாஆ தளேச்ச மூலம்
அருமேதிப் பாலின்முந்நா ளுற வைத்தே
யமாவுதயஞ் சிறங்கைப்பா லருந்தப் போமே. (90)

### விடசஞ்சீவி.

உதவுசுத்தி யிரதந்தான் களஞ்சு பத்தே
யுயர்சுருக்கிச் சாறறுகம் புல்லுச் சாறு
கிதமுமறவிட் டரைத்துருட்டிப் படம டக்கிக்
கழங்குகுடைந் ததின்வைத்தக் கிழங்கால் மூடி
இதமொடுமுச் சிலைசெய்து சிறுபு டத்தில்
இட்டெடுத்தே யரைத்துருட்டிச் சுண்டை யுண்டை
விதநிழலி லுலர்த்திவைத்தால் விஷசஞ் சீவி
வெந்நீரி லொன்றருந்தில் விடங்கள் போமே. (91)

இதுவுமது.

ஒன்றுமுடக் கற்றுனின் விரையைக் காடி
பூற்றியரைத் ததிலிடவு மோடிப் போகும்
நன்றுதரு மிந்தவிட சஞ்சீ விக்கே
கவின்றிடலாஞ் சருவவிட சங்கா ரிப்பேன்
என்றுமிது வைத்தியர்க்கு குருும ருந்தாம்
ஏறுபுகை யூறலொடு சுண்ணம் புக்கல்
வென்றயரும் வெங்காரம் ஆட செய்யில்
வீருயரைத்துப் பூசவன்புண் ஆறும் பாரே. (92)

பூவசியம்.

ஆறுதலாய்க் கதிர்வாரங் காலே யாண்மான்
ஆசனத்தில் வடக்குமுக மாக வைகி
நீறணிந்து நீற்றிலெரி கோணா மிட்டு
நிகழ்த்துமுத லெழுத்துடன்மன் மதனை முத்தும்
கிறியிரண் டையுநூற்றெட் டெண்ணிப் பூசிக்
கிளர்தலொடு வெள்ளெருக்கின் வேர்கொ ணர்ந்து
வீறுறவே பூசித்துக் காப்புக் கட்டி
வெளிப்படிற்றுன் செகவசிய மாகும் பாரே. (93)




இதுவுமது.

வசியத்திற க்குமணி யாலெ லைச்செவ்
வணத்திதெண்ணி வசிவசியென் றிறுதி கூட்டி
மூசிதலின்றிச் செங்கொன்றை செம்பாத்தம்
முதற்சிவந்த மலர்புனைந்து குங்கு மப்பூ

பசியகற்பூ ரங்கோரா சனமுன் சாத்திப்
பால்பழஞ்சர்க் கரைப்பொங்கல் பாய சாதி
கசிவுடன்வைத தூட்கிரட்சா பந்த னந்தான்
கட்டினிந்த வுலகங்கை வசமாம் பாரே. (94)

## தெய்வமோகனம்.

வசமாகத் திங்களிரா முதற்சா மத்தில்
மயக்குவெள்ளைப் புலித்தோலிற் கிழக்குப் பார்த்த
வசமாக விருந்துவெண்ணீ றணிந்து நாற்கோண்
வரைந்துஙிரீ முடன்மாயா சத்தி பீசம்
வசமாக வமைத்தம்ஹாம் பட்டென் றன்பாய்
வழுத்துருநூற் றெட்டோதித் தரித்தால் தெய்வம்
வசமாக நிற்குமரு ளுமத் தின்வேர்
வாங்கிப்பூ சித்தணிந்தால் மயங்கும் பாரே. (95)




இதுவுமது.

மயங்குறுமோ கனத்திற்குப் பால்வண் ணம்போல்
மனங்கொடென்னை வெள்ளலரி பிச்சிப் பூக்கள்
நயங்கொளச்சாத் தியுசுறுஞ்சந் தனநா றுதி
நல்கிவளர் வெள்வாழைப் பழம்வெள் ளான்பால்
செயங்கொளூட் டியுந்துழசி மண்கொண் டன்பான்
செபித்திரட்சா பந்தனமண் டலம்பூ சித்தே
யியங்குறத்தா னணுந்துகொண்டாற் சிறுதெய் வங்கள்
ஏவினசெய் துதவுமென்று ணேயினுட் பட்டே. (96)

### அக்துனித்தம்பனம்.

ஆனைவழி மங்கலவா ரத்தின் மாலை
அவிர்தருப்பை யாசனத்தின் மேற்குப் பார்த்து
தாணுவெண்ணீ றணிந்திருந்த்ந் நீற்றில் நாற்கோண்
சாத்திநடு வட்டமிட்டுப் புரோம்லம் மிட்டு
கோணுமதி கீழிட்டுள் வம்மிட் டேதம்
குறித்திருமுன் றினைநூற்றெட் டோதிக் கையைக்
காணுறப்பொத் திடினெரிதம் பிக்குக் காப்புக்
கட்டிடினீர் முள்ளியிற்றம் பனமாங் காணே (97)




### இதுவுமது.

தம்பனத்திற் கெரிபொன்மே னியனு வென்னை
தான்கண்டு பொன்னலரி பொற்கொன் றைப்பூ
நம்பியிட்டே யகிற்புகைசெஞ் சந்த னுதி
நல்கிவளர் செவ்வாழைப் பழஞ்சேர்ந் தாப்பால்
செம்பிலிட்டு முளரிமணி கொடுதம் பிக்க
செபித்திரட்சா பந்தனமண் டலம்பூ சித்தே
யிம்பரிற்று னணிந்துகொண் டோன் முன்னே தீர்த்தான்
எரியாது சுடாதென்று ணையினுட் பட்டே. (98)

### வியாதியுச்சாடனம்.

என்னைமணி வண்ணமதாய்க் கருத்தி ருத்தி
யியல்புந்தி வாரமுச்சிப் போதின் பின்னே
மன்னுபக டதலின்மேல் தெற்கு நோக்கி
வதிந்துவெண்ணீ றணிந்திருந்தங் நீற்றிற் நாற்கோண்

ஙன்னரமைத் ததிற்புரோம்வம் வஷட்டென் றிட்டு
நவில்நூற்றெட் டம்மூன் றுஞ் செபித்துப் பூச
இன்னலுறு பிணிவிடும்பார் இறங்க ரந்தை
யின்வேர்க்காப் பணியவும்நோ யேகும் பாரே. (99)




இதுவுமது.

ஏகுமுச்சா டனத்திற்கு நறுங்கொ ழுந்தின்
இருவகையும் கராலகமும் உற்ப லாதி
யாகுநறுங் குங்கிலியம் புழுகு மூன்று
வமைத்குநல்லெள் ளோரைபுளி யோரை யப்பம்
வாகுறுகா ராவின்பா லூட்டிச் சங்கின்
மணிகொடெண்ணி மண்டலபூ சனைதான் செய்தே
பாகுறுகைக் கணிதகுநற் கரந்தைக் காப்பால்
பலநோயும் இவன்பார்த்தாக் பறக்கும் பாரே. (100)

பூதவித்நு வேஷணம்-

பாரிலுயர் பவழவண்ண மாக வென்னைப்
பாவித்துக் குருவாரம் பாதி ராவில்
போரியல்கன் னியைநோக்கி நீற ணிந்து
பொற்பட்டா சனத்திருந்தங் நீற்றில் நாற்கோண்
நேரிலிட்டுப் புரோம்ரம்வம் மெழுதி யன்பால்
நிகழ்நூற்றெட் டுருப்போட்டுப் பூசிப் பார்த்தால்
வாரிகலே வற்பூத மோடுங் காட்டா
மணக்கின்காப் பிகற்பூதம் மடக்கும் பாரே. (101)




### இருவுமது.

மடங்கிடுவே ஷணத்திற்குக் கழுநீர் செந்தா
    மரைமலர்செவ் வலரியிட்டுக் குங்கு மாதி
திடங்கொளுஞ்சே தாவின்பால் செம்ப லங்கள்
    திசழ்பருப்புப் பொங்கலிவை யருப்பித் தேத்தி
வடங்கொளுநற் பவழமணி யாற்செ பித்து
    மண்டலபூ சனைகொடுகாட் டாம ணக்கின்
தடங்கொளுவே ரிரட்சாபந் தனங்கைக் கொண்டோன்
    சத்துருவின் விரோதத்தைத் தான்வெல் வானே, (102)

### ஆகிருஷணம்.

காணு யெனைப்படிக வணமாக் கொண்டு
    தகையவெள்ளி வாரமதி லுச்சிப் போதி
ஆனுத வீசான திசையை நோக்கி!
    யருணீறிட் டங்நீற்றில் பிறைக்கோ ணிட்டு
வாளுடும் புரோம்வருணன் பொறிசு வாஹா
    வரைந்துவெண்பட் டமர்ந்துசெபித் தணிந்து கொண்டு
கோளுரே யழைக்கவரு வார்நூற் றெட்டால்
    கொளுஞ்சுருனிக் காப்பிதற்குக் கொள்ள லாமே. (103)




இதுவுமது.

காப்பாமா கிருஷ்ணத்திற் காகு முல்லை
கானு~~யர்வெண்~~ டாமரைமல் லிகைமுன் வெண்பூ
மோப்பாம்பன் னீர்பஞ்ச வாச மாதி
முழுமயிலைப் பசுப்பால்வெண் கனிவர்க் கங்கள்
கோப்பாம்பாற் பொங்கற்பாற் பாய சாதி
குளக்கட்டை யெலாம்படைத்து மண்ட லந்தான்
தாப்பாவேத் தியும்படிக மணிகொண் டோதித்
தலைசுருளிக் காப்பணியி னழைத்த லாமே. (104

பேதனம்.

ஆகுமொரு குடும்பத்திற் கிழிபுண் டாக்கும்
அரிவைகள்ளப் புருஷ்னொடும் பிரிவ தாக
வாகுறுமோர் பரத்தையர்பால் வீழ்ந்து முன்னோர்
வைத்ததிறைப் பவன்மனைக்கு வருவ தாக
சாகுதலில் திரீபுருஷ பேத னந்தான்
தாரணியிற் செய்வதுவே தரும மாகும்
சோகுகளாய் அலைவார்கள் மதிகெட் டிந்தத்
தொழில்பிறர்க்குச் செயத்துணிந்த துட்டர் தாமே. (105)

இதுவுமது

துணிந்தெனக்கா லாக்கினிருத் திரனுக் கண்டு
துளங்குசனி வாரத்தில் மாலைப் போதில்
அணிந்துதிரு நீறுவட மேற்கு நோக்கி
யமர்ந்தொருமா னுரிமிசைகை நீறு கொண்டு
பணிந்திடுநாற் கோணிட்டே புரோம்ரம் மாறிப்
பதித்துருநாற் றெட்டெணிக்கை மாறி நீற்றை
திணிந்தெறிய அதிற்பிரிவர் வான்பூ வேரில்
திகழ்காப்பிட் டவர்பிரிவு செய்த லாமே. (106)




பிரிவுறுவான் ாசிமசியு மிறுதி கூட்டிப்
பிறழ் புரோம்ரம் நசிமசி யாற்பேதிப் பாக
விரிதருகாக் கணம்பூவே மேதிப் பாலே
மிளகன்னம் கடுகன்னம் நிவேத னங்கள்
திரிபுறுவா னமைத்துமிள குறுவ டத்தாற்
சேவித்தோர் மண்டலந்தான் வான்பூக் காப்புப்
புரிவுசெய்து கட்டியகை வல்லான் தானே
பொல்லாப்பே தனசித்திகைவந் தானே. (107)
பொல்லாக்கா லாக்கினிருத் திரனு மென்னைப்
புந்திகொண்டு மந்தனுச்சிப் போதில் நீற்றை
நல்லாக்கொண் டக்கினியைப் பார்த்தி ருந்து
நன்னீற்றில் முக்கோணிட் டெரிபு ரோமிட்

டில்லாக்கு மசீநசியோ டுருநூற் றெட்டே
யெண்ணியுளங் கடுத்துக்கண் செபித்துப் பார்க்கக்
கல்லாக்கா தகன்கெடுவன் மருதோன் றித்தூர்க்
காப்பணிந்தோ ருலகிலிகல் கண்டி டாரே. (108)




இகலழிக்கு மாரணத்திற் காங்க ரும்பூ
இலங்குபுகை நிறப்பூக்காக் கணம்பூச் சாத்தி
புகன்மிளகோ தனம்புளித்த தயிரின பொங்கல்
புகைக்காடர்ப் பித்தெட்டி மணிகைக் கொண்டே
யகலமுறு வேங்கைத்தோ லாச னத்தில்
அமர்ந்தொருமண் டலம்பூசித் தருண்ம றந்தான்
திகழ்தரவே வருதோன்றிக் காப்புக் கொண்டோன்
சித்திசெய்தான் அவன்புரிமர ணம்பொல் லாதே. (109)

அஷ்டகன்மத் தொகை.

சித்திசெய்யச் செகவசியந் தெய்வ மோகம்
திகழுங்கித் தம்பனநோ யுச்சா டந்தான்
தத்துறும்பேய் வேசனமா கிருச னந்தான்
தகவுறுபே தனமார ணங்க ளெட்டும்
உத்தமர்க ளிந்நூலிற் சொன்ன வாறே
யுணர்வொடுசெய் தாலறமாம் பவமே ருது
சுத்தருக்கா மெண்சித்தி சாத்மீ கந்தரன்
துலங்குமிதோ விராசதமா முலகர்க் காமே. (110)

தாமசகுணவிஞ்சை.

உலகரிலே யசாதனர்சா தனர்க ளென்றே
யுள்ளவிரு திறத்தருட்சா தனர்க்கி நூலாம்
பலகலைக ளுணர்ந்தவரே யிதனைத் தேர்வார்
பாமரரா மசாதனர்க்கு விஷசெந் துக்கள்
கலகமுட னென்றையொன்று தினும்பி ராணி
கருப்பிண்ட மதுகொளுந்தாய் மார் முன்னுக
அலகிலுயிர் கொன்றுகரு வெடுத்தும் தீண்டா
தனகொடுஞ்செய் தொழிலவைதா மதம தாமே. (111)

இதுவுமது.

தாமசமா மசாதனர்விஞ் சையினை யிந்தத்
தாரணியில் நமக்காகார் தாஞ்செய் வாரால்
நீமகிழ்ந்து கேட்டசிவா ரூட மிந்நூல்
நிகழ்த்துமிரா சதவிஞ்சை நெறியே தேர்ந்து
சேமமுல கிற்குநல்கித் தானும் வாழச்
சித்திதரு மிதுதேர்ந்தோன் சிவமா னனே
பூமகிழ்வா னடியவன் குருவு மானன்
போற்றுமிது கோடிசித்தர் தேர்ந்தா ரென்றான். (112)

அம்மைதிருவாய்மொழி-

தேர்ந்தவுளங் களிகூர்ந்தே சிவகா மித்தாய்
சிவகுருவே நீதிருவாய் மலர்ந் தளித்த
கூர்ந்தசிவா ரூடமிதே யுலகி டேறக்
கொடுககப்பட் டுள்ளதிதி லுயிர்க்கொல் லாதார்
ஆர்ந்துளநங் குமாரரென்றாய் குமார ரான
அவர்கைக்கோர் வேலையியா னருள்வே னென்றாள்
ஓர்ந்தசிவன் மகிழ்ந்தருளிச் செய்வா யென்று
னுத்தமியா னருள்வதுதான் சத்தி வேலே. (113)

சத்திவேல்.

சத்திவடி வோங்காரம் வேல்றீங் காரம்
சாற்றிரண்டு மார்ந்துசத்தி வேல தாச்சு
பத்திகொண்டு பூசித்தே யவனு னை
பண்ணவனிச் சத்திவ்வேல் தனைக்கைக் கொண்டே
யோத்தவசி வசிமாலை சாத்தி விட்டால்
உலகிலுள்ள பகைவருங்கை வசம தாவார்
வித்தகமோ கனயாவென் றெரு பூண் சாத்தி
வீசிலுல கெல்லாமோ கனமாங் காலே. (114)

இதுவுமது.

எல்லாந்தம் பனமாகுந் தம்தம் மென்னு
மெழின்மாலை சாத்திவிட்டால் எழும்பே யாதி
எல்லாமுச் சாடனமா மாறு மாறென்
றியன்மாலை சாத்திவிட்டால் விரோதித் தேவல்
எல்லாமோட் டிடலாகுந் தாக்கு தாக்கென்
றிவர்மாலை சாத்திவிட்டால் மதிக்கப் பட்டோர்
எல்லாரும் முன்வருமோ ரழைப்ப தாகும்
ஏத்துசுவா ஹாவெனுந்தா ரிசைத்திட் டாலே. (115)

இதுவுமது.

தாரணியில் நசிமசியாம் மாலை சாத்தித்
தானெறியிற் பேதனத்தாற் பிரிந்து போவார்
தாரணியில் மசிநசியாம் மாலை சாத்தித்
தாமெறியில் தீதுசெய்தோர் தாமாள் வாரே.
தாரணியி லிதுவுமிரா சதமா விஞ்சை
தகவுடையோர் சிவசிவத்தார் சாத்திப் பூண்பார்
தாரணியி லிதுதானே மூல மாகும்
சகலசௌபாக் கியந்தருமிச் சத்தி வேலே. (116)

இதுவுமது.

சத்திபதிந் துள்ளசித்தர் மலைக ளிற்றான்
சஞ்சரிப்பா ரவர்ஓம்றீம் அங்அங் கென்றே
யெத்தகைய துட்டவிலங் கினையுந் தங்கா
லிடைப்பணிவித் தியங்குகின்றா ரிளைய பிள்ளை
வைத்ததுமிவ் வெலன்றோ விதனை யிந்த
மாநிலத்தில் நல்லறமா மில்ல றத்தில்
உத்தமரா யிருக்குமக்க டமக்குந் தந்தே
னுளத்திருந்த விருப்பிதென்று ளுமைத்தாய் தானே. ()

முடிபுரை.

தாயுளத்தி லிருந்தவிருப் பாக வுள்ள
தண்ணருளே வடிவாமிச் சத்தி வேல்தான்
நாயகனு மியானுமுணர்ந் துள்ளே னென்றான்
நானிலத்தி லுய்யுமவா வுடையோ ரெல்லாம்
நேயமுடன் அம்மையப்ப ருரையே யாய
நிமலசிவா ரூடமிதைப் போற்றி யாண்டு
தூயரெண்ணூ றனிலம்பத் தொன்றுட் கண்டு
துலங்குமிந்நூல் நூற்றுப்பன் னெட்டால் முற்றே.(118)

## சிவாரூட்விஞ்சை மூலிகைவிவரம்.

இணக்கம், மயக்கம், அடக்கம், ஆட்டம், மாறுபாடு, அழைப்பு பிரிப்பு, ஊறுகோள் என்னும் எட்டுச்செயல்களும் அட்டகன்மங்களாம. இவை முறையே உலகம், தெய்வம், தீ, பிணி, பேய் வேண்டப்படுவோர், ஒருமையுள்ள தூர்த்தர், எதிரி என்னும் எட்டுப்பொருள்களின் மாட்டுஞ்செல்லுவனவாம்,

இவற்றை விரிக்கில் எட்டெட்டு அறுபத்து நான்காமெனப் பெரியார் கூறுவர். அவ்வறுபத்துநான்கு விஞ்சைகளுக்கும் விஞ்சை வல்லான் அறிந்துகொள்ளத்தக்க மூலிகைகளாவன;—

### இணக்கம்.

உலகத்திற்கு வெள்ளெருக்கும், தெய்வத்திற்கும் நிலவூமத்தும் தீக்குச் செந்நாயுருவியும், பிணிக்குப் பொற்றலைக்கரிப்பானும், பேய்க்கு வெண்குறியும், வேண்டப்படுவாருக்கு சீதேவி செங்கழுநீரும், தூர்த்தருக்கு விஷ்ணுக்காந்தியும், எதிரிக்குக் கருஞ்செம்பையும், ஆக எட்டுமாம்.

### மயக்கம்.

தெய்வத்திற்கு மருளூமத்தும், தீக்கு நன்னாரியும், பிணிக்குக் கோரைக்கிழங்கும், பேய்க்கு வெள்ளூமத்தும், வேண்டப்படுவாருக்குப் பொன்னூமத்தும், தூர்த்தருக்குக் கஞ்சாவும், எதிரிக்கு ஆலவிழுதும், உலகத்திற்குக் கரும்பும் ஆக எட்டுமாம்.

### அடக்கம்.

தீக்கு நீர்முள்ளியும், பிணிக்குச் சத்திசாரணையும், பேய்க்குப் யரட்டையும், வேண்டப்படுவாருக்குக் கட்டுக்கொடியும்; தூர்த்தருக்குப் பாற்சொற்றியும், எதிரிக்குக் குதிரைவாலியும், உலகத்திற்கு பூச்சக்கரையும், தெய்வத்திற்கு நத்தைச்சூரியும் ஆக எட்டுமாம்.

### ஆட்டம்.

பிணிக்கு நறுங்கரந்தையும், பேய்க்கு நரிமருட்டியும், வேண்டப்படுவோருக்கு அமமுறியும், தூர்த்தருக்கு சுண்டியும், எதிரிக்குமான் செவிக்கள்ளியும், உலகத்திற்கு பெருங்கிலுகிலுப்பையும், தெய்வத்திற்குத்தேள்கொடுக்கியும், தீக்குக்கண்டங்கத்திரியும் ஆகஎட்டுமாம்

### மாறுபாடு.

பூதத்திற்குக்காட்டாமணக்கும்,வேண்டப்படுவோருக்குவெண் காக்கணமும், தூர்த்தருக்குப் பூனைக்காலியும், எதிரிக்குக் கருங்காக்

சணமும், உலகத்திற்கு ஆடுதின்னுப்பாளையும், தெய்வத்திற்குத் திருகுகள்ளியும், தீக்குச் செங்கத்தாரியும், பிணிக்குக் கீழ்க்காய் நெல்லியும் ஆக எட்டுமோம்.

அழைப்பு

வேண்டப்படுவோருக்குச் சுருளியும், தூர்த்தருக்கு துடரியும், எதிரிக்குப் புறவொட்டியும், உலகத்திற்கு உள்ளொட்டியும், தெய்வத்திற்குச் சிறுமுன்னையும், தீக்குச்சிறியாணங்கையும், பிணிக்குக் குப்பை மேனியும், பேய்க்கு அழுகண்ணியும். ஆக எட்டுமோம்.

பிரிப்பு

தூர்த்தருக்கு ஆகாயத்தாமாரையும், எதிரிக்கு நீர்மேல் நெருப்பும், உலகத்திற்குப் பாதிரியும், தெய்வத்திற்கு வட்டத்துத்தியும், தீக்கு மாவிலங்கமும், பிணிக்குச் சங்கும், பேய்க்குச் சீந்திலும் வேண்டப்படுவோருக்கு காட்டுப்பசளையும், ஆக எட்டுமோம்.

ஊறுகோள்

எதிரிக்கு மருதோன்றியும், உலகத்திற்கு கொடிவேலியும்தெய்வத்திற்கு கார்த்திகைக்கிழங்கும், தீக்கு நிம்பகமும்,பிணிக்குக் காஞ்சொறியும், பேய்க்கு நாவியும், வேண்டப்படுவோருக்கு ஓடுவையும், தூர்த்தருக்கு நச்சுமரமும் ஆக எட்டுமோம். இங்ஙனம் விவரங் கண்டுகொள்க.

---

சிவாநுட சித்தன் பக்குவமில்லாத மாணுக்கனுக்கு மூலலிற் கோடுக்தும்.

விஞ்சைகள்

1 சர்ப்பவிஞ்சை

"நங் கிலி கிலி கிலி "என்ற மந்திரத்தை 108 உருச்செபித்துப் பார்க்கின் விஷமிறங்கிவிடும்.

நல்லபாம்பைக் கண்டவிடத்தில் ஓம் கிலி கிலி கிட கிட என்ற மந்திரத்தைச் சொன்னுல் அஃதிடம்பெயராமற் கிடக்கும்.

சீ ஆம் ஆடு ஆடு–என்றமந்திரத்தைச் சொன்னுல் நின்ற இடத்தில் சீறி ஆடும்.

நவ் உடு தவழ் தவழ் என்ற மந்திரத்தைச் சொன்னுல் அஃது ஒதுங்கி நகர்ந்துலாவும்.

ஓம் சிவபூசணேவாவா–என்னுல் இடம்பெயர்ந்து முன்னோக்கி வரும். அச்சமுண்டாயின் ஓம் அரிசயனே போ போ-வென்னுல் நின்ற விடத்திற்குத் திரும்பிப்போய்விடும்.

ஆம் ஓம கடகட-என்ற மந்திரத்தைச் சொன்னால் விரைந்து செல்லும். செல்லத்தாவளமில்லாத நடுவூராயிருப்பின் ஒருகுடத்தைச் சாய்த்துவைத்துக் குடத்துவாயை சுட்டிக்காட்டி ஆம் ஊம் புகு புகு-என்ற மந்திரத்தைச் சொன்னால் அக்குடத்தினுள் நுழைந்துகொள்ளும். உடனே வாயைமூடி எடுத்துக்கொண்டுபோய் தூரத்தே விட்டு வரும்படிசெய்யவும். எந்தக்காரணத்தைக் கொண்டும் சிவபூஷணத்திற் கிம்சையையுண்டாக்குகிறவன் சிவகோபத்திற்கு ஆளாவானென்றறிக. இம்மந்திரங்களுக்கு ஆசிரியன் ஆணையே சத்தியாகவமைந்திருக்கிறபடியால் குருவை மறக்கலாகதென்றுமுணர்க.

## கருடவிஞ்சை

ஓம் அரிவாகனே கெருடாய வாவா—என்றாய் கெருடன்வரும்
ஓகிலிநா வடுஎடு—என்றால் அரவத்தைக் கொல்லாமலெடுக்கும்.
ஆநாவிடுவிடு-என்றால் அரவத்தைமெல்ல பூமியில் விட்டுவிடும்
வாநாமைமை என்றால் கெருடன் மயங்கி நிற்கும்.

ஓம் பட்சிராஜாயா தணதண— என்றால் கெருடன் தெளிந்து பறந்து செல்லும்.

## 3 மிருக விஞ்சை

சீ ஓம் கிடகிட-என்றால் மிருகம் இடப்பெயராமற்கிடக்கும்
சீ ஊ ஆ ஆ—என்றால் மிருகம் சாந்தமாய் நிற்கும்
அங் ஐ கடகட—என்றால் மிருகம் விலகிப்போகும்.
ஆ ஹா வாவா-என்றால் மிருகம் மகிழ்ந்து வரும்.
டும்டும் தணதண—என்றால் மிருகம் வாய்க்கட்டுப்பட்டு நிற்கும்.

மலங்காடுகளிலுள்ள மான் மரை புல்வாய் வேங்கை வரிப்புலி காட்டுப்பன்றி எருது யானை கரடி முதலிய எந்த மிருகங்களையும் இவ்வாறு ஆட்டலாம் இம்மூன்று விஞ்சைகளும் 1008ல் சித்தியாம்.

ஆசிரிய விசுவாசமுள்ளவர்களுக்கு இது கைவரும். இதனால் பக்குவப்பட்டுள்ள மாணுக்கனே சிவாரூட விஞ்சையைப்பெற்றுக் கொள்வதற்கு அருகனுவான். சிவகுருதுணை.

## சிவாரூடம் முற்றிற்று

இது வாடிப்பட்டியைச் சேர்ந்த போடிநாயக்கன்பட்டி வைத்தியம் முத்துவேலுப்பிள்ளை அவர்களிடமிருந்து கிடைத்த ஏட்டுப் பிரதியின்படி அச்சிடலானது.

உ

குமரன் றுணை,

பதஞ்சலிமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# தேவியாரூடம் ரசய

மந்திர சக்கரங்களுடன்

மதுரைத் தாலூகா பிராட்டிபத்துக் கிராமத்திலிருக்கும்
ப. திருமலைமுத்துப்பிள்ளையவர்கள் குமாரர் உபாத்தியாயர்
விஷரோக நிவிர்த்தி மாந்திரீகர்

**கருப்பையாபிள்ளையவர்கள்,**

விருப்பத்தின்படி

மதுரை வித்வான்

**த. குப்புசாமி நாயுடு அவர்களால்**

பரிசோதிக்கப்பெற்று

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

இ. ராம.

**குருசாமிக் கோனார்**

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசி வீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது-

1922.

*Registered Copy Right.*

உ

பரமபதிதுணை.

பதஞ்சலிமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# தேவியாரூடம்ராசய.

காப்பு.

சத்திமா னாகி மூவர் தலைவனாய் நிற்கு மெங்கள்
அத்தனார் பாதம் போற்றி அவனருள் மூத்தபிள்ளை
வித்தகப் பாதம் போற்றி வேலவன் பாதம் போற்றி
உத்தம தேவி யாரூ டததையான் உரைசெய் வேனே. (1)

மூவரில் முதல்வன் தேவி முன்பரு ளார்ந்து சொன்ன
தேவியா ரூட மீது திருவனன் பார்நந் தீசர்
நாவினா லருளக் கேட்டோர் நால்வரந் நால்வ ருள்ளே
யாவிபா லெனக்கொண் டோது மதிரக சியமிந் நூலே. (2)

பங்கயன் சங்க பாணி பாற்கடல் கடைய வேண்டி
பங்குள தேவர்க் கெல்லாம் அமிர்தமூட் டிடுவோன் கூட்டி
மங்கொலி வாரி தாழி மந்திர கிரிமத் தாக்கித்
திங்களாந் தறியிற் பாம்பைச் சேர்த்துமே கடைவோ ரானார். (3)

அமிர்தமே கடையுந் தேவ ரனைவரும் வாலி யோடே
யிமிர்தமிட் டிழுக்குங் காலை யிளைத்தனர் தேவர் சற்றே
திமிர்தணப் பீரென் றோதித் திகழ்தரு வாலி தானே
குமறராத் தலைவால் பற்றிக் கொண்டனன் கடைந்திட் டானால். (4)

வாலிகை யிறுக்கிப் பற்று வாசுகி கண்பி துங்கி
நீலிய விடத்தைக் கக்க நிமிர்ந்தவ னோடிப் போனான்
பாலினார் தேவர் துன்பப் பட்டன ரோல மிட்டார்
சூலிபச் சுரரைக் காக்கத் துணிந்தவன் நஞ்சுண் டானே. (5)

கடியநஞ் சுண்டு நீல கண்டனாய் விளங்கு மெங்க
ளடிகளால் உமாதே விக்கன் றறைந்தவா றெனக்குச் சொன்ன

முடிவிலா நந்தி சன்பொன் முண்டகத் தாளைப் போற்றி
நெடியபாம் புதிப்பை முன்பு நிகழ்த்துவ னுலகத் தோர்க்கே. (6)

ஆதிகத் துருவை பாலிற் காசிப னளித்த நாகர்
ஓதிப வெண்மர் அன்னேன் உயர்த்து விடத்திற் பெற்ற
தீதில்விப் பிரசித் திக்குத் திதிமகள் சிங்கை பாலில்
ஏதிலார் கேதி ராகு இருவரு முதித்திட் டாரே. (7)

பதின்மரி லட்ட நாகம் பயந்தகத் துருவை தானும்
கதிகொடு விந்தை யாஞ்சக் களத்தியோ டுலவுங் காலை
நிதியபாற் கடற்க ரைக்க ணின்றதிந் திரன்றன் கிள்ளை
மதியுய ரிவர்க ளப்பாய் மாவைநோக் கினர்தூ ரத்தே (8)

வெள்ளிய வால தென்றாள் விந்தைகத் துருவை பார்த்தாள்
எள்ளிய கருப்ப தென்றாள் இருவரும் வாதஞ் செய்தே
யுள்ளது சொன்னார்க் காளா வுறுவதாய்ச் சொல்லிக் கொண்டார்
மெள்ளவே கோட கன்றான் வெளுத்ததைக் கறுப்பாக் கிட்டான்.()

அநீதியாய் விந்தை தன்னை யடிமையாய்க் கொண்ட தாயின்
அநீதியால் விந்தை மைந்த னாகிய கெருடன் பொல்லா
அநீதிசெய் கோடனாலே அரவுகட் கிகலோ னானன்
அநீதிசெய் தாலு மாணைக் கடங்கரா நல்ல பாம்பே. (10)

இத்தகை நல்ல பாம்பி னினங்களு மிராகுங் கேதும்
உத்தம சேட னும்பன் னொருவராம் நாகர் இன்ன
வித்தரி னமிச மாக நிலத்துள நல்ல பாம்பு
வித்துக ளைந்து சாதி மேதினி யிடத்துண் டாமே. (11)

படமெடுத் தாடும் நல்ல பாம்புக ளெட்டு வர்க்கம்
விடவிரி யன்பாம் பாறு விதமருள் விரிய னான்கு
புடையனின் வர்க்க மாறு பு....திமண் ணுளிய னாறு
தொடருறு சாரை மூன்று சுருட்டையின் வகைதாம் ந..ன்கே.(12)

வகையிரண் டாகுங் கூனை வலியகொம் பேறு மூக்கன்
வகையிரண் டாகுங் குட்டை வாலசா னாக மூக்கன்
வகையிரண் டாகு மாறு வகையவாம் வழலை வர்க்கம்
வகையிரண் டொடுநான் காகும் வலியிலாத தண்ணீர்ப் பாம்பே. ()

இரண்டினம் பச்சைப் பாம்பும் இருதலை மணிய னென்றும்
திரண்டுள மலைப்பாம் பைந்துஞ் சிறியபூ நாக மொன்றும்
புரண்டிடா தறுபா னுறு வகையவாம் புவியிற் பாம்பு
முரண்டுள விவைதாம நஞ்சு முகங்கொடு கிடக்குங் கரணே. (14)

வணம்பல வாந்தேள் நட்டு வக்காலி செய்யான் பூரான்
குணம்பல வெலிவண் டோந்தி கோற்புழு வரணை பூச்சி
கிணம்பரு குளியங் கிரி நெடும்புலி பன்றி பூனை
கணம்படு நாய்முன் னுய கடிகளால் விஷங்க ளுண்டே. (15)

இன்னபல் விஷங்க ளெல்லா மீசனு ரருளி னுலே
சொன்னமந் திரமருந்து சிகிச்சையுந் தொடர்ந்து செல்லு
நன்னிலத் துள்ளோர் தீர்க்க நந்தீச ரடிப ணிந்து
பண்ணுவே னிந்நூல் மைந்தா பதஞ்சலி முனியாம் நானே. (16)

நீலகண்டமை

கடியநஞ் சோட்டும் நீல கண்டமை கேள்நீ மைந்தா
படியினி லிதுகொண் டாக்கால் படுவிட முடனி றங்கும்
குடியுள நோய்க ளெல்லாங் கூட்டைவிட் டேகு மீதே
பிடிதரம் விடதா ரிக்குப் பேசினேன் வெளிச்சொல் லாதே. (17)

கெந்தகம் இரதந் தாரம் கெவுரிவெண் காரம் நாவி
மந்திர லிங்கங் குக்கில் மனோசிலை துருசு சீனம்
விந்தைசேர் நெரிவி ஷம்பொன் மெழுகொடு நவச்சா ரந்தான்
இந்தநல் மருந்தீ ரேழு மிருகளஞ் சிடையா வாங்கே. (18)

வாளமுங் களஞ்சி ரண்டு வாங்கியெல் லாமுஞ் சுத்தி
கோளறச் செய்து கொண்டு குன்றிவெண் பருப்புதில்லை
மீளவா மிறங்க முஞ்சில் மிகுமகிழ் மூன்றின் வித்தும்
காளவெள் ளுள்ளி மூன்று கடுகொவ்வோர் களஞ்சு கூட்டே. ()

மருந்திரு பத்து நான்கா வருமெலு மிச்சஞ் சாற்றால்
இருந்தவை யெல்லா மாட்டி யெல்லைமுன் னைந்து நாட்கள்
பொருந்திட வைத்தெ டுத்தோர் புதியசெப் பினில் டைத்துத்
திருந்தவோம் நீல கண்டா யநமமந் திரம்நூ றுரூதே. (20)

மூன்றெழுத் தாயி ரந்தாஞ் செபித்திடு முறையே உன்றன்
சான்றதா நீலகண்ட மையது தானும் வந்த

ஞான்றுமச் சிமிழ்தி றந்தால் நாசியில் வேகந் தாக்கி
யூன்றராக் கடிவி டம்போ மெனினதன் உரங்காண் மைந்தா. (21)
பணவிடை யிந்த மையைப் பசியவெற் றிலையின் சாற்றில்
குணமுறக் கொடுநீ யப்பா கொடுவிட முடனே நீங்கும்
உணர்வுறு முனக்குச் சொன்னேம் உளத்திதை மறையா வைத்து
மணமுறச் செய்யும் நீயே வல்விட தாரியப்பா (22)

ஒத்தடம்.

அத்தனா ரருளாற் சொல்வோம் அதிபல விஷங்கட் கெல்லாம்
உத்தம தாளி வேளை ஊருடை மூதவி யாரும்
மத்தமோ டெருக்கு மேனி வருத்துட லொத்தல் செய்வாய்
சித்தாய் விஷத்தை வெல்வார் தீதிலை யுண்மை யிதே. (23)

வேறு.

களச்சி யிலைநற் சிறுதும்பை கருமால் துளசி மாவி லிங்கை
முளைச்சுமுறித்த வேப்பிலையும் முடக்கொற்றானும் பொடுதலையும்
இளைச்சவேழுஞ்சமன்கொணர்ந்தேயிடித்துவெதுப்பிச்சாறுடம்பில்
வனைச்சு வெதும்ப ஒத்தவிட்டால் வலிய விஷந்தீர்ந் தோடிடுமே.
அவுரி யிலையும் பேய்க்குமட்டி அருந்து முருங்கை பேய்ப்பீர்க்கி
கவரு நொச்சி பாகலிலை கதிக்கச் சமனா யரிந்துகொண்டு
யிவருங் குமரி சிறுநீர்விட் டடித்துத் துணிவைத் தொத்தலிடச்
சிவனா ரருளால் விடமிறங்கித் தேக சுகந்தான் வந்திடுமே. (25)

வேறு.

எருக்கொடு புங்கின் வேரும் எட்டியோ டழிஞ்சில் வேரும்
திருக்கிளர் வில்வ வேரும் சிறியபேய்க் குமட்டி வேரும்
தருக்கிள ரிளநீர் வார்த்துச் சட்டியில் வருத்துச் சீராக்
கருக்கிடா தொத்த லிட்டாற் கடுவிடம் தீரும் பாரே. (26)
அவுரிவேர் செங்கத் தாரி ஆவரை சங்க வேரும்
பவுருச வாகை வேரும் பரியகற் றாழை வேரும்
உவரிலாக் காடி கூட்டி வருத்துடல் ஒத்த லிட்டால்
சவுரிய மாய்நஞ் சோடும் சண்முக னறிய மெய்யே. (27)

நசியம் வேறு.

வன்னி யிலையி லொருபிடியும் வயங்கு மிளகு பத்துடனே
சென்னெற் காடி யரைப்படியிற் சீராய்த் தோய்த்து நசியமிடப்

பன்னுமெல்லா விஷங்களும்போம் பண்பாய்க் கோழி மாடாடு
மன்னுமெவைக்குந் துவாலையிட்டால் வலிய விடங்கள் தீர்ந்திடுமே

பூச்சுமருந்து (வேறு)

மத்தனின் பருப்பு மேனி வாய்த்த்முத் திருக்கன் சோதி
கத்தியாற் செதுக்கி வேம்பின் கதித்ததோல் ஒடுவ டக்கி
சித்தியா இடித்துச் சாறு சிக்கெனப் பிழிந்து கொண்டு
வைத்துமேற் பூச்சுப் பூச வலிபபேய் விஷங்கள் போமே. (29)

வேறு.

சிறியா ணங்கை முடக்கொற்றான் திகழும் எட்டி யாவரையும்
பறியாப் பாகல் பேய்ப்புடலும் பதமா யிடித்துச் சரிசமனுய்
நெறியாப் பூச வல்லீரேல் நிமிஷத் தோடும் விஷங்க ளெல்லாம்
குறியாச் சொன்னேன் வயித்தியன்கைக்கொள்ளற் கிதுவோர் நன்மருந்தே

வேறு.

திருவளர் நாக தாளி ஆடுகள் தீண்டாப் பாளை
தருநில வேம்பி னேடு சன்னிநா யகமுங் கூட்டி
வருமருந் திவற்றை யெல்லாம் வரித்துநீ சமனுக் கொண்டு
பெருவுர விடித்துப் பூசிற் பிறழ்விடம் நீங்கும்பாரே. (31)

வீளிகுரட்டை செம்பாளை விளங்கும் வாகை பாகலிலை
நீள விடித்துச் சரிசமனு நிரையாப் பூச வல்லீரேல்
காள விஷங்க ளெலாந்தீரும் காலன் அஞ்சிப் போய்விடுவான்
நாளு முயிர்தா னழியாது நம்ப னணை யுண்மை யிதே. (32)

கீழ்காய் நெல்லி யொடுவடக்கி கிளருந் துளசி முருக்கிலையும்
வாகா யிடித்துச் சரிசமனு வுடம்பிற் பூச வல்லீரேல்
சாகா துயிரும் விஷங்களெல்லாந் தருகா தோடும் சுகமுண்டாம்
ஆகா சிறிதென் றெண்ணுதீ ரறிஞர்க் குரைத்தேன் கண்டீரே. ()

பேச்சார் பேயின் சுரைகுமிட்டி பேய்ப்பீர்க் கழிஞ்சி னிலையிவற்றை
பாச்சார் சிறுநீர் தனிலிடித்துப் பதமாப் பிழிந்து சரிசமனுக்
காச்சா துடம்பு முழுதுமனல் கால வழுத்தித் துவாலையிட
போச்சே விஷமுஞ் சூனியமும் போகு மெய்தான் வலுத்திடுமே ()

வேறு.

வில்வவேர் முள்ளி வேரும் வீச்சமார் வசம்போ டுள்ளி
கல்லமீ தரைத்துக் காடி வார்த்துமே கடிவாய்ப் பூச

வல்விஷந் தீரும் பேய்போம் வருகிலான் காலன் றானும்
நல்வினை யாளர்க் கிந்த நன்மருந் தருமை தோன்றும் (35)

குழைச்ச மருந்து மந்திரமும் குயின்றும் மீறித் தலைக்கொண்டால்
கழற்சி வேரின் படடை தனைக் கதித்தே நிழலிற் றானுலர்த்தி
இழைச்ச தூளில் வெருகடிதான் இயல்பா வெந்நீர் விட்டருந்த
பிழைச்சு வாழ்வார் இம்மருந்தைப் பேணிச்செய்வார் பெரியோரே

வாழிய நீல கண்டன் மந்திரஞ் சொலிப்பூ சித்தே
ஏழிலைப் பாலை வேரை யியல்கிரா ணத்தில் வாங்கி
ஆழிய உரலிற் றாள்செய் தடைத்துவை குடுக்கை தன்னில்
ஊழினால் விஷங்கொண் டார்கட் கூட்டுவெந் நீறிற் றீரும் (37)

வஞ்சக மின்றிச் சொன்னேன் வரும்பல விஷநோய்க் கெல்லாம்
நஞ்சறப் பாஞ்சான் வித்தை நாடிநீர் கொடுப்பீ ராகில்
பஞ்சுபோல் விஷமுந் தீப்போல் பகர்ந்தநம் மருந்து மாகும்
தஞ்சமா நம்பிச் செய்தால் சத்தியம் பலித மாமே. (38)

அரண்டுடன் தொடர்ந்து நாகம் அஞ்சவே கடித்த காலை
மருண்டுடல் மயங்கிச் சேர்ந்தால் மருந்துதான் சொல்லக் கேளு
கரண்டயேப் பீர்க்கின் கூட்டைக் கதித்தொரு பாக்குப் போலும்
திரண்டிட அரைத்து வெந்நீர் சேர்த்திட விஷம்விட் டோடும். (39)

வேளு விடந்தான் தலைக்கொண்டால் விரைந்தோர் கொட்டைப் பாக்களவு
மாளு கத்தின் வேரரைத்து மயங்கா துண்ணக் கொடுப்பீரேல்
நாளு விஷமுந் தீர்ந்தோடும் நவிலிற் சிறிய மருந்திதன்றே
ஆளு விடதா ரிக்கிதுதான் அருமைப் படுத்து மவுடதமே. (40)

சாகா மூலிக் கிழங்குதனைத் தனியாய்ச் சென்று பிடுங்கிவந்து
வாகாக் கட்டித் தூக்கிவைத்து வலிபவிடந்தானு தலைக்கொண்டால்
வேகா தரைத்துப் பாக்களவு விரைநீர் கொடுக்க வல்லீரேல்
பாகாத் தீரும் விஷமில்லை பரம குருவின் மருந்திதுவே. (41)

நத்தும் பலவின் பாலதனில் நல்ல குமட்டி மாதளைவேர்
சுத்தப் படநா ளைந்தூறத் துணிவா வைத்தே யுலர்த்திட்டு
மெத்தவிஷந்தான் தலைச்கொண்டால்மென் றுதின்னக்கொடுப்பீரேல்
எத்தும் விஷந்தான் தீர்ந்திடுமே யிதனை யறிவார் பெரியோரே. ()

மாய விஷந்தான் தீண்டினும் மனது மயங்க வேண்டாங்காண்
பேயின் பீர்க்கின் வேரதனைப் பிடுங்கி யரைத்துப் பாக்களவு
தூயநீரில் தான்குழைத்துச் சுகமா யருந்தக் கொடுப்பீரேல்
தேயும் விஷந்தான் கடிவாயால் சிந்திப் போகுங் குணமாமே (43)

காலில் லாத பாம்பணைமால் கருதும் நீலக் களனருளால்
வேலிப் பருத்தி வேரதனை விரைந்தே காடி தனிலரைத்து
கோலி யுழக்குக் காடிதனில் குழைத்துக் கொடுக்க வல்லீரேல்
நீலி முதலாம் விடங்க ளெல்லாம் நில்லா தோடுங் கண்டீரே. (44)

திங்கில் மதிநாள் வேளைக்குச் சிறப்பாக் காப்புத் தான்கட்டி
வாங்குஞ் செவ்வாய்க்கிழமைதனில் வடக்கே போகும்வேர்பிடுங்கிப்
பாங்கா யதனை யெடுத்து வைத்துப் பதமா யுரைத்து வழித்திய
நீங்கும் விஷங்கள் நோய்களெல்லாம் நிசமீ தாரோக் கியமாமே(45)

கடம்பின் விரைகொட் டைப்பாக்குங் கலந்து பலநாள் தின்றுவர
உடம்பில் விஷநோ யணுகாதே யுற்ற கடிவாய் தனிற்கழலும்
திடம்பெற் றசுர குருப்போலுந் தேகம் நிலைத்தி டேறுதற்கு
மடம்புக் குவக்கும் வானோரின் மருந்தா மிதுகொள் வார்பெரியோர்

வேறு.

வலைநிகர் படத்து நாகம் வல்விஷந் தலைமேற் கொண்டால்
தலைவிரிச் சானைக் கல்லிச் சமூலமு முலர்த்திக் கொண்டு
கலைவடி பொடிய தாக்கிக் கடித்திடும் விஷங்கட் கெல்லாம்
விலையிலா லெந்நீர் தன்னில் வெருகடி கொடுநன் றுமே. (47)

வேறு.

சாகா மூலி பழுந்தபின்பு சமூலங் கொணர்ந்து தானிடித்து
வாகாப் பிடித்து வட்டாக்கி மாய விஷமேற் கொண்டவர்க்குப்
பாகாக் கொட்டைப் பாக்களவு பருகத் தண்ணீர் தனிற்கொடுக்க
ஆகா வுடம்பிற் கலந்தவிஷம் அஞ்சி யோடுங் கண்டீரே. (48)

மாய விஷந்தான் கடித்தாக்கால் மயங்கார் சித்தர் மனந்திடமாய்
காயி னுருவி விரைவேர்கள் ஞாயி றதனிற் சமன்கொணர்ந்தே
ஏய நறுக்கி வைத்திருந்தே யெடுத்துத் தின்னக் கொடுப்பீரேல்
தேயும் விஷந்தான் வெநதுருகித் திரு மிதுதான் நிச்சயமே. (49)

கொட்டம் வசம்பு சுக்கிலுடன் கூட்டி யழுக்க றுவேரும்
மட்டா வொட்டும் புகையூரல் வரித்துச் சமனு யரைத்தெடுத்து

தொட்டே யரைத்துப் பாக்களவு துலங்க நீரிற் கொடுப்பீரேல்
கெட்டே யொழியும் விஷங்களெல்லாம் கேளீ ரின்னு மருந்துகளே
குப்பை மேனி அவுரியின்வேர் குறித்த வசயபு வெங்காயம்
ஒப்புக் கொணர்ந்து கல்வத்திட் டடனே அரைத்துப் பாக்களவு
வெப்பில்வெந்நீர்தனிற்கொடுத்தால்விஷந்தானேட்டம்பிடித்திடுமே
வைப்பில்வெளியாய்ச்சொல்லிவிட்டேன்வடிவேற்பெருமானருளால்

வேறு.

பாவட்டைச் சாறு தன்னில் பாங்குடன் களஞ்சு சூதம்
தாவட்டக் குழிக்கல் லிட்டுத் தானரை யதன்கொம் பாலே
நீவட்டச் சிமிழில் வைத்து நேர்ந்தபல் விஷநோய்க் கெல்லாம்
கோவட்டப் பணம்போல் நீரிற் கொடுவுடன் சுகமாம் பாரே. (52)

வேறு.

ஊமைப் புத்துத் தட்டியதில் உள்ளும் புறமு முறுகரையான்
நாமப் பச்சைப் பாம்பிவற்றை நாடி யிரண்டுஞ் சமன்கொணர்ந்து
நீமை போலாட் டியும்பாக்கு நிகரா வுண்டை செய்துவைத்தே
ஆமக் கஞ்சி தனிற்கொடுத்தா லஞ்சிக் கால விடம்போமே. (53)

வடம்போ லரவந் தான்தீண்டி மயங்கித் தியங்கித் தான்கிடந்தால்
கடம்புப் பட்டை தனையிடித்துக் கடுகச் சாறு தனைப்பிழிந்தே
யுடம்பு வலுக்க வுழக்குப்போல் உள்ளுக் கீய விஷங்கடிவா
யிடம்பாய்ந் திறங்கி யோடிவிடும் இதுதா னுண்மைசொன்னேனே.

குப்பை மேனி மலைதாங்கி குறித்த பேய்ப்பீர்க் கிலைமூன்றும்
ஒப்ப ஒவ்வோர் பிடிகொணர்ந்தே யுரைத்த புங்கின் விரைகூட்டி
செப்பும் பாக லிலைச்சாற்றால் திருந்தச் சாம மளவரைத்து
கைப்பா லுருட்டி வைத்துவெந்நீர் கலந்து கொடுக்க விடம்போமே

வேறு. (அஞ்சனம்)

கெந்தக மிரதம் காயம் கிளர்ந்ததோர் மகிழின் வித்து
மந்திர வசம்புங் கூட்டு வாய்த்தபேய்ப் பீர்க்கஞ் சாற்றில்
தந்தவா டுண்ணுப் பாளைச் சாற்றினு மரைத்துப் பின்னே
சுந்தரி வயிற்று ளிட்டுச் சுற்றிநீ புதைத்து வையே. (56)

பொருத்தமா மெட்டா நாளிற் புதைத்தவம் மருந்தைக் கொண்டு
திருத்தமா யரைத்தே யுண்டை செய்துமே கயிறு செய்தே
கருத்தணை நினைந்து நாகங் கடித்தவர் கண்ணி லிட்டால்
வருத்தமில் லாதே நஞ்சு வலிமைகெட் டோடும் பாரே. (57)

பூவத்திப் பழமீ சாறு புகழும்நேர் வாளம் நூறு
தாவந்தி வேம்பி நெய்யிற் றுனரை கயிறு செய்தே
யாவந்தி யரவந் தீண்டி. யதன்விடங் கொண்டாற் கண்ணிற்
பாவந்தி கயிற்றைப் பிள்ளைப் பாலிலிட் டாற்போம் நஞ்சே. (58)

திப்பிலி மிளகு வாளம் திகழெலு மிச்சஞ் சாற்றிற்
கைப்பட அரைநாள் மூன்று கயிறுசெய் துலர்த்திக் கொள்நீ
இப்படி யரவந் தீண்டில் எடுத்துடன் பிள்ளைப் பாலில்
செப்பமா யுரைத்துக் கண்ணில் தீட்டிடத் தீரும் நஞ்சே. (59)

வேறு.

தாயையைக்கொன்றான்சாறுகழுதைப்பால் ஒவ்வொன்றோர்களஞ்சி
காயை யுடைய பேய்க்குமிட்டிக் கனியின் விரையு மோர்களஞ்சி
ஆயும் மிளகு மகிழவிரை யவையு மொவ்வொன் றோர்களஞ்சி
மேய குன்றி நாற்களஞ்சி மிகுதிப் பிலிதான் களஞ்சரையே. (60)

ஆக லேழும் மேனிச்சா றதனி லரைத்துக் கயிறுசெய்து
நாக விஷந்தான் தலைக்கொண்டால் நாடி யடக்கந் தானறிந்து
பாக முலைப்பா லெலுமிச்சின் பழச்சாற் றினினீ யெழுதுகண்ணில்
சாகமாட்டா ரெழுந்திருப்பார் தரையில் நல்ல மருந்திதுவே. (61)

நீல கண்டன் மூன்றெழுத்தை நினைத்துச்செய்யப் பலிக்குமெலாம்
மாலை வணங்கும் மணாளனையும் மாயோன் தாளை வணங்கியையும்
காலை துணியில் கிழித்துக்கட்டி கலத்தி லெரிக்கத் தயிலம்விழும்
சீலைத் தயிலங் கண்ணிலிடத் தீரும் விடங்கள் நோய்களுமே. (62)

அழிச்சம் பருப்ப தோர்படியும் அவிர்வே ளைப்பால் காற்படியும்
புளிச்ச காடி யூறவைத்துப் பொருந்த மறுநாள் சாகமுடன்
தெளிச்சே யரைத்து வடிதயிலந் தீயோன் முன்வைத்தெடுத்ததனைக்
களிச்சோர் பரணி தனிலடைத்துக் காத்து வைத்துக்கொள்வாயே

வைத்த தயிலங் காற்களஞ்சி வார்த்துக் கெந்தி யிரதமிவை
ஒத்தொவ் வொன்றோர் களஞ்சிசிறுதநொன் றுப்சேர்த்துமருந்தா
மெத்தவிஷந்தான் தலைக்கொண்டு மீறியயர்ந்தால்வெற்றிலையில் (க்கி
வைத்தே யிரண்டு பணவிடைதான் மாந்தக்கொடுநெஞ் சோடிடுமே.

கடப்பம். பருப்ப தோர்படியிற் கடிதாய்த் தயிலந் தனைவடித்தே
யிடப்பாதயிலம் நாழியொன்றங் கிரதங்கொதிப்பித் திறக்கிபதை

கொடுப்பாய் விடந்தான் தலைக்கொண்ட குமரன் தலைக்கோ ரரைக்களஞ்சி
திடப்பாம் பெதுதான் கடித்தாலுந் தீரு மிதுதான் நிச்சயமே. ()

பேயின் பீர்க்கின் விரைநாழி பெருவெற் றிலைபா மிலைநூறுந்
தூய வில்வச் சாறுவிட்டுத் தொடர்ந்தே சாமம் விடாதரைத்து
மேய கலத்தில் தானப்பி வெயிலில் வைத்து வைத்திறக்கப்
பாயுந் தயிலந் தனையெடுத்துப் பரணி தன்னி லடைத்துவையே. ()

அடைத்த தயிலம்நாற்களஞ்சோடடைவாக்கெந்தியொருகளஞ்சும்
படைத்த சூத மொருகளஞ்சும் பதமாய்க் கூட்டி மத்தித்தே
விடைத்தாழ் சிவனுற் பணிகடிதான் மீறி னுலும் உடன்கடிவாய்
துடைத்தாற் போலும் விடந்தீரத் துளிதான் நாவி விடுவாயே.-(67)

பிறந்த படிசெங் காயுருவி பிடுங்கிச் சமூலத் துடன்சுட்டுச்
சிறந்த சாம்பல் மூன்றுபடி தெளித்துக் கலசந் தனிலடக்கிக்
கறந்து வெள்ளாட் டுடனீரைச் கலந்தே யூறித் தெளிவிறுத்தே
யுறைந்த கடுகைத் தள்ளிவிட்டே யூற்றித் தூய கலத்துள்வையே

தள்ளிக் குரிய செருப்படையின் சாற்றில் தெளிநீ ரூறவைத்துத்
தெள்ளி வெயிலிற் கலக்கிவைத்தால் சேர்ந்தே மிதக்கும்விரைச் சத்தை
அள்ளியெறிந்துபோட்டதனில்அறவேவிரையொன்றில்லையென்றால்
கள்ளிப் பால்தான் கறந்தொன்றாக் கலந்து கிளறி வெயிலில்வையே

கிளரம் பழுத்து மஞ்சிநிற்கும் கிளருந் தயிலம் விள்க்கெரியும்
உளர ரவந் தான்தீண்டின் உயிர்தா னிறந்து போவதன்முன்
தளர விடாது குப்பாரியிட்டுத் தயில மத்தித் தழுத்தியிட்டால்
களரி விடந்தான் வெளியேகுங் கடிவாய் வழியே கண்டுகொள்ளே.

அழிஞ்சிற் பருப்போர் படிகொணர்ந்தே யதனையிடித்துப்பொடித்தெழுபால்
வழிஞ்ச வேலிப் பருத்திகொற்றுன்வகையாற்சாறு அரைப்படியில்
இழைஞ்ச வந்தப் பொடியையரைத் தெடுத்தே யந்தச் சாகமுடன்
பொழிஞ்சபசுவின்பால்விட்டுப் பொருந்தநன்றாய்ப் பிசைந்துகொள்ளே. ()

பிசைந்தே மருந்தைக் கலத்தயிப் பேணி வெயிலில் தான்வைத்து
நசைந்தே கிரிக்கிளரிவர நன்று யிரங்குந் தயில மதே
யிசைந்தே யந்தத் தயிலமதை யிறுத்துக் கோதைத் தான்பிழிந்து
பசைந்த தயிலம் மூன்றிலொரு பாகங் கெந்தி தனைச்சேரே. (72)

சோரத் தயிலந் தனைச்சிமிழில் திரமா வடைத்துத் தான்வைத்துக்
கோர அரவந்தீண்டிவிடங் கொண்டா லடக்கந் தனையறிந்து
பார உச்சி யொடுதோளில் பதியக் குடோரி தானடி
காரத் தயிலம் மத்திக்கக் கடிவாய் வழியே விஷம்போமே. (73)

சித்தர் மூலம் மருக்காறை திகழும் வேர்கள் பொடிசெய்து
கொத்துக் குன்றிப் பருப்புமிட்டுக் கோழி யவரைச் சாற்றாலே
ஒத்த சமனுத் தானரைத்தே யுடனே யதனை வழித்தெடுத்து
வைத்தோர் கலத்தி னுள்ளிலப்பி வாகா வெயிலில் தான்வையே. ()

வையே தயிலம் வடியுமதை வாகார் பரணி தனிலடைத்து
நையா தரவந் தான்கடித்தால் நணுகித் திடமாய் நின்றுகொண்டே
ஐயா தலையி லிருதோளி லழுந்தக் குடோரி தானடி
கையால் தயிலந் தனையெடுத்துக் கடிதா யிடுநீ விடம்போமே. (75)

சதுரக் கள்ளி விரையுழக்குந் தகவார் அழிஞ்சில் விரைபடியும்
மதுர மிருக்குஞ் செவ்விளநீர் வார்த்தே யதனி லூறவைத்து
சதுரா வேலிப் பருத்தியிலைச் சாறு காடி சமன் சேர்த்து
மதுரச் சாகம் படியிரண்டு வாங்கிக் காய்ச்சி யழக்காக்கே. (76)

சாக முழக்கும் வித்திரண்டும் சார வரைத்துத் தான்வழித்து
பாகப் படியே கலப்புறத்தில் பக்மா வாழை யிலையணைத்து
வாக மருந்து தனையிலையில் வசமா வப்பி வெயிலில்வைக்க
ஏகத் திறங்குந் தயிலமதை யெடுத்தே பரணி தனிலடையே. (77)

கடித்தவிஷந்தான் தலைக்கொனினும்கலங்க வேண்டாஞ் சித்தர்களே
முடித்த இதனை நீலகண்டன் மூன்றட் சரமு முளத்திலெண்ணிப்
பிடித்துத் தலையு மிருதோளும் பிலக்கக் குடோரி யாடியதில்
விடத்தான் விடங்க ளோடிடுமே விடதா ரிக்கும் புகழ்வருமே.(78)

எட்டி அளிசம் விரையுடனே ஏற்ற கழுதை நரியெலும்பும்
மட்டித் தவளை தன்னெலும்பும் வாகா அஞ்சுஞ் சமனிடித்து
விட்டு வெதுப்பித் தயிலமதை விளைந்த வசம்பு தனிலிழைத்துச்
சொட்டு நாசி தனிற்பிழியச் சொல்லா தோடும் விடந்தானே. (79)

எட்டி இலுப்பை பிராக்கொன்றை யிறங்கு மழிஞ்சில் பாவட்டை
வெட்டி யிந்த வேர்களெல்லாம் வேறு வேறுச் சமன்கொணர்ந்து

தட்டி விரசலி அளிச்சட்டி சாறும் விரவி நாலிலொன்று
தெட்டி யிலுப்பைப் பிண்ணுக்குஞ் சேர்த்தேயொருநாளுறவையே

சேரான் விரையும் வேர்களேயும் சிதைத்து வெள்ளாட் டின்பாலும்
பாரான் சலமு மூன்றுபடி பதமாப் பிசரி யுலரவைத்து
வாரான் பாலை தனில்நிரப்பி வடித்துத் தயிலந் தனையிறக்கி
கூராவிஷந்தான் தலைக்கொண்டால்கொடுகாசிடைவல்விஷம்போமே.

பங்கம் பாலை புங்கின்வேர் பருஞ்சா ரணையும் பழுபாகல்
சிங்கப் பெருமாள் வீழியுடன் சிவந்த சுக்குப் பெருங்காயம்
அங்கத் திருங்கு வருநீரா லரைத்து நாசி யிடுவீரேல்
சங்க விரியன் கடித்தோர்தாஞ் சாகார் விஷந்தான் தீர்ந்திடுமே. ()

சிறுபுள் ளடியுங் கோவையிலை சிறுநீர் தன்னிற் சமனிடித்தே
யிறுகப் பிழிந்து நசியமுமிட் டிதமா மேலுந் துவரலையிட
மறுகி விஷம்போம் வீக்கந்தான் வற்றுங் குதித்துக் கடிவாயில்
குறுகி விரியன் முதற்கடியின் கொடிய விடங்க ளெலாம்போமே.()

காவாய் வாழுஞ் செவ்விரியன் கடித்து விடங்கொண் டுடல்வீங்கின்
பரவும் விடந்தான் தீராது பரன்மூன் றெழுத்தாற் பார்வைசெய்து
திரஞ யவணீ யாயிருந்து திருவார் நீல கண்டமையை
உரனுக்கொடுநீயுடன்விடம்போ முண்மைபெரியோர்முறையிதுவே.

கரிய மிளகு பெருங்காயம் கடிய இரதம் இந்துப்பு
அரிய சலத்தை வார்த்தரைத்தே யழகாய் மூக்கிற் பிழிவீரேல்
பெரிய விரியன் கருவழலை பிறங்கு மூக்கன் சிறுபாம்பு
தெரியா விஷங்க ளானவெல்லாஞ் சிவனு ரறியாத் தீர்ந்திடுமே.(85)

வேறு.

தக்காளி நாயுருவி வேர்கள் தாமும்
சமனுக விடிததரைத்து வழித்துக் கொண்டு
மிக்கான் விரியன்றான் கடித்து வீங்கி
விஷமேறி மனங்கலங்கி மெய்ம றந்தால்
திக்காழி வளைந்தாற்போல் மருந்தைத் தானும்
திறமாக நீர்பூச வல்லீ ராகில்
தொக்காரும் விஷந்தீருஞ் சுகமுண் டாகும்
சோராம லிம்மருந்தைச் சுருக்காச் செய்யே. (86)

உள்ளுக்கு மருந்து (வேறு)

குட்டிப் பெரிய தக்காளி கூட்டி யிரண்டுங் காடிதனில்
கட்டாய்த் துவைத்துத் துவாலையிட்டுக் கருத்தா யுழக்குத் தான்கொடுநீ
பட்டேவிரியன் விஷங்களெல்லாம்பறந்தே யோட்டம்பிடித்திடுமே
செட்டாய்ச் சொன்னேம் விஷதாரி தெரிந்து செய்யு மருந்திதுவே

துவாலையிடு மருந்து.

சின்னச் சின்னி சமூலமுடன் திறவெங் காயம் நறுவசம்பு
வன்ன மாக விவைநாலும் வாகாச் சிறுநீர் தனிலரைத்து
பின்ன விரிய னெதுங்கடித்துப் பெருக வீங்கி விடங்கொண்டால்
சொன்ன சிறுநீர் தனிற்கலந்து தட்டிப் பிழிந்து துவாலையிடே. ()

உள்ளுக்கு மருந்து (வேறு)

செழுமலர்க் கொன்றைப் பட்டை திகழ்சமன் தேற்றும் பட்டை
வழுவற வரைத்து நன்றாய் வழித்துநீ வைத்துக் கொண்டு
பழுவுறு விரியன் தீண்டிப் பரந்துமே விஷமேற் கொண்டால்
கழுவுறக் கொடுவெந் நீரில் கடியினும் பூச நன்றே. (89)

பொடுதலை யிடித்துச் சாகம் பொடித்தொரு படிபி ழிந்து
விடுகடு விரியன் தீண்டில் விரைந்துநீ கொடுக்கத் தீரும்
வடுவறு குமரி தன்னை மறுத்துநீ யிடித்துப் பூசு
கடுகியே விஷம்விட் டோடும் கருத்திலே வைத்துப் போற்றே. (90)

துவாலை மருந்து (வேறு)

சின்னச் சின்னி யெருக்கிலையும் திருந்தச் சமனுத் தானரைத்து
பின்ன விரியன் வகையாறும் பிறங்கக் கடித்து விஷங்கொண்டால்
முன்னைப் படியே யிம்மருந்தை முற்றுஞ் சிறுநீர் தனிற்குழைத்து
மன்னக் கடிவா யுடம்புதனில் வாகாப் பிடித்து முறுக்கிவிடே. (91)

உள்ளுக்கு மருந்து.

விரியன் கடித்தே யுடல்கனத்தால்விளைவைக்கயிற்றால்தவணையிட்டு
அரிய நாயகன் தூளதனை அருள்வாய் மூன்று நேரமுநீ
தரியா விக்கல் உடல்கனத்தால் தளரு மூர்ச்சை யிவைதீரும்
தெரியார்க்கெல்லாந்தான்தெரிக்கத்தெளிவாயிதனைச்சொன்னேமே

பாலைக் கரந்தே யரிசியுடன் பதமா வெந்தே அவித்திறக்கி
மாலைத் தீர்க்கும் நறுந்தாளி வசமா அரைத்துப் பாக்கதுபோல்
காலைச் சிறுகச் சோற்றுடனே கலந்து கொடுக்க வல்லீரேல்
வேலை விடந்தான் எழுந்ததுபோல்விஷமும்வெளிப்பட்டோடிடுமே

கண்டாற் சுறுக்கி காணிசுடர்க்கண்மூன்றுடையோன்றிருவருளால்
வண்டாளையின்வே ரிவைமூன்றும்வாகா அரைத்தேமாங்காய்போல்
தண்டா துட்குச் சிறுநீரில் தானீர் கலக்கிக் கொடுப்பீரேல்
கொண்டால் விரியன் கடியெதுவுங்குடிபோய்ச்சுகந்தானுண்டாமே.
ஆப்பை யிறுக்கி யடித்ததுபோ லழுந்த விரியன் தான்கடித்தால்
வேப்பின் எண்ணெய் ஆழாக்கு விரைந்தே கொடுக்க வல்லீரேல்
தாப்ப தில்லை யவ்விடந்தான் தரியா தோட்டம் பிடித்திடுமே
காப்பச் சொன்னேன் விஷதாரி கடுகிச் செய்ய நன்றாமே. (95)

வேறு.

ஆழியி லுறங்கு மாயன் அணையுடன் சிவனார் பூணும்
ஊழினால் விரியனாறும் உருத்தெது கடித்திட் டாலும்
விழியின் பழம ரைத்து வெண்ணெய்யிற் குழப்பி யீயப்
பாழிய விடங்க ளெல்லாம் பறந்திடுந் திண்ணந் தானே. (96)
பெருக்கும் விரியன் தலைபோக்கிப்பேணிப்பொசுக்கியெடுத்ததனைக்
கருக்கிக் கோழி யவரையுடன் காட்டுக் கரணை கொடிவேலை
நருக்கி வேருந் நாலும் ஒவ்வொன்று திருபலமாத்
திருக்கி யிடித்து மருந்ததனிற் சீரா யுப்புங் கலந்துடனே. (97)
உடனே மருந்தைப் பானையிலே உள்ளிற் பரத்தி யதிற்பாதி
திடமா மண்ணிற் பதிவைத்துத் திருந்த மூடிச் சீலைசெய்து
புடமாப் போடு மண்மூடிப் புதைத்து தொருமண் டலங்கழித்துக்
கடமாவெடுத்துப்பொருபிடிதான் கரைத்துக்கொடுவெல்விடம்போமே. (98)

வேறு

பாரணை யென்று திரியாதே பருத்திடு விரியன் கடித்தால்
ஆரணங் கொடுவெற் றிலையுடனே அமுந்திடக் கசக்கிக் கொடுப்பீ
சாரணை வேகம் படுமுடலில் தங்குவ தில்லை விடந்திரும் (ரேல்
வாரண விக்கம் வாராது மருந்தது செய்யக் குணமாமே. (99)

வேறு

சாரணை தன்னிற் பெருவேரைத் தனியே தோண்டித் தழைநருக்கி
காரண மறிந்து வேர்குடைந்து களஞ்சி யிரதஞ் உள்ளிட்டு
சீரணசாணம்பொதிந்து மண்ணில் திடமாய்ப் புதைத்து முப்பதுநாள்
பூரணமாய்ப்பின்னதையெடுத்துப்பொடித்துக்கோடுவெல்விடம்போமே. (100)

வேறு

ஆவின் பாலில் கொடிவேலி அரைத்துக் கொடுக்க விஷமீளும்
தாவுங் கஞ்சாங் கோரையப்பால் தன்னி லரைத்துக் கொடுமீளும்

பாவும் புளியின் தளிர்க்கொழுந்தைப் பாலி ரைத்துக்கொடுமீளும்
மாவல் விரியன் அறுவகைக்கும் வருணற் கோது மருந்திவையே. ()

விரியன் கடித்த தென்றறிந்தால் மீளக் கல்லில் விஷதாரி
அரிய தவசி முருங்கைதனை அழுந்த அரைத்துக் கடிவயில்
தெரியப் பிழியின் விஷந்தீரும் தீரும் வீக்கம் பூசிடவே
புரியத் தூளை யுட்கொளவே பொல்லா விஷமும் போயிடுமே. ()

வேறு.

ஆடது தீண்டாப் பாளை அடிதலை சமூலங் கொண்டு
காடதிற் சதுரக் கள்ளிப் பாலுடன் கலந்தே யூறி
யோடவு மூன்று நாட்கள் உலர்ந்ததைத் தூளாச் செய்து
கூடின தூளை யெல்லாங் குறிப்புடன் கூட்டி வையே. (103)

வேறு.

கூட்டிய மருந்தைமோர்படியிற் கொடுவேப்பெண்ணெய் யுழக்குமிடு
காட்டிய கனலில் தான்வைத்துக் காய்ச்சிப் பதத்தில் தானிறக்கு
நாட்டினில் பலவாம் விஷகடிக்கும் நயந்தே தலையிற் றூன்தடவ
வாட்டிய விஷங்கள் கடிவாயின் வழியே குதிக்குஞ் சுகமாமே. ()

அரிய விரியன் தாமாறும் அழுந்தச் கடித்துப் புண்ணுறல்
விரியன் விரட்டி நன்னாரி விரைந்து சமூலஞ் சமன்கொணர்ந்தே
திரியக் காடி தனிலிடித்துத் திடமாச் சாகந் தான்பிழிந்து
உரிய வந்தச் சாகமுண்டு மடலிற் றுவாலை யிடுநன்றே. (105)

வேறு.

புற்றின்மேய் வளர்ந்த குன்றி பொறிந்துஞா யிற்று நாளில்
வெற்றெனப் பெயருமிட்டு வேரது பிடுங்கி வந்து
செற்றிடார் விரியன் தீண்டில் சிறுநீரி லரைத்துட் கொண்டு
பற்றிமே லிட்டா லப்பா பறக்குமே விஷங்க ளெல்லாம் (106)

வெள்ளை நீலக் கடம்புவிரை விரியன் விஷம்போம் நீரிலுண்டால்
வெள்ளை நீலக் கடம்பின்தோல் வெந்நீர் கொண்டால் வீக்கம்போம்
வெள்ளை நீலக் கடம்பின்வேர் வெந்நீர் கொடுக்க எலிகடிபோம்
வெள்ளை நீலக் கடம்பின்முன் விஷப்பாம் படுக்கா தாடாதே (107)

வசப்புவல் லாரை சப்பை வளருவெங் காயங் கூட்டி
விசம்பெறு வீக்கம் வற்ற விரைந்துநீ யரைத்துப் பூசு
கசம்பெறு முரலிற் றட்டி கலந்ததை சிறுநீர் தூணி
யிசம்பிய மறுநாள் மட்டும் இதமுடன் ஒழுக்கு வாயே. (108)

ஒழுக்கிய சிறுநீ ரெல்லாம் ஒன்றறப் புலர்ந்த போது
வழுக்கிலா உதியந் தன்னில் வாய்ந்ததோ ரிலையைக் கிள்ளி
யிழுக்கிலாக் கனலிற் சட்டி யிட்டுமே காய்ச்சி வாட்டி
முழுக்கிலா திருந்து கட்ட முழுதுமவ் வீக்கம்போமே. (109)

வேறு.

அச்சைக் கெடுக்கச் செவ்விரியன் அழுந்தக்கடித்த தென்றறிந்தால்
பச்சை யரிசி யரைத்ததனைப் பதமாக் கடிவாய் தனிற்பூசி
கொச்சைப் படாமல் விரியனுக்குக் குறித்த மருந்து செய்வீரேல்
இச்சைப் படிதீர்ந் திடுமருந்தை யிணங்கச் சொல்வோங் கேட்பீரே.

காடிச் சோறு தாளிப்பூ கதித்த கோவைத் தளிருடனே
தேடி யரைத்துச் சரிசமனுத் திருந்தப் பசுவி னெய்யுடனே
கூடிக் குளப்பிக் கடிவாயிற் குளிரக் கட்ட வல்லீரேல்
வாடி வீக்கம் வற்றிவிடும் மாளுங் கடிவாய் வழிவிஷமே. (111)

விரியன்கடித்துவிரிந்த புண்ணில்வெதுப்பிக் கோழிச்சதைதிணமும்
நெரிய அரைத்து வழித்தப்பி நேரே கட்டு நாள்மூன்று
திரிய அவிழ்த்திட் டிலைக்கள்ளி திருந்த இடித்து வதக்கியணை
புரியக் கட்டு நாள்மூன்று போனு லவிழ்த்து மெறிந்துவிடே. (112)

எறிந்த பின்பு கொழுஞ்சியிலை யிறங்குங் கள்ளிப் பால்கூட்டி
அறிந்தே யரைத்துப் புண்ணதனில் அழுந்தக் கட்டு நாள்தோறும்
பறிந்தே விஷம்போம் புண் ஆறும் பதமாத் தீர்க்க வல்லீரே
சிறந்த மருந்து மிதுவாகும் திறத்தைப் பார்த்தோர் பெரியோரே. ()

மேதிச் சாணி வாகையிலை வெள்ளுப் பிலியோ டழிபிரண்டை
மோதி வளரும் கொழுஞ்சியிலை முடக்கொற் றான்முட்டியினிலையும்
வேதித் திதமா வறுத்தொத்தல் மெதுவா யிட்டுக் கட்டநன்றாம்
சாதி விரியன கடித்தவிடந் தணக்கும் வீக்கம் புலர்ந்திடுமே. (114)

கொற்றுங் கொழுஞ்சி முடக்கொற்றான் கூத்தன் குதம்பை கொடிச்
சிற்று மணக்கி னிலையுப்பு சேர்த்து வைத்து வறுத்தொத்தி [சின்னி
சற்றே யவுரிச் சாறதனிற் சாரத் தோய்த்துக் கட்டுவீரேல்
செற்ற விரியன் கடிவிஷந்தான சிரங்கொண் டாலு மிறங்கிடுமே. ()

கொட்டாங் கரந்தை நீலிபுங்கு கோழி யவரை முடக்கொற்றான்
எட்டா துயர்ந்த வகத்தியிலை யிலுப்பை நொச்சி யிலையெட்டும்

துட்ட விரியன் கடிதிரத் துவைத்து வறுத்தே யொத்தலிட
விட்டே கடிவாய் வழியிறங்கும் விடந்தான் வீக்கம் வற்றிடுமே. ()
தும்பை துளசி முருங்கையிலை துளிர்க்கும்வெள்ளைக் காக்கணம்வேர்
கொம்பில் வனத்து மரையைந்தும் கூட்டி முருங்கை யிலைச்சாற்றில்
வம்பார் தனந்தான் குலுங்கவரைத்து வலியத் ததும்புஞ் சாற்றுடே
செம்பா வறுத்து வறுத்தொத்தல் செய்ய விரியன் விஷம்போமே.()
வேலிப் பருத்தி வேர்தனக்கும் விரியன் விஷல்போ மவ்வேர்க்குச்
சரலப் புடையன் விஷமும்போம் தட்டி யரைத்துக் கொடுபபீரால்
ஏலுங் காலுக் கவ்விலைச்சா றெடுத்துத் துவாலை யிடநன்றும்
கோல விரியன் புடையன்விடங் குடிவிட் டோடும் மருந்திதற்கே.()
வருந்தக் கனக்கும் புடையனொடு வலிய விரியன் கடிதனக்கும்
மருந்தா மகத்தித் தழையிடித்து வழியப் பிழிந்தோ ருழக்கருந்தத்
திருந்தப் போகும் விஷமெல்லாம் தேகத் திதனைத் துவாலையிடப்
பொருந்தும் புண்கள்வீக்கமெலாம் போமேசெய்துகண்டுகொள்ளே

கலிக்கம். (வேறு)

காரண முணர்ந்த விடதாரி கலிக்கங் கொள்நீ சொல்லுகிறேன்
சாரணை வேரைப் பாலதனிற் றட்டி யரைத்துத் தானுலர்த்தி
வாரணம் போன்ற பெருவிரியன் வளைந்து கடித்து மயங்கினவன்
தாரணை கண்டே யெலுமிச்சஞ் சாற்றி லுரைத்துக் கண்ணிலிடே.()

வேறு

பூவந் திப்பழங் கொடுவேலி புகழு மெட்டியின விரையுடனே
நீவந் திப்பா லையின் வேரும் திரம்பச் சிசை ததைக்கூட்டி
தாவந்தெழு லுறுசம்பழத்தின சாற்றிலரைத்து [illegible] செய்து
காவந் தொடுமேப் பழச்சாற்றில் கண்ணி லுரைத்திட விடம்போமே.

வேறு

நேரு வாளம் முப்பதுடன் நெடிதா வருமா தளைபொன்றுஞ்
சாரு மெலுமிச் சம்பழத்தின் சாற்றி லரைத்தே உண்டைசெய்து
பாரு விரியன் தான்தீண்டிப் பரந்த விஷமுந் தலைக்கொண்டால்
ஓரு மெலுமிச் சமபழச்சாற் றுரைத்துக் கண்ணிற் போடநன்றே ()

வேறு

எருமைச்சாணம் வீளிகொற்றான் இலுப்பைவாகைசெருப்படையும்
துருவிக்கொணர்ந்து பிரண்டைசின் னிக்குவிசரந்தைதழுப்பிரண்டை
தருவித் திவைகா டியிற்றுவைத்துச் சாறு வாங்கியொன்றுழக்கால
வருவான் க்ாய்ச்சித் தாரைவிட வலிய விரியன் விஷம்போமே.(123)

காணுக் கடிக்கு மேனிமத்தங் கலந்தே யரைத்துப் பூசவற்றும்
சாணு மூக்கன் தான்தீண்டித் தலைக்கொண் டாலவ் விஷந்தீர
ஏணுர் பிரண்டை வேரதனை யெனுமிச் சங்கா யளவரைத்து
நாணு வெந்நீர் தனிற்கொடுநீ நன்மை யுண்டாங் கண்டுகொள்ளே ()

கட்டைப்புடையன் தான்கடித்துக்கனத்துவிஷமுந்தலைக்கொண்டா
பட்டையெருக்கங்கொம்பொடித்துப்பருத்ததழையிலோர்தளையை
திட்டை யடுப்பில் தான்சொருகித் தீயைக்கொழுத்திப்பண்புடனே
சுட்ட புகையை நாசிதனிற் சுருக்காப் பிடிக்க விஷம்போமே. (125)

வேறு

புடையுறு நெடுங்க முத்துப் புடையன்றான் கடித்த தென்றால்
படமடக் கியின்கி ழங்கைப் பசுப்பாலிற் கொடுக்கத் தீரும்
இடருறப் புடையன் தீண்டில் இலுப்பையின் பழைய கோதை
அடலுறு சுண்ணும் போடே அரைத்துடன் பூசு வற்றும். (126)

வேறு

நீலி யிலையைத் தான்பறித்து நெடிய கள்ளிப் பாலுடனே
சால வரைத்து வீக்கமதிற் றடவப் புடையன் கடிதீரும்
கோலக் கள்ளிப் பூவரைத்துக் கொடுக்கப் புடையன் கடிதீரும்
வேலி கிடக்குஞ் சிறுபூளை வேரை யரைத்துப் பூசநன்றே (127)

நாவி குரங்கு பூனைபன்றி நரியு மூழுவை முதலையுடன்
ஏவும் வேங்கை யிவைமெய்யில்இதமாக் கடித்து விடங்கொண்டால்
ஆவின் பாலில் அவுரியின் வேர் அரைத்தே நாலு நாட் கொடுக்கத்
தாவின் கனலில்மெழுகதுபோற் றளர்ந்து கழன்று புலர்ந்திடுமே()

வலிய கடிவாய் தனிற்கள்ளி வாட்டிப் பிழிய விடம்போகும்
சலவுங் கருடக் கொடியரைத்தே தவாலை யிடவல் விடந்தீரும்
குலவும் விழி மூலமதின் குடிநீர் குடிக்க விஷந்தீரும்
பலவும் வேண்டா மிம்மருந்தைப் பதமாச் செய்ய வல்லீரே. (129)

சேரக் கடித்து மேனியெல்லாம் தேமல் போலும் விஷங்கொண்டால்
பார எருக்கை யொடித்தன்பால் பனைவெல் லத்திற் றுளியேழு
நேரக் குடித்தால் விஷத்தடிப்பு நில்லா தோட்டம் பிடித்திடுமே
கோர எருக்கின் கொழுந்துபத்துட் கொளத்தேன் விஷந்தான் குடிபோமே.

சேரான் கடித்தால் நாவியதைச் சிறிது சிறிதாக் கண்டித்து
கோரய்த் தின்ன விஷந்தீரும் நிகழ்த்துஞ் சுண்ணும் புடன்பார்க்கும்

சீரார் மேனிச் சாற்றரைத்துத் திகழப் பூசு நாள்மூன்று
சாரா தோடும் விஷங்களெல்லாஞ் சகத்தோ ரறியச் சொன்னோமே.

உற்றே பெருஞ்செய் யான்கடித்தால் உடனே விஷந்தீர்த் திடச்சொல்வேன்
கொற்றுன் கொழுஞ்சி கொடிவேலி லேலிப்பருத்தி குடைப்பருத்தி
வற்றுத் தளிர்வெற் றிலையிவற்றை வரித்துச் சமனுச் சாறுகொண்டு
சற்று தயித்துத் தாரைவிடத் தங்கா தோடுங் கொடுவிஷமே. (132)

வேறு

பெருஞ்செய்யான் கடித்து வீங்கிற் பேணிவெற் றிலையும்பாக்கும்
அருந்தியத் தம்ப லத்தின் சாற்றைமே லழுத்தத் தீரும்
குருந்தியா னனமவீங் கித்தூள் குளிர்ந்ததூ துவளை வேர்த்தோல்
திருந்துகா வற்றே லெல்லாஞ் சேர்த்தாட்டிப் பூசப் போமே.(133)

வேறு

சிரமதுமை யாய்மேனி சிவந்து நீண்ட
சோரானின் கடிதீர நீலி வேரும்
வரமயிலி னடிக்குருந்தும் கஞ்சா வேரும்
வராலியுட னரைத்துப்பூச் சிடநோய் வாடும்
புரமெரிந்து விஷமிகிற்சத் திலையி னோடு
புங்குசிறி யாணங்கை நன்ன ரித்தூர்
அரவுவிஷ மெனுந்திர்க்கு மரைத்துட் கொண்டே
அன்னப்பா லமுதுண்ண வமுத மாமே. (134)

வேறு

சுரும்புகள் கடித்தால் வீங்கிச் சுடற்றஃ தாற்ற வேண்டின்
பரும்பொன்னின் கொன்றை வேர்தான் பாலினுட் கொள்ளத்தீரும்
கரும்புநேர் காடி நீள்பா கலினிலை கூட்டிக் காய்ச்சி
விரும்பியே வேதுச் செய்ய விடங்கடி வாய்வாய்ப் போமே. (135)

கட்டியாய்ப் பின்பு நீதான் கத்திரிக் காயைச் சுட்டுக்
கொட்டிய வாயில் வைக்கக் கொடுவிடம் போகும் பாரே
எட்டிவேர் தனைய ரைத்தே யெடுநெல்லிக் காயைப்போல
விட்டுவெந் நீரி லீய வுடந்திரு மெய்கண் டாயே. (136)

வேறு

கத்திரி மணியன் செம்முக்கன் கடியா லெங்கும் பலாவிரைபோல்
மெத்தெனத் திரண்டால் எருக்கம்பால் விட்டேழ் துளியைப் பனைவெல்லத்

தொத்திட வைத்துப் பொதிந்துண்ண உடனே விடந்தானோடிடுமே
நித்தமும் நாளெட் டுண்டுவிடு நிசமா மிதுகை கண்டதுவே. (137)

வேறு

செத்திட வருத்துங் காடன் செங்கணான் முன்பன் னெட்டாம்
கத்திரி யெலிக ளேதுங் கடித்துமே விஷமேற் கொண்டால்
புத்தியா மேன்ம ருந்தைப் பொருக்கெனத் துவாலை யிட்டு
மெத்தென நசிய மூற்ற விஷமறும் மருந்து சொல்வாம். (138)

வேறு

நக்கன் மைந்த னெலிகடிதான் நானு விதமாம் மீட்கவென்றால்
வக்க ணத்தி வேரரைத்து மாந்தக் கொடுத்து மேற்பூசி
இக்கைமருந்தை யுட்கொண்டோர்க் கெலியின்விஷமேயில்லையப்பா
மிக்க நந்தி யருளாலே வெளியாச் சொன்னேன் மருந்துகளே (139)

மந்திரம்.

ஓம்நீல கண்டாய நமாவெனுமெட் டெழுத்தை
ஒங்குநந்தி யாயகுரு திருவடியைப் போற்றி
நாம்நாளுந் தியானித்துத திருவருளாற் காட்ட
நமபணேநேர் கண்டவனால் நயந்துவலி யுறுத்த
தாம்நாக விடந்தீர்க்கு மூன்றெழுத்துந் தேர்ந்தோம்
அதுதானே புரோம்-நிரீம்-டம் ஆகுமதை மைந்தா
வேம்நாகக் கடிகொண்டோன் தலைமார்பு கொப்பூழ்
மிசையெழுதி உருநூற்றெட்டோதவிடம்போமே. (140)

மந்திரத்தின் பொருள்.

நிகழ்புரோமுக் குடல்காக்கப் பட்டதெனப் பொருளாம்
நீரீமதற்கு விடம்நீக்கப் பட்டதெனப் பொருளாம்
திகழ்டம்மு வாழ்வாக்கப் பட்டதெனப் பொருளாம்
சிறந்தஇம்மூன்றெழுத் தினுண்மைதெரிந்தனனெம்பெ
தகவுறுமென் மாணவவுன் றனக்குரைத்தேன் நானும் [ருமான்
சகத்துயிர்கட் கிறங்கியிந்த யந்திரங்கள் பேணி
இகழ்தருபொய் கொலைகளவு கட்காயம் ஒழித்தே
இறைவனருட் காளாகி யின்பொடுவாழ் வாயே. (141)

## சிதம்பரச் சக்கரம்.

இட்டசித்தி யட்டகர்மச் சிதம்பரச்சக் கரத்தை
இசைக்கின்றேன் ஐந்தெழுத்தை நடுமாரி லாக
இட்டமுடன் நமசிவய வெனமேலே வீதி
எழுதொன்பான் பதினொன்று நான்குபதி னைந்தோ
டிட்டிடுவாய் பனிரண்டும் அடுத்திரண்டாம் வீதி
எழுதிடுவாய் சிவயநம இதினான்கு முவைந்
திட்டிடுபன் னுரண்டொன்வான் பதினொன்று மடைவே
இனிமூன்றாம் வீதிதனி லெழுதுவதைக் கேளே. (142)

நடுவீதி யநமசிவ வெழுதுபனி ரண்டு
நயந்தொன்பான் பதினொன்று நான்குபதி னைந்தே
யிடுநாலாம் வீதிமசி வயநவெனும் பதினொன்
றீரிரண்டு பதினைந்து பன்னிரண்டொன் பானே
படுகடையில் வயநமசி யெழுதுபதி னைந்து
பன்னிரண்டொன் பான்பதி னொன்றீரண்டுமாக
அடைவண்டு வீதியுள்ள யநமசிவ தொட்டே
அறிவருளுஞ் சிவயநம அளவினும்ஐந் தெண்ணே. (143)

ஐம்பொன்னி லெளியனுஞ்செம் பொன்னிலய லாலும்
ஆக்குதகட் டினிலெழுதி அன்புடன் பூசித்தால்
இன்பமுண்டாம் செல்வமெட்டு முண்டாமெய்ஞ் ஞானம்
இனிதுண்டா கெனக்குநந்தி யிராசியத்திற் சொன்னார்
மூன்புசெய்நல் வினையிருந்த மாணாக்கா வுனக்கு
மொழிந்திட்டே னிவ்வாறு சித்திசெய்து கொண்டால்
மன்புவியிற் சித்தெட்டு மாடிடுவாய் நீயே
மகாராஜ னாயிருப்பாய் பதஞ்சலியென் வாக்கே. (144)

### சிதம்பர சக்கரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ந ௯ | ம ௰௧ | சி ௪ | வ ௰௫ | ய ௰௨ |
| சி ௪ | வ ௰௫ | ய ௰௨ | ந ௯ | ம ௰௧ |
| ய ௰௨ | ந ௯ | ம ௰௧ | சி ௪ | வ ௰௫ |
| ம ௰௧ | சி ௪ | வ ௰௫ | ய ௰௨ | ந ௯ |
| வ ௰௫ | ய ௰௨ | ந ௯ | ம ௰௧ | சி ௪ |

## மூலமந்திரம்.

ஓம் ஐயும் கிலியும் சௌவும் ஸ்ரீயும் நமசிவய சிவயநம யநமசிவ மசிவயந வயநமசி சிவசிதம்பர தேவாய நமஹாவென்று உரு நூறு போட்டு சித்தி செய்துக்கொள்ளவும்.

## பூஜாவிதி

சோமவாரம் அதிகாலையிலெழுந்து ஸ்நானஞ்செய்து அனுஷ்டானம் முடித்து வெள்ளை நிறப் பட்டுடுத்தி வில்வப் பலகையின் மேற்கண்ட சிதம்பர சக்கரத்தை வரைந்து புலித்தோலாசனம் வீற்றிருந்து தேங்காய் பழம் வெற்றிலைபாக்கு வைத்து கற்பூரதீபங் கொடுத்து வடக்கு முகமாயிருந்து ஐந்துமுக ருத்திராக்ஷமணி கொண்டு தினம் 1-க்கு ௧௦௮ உருவீதம் ஒரு மண்டலஞ் செபித்து சித்தியாக்கிக் கொள்ளவும். அது முடிந்தபின் குடும்பவிருத்தியும் புத்திரசந்தானமும் லெட்சுமி கடாட்சமுமுண்டாகும்.

இந்தச் சக்கரத்தைத் தங்கத்தகட்டிலாவது, செம்புத் தகட்டிலாவது வரைந்து பூஜாவிதிமுடித்து தாயத்துள்ளடைத்து கையிலாவது, அரையிலாவது, கழுத்திலாவது கட்டிககொள்ள வேண்டியது. விஷஜெந்துக்களும், பேய் பிசாசுகளும் அணுகாது. சுபம்!

## கெருடதியானம் மூலமந்திரம்.

வாயுவே ஓம்சுவாஹா ஓம் நம சிவய நசிமசி ஓம் அம் சிவசிவா லிங்க லிங்கச் சிவா சிவஓம் பக்ஷிசுவாஹா ஓம்விசுவபக்ஷி சுவாஹா ஓம்சிவாய பக்ஷி சுவாஹா ஓம் விஷ்ணுபக்ஷி சுவாஹா ஓம் கெருடபக்ஷி சுவாஹா வம் யம் ரம் யம் ஓம் சுவாஹாவென்று நூறு உருப்போடவும்.

## பூஜாவிதி.

சனிவாரங் காலை ஸ்நானஞ்செய்து பட்டுவஸ்திர முடுத்தி மெழுகிக் கோலம் போட்ட இடத்தில் மாந்தோலாசனத்தின் மீது வடக்குமுகமா யிருந்துகொண்டு தேங்காய், பழம், வெற்றிலைபாக்கு வைத்துத் தூப தீபாராதனை கொடுத்து மேற்கண்ட மந்திரத்தைச் சொல்லி தினம 1-க்கு ௧௦௮ உரு வீதம் ஒரு மண்டலஞ் செபித்து சித்தியாக்கிக் கொள்ளவும்.

அப்படிச் சித்தியானவுடன் விஷங்கடி கொண்டவன் வந்தால் மேற்கண்ட மந்திரத்தைச் சொல்லி வேப்பிலையினால் ௧௦௮ உருப் போட்டுச் செபிக்க விஷமிரங்கிவிடும்.

## சிதம்பர சக்கரம்

### அட்சரம் ஒன்றுக்கு ஐம்பத்தோன்று.

எந்தப் பக்கத்திலும் ஐம்பத்தொன்று சரியாயிருக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ந ௯ | ம ௰௧ | சி ௪ | வ ௰௫ | ய ௰௨ |
| சி ௰௫ | வ ௰௨ | ய ௯ | ந ௰௧ | ம ௪ |
| ய ௰௧ | ந ௪ | ம ௰௫ | சி ௰௨ | வ ௯ |
| ம ௰௨ | சி ௯ | வ ௰௧ | ய ௪ | ந ௰௫ |
| வ ௪ | ய ௰௫ | ந ௰௨ | ம ௯ | சி ௰௧ |

### மூலமந்திரம்.

ஓம் ஐயும் கிலியும் சௌவும் ஸ்ரீயும் நமசிவய சிவயநம யநமசிவ மசிவயந வயநமசி சிவசிதம்பர தேவாயநமஹாவென்று ௫௰௲ உருப் போட்டு சித்தி செய்துக்கொள்ளவும்.

### பூஜாவிதி.

குருவாரம் காலையிலெழுந்து ஸ்நானஞ்செய்து அனுஷ்டானம் முடித்து மஞ்சள் பட்டுடுத்தி பலாப்பலகையில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து கிருஷ்ணாசல ஆசனத்தின்மீது வடக்குமுகமாயிருந்து தேங்காய் பழம் வெற்றிலைபாக்குடன் சர்க்கரைப்பொங்கலும் பாயாசமும் செய்துவைத்து தீபதூபங்கொடுத்து ஐந்துமுக உருத்திராட்சமணியினால்தினம் 1-க்கு ௲௮ உருவீதம் ஒருமண்டலஞ் செபித்து சித்தியாக்கிக்கொள்ளவும்.

சித்தியானவுடன் விஷந்தீண்டினவன்வந்தால் மேற்கண்ட மந்திரத்தைச்சொல்லி ௲௮ உருப்போட்டு வேப்பிலையைக்கொண்டு மந்திரிக்க விஷமிறங்கிவிடும். இந்தச்சக்கரத்தைத் தங்கத்தட்டில் வரைந்து பூசை முடித்து ஆபரணத்துடன் அணிந்துகொண்டால் சகல காரியமுஞ் சித்தியாகும்.

## சிதம்பரச் சக்கரமாறல்.

### அட்சரம் ஒன்றுக்கு ஐம்பத்தொன்று.

எந்தப் பக்கத்திலும் ஐம்பத்தொன்று சரியாயிருக்கும்

| | | | | |
|---|---|---|---|---|
| சி ௪ | வ ௰௫ | ய ௰௨ | ந ௯ | ம ௰௧ |
| ய ௯ | ந ௰௧ | ம ௪ | சி ௰௫ | வ ௰௨ |
| ம ௰௫ | சி ௰௨ | வ ௯ | ய ௰௧ | ந ௪ |
| வ ௰௧ | ய ௪ | ந ௰௫ | ம ௰௨ | சி ௯ |
| ந ௰௨ | ம ௯ | சி ௰௧ | வ ௪ | ய ௰௫ |

### மூலமந்திரம்

கிலியும் சௌவும் ஸ்ரீயும் ஓம் ஐயும் சிவயநம யநமசிவ மசிவயந வயநமசி நமசிவய சிவசிதம்பர தேவாய நமஹா வென௲௮ உருப் போட்டு சித்தியாக்கிக்கொள்ளவேண்டியது,

### பூஜாவிதி.

சுக்கிரவாரத்தன்று உதையாதியிலெழுந்து ஸ்நானமுடித்து சூரியநமஸ்காரஞ்செய்து நார்மடி பட்டுவஸ்திரமணிந்து மாம்பலகையில் மேற்கண்ட சிதம்பர சக்கரத்தை வரைந்து மான்தோலாசனத்தில் கிழக்கு முகமாயிருந்துகொண்டு தேங்காய், பழம் வெற்றிலை பாக்கு வைத்து கற்பூரதீப ஆராதனை செய்து ஐந்துமுக ருத்திராட்சமணியால் தினம் 1-க்கு ௲௮ உருவீதம் ஒருமண்டலஞ் செய்து சித்தியாக்கிக்கொள்ளவேண்டியது.

அப்படிசித்தியாக்கிககொண்டால் அஷ்ட சித்தியுங் கல்வியும் ஞானமும் உண்டாகும் பெண்களை துஷ்டதேவதைகள் துடர்ந்திருந்தால் ௸ பெண்களை ஸ்நானஞ்செய்வித்து ௸ சக்கரத்திற்கு முன்னே யிருக்கவைத்து ௲௮ உருபோட்டால் பேய் பிசாசுகளெல்லாம் விலகும் ௸ யந்திரத்தைத்தங்கத் தகட்டிலாவது செம்புத்தகட்டிலாவது வரைந்து பூஜாவிதி முடித்து கழுத்திலாவது கையிலாவது கட்டினால் புத்திர சந்தானமும் லெட்சுமி கடாட்சமும் குடும்ப விர்த்தியுமுண்டாகும். சுபம்.

# வாலை கணபதி முக்கோணசக்கரம்




மூலமந்திரம்

ஹரிஓம்-றீங்-கிலி-வாலை கணபதியே நமாவென்று நியுது-உருப் போட்டுச் சித்திசெய்துகொள்ளவும்

பூஜாவிதி.

குருவாரங்காலை ஸ்நானஞ்செய்து செபதபமுடித்து நீலநிறப் பட்டுவஸ்த்திரம் உடுத்தித் தெற்பாசனத்தில் வடமேற்கு முகமாயிருந்துகொண்டு மேற்கண்ட சக்கரத்தைப் பஞ்சலோகத்தகட்டில் வரைந்து தேங்காய் பழம் வெற்றிலை பாக்குவைத்து தூபதீபங்கொடுத்து வாலைகணபதியை தியானித்து படிகமணியினால் நாள் 1-க்கு உரு-௲௮ வீதம் ஒருமண்டலம் செபித்துக்கொண்டு வரச் சித்தியாகும்.

அப்படிச் சித்தியான பிற்பாடு விஷகடியுண்டவன் வந்தால் ஷை சக்கரத்தை அவனுடைய சிரசிலிருந்து இருதயகமலம்வரைமானதமாய் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து வேப்பிலையினால் உரு ௲௮ போட்டு உச்சிமுதல் பாதம்வரை மந்திரிக்க விஷமிறங்கும்

இந்தச்சக்கரத்தைத் தங்கத்தகட்டிலெழுதி பூஜாவிதிமுடித்து ஸ்ரீகளுக்கு தாயத்துச்செய்து கட்டினால்- பேய்பிசாசுகள் விலகி கர்ப்பமுண்டாகும் சகலரோகமும்போகும்,

ஷை சக்கரத்தை வெள்ளித்தகட்டிலெழுதி பூஜாவிதிமுடித்து தாயத்துக்குள்ளடைத்து அரையிலாவது கையிலாவது கழுத்திலாவதுகட்டிக்கொண்டால் முகவசீகரமும் லெட்சுமிகடாக்ஷமும் உண்டாகும்.

# மூலாதாரகணபதி முக்கோணச்சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம்-கிலி-அங்-உங்-ஐயும்-கிலியும்-சௌவும் மூலாதார கணபதியே நமஹா வென்று நிய௲ உருப்போட்டுச் சித்திசெய்துக்கொள்ளவும்.

பூஜாவிதி.

ஆதிவாரங்காலையிலெழுந்து ஸ்நானஞ்செய்து சிகப்புநிறப்பட்டுடுத்தி அனுஷ்டானமுடித்து மெழுகிக் கோலமிட்ட இடத்தில் புலித்தோலாசனத்தில் வடக்குமுகமிருந்து வெள்ளித்தகட்டில்ஷை சக்கரத்தை வரைந்து நெய்விளக்கேற்றிப் பால் இளநீர் முதலிவைகளால் அபிஷேகஞ்செய்து தேங்காய் பழம் வெற்றிலைபாக்குடன் அவல் கடலை வைத்துக் கற்பூர தீபதூபங்கொடுத்து ஷைமூலமந்திரத்தைத்தினம் 1-க்கு ௲அ-உரு விதம் ஒருமண்டலஞ் செபித்துக்கொண்டபிற்பாடு விஷகடியுண்டவன் வந்தால் ஷைவிஷத்தை வேப்பிலையினால் ௲அ-உருப்போட்டு மந்திரிக்க கடினமான விஷப்பாம்புகடிகளுமிறங்கிவிடும்

இந்தச்சக்கரத்தைத் தங்கத்தகட்டில் வரைந்து பூஜாவிதிமுடித்துகழுத்திலாவது கையிலாவது அரையிலாவது தாயத்துசெய்து கட்டிக்கொண்டால்- சகலகாரியங்களுஞ் சித்தியாகும்.

# சர்வசங்கார விஞ்சை தேவி சக்கரம்



மூலமந்திரம்

ஹரி ஓம்-றீங் மசி நசி நவா ஹாவென்று ௰௲ உருப்போட்டுச் சித்திசெய்துகொள்ளவும்.

## பூஜாவிதி

சுக்கிரவாரங் காலையிலெழுந்து ஸ்நானஞ்செய்து அனுஷ்டானம்முடித்து வெள்ளைப்பட்டுடுத்தி கலைமான் ஆசனத்தில் வடக்குமுகமாகஇருந்துக்கொண்டு ஷை சக்கரத்தைத் தங்கத் தகட்டில் வரைந்து தேங்காய், பழம், புஷ்பம், வெற்றிலை, பாக்கு வைத்து தூப தீபங் கொடுத்து உருத்திராட்ச மணியினால் நாள் ஒன்றுக்கு ௲அ உருவீதம் ஒருமண்டலஞ் செபித்துக்கொண்டுவரச் சித்தியாகும். அப்படிச்சித்தியானபின் விஷங்கடித்தவன் வந்தால் இந்தச் சக்கரத்தை அவன்மீது மானதமாய் வரைந்து வேப்பிலையினால் மூலமந்திரத்தைச் சொல்லி ௲அ உருப்போட்டு மந்திரித்துக்கொண்டுவர விஷமிறங்கிவிடும்.

இந்த விஞ்சை மந்திரத்தினால் அஷ்டசித்தியும் உண்டாகும். சகல பில்லிசூனியங்களும் விலகும்.

# வயிரவர் எண்கோணச் சக்கரம்.



மூலமந்திரம்.

ஹரிஓம் வயிரவா அக்கினி வயிரவா அகோர வயிரவா அங்-உங் இங்-சிங் வங் யநமசிவ தேவாய நமஹாவென்று ருய௲ உருப்போட்டு ச்சித்திசெய்துகொள்ளவும்.

பூஜாவிதி.

சோமவாரங் காலை ஸ்நானஞ்செய்து அனுஷ்டானம் முடித்து வெண்பட்டுடுத்தி கலைமான் ஆசனத்தின்மீது கிழக்குமுகமாகவிருந்துக்கொண்டு இந்தச் சக்கரத்தை வெள்ளித்தகட்டில வரைந்து, தேங்காய், பழம் வெற்றிலை பாக்கு வைத்து தூபதீபங்கொடுத்து, வயிரவமூர்த்தியைத் தியானித்து, ஆறுமுக உத்திராட்ச மணியினால் தினம் 1-க்கு ௲அ உரு வீதம் ஒருமண்டலஞ் செபித்துக்கொண்டுவா, மந்திரசித்தியுண்டாகும் இந்த மந்திரத்தினால் சகல தேவதைகளும் வசியமாகும். ஆடாத பேய்களையும் ஆட்டிவைக்கும்.

விஷங் கடிகொண்டவன் வந்தால் ஹரிஓம் சகலகுரு நசி மசி சுவாஹாவென்று வேப்பிலையினால் ௲அ உருப்போட்டு மந்திரிக்க, சகலவிஷங்களுமிறங்கிவிடும்.

அஷ்டநாகங்களின் பெருமை

அஷ்டநாகங்களின் பெயரும் இரையெடுக்கு நாளும் உணவுகளும் இருக்குமிடங்களும் ஆடுங்குறிகளும் படத்தின முத்திரைகளுல் நிறங்களும் வாசனையின குணங்களும் சொல்லப்பெற்றிருக்கிறது.

முதலாவது பிர்மஜாதி சர்ப்பங்கள் அனந்தன் குளிகன்

அனந்தன்.

1-வது பிர்மஜாதி. அனந்தன்
2-வது இரையெடுக்கும் வாரம் ஆதித்தவாரங்காலையில்.
3-வது உணவு. காற்றுகளையும் மலர்வாசனைகளையும் புசிக்கும்.
4-வது இருக்குமிடம் தேவாலயங்களில் வாசஞ்செய்யும்.
5-வது ஆடுங்குறி. அண்ணாந்து பார்த்து விளையாடும்.
6-வது முகதிரை சங்குபோற் குறியும்புள்ளிகளுமிருக்கும்.
7-வது நிறம். சிவந்திருக்கும்.
8-வது வாசனை- நாவிப்பூ வாசனை வீசும்.

குளிகன்

1-வது பிர்மஜாதி குளிகன்.
2-வது இரையெடுக்கும் நாள்- சனிவாரமிரவில்.
3-வது உணவு- காற்றுகளை ஆகாரமாகக்கொள்ளும்.
4-வது இருக்குமிடம்-பாழடைந்த ஆலயங்களில் வாசம்செய்யு(ம்.
5-வது ஆடுங்குறி-நிமிர்ந்து ஆகாயம் நோக்கிவிளையாடும்.
6-வது முத்திரை-சங்கு சக்கரகுறியும் புள்ளடிகளுமிருக்கும்.
7-வது நிறம்-சிவந்திருக்கும்.
8-வது வாசனை- நாவிப்பூ வாசனை வீசும்.

2-வது க்ஷத்திரியஜாதி சர்ப்பங்கள் வாசுகி சங்கபாலன்.

வாசுகி.

1-வது க்ஷத்திரிய ஜாதி வாசுகி.
2-வது இரையெடுக்கும் நாள்-சோமவாரங்காலை வெளிவரும்.
3-வது உணவு- அறுகங்கிழங்கு வண்டுகளைப் புசிக்கும்.
4-வது இருக்குமிடம்- விருக்ஷத்தின் கீழிருக்கும்.
5-வது ஆடுங்குறி-மனிதரைப்பார்த்தபடி எதிர்நின்று விளையா(டும்.
6-வது முத்திரை-சங்குபோல் நீண்ட குறிகளிருக்கும்.
7-வது நிறம்-பொன்னிறம்போன்றிருக்கும்.
8-வது வாசனையின் குணம்-தாழம்பூ வாசனையுண்டாகும்.

சங்கபாலன்

1-வது க்ஷத்திரிய ஜாதி சங்கபாலன்.

2-வது இரையெடுக்கும் நாள்-சனிக்கிழமை உச்சிநேரம்.

3-வது உணவு-கிழங்கு வண்டுகளைப் புசிக்கும்.

4-வது இருக்குமிடம்-விருட்சத்தின்கீழிருக்கும்.

5-வது ஆடுங்குறி-மனிதர்களை யெதிர்நோக்கியாடும்.

6-வது முத்திரை-திரிசூலமும் பிரைபோலுமிருக்கும்.

7-வது நிறம்-பொன்னிறம்போன்றிருக்கும்.

8-வது வாசனையின் குணம்-தாழம்பூ வாசனை வீசும்.

3வது வைசிய ஜாதி சர்ப்பங்கள் தக்கன் மகாபதுமன்.

தக்கன்

1-வது ஜாதியும் பெயரும்-வைசியஜாதி தக்கன்.

2-வது இரையெடுக்கும் நாள்-செவ்வாய்க்கிழமை பகல்.

3-வது உணவு-ஓணான் பல்லிகளைச் சாப்பிடும்.

4-வது இருக்குமிடம்-தென்திசையில் பாழுமனையில் வசிக்கும்

5-வது ஆடுங்குறி-நான்கு திசைகளையும் நோக்கி ஆடும்.

6-வது முத்திரை-விற்போன்ற குறியிருக்கும்.

7-வது நிறம்-வெள்ளை நிறமாயிருக்கும்.

8-வது வாசனை-பாதிரிப்பூ வாசனை வீசும்.

மகாபதுமன்.

1-வது ஜாதியும் பெயரும் வைசியசாதி மகாபதுமன்.

2-வது இரை யெடுக்கும் நாள்-வெள்ளிக்கிழமை இரவிலும்.

3-வது உணவு-ஓந்தி தவளை நத்தை எலி இவைகளைப் புசிக்கும்.

4-வது இருக்குமிடம்-பாழடைந்த மனைகளில் வசிக்கும்.

5-வது ஆடுங்குறி-பல திசைகளையும் பார்த்தாடும்.

6-வது முத்திரை-காணி அட்சரம்போல் புள்ளிகளிருக்கும்.

7-வது நிறம்-வெண்மை நிறமுடையதாயிருக்கும்.

8-வது வாசனை-பாதிரிப்பூ வாசனை வீசும்.

4-வது பதுமன் கார்க்கோடன் என இருவகைப்படும்.

## பதுமன்.

1-வது ஜாதியும் பெயரும்-சூத்திர ஜாதி பதுமன்.
2-வது இரையெடுக்கும் நாள்- வியாழக்கிழமை காலை.
3-வது உணவு மீன் தவளை நண்டுகளைப் புசிக்கும்.
4-வது இருக்குமிடம்-மேற்குத்திசையிற் புற்றுகளிருக்கும்.
5-வது ஆடுங்குறி-பூமியைப்பார்த்தாடும்.
6-வது முத்திரை-புள்ளடிபோன்ற குறிகளிருக்கும்.
7-வது நிறம் கருப்பாகவும் மேகநிறமாகவுமிருக்கும்.
8-வது வாசனை-இலுப்பைப்பூ வாசனை வீசும்.

## கார்க்கோடகன்

1-வது ஜாதியும் பெயரும், சூத்திர ஜாதி கார்க்கோடகன்.
2-வது இரையெடுக்கும் நாள்-புதன்கிழமை காலை.
3-வது உணவு- தவளை, நண்டு, ஈசல்களைப் புசிக்கும்.
4-வது இருக்குமிடம்-வடதிசையிற் புற்றுகளிருக்கும்.
5வது ஆடுங்குறி-பூமியைப் பார்த்தாடும்.
6வது முத்திரை-புள்ளடிவடிவுள்ளதாயிருக்கும்.
7வது நிறம் கருநிறம்போன்றிருக்கும்.
8வதுவாசனை-வருத்த உளுந்து வாசனையும் இலுப்பைப்பூவாசனையும் வீசும்.

## அரவம் மனிதர்களைத் தீண்டுகிறதற்குக் காரணம்.

அரவத்திற்குப் பசிவந்துற்றபோது, மின்னல்கள் இடிகளின் அதிர்ச்சியினால் கோபமானது மேலிட்டபோதும், அந்தந்த வாரங்களிற் சர்ப்பம்இரையெடுக்கவரும் சமயத்திலும் பாழுங்கோவில்களிற் துணிந்துபோவதினாலும், பாழடைந்த மனைகளிற் பாராமல் நடப்பதினாலும் புதர்களில் துணிந்துபோவதினாலும் பாம்பென்று தெரியாமல் மிதிப்பதினாலும், துணிந்துபாம்பின் சமீபம் போவதினாலும், இருட்டுகளில் காடுகரைகளுக்குப் போவதினாலும், காலன் ஆக்கினையின் பொருட்டாகவும், பாம்பு கடிக்க முயலும்.

ஒருவனுக்கு விஷமானது கடியுண்டதானத்தில் ஒரு பற்பட்டால் விஷமானது தோலைப்பற்றி ஏறும். அவ்விதமாக யேறுகிற விஷமானது கால்கடியென்றும் அவ்விஷங்கள் மூலிகைகளினாலே யிறங்கிவிடும்.

இரண்டுபற்பட்டால் விஷமானது மாமீசத்தைப்பற்றி யேறும் அது அரைக்கடி யென்றும் அவ்விஷங்களானது மணிமந்திர ஔஷதங்களினுலிறங்கும்.

மூன்று பற்பட்டால் விஷமானது எலும்பைப்பற்றி யேறும் அது முக்காற்கடியென்று பெயர் அவ்விஷம் மூலிகைகளினுலும் விஷமைகளினுலுமிறங்கும்.

நான்குபற்பட்டால் விஷமானது மூளையைப்பற்றியேறும் அது முழுக்கடியென்று பெயர் அவ்விஷம்மணிமந்திர ஔஷதங்களினல் மீளுவது அசாத்தியம் தெய்வாநுகூலத்தினு லிறங்கவேண்டும்.

## பற்களின் குறி.

கடிவாயில் பனிச்சலம்போல் நீர் கசிந்தால் காளியென்ற [சர்ப்பங் கடித்ததாக நினைக்கவும்.

கடிவாயில் மஞ்சள் நிறம்போல் நீர் கசிந்தால் காளாஸ்திரி என்ற சர்ப்பங் கடித்ததாக நினைக்கவும்.

கடிவாயில் செந்நீர்போல் கசியுமாகில் நீலி என்ற சர்ப்பங் கடித்ததாக நினைக்கவும்.

கடிவாயில் கழுநீர்போல் கசியுமாகில் நீலகண்டியென்ற சர்ப்பங் கடித்ததாக நினைக்கவும்.

## விஷகடி சீக்கிரத்தில் மீளாத இடங்களும் அவயவங்களும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | உள்ளங்கால் | 21 | ஏறிப்படவு |
| 2 | உள்ளங்கை | 22 | மடை |
| 3 | நெற்றி | 23 | பாழுங்கோவில் |
| 4 | மார்பு | 24 | பாழும் வீடு |
| 5 | உதடு | 25 | செடியடர்ந்த காடு |
| 6 | நாவு | 26 | சுடுகாடு |
| 7 | மூக்கு | 27 | நந்தவனம் |
| 8 | புருவம் | 28 | பொதுமடம் |
| 9 | தொப்புள் | 29 | நதிக்கரை |
| 10 | குதிங்கால் | 30 | சமாதி |
| 11 | செவி | 31 | யாகசாலை |
| | இந்த அவயவங்களிலும், | | |
| 12 | தேரடி | 32 | முச்சந்தி |
| 13 | ஆலமரம் | 33 | நித்திரை |
| 14 | புன்னைமரம் | 34 | ஐயன்கோவில் |

15 புளியமாம்
16 மூங்கில்
17 அரசு
18 நாணல்
19 புற்று
20 கிணறு
35 பிடாரிகோவில்
36 தேவாலயம்
இந்த இடங்களிலும்,
37 இடிவிழுகுநேரம்
38 மின்னலிடு நேரம்
39 அடையிருக்குஞ் சமயம்
இந்த சமயங்களிலும்
40 புத்தில்

இந்த அவயவாதிகளிலும் இடங்களிலும் சமயங்களிலும் கடியுண்டால் விஷம் மண்டை மூளையைப் பற்றியிருக்கும் ஆகையால் மருந்து மந்திரங்களாலே விஷமிறக்கவேண்டும்

அடக்கம் எழுப்பமருந்து.

விஷமேறித் தலைகொண்டுவிட்டால் பிரேதம்போல் கிடக்கலாகும் அதற்கு கருவூமத்தைஇலை, தைவேளையிலை, குப்பைமேனியிலை இம்மூன்று பச்சிலைகளையும் சமமாகப் பிடுங்கி, தன் உள்ளங்கையில் வைத்து சிறுநீர்விட்டுக் கசக்கி சாற்றை நாசிகளிற் பிழிய, அடங்கின உயிர் மீண்டுவரும் இந்தச் சஞ்சீவி மூலிகைகளினாலே சகலமான சன்னி குளிர் தோஷமுதல் யாவும் போம்.

மற்றொருவிதம்.

குப்பைமேனியிலை, தைவேளையிலை, தும்பையிலை, துளசியிலை, கொடிவேலியிலை,கருவூமத்தையிலை இந்த ஆறு இலைகளையும் சமமாகப்பிடுங்கி, கொஞ்சம் சிறுநீர்விட்டரைத்து நவச்சாரமும்சேர்த்து தட்டிவெள்ளைத்துணியில் சிறுபொட்டலம்கட்டிகண்களிரண்டிலும் நாசியிலும் காதுகளிலும் பிழியவும் ஷை சாற்றில் துவரம்பருப்பும் மிளகும் கொஞ்சம் சேர்த்து உரைத்து கண்ணில் கலிக்கம்போட, உயிரடங்கினவர்கள்விஷமிறங்கி திடீரென்றுஎழுந்திருப்பார்கள்ஷை மூலிகைச் சாற்றைமட்டும் அரை மாகாணிப்படிப் பசுவின்பாலோடு கலந்து மூன்றுவேளை கொடுக்கச் சகல விஷமும் இறங்கிவிடும்.

பத்தியம்.

கடுகும் நல்லெண்ணெயும் கரப்பான் பதார்த்தங்களையும்ஒரு வாரம்வரை நீக்கி பசும்பாலிற் பச்சரிசியும் பாசிப்பயறும் போட்டுக் காய்ச்சி சீனிபோட்டுச் சாப்பிட்டுவரவும். அப்பால் சௌக்கியமானவுடன் எண்ணெய் தேய்த்து ஸ்நானம்பண்ணினவுடனேசகலமான பதார்த்தங்களுடன் சாப்பிடலாம்.

துவாலையிட மருந்து.

குப்பைமேனியிலை, அவரியிலை, ஆவரையிலை, நெல்லியிலை சமபாகம் பிடுங்கி, கொல்லன்கோவைக்கிழங்குஞ் சேர்த்து இடித்து,

சாறுவாங்கி, கால் துட்டு யெடை உள்ளே கொடுத்து, உடம்பெல்லாந் துவாலையிட விஷமிறங்கிவிடும்.

### மற்றொரு துவாலை.

வாகையிலையை யிடித்துச்சாறுவாங்கிச்சிரசுமுதல் பாதம்வரை துவாலையிட மண்டையின் கனம் மண்டைக்குத்து முதலானவை நிவாரணமாகும்.

### விஷம் சீக்கிரத்தில் மீளாத நாட்கள்.

1-வது பரணி
2-வது கார்த்திகை
3-வது திருவாதிரை
4-வது ஆயிலியம்
5-வது மகம்
6-வது சித்திரை
7-வது சுவாதி
8-வது மூலம்
9-வது திருவோணம்
இந்தஒன்பதுநட்சத்திரங்களிலும்

1-வது அமாவாசை
2-வது சஷ்டி
3-வது அஷ்டமி
4-வது நவமி
5-வது பௌர்ணமி
இந்த ஐந்து திதிகளுஞ்
ஜென்மநாள்
குளிகன் நேரம்
விஷவேளையிலும்
இந்த நேரத்திலும்

விஷந்தீண்டில் இது கடினமான விஷமென்று பெயர் இதற்கு மருந்துமைகலிக்கங்களினுலும்குடோரிகளினுலும்சர்ப்பஆரூடத்திற் சொல்லிய சுடுகொடுமீட்டான் குளிகைகளினுலும் கெருடாரூடத்திற் சொல்லிய கெருடபஞ்சாட்சரத்தினுலும் விஷமிறக்கவேண்டியது

### விஷமிறங்க மூலிகை.

விஷகடியுண்டவனுக்குச் சிரியாணங்கையின்சமூலத்தைக் கொண்டுவந்து வீசம்படி பசுவின்பால் விட்டரைத்துக் கொடுக்க விஷமிறங்கிவிடும் இம்மாதிரி மூன்றுவேளை காலைமாலை கொடுக்கக்கடினமான விஷங்களுமிறங்கிவிடும். பத்தியம் நல்லெண்ணெய் கடுகு கரப்பான் பதார்த்தங்களையும் தள்ளிப் பசுமோரும் சுடுகஞ்சியும் உப்பில்லாமல் ஒரு வாரம் வரை சாப்பிடவும். ஒரு வாரத்துக்குமேல் தலை முழுகி மற்றவைகளைச் சேர்த்துக்கொள்ளவும்.

### விஷமிறங்க மந்திரம்.

ஹரிஓம் சகல விஷம் நசிமசி சுவாஹாவென்று லட்சமுருச்செபித்து சித்தியாக்கிக்கொண்டபின் விஷந்தீண்டிவந்தால் வேப்பிலையினுலும் மேற்கண்டமந்திரத்தைசொல்லி விஷந்தீண்டி வந்தவன்சிரசிலிருந்து கடிவாய்வரை இறக்கிக்கொண்டுவர விஷமிறங்கிவிடும்

### மற்ருெரு விதம்

நசிமசி சிச்சிசுவாஹாவென்று லெட்சமுருச்செபித்து சித்தியாக்கிக்கொண்டபின் விஷதோஷங்களுக்கும் கட்டிபிளவைபுண்புரைகளுக்கும் தன்னுடைய மேல்வேஷ்டி முந்தியினல் மேற்கண்ட மந்திரத்தைச் சொல்லி மந்திரிக்கச் சகலதோஷமும் நிவர்த்தியாகும்.

### பல்விஷ வலிக்குமந்திரம்.

ஆதிவாரத்தன்றுவிஷ்ணுகரந்தைச்செடிக்குத்தாமரை நூலினற் காப்புக்கட்டிப்பொங்கலிட்டுசேவற்பெலியுடன் தூபதீபநெய்வேத்தியங்கொடுத்து ஹ்றிஓம் சகல சாபமும் நசிமசி சுவாஹாவென்றுளஅ உருச்செபித்து சாபநிவாரணஞ் செய்து ஷை செடியின் ஆணிவேர் அருமற்ருேண்டிப் பிடுங்கித்தான் வடக்குமுகமாக வீற்றிருந்துபல் விஷவலிகொண்டவன்நாமத்தைளஅதரஞ்சொல்லி எப்பவும்பல்வலி வரக்கூடாதென்று ஷை மந்திரத்தை கூஅ உருப்போட்டு நினைத்துத் தியானித்து ஒருவருடனேயும் வாய் பேசாமல் ஷை செடியை யெடுத்து அந்தயிடத்திலேயே குப்புறநட்டுவைக்கவும் ஷைசெடியானது வெயிலிலுலர்ந்து காய்ந்துவரப் பல்விஷவலியும் விட்டு விலகிவிடும்.

### விபூதிமந்திரித்துக் கோடீக்க.

விபூதியைச் சின்னத்தாம்பாளத்திலாவது அல்லது வெற்றிலையிலாவதுவைத்துக்கையினற்பரப்பி வெற்றிலைக்காம்பைக்கிள்ளி அந்த விபூதியில் முக்கோணம் போட்டு அதனுள் ஓம் கிலி அங் உங் யென்று யெழுதி அதைச்சுற்றி ஓங்காரம் போட்டுக்கொண்டபின் தியானிக்க மூலமந்திரமாவது ஹறிஓம் நமோபகவதே ஐயுங்கிலியுஞ்சௌவும் வரத வரத கணபதியே வசிய வசிய நமஹாயென்று கூஅஉருச் செபித்துச்சித்தி பண்ணிக்கொண்டுஅச்சமயம்ளஅஉருமட்டும் செபித்து விபூதிபோடச் சகலரோகங்களும்பில்லி சூனியங்களும்விலகும்

### குழந்தைகளின் சீக்குத்தீருவதற்கு மந்திரம்.

செம்புத் தகட்டில் அறுகோணச்சக்கரம் போட்டு அதனுள் சரஹணபவா வென்னும் அச்சரத்தைப்போட்டு அதைச்சுற்றி ஓங்காரம் போட்டு வைத்துக்கொண்டு மூலமந்திரஞ் செபிக்கவேண்டிய விதமாவது.

ஹறிஓம்சரஹணபவாஓம் என்றும் குழந்தைகளின்சகலதோஷ வியாதிகள் நசிமசி சுவாஹாவென்று தினம் 1-க்கு ளஅ — உருவீதம் கூஅ உருச்செபித்து சித்திபண்ணிக்கொள்ளவேண்டியது

அப்பால் குழந்தைகளின் தோஷங்கள் சீக்குகள் முதலான துக்குக் குழந்தையைத்தாயார்மடியில் உட்காரவைத்து பிரைமடைத்தண்ணீர் கொண்டுவரச்சொல்லி அந்தத் தண்ணீரில் மேற்கண்ட மந்திரத்தை ரஅ உருச்செபித்து ஷ தண்ணீரைக் குழந்தையின் முகத்தில் மூன்றுதரம் புரோசித்து பின்பு விபூதியில் மேற்கண்ட சக்கரம்போட்டு குழந்தையின் சீக்கு நசிமசியென்று ரஅ உருப்போட்டு சூடன் சாம்பிராணி தூப தீப ஆராதனை கொடுத்து ஷ விபூதியை குழந்தைக்குப் பூசததோஷங்கள் சீக்குகள் யாவும் நிவாரணமாகும் சகல பிணியும் விலகும்.

## குழந்தைகளுக்கு மற்றொருவித மந்திரமுறை.

ஆதிவாரத்தன்று காலையிலெழுந்து ஒருவரோடும் பேசாமல் ஸ்நானஞ்செய்துஜெபதபமுடித்துக்கொண்டு நாயுருவிச்செடிக்குப் பக்கத்தில் வடக்குமுகமாயிருந்துகொண்டு ஓம்நசிமசி சுவாஹாவென்று ரஅ உருச்செபித்து சாபநிவர்த்தி செய்துவெள்ளெருக்குநாரு கொண்டுசெடிக்குக்காப்புக்கட்டித் தேங்காய்பழத்துடன் சூடன் சாம்பிராணி தூபதீபங்கொடுத்து ஹ்றிஓம் நசிமசி சுவாஹாவென்று ரஅ உருச்செபித்து இம்மாதிரி மந்திரத்துடன் அந்திசந்திஇரண்டு வேளையும் உருவேற்றிமறுவாரம்ஞாயிற்றுக்கிழமைவரை ஜெபதபம் முடித்து ஷ செடியின் ஆணிவேர் அறுமல் தூப தீபங் கொடுத்து பிடுங்கி வெள்ளியிலாவது தங்கத்திலாவது குளிசஞ்செய்துவைத்துக்கொண்டு விபூதியைப்பஞ்சாட்சர மந்திரத்தால் கூஅஉருத்தியானித்துவிபூதியும் வேருஞ்சேர்த்து தாயத்திலடைத்துகுழந்தையின் கழுத்திலாவது அரையிலாவது கட்டச்சகலவியாதியும் பாலாரிட்ட தோஷங்களும் பிணிகளும் குழந்தைகளின் பற்கடிகளும் நீங்கும்.

## சரீரபுஷ்டிக்கு மருந்து.

எலுமிச்சம்பழச் சாரெடுத்து வாதாங்கொட்டைப் பருப்பையரைத்து ஷ சாருடன்போட்டுச் சக்கரையும் முட்டையின் வெள்ளைக்கருவும் விட்டு இந்த நாலையும் நன்ருய்க்கரைத்து அடுப்பில்வைத்து எரித்துவரப் பாயாசம்போலாகும் தருணத்திலிரக்கிப் பீங்கானிலடைத்துவைத்துக் காலைமாலை ஆறுவேளை சாப்பிட்டுவரத்தேகபலம் உருப்போட்டு வருங்காலத்திலேரின கபாலச்சூடு பித்தக்கிறுகிறுப்பு முதலானவைகளெல்லாம் போகும்.

எலுமிச்சம்பழம் 40
பெங்களூர் நாட்டுச் சர்க்கரை வீசை, கால்
வாதாம்பருப்பு வீசை கால்
கோழிமுட்டை 8

மந்திரங்கள் உருப்போடும் போதாவது அல்லது யோகத்திலிருக்க முயலும் போதாவது அடியிற்கண்ட புகையை முன்னாலே போட்டுக்கொள்ள மருந்து

| | |
|---|---|
| கஸ்தூரி மஞ்சள் | தேவதாரம் |
| மண்சிட்டி | பூலாங்கிழங்கு |
| பேரண்டம் ஓடு | கிளியூரற்பட்டை |
| கருவாப்பட்டை | சாதிக்காய் |
| சிறுதேக்கு | கோரோசனை |
| அகிற்பட்டை | சாம்பிராணி |

இவ்வளவுஞ்சரிசமனுய்வாங்கி தூளாக்கிப்பசுநெய்விட்டுமெழுகுபோலரைத்துச் சிறுவில்லை தட்டி உலரவைத்து யெடுத்துஒருகலசத்திற்போட்டு வைத்துக்கொண்டு மேற்கண்ட காரியங்கள் தொடங்கும்போது ஒருகரண்டியிற் நெருப்பெடுத்து வைத்துக்கொண்டு மேற்கண்ட வில்லையிலொன்றெடுத்து நெய்யில்தோய்த்துநெருப்பில் வைக்கப் புகைவரும் அப்பால் யோகமாவது உருப்போடவாவது ஆரம்பித்தால் கஷ்டமிராது சுழுவாய் யோகம் முடிந்துவிடும்

## கல்லுப்புச்சுண்ணம்

பூமிக்குள் விளைகிறஅப்ரேகம்நிறம்போன்றவெள்ளைக்கல்லுகள் சிறுதட்டு நிறையஅள்ளிவந்துதயாரில் வைத்துக்கொண்டுசிற்றமுரி ஒருபானையிற் பிடித்துவாலைவைத்து அடுப்பெரித்துவாலையில்வரும் சுத்தகெங்கையெடுத்து அனேகசீஷாக்களிலடைத்துக்கொண்டு அதில் இரண்டுசீஷாதண்ணீரும் ஆகாசகெங்கை தண்ணீர் வேண்டியதும் விட்டு உவர்பூநீரும் நீத்தினசுண்ணும்பும் கொஞ்சம் போடடக்கரைத்துத்தெளிவிருத்து மேற்சொல்லியவெள்ளைக்கல்லுகளை போட்டுஅடுப்பில்வைத்துத்தண்ணீர்கொதிக்கக்காய்ச்சிஇறக்கியபின்வெள்ளைக்கல்லையெடுத்து உலரவைத்து உலையிற்கரிபோட்டுஅத்துடன் வெள்ளைக்கல்லையும் போட்டு ஊதியெடுக்கச் சுண்ணும்புக்கல்லாகும்

அந்தக்கல்லை மேலே கண்ட சுத்தகெங்கை இரண்டு சீஷாவும் ஆகாச கெங்கையுமாக விட்டுச் சுண்ணும்புக்கல்லை நீத்திக்கரைத்து அகலவாயோட்டில்வைத்து மூடி வெயிலில்வைத்து அறுபது நாழிகை கழித்து மூடியைத்திறந்து பார்க்க ஆடைகட்டியிருக்கும்அந்த ஆடையைகைபோடாமல் சிரட்டையினுலெடுத்துப்பீங்கானில் போட்டு வைத்துக்கொண்டு உடனே கரைத்து மூடி வைத்து மறுநாள்

ஆடையெடுக்கவும் சுத்தகெங்கை தினம்வேண்டியதிருப்பதை ஊத்திக்கரைத்துக்கொள்ளவும் இதுபோல் முப்பதுநாளைக்கும்சுத்தகங்கைவேண்டியதைவிட்டுக் கரைத்து மூடிவைத்து ஆடையெடுத்து ஒரு பீங்கானில் வைத்துக்கொள்ளவும்.

### சீனம் சுத்தி.

கிளிஞ்சிலை சுண்ணும்புப்புழுதியாக்கி ஆத்திசீனக்காரம்பத்துப் பலத்தைக்கொண்டுவந்து கிளிஞ்சல் சுண்ணும்பைப்போட்டுஅதன் மேலேசீனக்காரத்தைவைத்து அதன்மேலேயும் கிளிஞ்சல்சுண்ணும்பைப்போட்டு மேற்சட்டிபோட்டு மூடி மண்சிலைசெய்து இரண்டு சாமம்யெரித்துப் பின்பு சீனக்காரத்தை யெடுத்துக்கொள்ளவும்.

### வேடியுப்புச் சுத்தி.

வெடியுப்பு படி உ சுத்தகங்கை படி 8 இந்த இரண்டையும் பானையில் விட்டு சிலைமண்செய்து வாலைவைத்து அடுப்பெரிக்க முக்கால் பாகநீருவெளிவரும் அதையொருகட்டியிலூத்திக் கொஞ்சஞ் சுண்டக்காய்ச்சிப்பார்க்கப்பதமாவது துரும்பினுல்தொட்டு நடுநகத்தில்வைத்துப் பார்க்கத் துவரம்பருப்புப்போலுரையும் அதுதான் பதம் அதைச்சட்டியில் மூன்றுநாள் வைத்திருந்தால் கம்பிகம்பியாயிருக்கும் அந்தக் கம்பியைத் தணலில் வைக்கப்பொரியாது, உருகாது இதுதான் அடையாளம்.

கல்லுப்புச் சுண்ணும்பு ஆடை பலம் 10 சுத்திசெய்த சீனக்காரம்பலம் 10 வெடியுப்புச்சுத்திசெய்ததுபலம் 10அல்லது மூன்றுஞ் சமனிடையா யெடுத்து.

கோழிமுட்டை மஞ்சக்கருவை நீக்கிவிட்டு வெள்ளைக்கருவு யெவ்வளவு வேண்டுமோ அவ்வளவுயெடுத்துச்சமனிடையெருக்கம் பால்விட்டுக் கலந்து இரண்டு நாள்வைக்கச் செயநீராகும்.

அந்தச்செயநீரில் மேற்கண்டமூன்றுசரக்கையும்செயநீர்விட்டு அரைத்துஉள்ளங்கையில்வில்லைதட்டிக்கணகணவென்று வெங்கலம் போலோசைகேட்கும்படிவெயிலிற்காயவைத்துயெடுத்துக்கொண்டு

ஒரு வில்லையைமட்டும் ஆறுயெருவிற்புடம்போடக் கல்லுப்புச் சுண்ணமாகும் இதைக்கொஞ்சம் யெடுத்து விஷங்கடித்தஇடத்தில் அமுர்தப்பாலிட்டிளைத்துத் தடவவிஷ மிறங்கிவிடும் அன்னியில் வைத்தியம் முப்பூயென்பது இதுதான் இந்தமுப்பூவினுற் புகைச் சரக்குகளுக்கு குரு யெல்லாச் சரக்குகளையும் நீத்தலாம்.

## இறங்கிய விஷத்தை யேற்றுவதற்கு பரிபாஷையின் மூலமந்திரமதியான சித்து.

ஓம் நமசிவய வென்ற மஹா பஞ்சாட்சர மந்திரங்களுக்குரிய ஐம்பத்தோரட்சரங்கள்யாதெனில்:—உயிரெழுத்துப்பனிரெண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டுங்கூடிய இவ்விரண்டு உயிர்மெய்யட்சரங்களும் ஒன்றுசேர்த்து ஒவ்வொரு அட்சரங்களாகவும் உயிரெழுத்துக்குரிய முதலாவது அட்சரங்களுடன் மெய்யெழுத்து அட்சரங்கள் பதினெட்டுஞ் சேர்ந்து வருவதான அட்சரங்களும் லெக்கங்களும் ஐம்பத்தோரட்சரங்களென்று விளங்கிவருகிறது அது போல 1-வது உயிரெழுத்துக்குரிய தனி அட்சரங்களையும் 13-வது மெய் எழுத்துக்குரிய அட்சர லெக்கத்துடன் 3வது உயிரெழுத்து சேர்ந்துவந்த தனி அட்சரங்களையும் 11-வது உயிரெழுத்துக்குரிய தனி அட்சரங்களையும் 11-வது மெய்எழுத்துக்குரிய தனி அட்சரங்களையும் 18-வது மெய்யெழுத்துக்குரிய அட்சர லக்கத்துடன் 4-வது உயிரெழுத்துசேர்ந்து வந்த தனி அட்சரங்களையும் 3வது மெய்எழுத்துக்குரிய தனி அட்சரங்களையும் ஒன்றுசேர்த்துக்கொண்டு அத்துடன் 11வது மெய்எழுத்துக்குரிய அட்சரலெக்கத்துடன் 1வது உயிரெழுத்துச்சேர்ந்து வந்த தனி அட்சரங்களையும் 4வது மெய்யெழுத்துக்குரிய அட்சரலெக்கத்துடன் 3வது உயிரெழுத்துச் சேர்ந்துவந்த தனி அட்சரங்களையும் 9வது மெய் எழுத்துக்குரிய அட்சர லெக்கத்துடன் 1-வது உயிரெழுத்து சேர்ந்து வந்த தனி அட்சரங்களையும் 4வது மெய்யெழுத்துக்குரிய அட்சர லெக்கத்துடன் 3வது உயிரெழுத்து சேர்ந்து வந்த தனி அட்சரங்களையும் ஒன்று சேர்த்து வருவதான மூலமந்திர அட்சரங்களுடன் சுவாஹா என்று சேர்த்து மந்திரிக்க இறங்கிய விஷமானது மேலே நோக்கிச் செல்லும்.

## விஷந்தீண்டியவனை நேரிற் பார்க்காமல் விஷமிறக்க வேண்டிய விதி.

ஒருவனுக்கு விஷந்தீண்டினால் ஷை இடத்திற்குப் போகாமலே ஷையானுடைய பெயரைக் கேட்டு விஷந்தீண்டியவனை அரவமாகவும் தன்னைக் கெருடனாகவும் மனதிற் பாவித்துக்கொண்டு கெருட பகவானைத் தியானம்பண்ணி அரவத்தின் படத்தின்மீது மகாரமும் கண்டத்தின்மீது சிகாரமும் உடலின்மீது நகாரமும் மனக்கண்ணினால் எழுதி மூலமந்திர தியானம் அரி-ஓம்-றீம்-நசி-மசி சுவாஹாவென்று கூஅ உருவேற்ற விஷமானது நிவாரணமாகும்.

விஷந் தீண்டிய தென்பதாய் தன்னிடத்தில் தெரிவித்துக்கொண்டவனை ஓர் நதி குளங்களில் ஸ்நானஞ்செய்யச்சொல்லி ஷையானைத்திரும்பிப் பார்க்காமலே போகும்படி சொல்ல, அந்த இடத்திற்குப் போகுமுன் விஷம் ஷையானுக்கு நிவாரணமாகிவிடும்.

## விஷமிறங்குவதற்கு மோதிரம்,

ஆதிவாரத்தன்று காலை நாக மல்லிகைச்செடிக்கு முன்புபோய்க் கல்வைத்து, தேங்காய்பழத்துடன் கற்பூரதிபஆராதனை கொடுத்து ஷை செடிக்குக்கன்னிநூற்ற நூலாற் காப்புகட்டி சிவஓம் சுவாஹா வென்று கெருடதியான மூலமந்திரத்தை ௲அ உருச்செபித்து ஷை செடியின் வடக்குவேரை எடுத்துவெள்ளியிலாவது தங்கத்திலாவது தாயத்துச்செய்து அதிலடைத்துக் கையிற் கட்டிக்கொள்ளவும்.

விஷகடியுண்டவன் வந்தால் அவனதுசிரசிலிருந்து பாதம்வரை ஷை தாயத்தை வைத்து ௱அ தரம் கீழ்நோக்கித்தடவினால் விஷமிறங்கிவிடும். ஷை வேரைப் பசுவின் பாலிலரைத்துக் கோருசு மருந்தக் கொடுக்க விஷமிறங்கிவிடும்.

## விஷமிறங்கமூலிகை.

குப்பைமேனிவேர், கள்ளிவேர், நீலிவேர், கருநொச்சிவேர் கார்த்திகைக்கிழங்கு, அழிஞ்சிவேர், காஞ்சொறிவேர் இந்த ஏழு வேரையும் சமமாய்ச் சேர்த்துக் குழியம்மியில் மைபோலரைத்துச் சுண்டக்காய் அளவு உருண்டை செய்துகொண்டு விஷந்தீண்டியவர்களுக்கு வெற்றிலையில் வைத்து அருந்தச்செய்ய உடனே விஷமிறங்கிவிடும் பத்தியம் கடுகு, நல்லெண்ணெய், கரப்பான் பதார்த்தங்கள் ஒரு வாரம்வரை நீக்கியிருக்க வேண்டும்.

## விரியன் கடிக்கு மூலிகை.

தைவேளையிலை, குன்றுமணியிலை, இவ்விரண்டையுஞ் சமனிடைபறித்து இடித்துச்சாறுவாங்கி வேளையொன்றுக்குஅரைக்கால் படி வீதம் மூன்றுவேளை கொடுக்க விஷமிறங்கிவிடும்.

### மற்றொருவிதம்.

வெண்கொழுஞ்சியிலை, குன்றுமணியிலை, வாகைப்பூவுஞ்சமனிடைபிடுங்கி மூன்றுஞ்சேர்த்து இடித்துச்சாறுவாங்கி வேளையொன்றுக்கு வீசம்படிவீதம் மூன்றுவேளை சாப்பிட விஷமிறங்கிவிடும்.

### மற்றொருவிதம்.

குப்பைமேனியிலை, பாகலிலை இவ்விரண்டும் சமனாகக்கொண்டுவந்து இடித்துச் சாறுவாங்கி நேரமொன்றுக்கு வீசம்படிவீதம் மூன்றுதரம் அருந்தச்செய்ய விஷமிறங்கிவிடும்.

### மற்றொருவிதம்.

ஈருள்ளி, மூக்கரச்சாரணைவேரையுங்கோழியவரைச்சாறுவிட்டுத்தட்டி வேளையொன்றுக்கு ஒருசங்குவீதம் மூன்றுவேளைசாப்பிடக்கொடுக்க விஷமிறங்கிவிடும். ஷை சாறுடன் சிறுநீர்சமஞ்சேர்த்துக் கொதிக்கவைத்துத் துவாலைபோட விஷமிறங்கும் வீக்கம் வத்தும்.

## விரியன் கடிக்கு நசியம்.

மிளகு, வசம்பு, வெள்ளுள்ளி, சிண்ணி, பெருங்காயம் இவை ஐந்தையும் சமனிடைசேர்த்து இடித்து வடித்துச்சாறெடுத்து நாசி செவிகண் இவைகளில் நசியமிட விஷமிறங்கும்.

## விரியன் கடிக்குத் துவாலை.

சூரைச்செடியிலைசமூலமும் குன்றுமணிவேரும் எருக்கம்வேரும் முடக்கொத்தான் வேரும் சமனெப்பிடிங்கி, இடித்துச் சாறெடுத்துக் கொதிக்கவைத்துத் துவாலையிட விஷமிறங்கிவிடும்.

## சர்ப்பஸ்தம்பனம்.

சிறியாணங்கையின் வேர் நாகமல்லியின்வேர் கருங்குன்றிமணி வேர் செவ்வாமணக்கின் வேர் இவைகளைச் சமனிடை எடுத்து கல்வத்தில் மைபோலரைத்து அத்துடன் பச்சைக்கற்பூரம் சேர்த்துத் திலதமிட்டுக்கொண்டு சர்ப்பத்திற்கு முன்பாகச் செல்ல சர்ப்பம் தலையெடுக்காமல் ஸ்தம்பனமாயிருக்கும்

## நாய்கடி விஷமிறங்க மருந்து

நாய்கடியுண்டவனுக்கு நாயுருவி யிலையும் எருக்கிலையும் எருக்கிலை அரும்பும் இம்மூன்றையுமரைத்துக் கடிவாயில் தடவ விஷமிறங்கிவிடும்

கடிக்கவரும் நாயின் முன்பாக நாயுருவியிலையும் எருக்கிலையுங் கசக்கிப்போட, முகர்ந்து பார்த்தவுடன் மயக்கமாய் குலையாமலோடிவிடும்.

## குழந்தைகள் தோஷம் நீங்க.

ஆதிவாரங்காலையில், ஸ்நானஞ்செய்துகத்தைக் குரிச்செடியின் பக்கத்தில் பொங்கலிட்டு தேங்காய்பழம் வெற்றிலைபாக்கு வைத்து தீபதூபங்காட்டி அச் செடிக்கு மஞ்சள் நூலாற் காப்புக்கட்டி. குழந்தைகள் தோஷம் நீங்க நசிமசி சுவாகா வென்று ௱௮ உருப்போட்டு முடித்து அச் வேரைப்பிடுங்கி வெள்ளித்தகட்டில் தாயத்துச்செய்து அதிலடைத்துக் குழந்தைகளுக்குக் கழுத்திலாவது இடுப்பிலாவது கட்ட, சகல தோஷங்களும் கண்ணேறு நாவேறுகளும் நீங்குவதுடன் விஷமானது கிட்ட அணுகாது.

## பஞ்ச சீராயக் காப்பி.

சுக்கு...களஞ்சு—௧௨, இஞ்சி...களஞ்சு—௧, திப்பிலி..,களஞ்சு—௧
ஏலம்...களஞ்சு—௨ அதிமதுரம் களஞ்சு—௨

இந்த ஐந்து சரக்கையுந்தட்டி அரைப்படித்தண்ணீரிற் போட்டு அடுப்பேத்திக்கொதிக்கும்போது நாலுபலம் நாட்டுச் சர்க்கரை தூவி காற்படி தண்ணீரானவுடனே எடுத்து வடிகட்டி, அரைக்காற்படி பசுவின் பால் விட்டு அரைப்பலஞ் சீனிபோட்டு வெதுப்பத்துடன் சாப்பிட உருப்போடும்போது மேறின உஷ்ணாந்தணியும் தேகபுஷ்டியாகும்.

## பஞ்சபூத தேவதைகளில் பஞ்சாட்சர உடல்சக்கர விளக்கம்.

1. **ஓங்காரம்**

என்பது பிரணவ மாகிய மூலாதார ஓங்காரம் குதத்திற்குங் குய்யத்திற்குமநடு.

2. **பிருதிவுக்கு**

| | |
|---|---|
| இடம் | கால் |
| நிறம்- | பொன்னிறம் |
| வடிவு- | நாற்கோணம் |
| தரம்- | பாலன் |
| பக்ஷி- | வல்லூறு |
| உயிரெழுத்து- | அகாரம் |
| தெய்வம்- | பிர்மா |
| சத்தி- | சரஸ்வதி |
| பஞ்சாட்சரம்- | நகாரம் |
| பீஜாட்சரம்- | லம் |
| சுவை- | இனிப்பு |
| அட்சரத்தொகை | ௯ |
| நாழிகை | கஇ |
| ஆருதாரம்- | சுவாதிஷ்டானம், லிங்கபீடம் |

3. **அப்புவுக்கு** (ம)

| | |
|---|---|
| இடம்- | வயிறு |
| நிறம்- | வெண்மை |
| வடிவு- | எட்டாம்பிறை |
| தரம்- | குமரன் |
| பக்ஷி- | ஆந்தை |
| உயிரெழுத்து- | இகாரம் |
| தெய்வம்- | விஷ்ணு |
| சத்தி- | லெட்சுமி |
| பஞ்சாட்சரம்- | மகாரம் |
| பீஜாட்சரம்- | வம் |
| சுவை- | உவர்ப்பு |
| அட்சரத்தொகை | ௰௧ |
| நாழிகை | கவ |
| ஆருதாரம் | மணிபூரகம் உந்திக்கமலம் |

4. **தேய்வக்கு** (சி)

| | |
|---|---|
| இடம்- | மார்பு |
| நிறம்- | சிகப்பு |
| வடிவு | முக்கோணம் |
| தரம்- | அரசன் |
| பக்ஷி- | காகம் |
| உயிரெழுத்து- | உகாரம் |
| தெய்வம்- | உருத்திரன் |
| சத்தி- | பார்வதி |
| பஞ்சாட்சரம் | சிகாரம் |
| பீஜாட்சரம் | ரம் |
| சுவை | துவர்ப்பு |
| அட்சரத்தொகை | ௪ |
| நாழிகை | ௧ |
| ஆருதாரம் | அனாகதம் இருதயகமலம் |

5. **வாய்வக்கு** (வ)

| | |
|---|---|
| இடம் | கழுத்து |
| நிறம் | நீலம் |
| வடிவு | அறுகோணம் |
| தரம் | மூப்பு |
| பக்ஷி | கோழி |
| உயிரெழுத்து | எகாரம் |
| தெய்வம் | மகேஸ்வரன் |
| சத்தி | மகேஸ்வரி |
| பஞ்சாட்சரம் | வகாரம் |
| பீஜாட்சரம் | யகாரம் |
| சுவை | புளிப்பு |
| அட்சரத்தொகை | ௰௬ |

| | |
|---|---|
| நாழிகை | ரு |
| ஆதாரம் | விசுத்தி |
| கண்டஸ்தானம். | |

6. ஆகாயத்துக்கு (ய)

| | |
|---|---|
| இடம் | கழுத்து |
| நிறம் | படிகம் |
| வடிவு | வட்டம் |
| தரம் | மரணம் |
| பக்ஷி | மயில் |
| உயிரெழுத்து | ஓகாரம் |
| தெய்வம | சதாசிவம் |
| சத்தி | மனோன்மணி |
| பஞ்சாட்சரம் | யகாரம் |
| பீஜாட்சரம் | ஹம் |
| சுவை | கைப்பு |
| அட்சரத்தொகை | யஉ |
| நாழிகை | இ |
| ஆருதாரம் | ஆக்ஞை |
| லலாடஸ்தானம் | |

ஆருதாரம் ஆறிலும் ஆறு எழுத்தும் ஆறுதெய்வமும் ஆறுவீடும் அதில் ஐம்பத் தோரக்ஷரமுங்கண்டு கொள்ளவும் மேற் கூறியவைகள் பஞ்சபூதச் சககரங்களாக வும் அஷ்டகர்மச்சக்கரங்க ளாகவும், சிதம்பரச்சக்கர ங்களாகவும் விளங்கும்.

### ஆருதார விளக்கம்.

குதத்திற்கும் குய்யத்திற்கும் நடு ஓங்கார சொரூப வட்டமா யிருக்கும்.

ஓங்காரத்தில் அகார உகரர மிரண்டு அட்சரங்களிருக்கும் அகாரத்தின் மீது கணபதியும் உகாரத்தின் மீது வல்லபையும் எழு ந்தருளியிருப்பார்கள் ஆறிதழ் கமலம்.

### சுவாதிஸ்டானம் லிங்கபீடம்.

நாற்சதுரமாயிருக்கும் அதின்மத்தியில் நங் லங் என்ற பீஜாட் சரங்களிருக்கும் நங் என்ற அட்சரததின் மீது பிர்மாவும், லங் என்ற அட்சரத்தின் மீது சரஸ்வதியும் வீற்றிருப்பார்கள் பிருதி. வுஸ்தானம் பொன்னிறம் நகாரம் நான்கிதழ்கமலம்-

### மணிபூரகம் உந்திக்கமலம்.

ஏழாம்பிறைக் கோணமாயிருக்கும் அதன் நடுவில் மங் வங் என்ற இரண்டு அட்சரங்களிருக்கும் மங் மீதில திருமாலும் வங் மீதில் லெட்சுமியும் வீற்றிருப்பார்கள், அப்புஸ்தானம் பளிங்கு நிறம் பத்திதழ் கமலம்

### அனுகதம் இருதயம்.

முக்கோணமாயிருக்கும் அதன்நடுவில் சிங் ரங் என்ற இரண்டு அட்சரங்களிருக்கும் சிங் மீதில் ருத்திரனும், ரங்மீதில் 'பார்வதியும் வீற்றிருப்பார்கள்தேயுஸ்தானம்அக்கினிநிறம்பனிரண்டிதழ்கமலம்.

## விசுத்தி கண்டஸ்தியானம்.

அறுகோணமாயிருக்கும் வங் யங் என்ற அட்சரங்களிருக்கும் வங் மீதில் மயேஸ்வரனும், யங் மீதில் மயேஸ்வரியும் வீற்றிருப்பார்கள். வாயுவுஸ்தானம் பதினறிதழ்கமலம் நீலநிறம்.

## ஆக்ஞை லலாடஸ்தானம்.

பிறைபோன்றதாயிருக்கும் யங் ஹங் என்ற அட்சரங்களிருக்கும் யங் மீதில் சதாசிவனும் ஹங்மீதில் மனோன்மணியும் வீற்றிருப்பார்கள் வாயுவுஸ்தானம் மூன்றிதழ் கமலம் புகை நிறம்

ஓம் என்பது சூக்கும பஞ்சாட்சரம் அகார, உகார, மகார, விந்து, நாதம் ஆக இவ்வைந்தும் வியஷ்டிப்பிரணவம் இதுமூன்றுங் கூடிப்பிறந்தது ஓங்காரமே சமஸ்டிப்பிரணவ மெனக்கொள்க அகாரம் சிவமூலம் உகாரஞ் சத்திமூலம், மகாரம் சிவசத்திமூலம், விந்தும் நாதமும் ஏகவஸ்து, சூரியகலையானது உகாரம், சந்திரகலையானது அகாரமென் றறிக.

## மூச்சுக்குத்துப் பிடிப்பு நீங்குவதற்கு

## மந்திர தியானம்.

### மூலமந்திரம்.

ஹரி ஓம் கும்பம் உருள குடம் உருள சங்குருள சக்கரமுருள ஓட்டு ஓட்டு உன்னையும் என்னையும் படைத்த பரமேஸ்வரனுணை சுவாஹாவென்று நியமித்து உருப்போட்டுச்சித்தியாக்கிக் கொள்ளவும்

### பூஜாவிதி.

சுக்கிரவாரம் காலையில் ஸ்நானஞ்செய்து அனுஷ்டானமுடித்து, நாற்பட்டுடுத்தி வடக்குமுகமாயிருந்து தேங்காய்பழம் வெற்றிலை பாக்குவைத்துக் கற்பூர தீபதூபங்கொடுத்து மேற்கண்டமூல மந்திரத்தை நாள் ஒன்றுக்கு ௧௦௮ உருவீதம் ஒரு மண்டலஞ் செபித்துவரச் சித்தியாகும் அப்படிச் சித்தியாக்கிக் கொண்டபின் எவருக்காவது மூச்சுக்குத்து யேற்பட்டு நடக்க முடியாமலும் பக்கந்திரும்பமுடியாமலுமிருந்தால் அவர்களுக்கு மூச்சுக்குத்து பிடிக்கும் விதம்.

புளியாக்கையாவது பூவரசு ஆக்கையாவது சோழத்தட்டையாவது மூன்றிலொன்றைக் கொண்டுவரச்செய்து அதை இரண்டாய்ப் பிளந்துகொண்டு மூச்சுக்குத்து ஏற்பட்டவனைத் தன்னெதிரில் நிறுத்தி மற்றொருவனை அவன் முன்பாக நிறுத்தி இரண்டாய்ப் பிளந்த ஆக்கையை அவனது இடுப்பிலும் மற்றொருவனது இடுப்பிலும் வைத்து ஓர் பெரு விரலைக்கொண்டு அவ்விருவர்களையும் அழுத்தச்செய்து தான் நேரில் நின்று ஓர் பிரம்புக்கோலை வைத்துக்கொண்டு மேற்கண்ட மூலமந்திரம் ௲௮ உருச்செபிக்க இரண்டாய்க்கிழித்து இடுப்பிலொட்டியிருந்த ஆக்கை ஒன்றுசேர்ந்து ஒட்டிவிடும் அப்போது அதை இரண்டாய்முறித்துக் கீழேபோட்டு மூச்சுக்குத்துள்ளவனை மூன்றுதரம் தாண்டச்சொல்லி திரும்பிப் பாராமல் சீ சீ சீ போ போ போவென்று சொல்லிப்போகச் சொன்னவுடனே மூச்சுக்குத்து நீங்கிவிடும் இந்தமாதிரி மூன்று வேளை செய்ய மூச்சுக்குத்துச் சொல்லாமலோடிவிடும்.

## சிதம்பரச்சக்கரம், சடாட்சரச்சக்கரம்.

### போடும்விதி.

அகாரம் — ௧

| | | |
|---|---|---|
| க—௨ | த—௮ | ல—௰௪ |
| ங—௩ | ந—௯ | வ—௰௫ |
| ச—௪ | ப—௰ | ழ—௰௬ |
| ஞ—௫ | ம—௰௧ | ள—௰௭ |
| ட—௬ | ய—௰௨ | ற—௰௮ |
| ண—௭ | ர—௰௩ | ன—௰௯ |

இதில் சிதம்பரச் சக்கரம் அடைக்கும்போதும் சடாட்சரச்சக்கரம் அடைக்கும்போதும் எழுத்துக்கு யேற்பட்ட லெக்கத்தைச் சக்கரத்துக்குள் போட்டு அடைத்து எந்தப்பக்கம் பார்த்தாலும் ஐம்பத்தொன்று சரியாயிருக்கும்.

தேவி ஆருடம் முற்றிற்று.

# உரிமையுரை.

உலகத்தில் சர்ப்பத்தால் கடிபட்டு கொடிய விஷமேறப்பெற்ற வாகளும், பேய் பிசாசுகளால் பிடிக்கப்பட்டவர்களும் பலவித ரோகங்களாற் பீடிக்கப்பட்டவர்களும், அத்துன்பங்கள் நீங்கி ஆரோக்கிய முடையவர்களாய் நீடூழிகாலம் வாழ்வதற்கு ஏற்ற கருடமந்திரங்களையும், விஞ்சை மந்திரங்களையும், மூலிகைகளையும் மருந்துகளையும் அவற்றை உபயோகிக்கும் முறைகளையும், அவற்றிற்குரிய யந்திர மந்திரங்களுடன் விளக்கமாகக்காட்டும் ஒன்பது வகையாரூடங்கள் அச்சிடப்பெற்றிருக்கின்றன.

அவையாவன ! சித்தாரூடம், சர்ப்பாரூடம், மந்திராரூடம், கெருடாரூடம், கெருட பஞ்சாட்சர ஆரூடம், சத்தியாரூடம், சிவ ஆரூடம், தேவியாரூடம், நாகராரூடம் என்பனவாம்.

இவைகளிற் கைதேர்ந்த சமையானந்தசாமிகளின் மாணாக்கரும் மாந்திரீக சித்திபெற்றவரும் தற்சமயம் விஷரோகத்தை நிவர்த்தி செய்யக்கூடியவரும் பிணியுளோர்களுக்கு மந்திர சக்தியினல் சௌக்கியப்படுத்தக்கூடியவரும் பெண்களுக்குப் பேய்பிசாசுகள் பிடித்தால் விரட்டுவதற்கு எந்திரங்கட்டக்கூடியவரும் புண்புரைகளுக்கு மந்திரிக்கக் கூடியவரும் குழந்தைகளுக்குச் சீர்தட்டினல் மந்திரக்கயிறுபோட்டுச் சௌக்கியப்படுத்தக் கூடியவரும் திருநெல்வேலிஜில்லா கோவில்பட்டித்தாலூகா புதூர்ஜமீன் கஸ்பாவில்பூர்வமாயிருந்த லேட் போலீஸ் எட்கா ப. திருமலைமுத்துப்பிள்ளையவர்கள் குமாரரும் போஸ்டெல் டிபார்ட்டுமெண்டில் வேலைபார்த்து வந்தவரும் தற்சமயம் மதுரையைச்சேர்ந்த பிராட்டியாள்பத்து கிராமத்திலிருப்பவருமான விஷரோக நிவர்த்திசெய்யு மாந்திரீகர் கருப்பையாபிள்ளையவர்கள் மந்திர சக்தியினல் மேற்கண்ட ரோகங்களெல்லாம் நிவர்த்தி செய்யக்கூடிய வல்லவர் அவரிடத்திலும் சில ஆரூடங்கள் ஓலையேட்டுப் பிரதிகளிலிருந்து வாங்கிப் பரிசோதித்து அச்சிடலானது இந்நன்றியை யான் என்றும் மறக்கற்பாலதன்று.

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோன்

புஸ்தகஷாப் புதுமண்டபம் மதுரை.

உ

குமரன் றுணை,

ஸீதாராம தபோவன
வாசக சாலை.

உரோமரிஷி திருவாய்மலர்ந்தருளிய

# நாகராரூடம்ாய்.

## மந்திர சக்கரங்களுடன்

மதுரைத் தாலூகா பிராட்டிபத்துக் கிராமத்திலிருக்கும்
ப. திருமலைமுத்துப்பிள்ளையவர்கள் குமாரர் உபாத்தியாயர்
விஷரோக நிவிர்த்தி மாந்திரீகர்
கருப்பையா பிள்ளையவர்கள்.
விருப்பத்தின்படி;

மதுரை வித்வான்
த. குப்புசாமி நாயுடு அவர்களால்
பரிசோதிக்கப்பெற்று

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்
இ. ராம.
குருசாமிக் கோனர்
அவர்களாற்றமது
மதுரை வடக்குமாசி வீதி
ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது-
1922.

*Registered Copy Right.*

உ

பரமபதிதுணை.

உரோமரிஷி திருவாய்மலர்ந்தருளிய

# நாகாரூடம்ராய.

காப்பு.

ஆகுவா கனனு மெங்க ளரிதிரு மருகன் மிக்கோன்
பாகுநற் கரும்பு தேங்காய் பழமவ லமுது செய்வோன்
வாகுறுங் கந்தன் முன்னோன் மதகரி முகனைப் போற்றி
நாகரா ரூடந் தன்னை நலம்பெற வுலகிற் சொல்வாம் (1)

முருகனார் பாதங் காப்பு முத்தமிழ்க் குரியோன் காப்பு
கருதுபத் திரைகோன் காப்பு காநமீ யுவற்குத் தேற்றுங்
குருபர னிசைகேட் டாடுங் கோளரா முதல்வன் காப்பு
மருவரா வணையான் காப்பு மலரவன் தாள்கார்ப் பாமே (2)

அட்டநா கங்கள் நாம மையனை யுமையாள் கேட்க
இட்டமாய் வதனம் நோக்கி யீசுரன் மொழிந்த நூலை
வட்டமாங் கடல்நீர் தூய்த்த மாமுனி வடநூற் செய்ய
திட்டமா யதனை யானுஞ் செந்தமி ழாகச் செய்தேன். (3)

ஆதியி லுமையா ளுக்கிங் கருளினு ரானன் பாகச்
சோதியாம் படமெ டுத்தே துலங்குநா கங்க ளெட்டும்
ஓதிப சேட னென்று வொன்பது பேர்பி றந்தார்
நீதிசேர் வழியுள் ளார்க்கு நினைத்தது கொடுக்க வல்லார். (4)

ஆக்கையும் பருத்து நீண்டே யாயிரம் படங்கள் தாங்கி
நாக்கது மிரண்ட தாகி நலமுள்ள கெந்தந் தானும்
தாக்குமுப் பத்தி ரண்டு தாமுறும் விடப்பன் னுன்காம்
நோக்கிரு கண்கள் காதாய் நுவல்விஷம் பல்லிற் றுமே. (5)

வேறு.

ஆல முடைய அரவத்தி னரசுமட்ட நாகமுமேற்
சால வவர்கள் பெயர்களையுந் தக்க குணமுந் தகைமையுடன்

வால வயது மபமிருத்தும் வளருங் கெர்ப்பந் தரிப்பதுவும்
நீல விழிசேர் பெண்ணுனின் நிறமும் புவியில் விளம்புவமே. (6)

கற்றைச் சடையோ னுடையாட்குக் கருதி யுரைத்த விந்நூலை
வெற்றி யுடைய குறுமுனிவர் விளங்கமொழிந்தார் விரிகடல்பொன்
மற்ற தறிந்து பாந்தள்முடி மணியி னொளியும் பற்குறியும்
உற்ற விட்ப்பை களின்குறியு முயர்த்தா டியல்பு முரைத்திடுவாம் ()

வேறு.

அட்டமா நாகந் தம்மி லாணினம் பெண்ணி னங்கள்
திட்டமா யுமைய வட்குச் சிவபிரா னுரைத்த வாறு
வட்டமா யாடும் பாந்தள் வங்கிஷம் வகுத்துப் பார்த்தே
இட்டமாய் முனிவர் கோமா னிசைத்தவா றிசைக்கின் றேனே. (8)

வேறு.

பெட்டை கடைக் கண்சிவந் திருக்கும் பின்னே அஞ்சில் புடைத் திருக்கும்
முட்டைப் பக்க லடைகிடக்கும் மூச்சா லுளுந்து வசடைபெழும்
வட்ட மிடுமே யாணரவு மலர்ந்த கடைக்கண் கறுத்திருக்கும்
சட்டி லடங்குங் கடிகொடிதாங் கண்டு பார்த்துத் தெளிவீரே. (9)

வேறு.

சேடனே டனந்த னென்றுஞ் செய்யவா சுகியே யென்றும்
நாடுறு தக்க னென்றும் நவிலுசார்க் கோட னென்றும்
நீடுயர் சங்க பாலன் நிகழ்மஹா பற்பன் பற்பன்
வீடுயர் குளிக னென்றும் விளங்குவ ரொன்பான் பேரே. (10)

ஏழிசைச் சாம கானத் தினிப்புறுஞ் சிவனூர் பூணுய்
ஆழிய வேணி கான மவாயரி யணையா யென்றும்
வாழிய நாக மேலோர் வழியாா வெல்லாங் கானம்
பாழிய செவிக்கொண் டின்பாய்ப் படமெடுத் தாடுங் காணே. (11)

எரிவிடக் கருநா கந்தா னிராகுவி னமிச மாகும்
அரியதோர் கேதுமைந்த னுகுமே செந்நா கந்தான்
திரியிவர் மூச்சுப் பட்டால் திகழ்பொழில் கரிந்து போகும்
மரியுமுற் படும்பி ராணி வல்விடந் தீரா தென்றே. (12)

வேதிய னுடும் போது மிளிர்படம் மேலே நோக்குந்
தீதிலா வரச னுக்குத் திகழ்படம் நேராய் நிற்குங்
கோதிலா வணிக னுக்குக் கொஞ்சமுள் வளைந்தி ருக்கும்
மேதையா முழவ னுக்கு மிகவளை படம தாமே. (13)

வேதியன் றனக்குப் புள்ளி விளங்குபொற் கண்ண தாகும்
பேதமி லரச னுக்குப் பெரும்புள்ளி சிவந்த கண்ணும்
கோதிலா வணிக னுக்குக் குறுப் புள்ளி வெள்ளிக் கண்ணும்
நீதிசே ருழவ னுக்கு நீனிறக் கண்ண தாமே (14)

அக்கினி மறையோன் றெய்வ மரசனுக கரியே தெய்வம்
பக்கமார் வசிய னுக்குப் பதுமவா கனனே தெய்வம்
மிக்கதோ ருழவ னுக்கு விளங்குமிந் திரனே தெய்வம்
துக்கமார் பறைச்சா திக்குத் துட்டதே வதையோ தெய்வம். (15)

அந்தணற் காறு கெந்த மரசனுக் கெட்டுக் கெந்தம்
சுந்தர வணிக னுக்குத் தோன்றிடுங் கெந்த மெட்டு
அந்தமில் சூத்தி ரற்கு அவனியி லாறு கெந்தம்
பிந்திய பறைய னுக்குப் பேசிய கெந்தம் நாலே. (16)

இந்தநாற் சாதிப் பாம்பு மியல்புட னெத்தி ருக்கும்
மந்திரத் தடங்கி நிற்கும் மருந்துக்கும் விஷமி றங்கும்
அந்திய பறைப்பாம் பாணைக் கடங்கிடாக் கெட்ட சாதி
பொந்துவே லிகளில் வாழும் புழுமுது வுண்ணும் பாரே. (17)

சோதிநால் விதப்பாம் புக்குந் தோன்றிய விஷப்பல் நாலில்
ஏதிநேர் மடக்குப் பற்க ளிரண்டுநேர் பல்லி ரண்டாம்
நீதிசே ரரவந் தீண்டில் நேருறும் பற்கள் பட்டால்
வாதியா விஷமி றங்கும் மடக்குப் பற்படின்மீ ளாதே. (18)

சாலெட்டு மூலகந் தன்னிற் றுன்விளை விஷத்துப் பற்கள்
நாலெட்டுங் காளி காளாத் திரிநமன் தூத னுகும்
மேலெட்டும் விஷப்பல் போக விலக்குப்பல் விரைய துண்ணும்
சூலெட்டும் விரியன் குஞ்சு தோன்றிடு முதுகிற் றுனே. (19)

வேறு.

விரிந்த விரியன் முதுகுதனில் வெகுவாங் குஞ்சு பலவுண்டாம்
வருந்தி மாத மொன்றானல் மகுடமாகித் தோலுரிக்கும்
திருந்த விளமை பிறந்துவருஞ் செகத்திற் பிழைத்த லரிதாகும்
புரிந்த திவர்க்கு வரும்பகையைப் போத வுரைப்பே னடைவாவே.

அடவிக் கரடி செந்நாயு மான காகங் கூகையுடன்
நடைகொள் மிருகக் குளம்பாந்தை நாடு மின்ன லிடிவெள்ளம்

துடரும் ஊரி மான்பன்றி தோன்றுங் கெருடன் மயில்போத்து
வடுவில் நரிப் பகைதப்பில் வயது நூற்றி யிருபதென்னே. (21)

என்னு மறையோன் சிவாலயத்தி லிருக்குந் தேன்பால்பழமருந்தும்
மன்னன் மரத்தி லிருந்தாடி வந்தபல்லி பூச்சி யுண்ணும்
உன்னும் வசியன் மலையிலுற்றேற யுண்ணுங் கோழி முட்டைவெலி
பன்னு முழவன் புற்றுறைந்து பகருந் தவளை மீனுண்ணுமே. (22)

உணரு மறையோன் வெண்ணிறமா முற்ற நாவி மணம்வீசும்
தணவா வரசன் பொன்னிறமாம் தாழை மலரின் வாசமுறும்
மணமார் வசியன் செந்நிறமாம் மணமே வீசும் பாதரியாம்
குணமா யுழவன் கரியநிறங் குலவு மிலுப்பைப் பூமணமே. (23)

பூவின் மறையோன் வானோக்கும் பொறிபார் படத்திற் சங்குவளை
தாவு மரசன் நேர்நோக்குஞ் சங்கோ டாழி தாம்படத்தில்
பாவும் வசிய னிருபுறமும் பார்க்கும் படத்தின் விற்பொறியும்
மேவு முழவன் நிலம்பார்க்கும் விரிந்த படமாம் புள்ளடியே. (24)

அடியாம் பல்லில் விஷம்நிற்கு மாடும் போது கடைக்கண்ணில்
வெடியாங் காளி காளாஸ்திரி மிக்க ஏம னெமதூதன்
துடியாம் மேல்வா யலகுதனிற் றோன்றும் நஞ்சுப் பண்ணுன்காம்
கொடிதாம் பல்லுத் துவாரமதின் குழலி லொழுகி வரும்நஞ்சே, ()

ஆடி யானி யறுபதுநா ளாண்பெண் கூடித் தானிருக்கும்
கேடில் புரட்டை யற்பசியிற் கெர்ப்பந் தரிக்குங் கார்த்திகையில்
நாடு சூலா யிருநூற்று நாற்பத் தெட்டே முட்டையிடும்
நீடும் வெள்ளை யாண்முட்டை நிறம்பொன்னும்பெண்முட்டையதே

வேறு.

இட்டமுட் டைகளேழ் நாளி லிருநூற்றே டிருபத் தெட்டும்
திட்டமா யுண்ணும் நான்குந் திரிந்துகூ ழாகிப் போகும்
எட்டுநாள் களிற்பன் னூறு மிபல்புறப் பொறிக்கும் பாம்புக்
குட்டிக ளாறு நாளிற் குலவிடும் வெளியிற் றானே. (27)

தொடங்குபன் னிரண்டு நாளிற் சூரியன் றோற்ற முண்டாம்
படங்கிளர்த் தீரேழ் நாளிற் பானுவைப் பார்த்தே யாடும்
ஒடுங்கிய அறிவுதோன்றி உபதேசத் தேர்ச்சி யுண்டாம்
விடங்களுண் டாகிப் பற்கள்விளைவுற மூதிரு மன்றே (28)

பிறங்கு நான்கு குலமுந்தம் பெண்ணு மாணும் புணர்ந்தளிக்கும்
நிறங்கொ ளரவு சுத்தகுலம் நிகழ்த்து மவைதாங் குலமாறின்
கறங்க வுண்டாம் பறைச்சாதி கவினர் சாரை தனைச்சேரின்
இறங்குமுட்டை விரியனின மிவைக்கு விடந்தான் கொடிதாமே.()

பார்ப்பான் மனுடர் தலைமக்கண்டாற் படத்தைச் சுற்றித் தானெதுங்கும்
சீர்ப்பார்த் திபன்கண் டிருப்பன்சும்மா சேட்டைசெய்தா லெதிர்த்துநிற்பன்
வேர்ப்பார் தரவோ டிடில்விடுவன் மிளிர்வை சியன்வாழ் வான்மறைந்து
ஆர்ப்பா யுழவன் றிரிவ னெவ்கு மசப்படாதந் திரியவனே- (30)

உலகிற் பாம்பின் பிறப்பிறப்பு மோங்கு மறிவும் வாழ்நாளும்
குலவுந் தத்தும் வாசனையுங் கூடும் புணர்ச்சி குஞ்சு முட்டை
நலமா ருணவு சாதிநிறம் நாட்ட!முடனே படப்பொறியும்
சலமார் சாதி கடிகுணமுந் தவத்தோ ரறியப் பகர்ந்தோமே. (31)

பகரும் பிரமன் வேள்விதனிற் படமும் பொறியும் பல்விடமும்
நிகருந் தலைகா லாயிரமும் நீண்ட வுடல் வால் கண்செவியும்
முகம்வாய் கெந்தம் நாவுடனே மூக்கு மறிவுந் தொடலுணர்வும்
புகழு மொன்பான் பேர்களுமே புவியில் மெச்ச விளங்கினவே.(32)

வந்த சேடனனந்தனுடன் வாசுகி தக்கன் கார்க்கோடன்
சந்த பற்பன் மகாபற்பன் சங்கபாலன் குளிசனுடன்
அந்த வொன்பான் பேர்களிலே யனந்தன் முதலா பெண்மர்களும்
உந்து மெட்டுத் திசையினிற்க வுலகைச் சேடன் தாங்கினனே. (33)

ஆன சேடன் றன்முதல்வ னனந்தன் குளிகன் மறையோனும்
தான சங்க பாலனுடன் சார்வா சுகியும் வேந்தாவார்
மான தக்கன் மகாபற்பன் வல்லவசியன் றனவார்
கான பற்பன் கார்க்கோடன் கவின்சூத்திரனு மாவாரே. (34)

**வேறு.**

இருந்தவ ரொன்பான் பேர்க்கு மியல்புறுந் தேவிமாரைப்
பொருந்தவே மணஞ்செய் தேயெப் போதும் வாழ்ந் திருக்கவென்று
திருந்திய நாக லோகஞ் சேடனை யரசாய் வைத்துப்
பரந்த தோர் பூமி பாரம் பரமனர் தாங்கச் செய்தார். (35)

**வேறு.**

நிலைசே ராண்பாம் பானதுக்கு நேராம் வடிவத் துடனேதான்
தலைசேர் படங்க ளிரண்டருகுஞ் சரியாம் ரேகை யொத்திருக்குங்

கலைபார்பெண்பாம் பானதுக்கு காணு ம படமோர் புறமொதுங்கும்
மலையா தாடு மனிதர் கண்டால் மருண்டங் கோட்டம் பிடித்திடுமே.

வேறு.

சேணுயர் காளிப் பற்கள் தீட்டிடிற் செந்நீர் மாறும்
ஊணுகா ளாத்தி ரிப்பல் லூற்றிடி லிரத்தம் பாயும்
மாணுயர் நமன்பற்பட்டால் வருமெண்ணெய் போல்நீரோடும்
காணுதூ தன்பற் பட்டார் கருநிற மிரத்த மாமே (37)

பேதமில் காளிப்பல்லிற் பிரமனே வசிப்பன் கண்டாய்
நீதகா ளாத்தி ரிப்பல் நிகழ்நெடு மால்வ சிப்பன்
ஓதெமன்பல்லிற் ருனு முருத்திரன் வசிப்பன் மற்றைத்
தூதனு மெயிறு தன்னிற் சுகமயேச் சுரன்வாழ் வானே (38)

இடக்கணி லிந்தி ரைத்தா யியலுறும் வலது கண்ணில்
மடக்கொடி யான சத்தி மனோன்மணித் தாய்வ சிப்பள்
தடக்கவின் வலப்பா கத்திற் சண்முகன் வசிப்பன் வேறு
மடககிய விடப்பா கத்தின் மலர்மகள் வசிப்பள் காணே (39)

வேறு.

நாக்கில் வசிப்பன் கணபதியும் நன்று மிடது கன்னமதில்
ஏற்க வசிப்பான் மன்மதனருன் இயல்பாம் வலது கன்னத்தில்
தீர்க்க முடனே ரதிவசிப்பள் திடமாக் கடிக்கும் பக்குவத்தில்
காக்கும் காளி தான்வசிப்பள் கடித்தா லுறைவன் வயிரவனே. ()

கவ்விப் பிடிக்கி லவன்றனக்குக் காமத் துளபோ கினியுறைவள்
தவ்வம் பரத்தின் முழ்ம்நிற்குஞ் சாலப் பெரியோ ரருகிருக்கும்
செவ்வே கண்டு மிவன்பயந்தாற் சென்றே பூதப் பிசாசுதொடும்
பவ்வ முறவே கடியழுந்திற் பல்லு ளிருந்து விடமெழுமே. (41)

ஏய்மாண் காளி காளாத்ரி யெமனுக் தூதன் கடித்திடிலோ
பாய்மாத் திரைதொண் ணூற்றெட்டுப் படிந்து நிற்குங் கடிவாயில்
காய்மா னுடம்பில் நரம்புபற்றிக் கடிதா யேறி மிகமயக்கித்
தூய்மான் விழியா னதுகருத்து சுருண்டு கிடக்கச் செய்திடுமே. ()

ஏறு மொருபல் தோல்பற்று மிரண்டாம் பல்லோ தசைபற்றும்
வேறு மூன்றும் பல்லாகில் வெள்ளை யெலும்பு தனைப்பற்றும்
ஊறும் நாலாம் பல்லாகி லுள்ளே மூளை தனைப்பற்றும்
மீறு மிந்த வகைவிடங்கள் மேவும் நிலைகண் டறிவீரே. (43)

அறிவாங் காளி காகபத மவிர்கா ளாத்ரி முக்கோணம்
எறியு மியமன் றுரட்டியதா மியம தூதன் வில்லாகும்
குறியின் படியே கடிவாயின் குணங்க ளிதுபோ லொன்றிரண்டு
முறிமூன் றேநான் கெனின்முறைகா லரைமுக் காலே முழுக்கடியே. (44)

கடிவாய் காளி பன்னீரும் காளாத் திரியேற் செந்நீரும்
இடியா மியமன் கட்டிரத்த மியம தூதன் காரிரத்தம்
வடிவா யொருபல் லிரண்டாம்பல் மருந்து மந்திர மூன்றும்பல்
திடமாய் மீளும் நாலாம்பல் தீரா தாகும் வல்விடமே. (45)

சாரு மோலை பச்சோந்தி சாரை பச்சைப் பாம்புடனே
நீருட் பாம்பும் விடமில்லை நிகழு மற்றைப் பாம்புவிடம்
பேரும் பூரான் பல்லியெலி பிறழ்நட் டுவக்கா லியினேடு
சேரு மரணை பெருச்சாளி தேள்மூன் றூரு செய்யானே. (46)

சிலந்திப் பூச்சி சொரித்தவளை செந்நா யோனுய் மரநாய்கள்
அலைந்து சுலவுஞ் சில்வண்டோ டாடுங் குழவி தேனீய்க்கள்
சலந்தாழ் பூச்சி புழுதியுண்ணி சம்பு குரங்கு பூனைகளும்
நலந்தான் தருங்கீ ரிப்பிள்ளை காவி முதல விடந்தருமே. (47)

போரார்சு ருட்டைமண் ணுண்ணிபுடை யன்செவியன் வெள்ளிக்கோல்
நேராம் வரியன் புல்லுருவி நீடு மிரண்டு தலைமணியன்
காரார் சாரை வெண்சாரை கட்டு விரியன் கண்கொத்தி
வாரா மூக்கன் பூநாகம் மலைப்பாம் பிவைதான் சில்விடமே. (48)

எட்டெட் டறுபான் நான்குவகை யிருக்கும் பாம்பு சில்விஷங்கள்
மெட்டா நரரைப் பதினெட்டு விதமா மிருகம் பறவைகளுந்
தொட்டால் மயக்க முண்டாகும் சொல்லுங் கியான மருந்துவகை
மட்டா மயக்கந் தெளியுவணம் வகுத்தார் பதினெண் சித்தருமே.()

வேறு.

கதிரவ னுதைய மாகிக் கடிகைபன் னைந்தி னுள்ளே
அதிரவே யரவு தீண்டி லதுதான்சூத் திரப்பாம் பாகும்
விதிர்விதிர்த் தேறு மேலே விடங்கதிர் கடல்வீழ் முன்னே
எதிருறு மரவந் தீண்டி லிதுவைசி யப்பாம் பாமே. (50)

அத்தகும் வசியப் பாம்பி னுற்கடி தசையும் பற்றும்
பொத்திரு ளிரண்டாஞ் சாமம் புரவலன் தீண்டி னென்புப்

பத்தியால் விடமுமேறும் பகருமூன் ருஞ்சாமத்தில்
வித்தவே தியன்க டிப்பன் விஷமூளைக் கேரும் பாரே (51)

மந்தனுள் பகலில் நாழி வருமிரு பதுதா னுகும்
அந்தநா ளிரவு நாழி யறுபது மனந்த னேவல்
குந்தியே தீண்டு மாகிற் கொடுவிஷங் காலில் நிற்கும்
முந்தவே சொன்ன வாறு மொழிந்தன மின்னங் கேளே. (52)

வேறு.

நேய மிரவி பகலிருபா னிலவார் திங்க ளறுபதுடன்
ஆய செவ்வாய் நாழிபத்து மாக நாழி தொண்ணூறும்
தூய வரவாம் வாசுகிதான் தொடர்ந்து வந்து தீண்டிடுமால்
மாய விடமு முழங்காலின் மட்டும் நிற்கு மறிவீரே. (53)

செவ்வாய் பகலி லிருப்பதுக்குந் திகழு மிரவு முப்பதுக்கும்
அவ்வா றைம்பா னுழிகைக்கு மாகுந்தக்க னேவலதாம்
ஒவ்வா திருமேற் பற்களுமே ஊன்றி நரம்பு தனில்நிற்கும்
இவ்வா றறிந்து மருந்துமறை ஏற்ற விடந்தான் தீர்ந்திடுமே. (54)

அந்த யிரவு நாழி பத்து மான பற்பன் விடமுதுகில்
வந்து நிற்கும் புதன்பகலில் வயங்குங் கடிகை முப்பதுக்கும்
புந்தி யிரவு பத்திற்கும் புகழ்கார்க் கோட னேவலினுற்
கந்த ரத்தில் விடம்நிற்குங் கண்டு மருந்து செய்வீரே. (55)

வேறு.

பண்பதாம் புதனி ராவிற் பகலிரு பதுநா ழிக்கும்
நண்பதாங் குருவா ரத்தில் நற்பக லிரவு முற்றும்
எண்பது நாழி கைக்கு மியல்புறும் பற்ப னேவல்
கண்படு மரவந் தீண்டிற் கண்டமேல் விடமாம் பாரே. (56)

வெள்ளியிற் பகலி ராவும் விளங்கறு பதும்மே லுள்ள
கள்ளமில் சனியிற் பத்துக் கடிகையு மெழுப துக்கும்
எள்ளலில் மஹாபற் பன்ற னேவலாம் விடங்கள் தீண்டில்
விள்ளரு மூக்கில் நிற்கும் விடதாரி கண்டு தீரே. (57)

வேறு.

சனியிற் பகல்மே லிருபதுக்குஞ் சங்க பால னேவலினுல்
நனிசே ரரவந் தீண்டிடுமேல் நஞ்சு நெற்றி தனில் நிற்கும்
இனியத் தினத்தி லிராமுழுது மியங்குங் குளிக னேவலினுல்
உனியே தீண்டிற் பாம்புவிட முச்சிக் சேறி நின்றிடுமே. (58)

கடித்த வாயைத் துடைத்தாற்போற்கடிதே விடந்தீர்த் திடவல்லார்
படித்திந் நூலையறிந்துசெய்தாற் பறக்கும்பொல்லா விடமெல்லாம்
நடித்த சிவனார் மந்திரமும் நல்ல கருட பாவனையும்
கொடுத்த குருவி னருளுமுன்கைக் கொண்டுசெல்க நன்றுமே. (59)

தூதன் பாம்புகடித்ததென்று சொன்னசொல்லி னெழுத்துகளில்
தாதில் லாஒற் றெழுத்துகலைத் தள்ளி நின்ற வெழுத்தெண்ணி
ஓது மஞ்சிற் கழித்திட்டே உள்ள வெழுத்தின் தொகையதனால்
நீதி யரவ மீதென்று நெறியா லறிந்து கொள்வீரே. (60)

வேறு.

ஒன்றுதான் மிச்ச மாகி லுரைத்திடு நற்பாம் பென்றே
மன்றினி லிரண்டு மிச்சம் வந்திடிற் புடைய னென்றே
நன்றுற மூன்று மிச்சம் நண்ணிடில் விரிய னென்றே
நின்றநால் மிச்ச மாகில் நெடுவெ ழலைப்பாம் பென்றே. (61)

மிச்சமே யில்லை யாகில் விடமில்லை யென்று சொல்லு
வச்சமுன் தொகையை நாலில் வழங்கிடி லொன்று வந்தால்
எச்சபல் லொன்றும் நின்ற திரண்டெனி லிரண்டு பல்லாம்
நச்சுமூன் றினுக்கு மூன்றும் நாலுபல் நாலுக் காமே (62)

வேறு.

உறைமுன் தொகையை மூன்றிலிட வொன்று வரினே கடித்ததிரா
நிறையா விரண்டு வந்தாக்கால் நிகழும் பகலிற் கடியாகும்
அறையு மிச்ச மில்லையெனி லான விடத்தின் கடியுமில்லை
முறையே யிந்தப் படியறிந்து முயல்வீர் விடங்கள் தீர்த்திடவே. ()

கண்ட தொகையை யிரண்டிலிட்டுக் கழித்து மிச்ச மொன்றுவரில்
விண்ட விடந்தா னிடதுபக்க மேவு மிச்ச மில்லையென்றால்
கொண்ட விடந்தான் வலப்பக்கங் குறிப்பா யறிந்துக் கொண்டிறைவன்
பண்டு பகர்ந்த மருந்துமறை பரிந்தே செய்துய் விப்பீரே. (64)

மற்றத் தொகையை மூன்றிலிட்டு வகுத்து மிச்ச மொன்றுவரில்
உற்ற தோஷி லிரண்டுவரி லோங்குந் தசையிற் சரியாயின்
பற்று மெலும்பில் விஷமேறும் பரிந்தே மணிமந் திரமவிழ்தம்
சற்று மஞ்சா துளங்தெளித்து தாக்க விடந்தான் றீர்ந்திடுமே. (65)

துரித மாக வந்தவனைத் தூத னேநீ காலனேவென்
றரிதா வவனை நீகேட்கி லவன்ற னுரைதான் தூதனெனின்

மரியும் விடந்தீர்ந் துயிர்மீளும் வந்தான் கால னென்றிடிலோ
பிரியு மூயிர்தான் மீளாது பேசும் நெறியி தேர்ந்துகொள்ளே. ()

தூதன் முகந்தான் வாடிவந்து சொன்னால் விஷந்தான் றீராது
கோதி லவன்று னழுதுகொண்டுங் குழறி வரினு மவ்வாறும்
சீத முகந்தான் மலர்ந்துவரிற் றீரும் விடந்தா னுயிர்மீளும்
நீத முடனிம் முறையறிந்து நீதான் விடந்தீர்த் திடச்செல்லே (67)

விடத்தைத் தீர்க்கப் போங்காலே வேண்டும் நல்ல சகுனமது
கடித்த விடந்தீர்த் திடப்போகுங் காலிற் சகுணம் நன்றாகில்
அடுத்து விடந்தான் தீர்த்திடலா மாகாச் சகுனங் கண்டாக்கால்
மடுத்த விடந்தான் தீராது வழிகொண் டங்கு செல்லாதே (68)

அரவு கடித்த தெனுந்தூத னருகே வந்து நின்றிடுகில்
விரைவி லவன்பா லப்போது விடந்தா னில்லை யென்றுரைநீ
நிரையாம் பகல்முற் கூறதனில் நேர்ந்து வருகில் விடப்பாம்பாம்
பரிதி யிறங்கும் நேரமதிற் பகர்ந்தால் வழலை யென்றுணரே. (69)

நடையிற் செல்லும் போதுவந்து நவின்று லனந்தன் கடியாகும்
கடையில் நிற்கும் போதுவரிற் கார்க்கோ டகன்றன் கடியாகும்
மடைதா னுண்ணும் போதுவரில் வலிய குளிகன் விடமாகும்
அடைகாய் போடும் போதுவரி லடலார் பற்பன் விடமாமே. (70)

படுத்துத் தூங்கும் போதுவரிற் பற்பன் கடியாங் கண்ணுறக்கம்
விடுத்து விழிக்கும் போதுவரின் மிளிர்வா சுகியின் கடியாகும்
கொடுத்து நிற்கும் போதுவரிற் கொடிய பாலன் கடிதருத
லெடுத்து நிற்கும் போதுவரி லெழின்மா பற்பன் கடியாமே. (71)

தாது மலர்சேர் குழலுமையாள் தலைவ னருளா லகரமுதல்
ஓதும் அ-ஆ-இ-ஈ-உ ஊவும் எ ஏ ஒ-ஓ-வி-ப்
போத வுயிர்பத் தெழுத்துகளிற் புகல்தூதன்சொல்முதலெழுத்து
மோதும் விடக் கோட் பட்டோன்பேர் முதலுமொத்தால் விடமிலையே. ()

முன்னர்க் கேட்ட சொல்முதலே முதலா யிரண்டா மெழுத்தாகில்
பன்னு மொருபற் பட்டதென்றும் பார்க்கி லுடனே விடந்தீரும்
பின்னர் மூன்று மெழுத்தாகில் பிறங்கு மிருபற் பட்டதென்றும்
உன்னு லெழுச்தேல் மூன்றுபற்பட் டுளதென் றும்பார் தீர்ந்திடுமே

ஐந்தா மெழுத்தேல் நாலுபற்க ளழுந்திற் றதுதான் றீராது
வந்தே பார்க்க வேண்டாம்நீ வழலை யாறு மெழுத்தாகில்
உந்தே ழெழுத்தேல் புடையன்மண் ணுண்ணி யெட்டா மெழுத்தாகில்
பந்தோன் பானேற் சில்விடமாம் பத்தேல் விரிய னென்றுணரே. (74)

வேறு.

காற்பெரு விரலுள் ளங்கால் காறபுற வடிகெண் டைக்கால்
சாற்கொளு முழங்கால் வாழை சகனமே தொப்பூழ் தொந்தி
பாற்குட மார்பு கண்டம் பார்வையே நெற்றி யுச்சி
மேசர்கணுர் தலைமே வைந்தில் திகழுமிழ் திடமா யேறி. (75)

இறங்கிடும் வலப்பா லாக இம்முறை தெரிந்திவ் வாறே
கறங்கிடும் விடமு மேறிக் கவினுற விறங்கும் ஆனால்
மறங்கொளும் பெருவி ரற்கண் வலங்கொடே றியுமி றங்கும்
பிறங்கமிழ் தவ்வா றேறிப் பெருவிட மிறங்கும் பாரே. (76)

அந்தணன் முதல்நால் வர்க்கு மவரவர் வசிப்பி டத்தில்
முந்துறு பலிகள் செய்து முகம்புயம் தொடைபா தத்தில்
தந்திரக் குமேடாரி செய்து தகும்விட மிறக்கு வோர்க்கு
மந்திர சித்தி யாகும் வையக முணருந் தானே. (77)

பாவனைக் கொருபற் பட்டாற் பறக்குமே பல்வி டந்தான்
மாவிரு பற்கள் பட்டால் மந்திரத் தாலும் தீரும்
மூவகைப் பற்கள் பட்டால் முயல்கிரி யையுந்தான் வேண்டும்
தேவதை யோகஞ் செய்மந் திரமருந் திவையாங் காணே. (78)

நாலுபற் பட்ட தென்றால் நல்லதோர் காலம் வேண்டும்
வேலவ னருளுண் டாகின் மிகுமறை மருந்தி யோகம்
சாலவே பயனுண் டாகத் தக்கதோர் மார்க்க முண்டு
மேலதை யுலகத் தோர்க்கு விளங்கிட விளம்பு வேனே. (79)

பொன்றினன் போலப் பற்கள் பூண்டுமூச் சடங்கி நிற்கில்
சென்றவன் பால்நீ மெய்யிற் சிவப்புள விரத்தங் காணில்
இன்றவன் கையில் நெட்டி யிழுத்திடச் சுடக்கு வந்தால்
அன்றவ னுவி யுள்ளே அடங்கியுண் டென்று கொள்ளே. (80)

வேறு.

நகத்தை முதலிற் பிடித்தழுத்து நன்றாய்ச் சிவக்கக் கண்டாக்கால்
சுகத்தி லிருக்கும் முன்கையைச் சுடுகொப் புளங்க ளுண்டாகும்

முகத்தில் வேர்வை தான்றோன் றும் மோச மில்லை யென்றறிந்தே
செகத்தி லவன்ற னுபிரதனைத்திருப்பித்தருங்காரனென்றுசொல்லே

காலனை வென்றனுண்டை.

தருபொற் றலைக்கை யான்சாறுந் தகரைச்சாறும் வெள்ளெருக்கின்
மருவு மிலையின் சாறுமொன்றாப் வார்த்துக் காதில் நசியமிட
ஒருவி மறுகா தினவழியே ஒழுகி னிறப்பன் ஒழுகிலையேல்
அருகி யுயிர்தா னிருந்ததென்றே அஞ்ச னந்தான் கண்ணலிடே ()

புதிய சேலை தனைநனைத்துப் புகழ்மெய் முழுது மூடிவைத்தே
மதிகொள் மறையுங் கிரியையும்பா வனையு முறையே செய்தாக்கால்
விதிதா னல்ல விதியாகும் மேலோர் தாங்கை கண்டதிதாம்
அதிக நல்ல பாகமிதா மதனைச் சோதித் தறிந்துகொள்ளே. (83)

வேறோர் மார்க்கம் மைந்தாகேள் மிளகு சூகம் வாளமுமே
பேறூர் மகிழ விரைபொடுபேய்ப் பீர்க்கின் விரையுந் தாளிவித்தும்
ஆறு மிவைதாஞ் சமன்கூட்டி யரைத்துப் பழச்சாற் றாலுலர்த்திக்
கூறு உண்டை செய்துவைத்துக் கொண்டஞ் சனந்தீட் டிடக்கேளே. (84)

இதுகா லனைவென் றானுண்டை யிதனைச் சிறுநீர் விட்டரைத்து
மெதுவாய்க் கண்ணி லிடுதலுடன் வேட்டி நனைத்து மெய்முழுதும்
பொதிவா வைத்தா லயர்ந்தவன் புவியி லுறங்கித் தெளிந்தான்போல்
மதியோ டெழுந்து பேசுவனிம் மருந்தை யெவர்க்குஞ் சொல்லாதே. (85)

குடோரி நெற்றி தனிலாடின் குலவி ரத்தங் கருத்திருந்தால்
தொடாநீர் தெளிநீமயிர்ப்புளகந் தோன்றாதிருக்கி னடிக்கமெய்யில்
தடாதுங் கண்தான் சிவக்காதுந் தானங் கிருந்தா லுயிரில்லை
விடாத விடந்தான் கொன்றதென்று விட்டு விடுவீர்கைதானே. ()

சூடுகோடு, மீட்டான்.

ஆடுங் கெருட னிட்டமுட்டை ஆறு கிடிற்றா னீளமதாம்
நாடிக் கீழைத் திசையிலதை நவிலா தித்த வாரமதில்
தேடி யெடுத்துத் தொளைபோட்டுச் செப்பு மதனுள் நவச்சாரம்
கேடில் விராகன் மூன்றடைத்துக்கிடாரிச்சாணந் தனிற்பொதிந்தே

ஈரபா யுலர்த்திச் சுடலைக்குள் வைக்க வெந்து நீறாகும்
ஆரனு ரருளாற் சிமிழுதனி லடைத்தே யந்த நீரதனைக்
கரமா விடக்கோட் பட்டான்றன் காதில் நாசி தனிலிட்டே
உரமாய்ச் சீசீ யெனக்குழல்வைத் தூதில் விடந்தா னிறங்கிடுமே. ()

விளங்கு மிந்தச் சுடுகாடு மீட்டான் நீற்றி னுடனே தான்
துளங்குங் கருடக் கொடிப்பொடியுந் தூக்கிச் சமனாய்க் கலந்துவைத்தே
களங்கொள் கடிவாய் தனிவிட்டுக் கையாற் தேய்த்துப் புதப்பானைத்
தளங்கொள் நீறு கொடிப்பொடிசேர் தண்ணீர் குளிக்கச் சுகமாமே. (89)

காடு மீட்டா னீற்றுடனே காலன் றனைவென் றானுண்டை
யீடு செய்தோர் சட்டியிற்றீ யிட்டு விடந்தீண் டியவனெதிர்
நீட வைத்துத் துணிமூடி நிறையப் புகையைத் தானேற்றே
பாடு மொன்பான் துவாரத்தும் பாய்ந்து விடந்தான் தீர்ந்திடுமே.()

மற்றோர் மார்க்கம்மருக்கொழுந்தும் வயங்கா வரையுங்கோவையுமே
பெற்ற கிரிப் பூடும்நல்ல பெருநீ லியுமே னியுஞ்சிரார்
உற்ற கொல்லங் கோவையும்பே ருயர்ந்த கெருடக் கொடிதானுந்
துற்ற கீழ்க்காய் நெல்லிகடி துடைத்தான் பத்தும் விடமூலி (91)

விடந்தான் தீர்க்கு மந்திரமா விநித்த கெருட தியானமதை
நடந்தான் புரியுஞ் சிவனருளை நல்குஞ் சிவஓம் சுவாஹாவென்
றிடந்தான் நறும்பூ வனத்திருந்தே இலட்சம் உருவை நிதஞ்செபித்தால்
திடந்தா னொருமண் டலத்தினுள்ளே தீர்க்கும் விடதா ரியுமவனே. (92)

புண்ணாக் கிலையோ டருள்ளி பொருந்த வசம்புந் தான்கூட்டி
ஒண்ணா அறைத்துக் கைக்கொடுமுன் புற்றுற் பாந்த ளாடாது
எண்ணா வந்த யிலைகசக்கி யெண்ணெய் யுடன்கை யினிற் றடவி
நண்ணாத் துணிந்து தான்பிடிக்க நல்ல பாம்புங் கடியாதே. (93)

மற்றவ் விலையைத்தானரைத்துமதித்தேயெண்ணெய்தனிற்கொடுக்க
கொற்றப் பாம்பின் விடந்தீருங் கொடுத்து மதனுற் றீர்ந்திலையேல்
பற்றும்விஷமை தனைக்கொடுத்தாற் பையவிறங்கிப் போம்விஷமுஞ்
சுற்று முனிவர் தாமறியாச் சூட்ச முனக்குச் சொன்னேனே. (94)

வேறு மார்க்கந் தனைக்கேள்நீ மிளிர்நா யுருவி யிலைதன்னை
கூறும் பரிதி வாரமதிற் கொண்டு கசக்கித் தலையினிலே
சாறு பிழிந்தே உடம்பெங்குந் தடவி யிறக்கித் தேய்த்திடவே
ஏறும் விடந்தா னிறங்கிவிடு மிதுவோர் சூட்சஞ் சொன்னேனே. ()

அந்த நாயி னுருவியிலை யறைத்துக் கடிவாய் தனில்வைத்தே
எந்த விடமுந் தான்றேய்க்க இறங்கும் விடந்தா னப்போது

வந்த தெவரு மறியாமல் மறைவா யெடுத்துப் புதைத்துவிடின்
சிந்தை மகிழ்வாய்க் கடியுண்டோன் திறமா யுயிர்பெற் றெழுவானே. (96)

என்றன சீட னுமுனக்கே இயம்பும் நாக ராரூடம்
மன்றில் நாகப் பணிபூண்ட வரனு டகமு மரவணையான்
நன்று தருமா டலுங்கண்ட நல்லோர்க் கிந்நூல் கொடுத்திடலாம்
ஒன்றுந் தீயோர்க் கீயாதே உண்மைப் போத மாமிதுவே. (97)

வேறு.

ஆன நீலியு மாமரை குப்பையின்
மேனிகொல் லன்கோவை வெய்யகீழ்க் காய்நெல்லி
மான வாட்டித் துவாலை மகிழ்ந்திடில்
போன தேவெயில் முன்பனி போல்விடம். (98)

விடமெ ழுங்கடி வாய்வழி யோடுமே
ஓடிவி லாதுரைத் துள்ளுக் கருத்திட
அடைவ தாயகீழ்க் காய்நெல்லி யாவரை
கொடிய நீலிகொல் லன்கோவை மேனியே. (99)

கொல்லன் கோவையுட் கொண்டவன் மேனியில்
பல்லு போட்டுக் கடித்திடும் பாம்புசாம்
வல்ல முன்னைய மந்திர மோதினல்
வெல்லுங் கால விடந்தணிந் தோடுமே. (100)

மேவு நெல்லியு மேனியு நீலியும்
கோவை வேப்பங் கொழுந்துசா காமூலி
காவ லாமுன் கசக்கிறீம் வம்வம்மென்
றேவ ஆல மிறங்கிவிட் டோடுமே. (101)

கூடு நாகத்தைக் கூறிடு மிங்குவன்
பூடு டன்வசம் பும்பெரு நீலியுஞ்
சூடி யார்பெருந் தும்பையும் ஆட்டியே
வாடை தாக்கவும் வல்விஷந் தீருமே. (102)

தண்மை யாயதைச் சாணி கரைத்ததின்
வண்மை யார்தெளி வைவிட் டரைத்துமே
திண்மை ராயய்க்கடி வாயினிற் றீற்றிட
உண்மை யாய்விட மோட்டம் பிடிக்குமே. (103)

உந்து மிந்திர கோபம்வெள் ளுள்ளியில்
வந்தி டுந்தயி லத்தை வடித்தும்மே
நந்து நாக்கொடு நாசிகண் காதினில்
வெந்த வாய்செலுத் தோடும் விடங்களே. (104)

நாடு வெய்ய சினந்திகழ் நாகமுன்
போடு வார்முன் புரமெரித் தின்றவேர்
ஆடு மேகடி யாதந்த வேரினால்
ஈடு மோதிர மிட்டுப் பிடித்திடே. (105)

பாம்பி னங்களும் பற்களும் பல்விடம்
ஆம்பி றப்பிறப் பாதிய சொல்லியே
காம்ப யின்று நவில்விடந் தீர்த்துயிர்
ஓம்பு மார்க்சமும் ஓதினம் வாழ்கவே. (106)

ஓது நாகரா ரூடமு ரோமனும்
மாத வத்தனி யானிதை வாய்மையாப்.
போதர் தாஞ்சொலா துள்ளமர் மம்மெலாம்
மேதி னிக்கற மாக விதித்துளேன். (107)

சத்தி வேலொடு தந்தசி வாரூடம்
உத்த மர்க்குவப் பாச்சிறந் துள்ளது
நித்த னீலகண் டப்பெய ராலுமோர்
வித்தை நல்கினன் மேதினி யுய்யவே. (108)

ஆதி யிற்சிவ னுருமைக் கன்புடன்
ஓதும் அவ்விரு நூலுணர் வாற்கிரி
மாத னைச்சுருக் கிக்குறு மாமுனி
நாதற் கோதினள் நற்சத்தி யாரூடம், (109)

கும்ப மாமுனி மற்றதைக் கோதிலா
இம்ப ரார்ந்தசித் தர்பதி னெண்மருக்
கன்பு டன்சுருக் கிப்புகன் றூரதாம்
உம்பர் போற்றுயர் சித்தரா ரூடமே. (110)

அதனை யாய்ந்த பதஞ்சலி மாமுனி
உதைய தேவியா ரூட முரைத்தனன்

மதிதெ ளிந்ததன் வந்திரி மாமுனி
துதிமி குங்கரு டாரூடஞ் சொல்லினன். (111)

கோப மிக்குள கோசிக னம்புவித்
தாப தர்க்கெதிர் சர்ப்பரா ரூடமும்
ஞாப கங்கொளு மந்திரா ரூடமுஞ்
சோபி தம்பெறச் சொல்லி மகிழ்ந்தனன். (112)

ஆறு பேர்க ளறைந்தநூ லட்டகம்
ஏறு ரோமணி யானசொல் மித்துடன்
கூறு மாநவ கம்மிவை கொண்டலோ
தேறு சித்தர் சிறந்தனர் பாரிலே. (113)

பாக மாவுல குள்ளபன் னூல்களும்
யூக ரோம னுரைக்கிணை யாகுமோ
நாக ராரூடம் நன்றுணர் யோகிகாள்
ஆகும் நல்லா ஞனந்தம் ஓங்குமே. (114)

## விஷத்துக்கு மருந்து.

சிறியாணங்கையின் வேருக்கு சூரியகிரணத்திலாவது அல்லது சந்திரகிரணத்திலாவது, வெள்ளெருக்கு மஞ்சியினுல் காப்புக்கட்டி தூபதீபங்கொடுத்து ஷே வேரரூமற்பிடுங்கி அந்த வேரை அரையிலாவது, கையிலாவது அணிந்துகொள்ள அரவமானது தீண்டாது சர்ப்பம் படமெடுத்தாடும்போது ஷை வேரை அதன் முன்பாகப் போட்டால் ஷை சர்ப்பமானது படமெடுக்காமல் பூமியில் வைக்கோல் பழுத்தைப்போற் கிடக்கும் அந்த வேரைக் கையிலெடுத்துக் கொண்டால் சர்ப்பமானது ஓடிவிடும். ஆகையால் இந்தவேரை யாரிடத்திலுங் கொடாமல் தன்னுடைய கையிலே வைத்துக்கொள்ளவேண்டியது. அல்லது தங்கத்திலாவது அல்லது வெள்ளியிலாவது தாயத்துச் செய்து அதிலடைத்து வைத்துக்கொள்ளலாம். ஷை வேரை ஆவின்பாலிலரைத்து விஷந்தீண்டியவர்களுக்கு வேளை ஒன்றுக்கு அரைக் காற்படி வீதம் 3-வேளை கொடுக்க விஷமிறங்கிவிடும் பத்தியம் கடுகு நல்லெண்ணெய் கரப்பான் பதார்த்தம் ஒரு வாரம் வரை தள்ளுபடி செய்யவும் அப்பால் யெண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்து சகலமான பதார்த்தங்களும் சேர்த்துச் சாப்பிடவேண்டியது.

## சிவசுப்பிரமணியர் அறுகோணச் சக்கரம்.



### மூலமந்திரம்.

ஹரி ஓம் திரிபுரபவா திகழொளிபவா பரிபுரபவா பவனொளி பவா சாஹணபவா தேவாயநமாவென்று ௫௰௲ உருப்போட்டுச் சித்தியாக்கிக் கொள்ளவும்.

### பூஜாவிதி.

சோமவாரங் காலையில் ஸ்நானஞ்செய்து பட்டுவஸ்திரமுடுத்தி அனுஷ்டான ஜெபதப முடித்து மெழுகின இடத்தில் கிருஷ்ணாசனத்தில் வடக்குமுகமாய் வீற்றிருந்து தாமரைநூலிட்டு நெய் விளக்கேற்றி அதன் முன் வெள்ளித்தகட்டில் எந்திரம் வரைந்து பால், இளநீர், முதலான அபிஷேகங்களைச் செய்து தேங்காய், பழம் வெற்றிலை பாக்குடன் கற்பூர தீபங்கொடுத்து சண்முகனை மனத்துள்வைத்து பூசித்து உருத்திராக்ஷமணிகொண்டு ௱௮ உரு வீதம் ஒருமண்டலம்செபித்துக் கொண்டால் சித்தியாகும் ஆகையால் விஷங்கடிகொண்டவன் வந்தவுடனே மேற்கண்ட மந்திரத்தைச்சொல்லி ௲௮ உருப்போட்டு வேப்பிலையினால் மந்திரிக்க விஷமிறங்கிவிடும்- இந்தச் சக்கரத்தை வெள்ளித்தகட்டிலெழுதி பூஜாவிதிமுடித்து கழுத்திலாவது கையிலாவது அரையிலாவது கட்ட சகல தோஷமும் நிவர்த்தியாகும், லெட்சுமிகடாட்சமும் பெருகும் சுபம்.

## பஞ்சாட்சர ஐங்கோண சக்கரம்.




### மூலமந்திரம்.

ஹரிஓம் ரீங் கங் ஐயும் கிலியும் சௌவும் ஸ்ரீயும் ரீயும் நமசிவய தேவாய நமஹா வென்று உரு ௰௲ போட்டுச் சித்தியாக்கிக் கொள்ளவும்

### பூஜாவிதி.

குருவாரத்தில் காலையிலெழுந்து ஸ்நானஞ்செய்து பட்டுடுத்தி அனுஷ்டான முடித்து மெழுகின இடத்தில் மான் தோலாசனத்தில் வடக்குமுகமா யிருந்துகொண்டு பஞ்சலோகத் தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து இளநீர், பால் முதலான அபிஷேகஞ்செய்து மஞ்சளினுல் பிள்ளையார் பிடித்துவைத்து விபூதி குங்குமம் சந்தனம் புஷ்பஞ்சாத்தி தேங்காய் பழம் வெற்றிலை பாக்குவைத்து தூபதீபங்கொடுத்து விநாயகக் கடவுளையும் முருகக்கடவுளையும் இருதயத்தில் வைத்துத் தெரிசித்து ஐந்துமுக ருத்திராட்ச மணியினுல் ௲௮ உருவீதம் ஒருமண்டலம் செபித்துவரச் சித்தியாகும்.

அப்படிச் சித்தியானவுடன் விஷங்கடி கொண்டவன் வந்தால் மேற்கண்ட மந்திரத்தைச்சொல்லி வேப்பிலையினுல் ௲௮ உருப்போட விஷமிறங்கிவிடும் இந்தச் சக்கரத்தைத் தங்கத் தகட்டிலாவது வெள்ளித் தகட்டிலாவது வரைந்து பூஜாவிதி முடித்து கழுத்திலாவது அல்லது கையிலாவது அரையிலாவது தாயத்துச்செய்துக் கட்டிக் கொண்டால் புத்திரப் பேருண்டாகி பெருஞ் செல்வத்தையடைவார்கள்.

## சிவசுப்பிரமணியா பஞ்சாட்சர அறுகோணச் சக்கரம்.




### மூலமந்திரம்.

ஹரிஓம் அம் உம் ஐயும் கிலியும் சௌவும் ! நமசிவ:ப சரஹண பவ தேவாய நமஹா வென்று ருடைசு உருப்போட்டுச்சித்தியாக்கிக் கொள்ளவும்

### பூஜாவிதி.

சுக்கிரவாரம் காலையில் ஸ்நானஞ்செய்து பட்டு வஸ்திரமணிந்து அனுஷ்டான முடித்து மெழுகிக் கோலமிட்ட யிடத்தில் கிழக்கு முகமாயிருந்து ஷை சக்கரத்தை வெள்ளித்தகட்டில் வரைந்து பாலபிஷேகம் செய்வித்து சக்கரைப் பொங்கலும் பாயாசமுஞ் செய்துவைத்துப் பஞ்சாமிர்தமுடன் தேங்காய், பழங்களும் வெற்றிலை பாக்கும் வைத்து தூபதீபாருதனையுடன் கற்பூரதீப ஆராதனையுங் கொடுத்து தினம் ஒன்றுக்கு கூஅ உருவீதம் ஒரு மண்டலஞ் செய்து வரச்சித்தியாகும்.

அப்படிச்சித்தியானவுடன் விஷங்கடி கொண்டவன் வந்தால் மேற்கண்ட மூலமந்திரத்தைச் சொல்லி வேப்பிலையினால் கூஅ உருப்போட விஷ மிரங்கிவிடும்.

இந்தச் சக்கரத்தை தங்கத்தகட்டிலாவது, வெள்ளித்தகட்டிலாவது வரைந்து பூஜாவிதிமுடித்து தாயத்துச்செய்து அதற்குள்ளடைத்துக் கழுத்திலாவது, கையிலாவது. அரையிலாவது கட்டச் சகல பாக்கியமும் உண்டாகும்.

## விஷத்திற்குக் கெருட மந்திரம்.

அரவத்தால் விஷந்தீண்டினவனுடலைச் சிம்மாசனமாகவும் அவன் தேகத்தின்மீது மேல் நோக்கிய விஷமானது நந்தியாகவும், கெருடபகவான் சிரசிற்குமேல் அந்தரத்தில் தன்னெதிரில் நிற்பதாகவும். ஈஸ்வரன்வாக்கினால் மந்திரதியானஞ்சொல்வதாகவும், நினைத்து ஹரிஓம் சிவசிவா வாவா விஷம் நசிமசி நமசிவாய நமஹாவென்று மூலமந்திரத்தை ௱௮ உருச்செபிக்கவும்.

## பூஜாவிதி.

சனிவாரங் காலை ஸ்நானஞ் செய்து பட்டுடுத்திச் செபதபமுடித்து மெழுகிக் கோலமிட்ட இடத்தில் மான்தோல் போட்டு வடக்கு முகமாய் வீற்றிருந்து தேங்காய், பழம் வெற்றிலை பாக்கு வைத்துத் தூபதீபங்கொடுத்து ஷை மூலமந்திரத்தை ௲௮ உருப்போட்டு வந்து ஒரு மண்டலம் வரை செபித்துவந்தால் சித்தியாகும்.

அப்படிச்சித்தியானவுடன் விஷந்தீண்டி வந்தவர்களுக்கு மேற்கண்ட மந்திரத்தைச் சொல்லி ௲௮ உருப்போட்டு வேப்பிலையால் மந்திரிக்க விஷ மிரங்கிவிடும்.

## மற்றொருவிதம்.

ஓர்மொழிப் பிரம்பில் முன் சொன்ன மூலமந்திரத்தை யெழுதி உருப்போட்டு முடித்து அந்தப்பிரம்பை தீட்டண்டாத இடத்தில் வைத்திருக்கவும் விஷங்கடித்துவந்தால் அந்தப் பிரம்பினாலே தலையிலிருந்து கடிவாய் வரையிலும் மந்திரத்தைச் சொல்லித தடவிக்கொடுக்க விஷமிரங்கிவிடும், அல்லது ஒரு மனிதனிடத்தில் அந்தப் பிரம்பைக் கொடுத்தனுப்பி அவன் கையினாலே தலையிலிருந்து கடிவாய்வரை ௲௮ தரம் தடவி வர விஷமிரங்கிவிடும்.

## மற்றொருவிதம்.

செம்புத்தகட்டில் மேற்கண்ட மூலமந்திர அட்சரத்தையெழுதி அப்படியே சுத்தி செம்பு மோதிரமாக்கி பூஜாவிதியுடன் உருப்போட்டு முடித்து கையில் போட்டுக்கொண்டு ஒரு செம்பில் நிறைய தண்ணீர் கொண்டுவரச் சொல்லி இந்த மோதிரத்தினால் அதில் மந்திரத்தையெழுதி ஷை தண்ணீரைக்கடியுண்டவனுடைய சிரசில் மூன்றுதரம் புரோசித்து விபூதியில் ஷை மந்திரத்தை யெழுதிபாணித்து வேப்பிலையினால் மேற்கண்ட மந்திரத்தைச்சொல்லி மந்திரிக்க விஷமிரங்கிவிடும் பக்ஷி தோஷங்களுக்கும் இதேமாதிரி செய்யத்தோஷம் விலகும்

நாகாரூடம் ராய முற்றிற்று.

உ

பரமபதி துணை.

பதினெண் சித்தர்களில்

மகாமகத்துவம் பொருந்திய

கௌசிக முனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# சித்தராரூடம்.

மந்திர சக்கரத்துடன்

இஃது

ஐயம்பாளையத்தைச்சேர்ந்த சித்தரேவுகிராமம்

ஸ்ரீமான் S. சின்னச்சாமி நாயக்கரவர்கள்

ஏட்டுப்பிரதியின்படி.

மதுரை வித்வான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

இ. ராம.

குருசாமிக் கோனர்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசி வீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1922.

Registered Copy Right.

உ

திருச்சிற்றம்பலம்.

# சித்தராரூடம்.

காப்பு.

அத்திமா முகவன் செய்ய வடியிணைக் கமலம் போற்றிச்
சித்தரா ரூடந் தன்னிற் செப்பிய பொருளா ராய்ந்து
சுத்தமா யெவர்க்குந் தோன்றச் சுருக்கமா நொண்டிச் சிந்தா
வித்தக னருளி னாலே தமிழினில் விளம்ப லுற்றேன்.

நொண்டிச் சிந்து

திருமருதூர்வளரும் நாகலிங்கர்
சீர்பாதகமலமென் சிரசில்வைத்து
மருவுஞ்சித் தாரூடப் பொருளினை
வகுத்துச்சொல்வேனிந்த மகிதலத்தில். (1)

புண்டரிகத்தி லுறைவோன் படைப்பினில்
பொல்லாதவிஷஜெந்து வெல்லாம்நனி
விண்டுரைக்க நீகேளாய் நல்லபாம்பு
விரியன்வழலைகொம் பேறுமூக்கன் (2)

சாணகம் மூக்கன்புடையன் மண்டலி
சவுடிமயக்கராஜன் ஞாளிச்சாரை
வாணளை வாட்டுஞ்செய்யான் இருதலை
மணியன் சிலந்திபுலிமுகப்பூச்சி (3)

தேட்புள்ளி வண்டுபூரான் பச்சோந்தி
செவ்வட்டைபேய்நரிநாய் செருச்செயெலி
வாட்பல்லுப் பூனைபுலி பிலவங்கம்
வளத்திறறவளையட்டை வாசிமுதலை. (4)

அரணை நண்டுத்தெறுக்கால் முதலிவை
யல்லாதஜெந்துவு மனேகமுண்டு
உரகத்தின் பேரும்நிறமும் சாதியும்
ஊணும்மணமுமவை யுறையிடமும் (5)

படமெடுத் தாடுங்குறியும் முட்டையிட்டுப்
பருவமறிந்துபொரித் தூரும்பரிசும்
விடமுறு தந்தக்குறியும் கடித்திடும்
விதமுங்கடித்தகடி மீளாவிடமும் (6)

காலக்கடி யடக்கக்குறி வேகக்குறி
கழறியதூதரிற் காணுங்குறியும்
சீதமுள்ளமணி மந்திரத்தால் கருட
தியானத்தால்மருந்தினற் றீர்க்குஞ்செயலும். (7)

குருமல ரடிவணங்கி வகையாகக்
கூறுகிறேனிந்தக் குவலயத்தில்
மறைமலர்ப் பொருட்டுறைவோன் பயந்தருள்
மகவெனவந்துதித்த மாதவத்தினேன். (8)

## பாம்பின் பிறப்பு.

காசிபன் மனைவியரில் மிக்கான
கத்துருவயிற்றுதித்த கட்செவிகளில்
பேசிடு பெயரனந்தன் வாசுகி
பெலத்ததக்ஷகன்கார்க்கோடன்பத்மன் (9)

மாபத்மன் சங்கபாலன் குளிகன்
மானாகமிவையெட்டுந் தானுமிவற்றுள்
தீபக்கண்ண னந்தனுடன் குளிகனும்
செகத்தில்வேதியரென வகுத்தனரே. (10)

## சாதிப்பிரிவு.

வாசுகி சங்கபாலன் இருவரும்
மன்னவராமென்றார் முன்னவர்கள்
தேசுறு தக்ஷகன்மா பத்மனிவர்
தெளிந்தவணிகரென விளம்பினரே. (11)

சூத்திரர் கார்க்கோடன் பத்மனென்று
சொன்னார்களிவற்றின்முற் சொன்னபாம்பு
மூத்திடு மானாகம் பின்னாக
மொழிந்தவிடவரவங் குழைந்தபெண்ணும் (12)

## இரையெடுக்கு நாள்.

ஆதித்த வாரமனந்தன் வாசுகி
அடுத்ததிங்கட்கிழமைக் கிரையெடுக்கும்
போதுற்ற செவ்வாய்தக்ஷகன் கார்க்கோடன்
புதன்கிழமையிலிரை யுவந்தெடுக்கும். (13)

விடங்கொண்ட துளையெயிற்றுப் பத்மன்
வியாழக்கிழமைதனி லிரையெடுக்கும்
படர்ந்துசென் றிரைதேடி மாபத்மன்
பார்க்கவன் வாரத்திற் பரிந்தெடுக்கும். (14)

உணவு.

கூருஞ்சனிக் கிழமைபகல் சங்கபாலன்
குளிகனிரவிலிரை குறித்தெடுக்கும்
பூருவமறிந்த பார்ப்பார் வாயுவும்
பூமணம்இரண்டையும் புசித்திருப்பார். (15)

அரசராகுங் கிழங்கும் வண்டுமெடுத்
தருந்திமரந்தனிற்சென் றிருந்திடுவார்
இரைதேடிச் சென்றுவணிகர் ஓந்தியும்
எலியுமருந்திப்பசி நலிவகல்வார். (16)

சூத்திரர் மீன்தவளை தண்ணீர்த்
துறைதனிற்சென்றருந்து முறையிதுவே
சாஸ்திரஞ் சொன்னபடியே நாலுவகைச்
சாதியிருக்குமிடந் தனைக்கேளாய் (17)

இருக்குமிடம்.

வேதியர் கோயிலிலே மரமன்னர்
வீற்றில்வணிகர்புற்றில் நாட்டுசூத்திரர்
நீதியாய் வாழ்ந்திருப்பார் நால்வரும்
நின்றுடுங்குறிதனை நிகழ்த்துகிறேன். (18)

ஆடுங்குறி,

அண்ணாந்து பார்த்தாடுவார் வேதியர்
அரசர்களெதிர்பார்த் தாடிநிற்பார்
கண்ணுவிலண் டிசைதனையே வணிகர்கள்
கண்டாடுவார்யாருங் கொண்டாடவே. (19)

மல்லாரும் பூமிதனையே சூத்திரர்
மகிழ்வுடனேபார்த் தாடிநிற்பார்
பொல்லா வரவின்படத்தில் இருக்கின்ற
பொறியினைச்சொல்லுகிறேன் நெறியுடனே. (20)

முத்திரை.

பார்ப்பார் படத்திற்சங்கு மன்னவர்
படத்தினிற்சக்கரம் பதிந்திருக்கும்
கரப்பான வில்லுவணிகர் படத்தினில்
கனத்தசூத்திரர்க்குப் புள்ளடியென்றார். (21)

நிறம்.

பூசுரர் ரத்தநிறமாம் புரவலர்
பொன்னிறமாம்வணிகர் வெண்ணிறமாம்.
மாசிலாச்சூத்திரர்நிறம் திருஷ்டியின்
மைந்நிறமாமிது மெய்யாகுமே. (22)

## வாசனை.

அந்தணர் நாவிமணம் இறையவர்
அலர்ந்தசெந்தாமரையி னலர்மணமாம்
வந்திடும் வசியர்மணம் பாதரிப்பூ
வகுத்தசூத்திரர்மண மிலுப்பையின்பூ (23)

## கருப்ப முதலியவைகள்.

சாதியிந்த நாலுவகையில் ஆணும்பெண்ணும்
தழுவிப்புணர்ந்துகர்ப்பந் தரித்தபின்னர்
நீதியாய் முட்டையிட்டுப் பொரித்திடும்
நேர்மையைச் சொல்லுகிறேன் நீகேளாய். (24)

காற்றாது மாடிமாதம் ஒன்றோடொன்று
கலந்துவயிற்றினிலே கருத்தரிக்கும்
தோற்றிய கார்த்திகையில் கருமுற்றிச்
சூலுளைந்தீனுமென்ப ரேலவெழுநாள். (25)

பிரமனும் ஆதியிலே உலங்கருதிப்
பிரபஞ்சமுற்பத்தி செய்ததைப்போல்
இருநூற்று நாற்பத்தெட்டு முட்டைகளிட்
டிருநூற்றிருபத்தெட்டோ ரேழுநாளில் (26)

பருகிடும் நாலுமுட்டை அழிந்துபோம்
பதினாறுமுட்டைநல்ல பக்குவத்திலே
ஒருமிக்க இருபத்தேழாம் நாளினில்
உச்சிதமாகப்பொரித் தூர்ந்துதிரியும். (27)

நாலாறு காலுமுண்டாம் தோன்றிய
நாலேழுநாளினில் நஞ்சுவேண்டி
மேலேறு மாதித்தனைப் பார்த்தாடும்
விளங்குமேல்வாய்ப்பல்லு நாலினுமே. (28)

கொடுவிஷம் வந்துகுதிக்கும் பற்சுரக்கும்
கூறுபல்லூறிடும் மாறுமலே
கடுவமரும் நாலெயிற்றுக்கும் பெயர்சொல்வேன்
காளிகாளாஸ்திரியமன் யமதூதனும். (29)

மேல்வா யலகுதனில் அரவுக்கு
விளக்கமாய்நாலுபல்லு முளைத்திருக்கும்
நாலுபற்குந் துளையிருக்கும் கடித்திடில்
நச்சுபற்றுளைவலியாய் நஞ்சுகழன்று. (30)

வந்துகடி வாயிலிறங்கித் தொண்ணூற்றெட்டு
மாத்திரையி னின்றுடலில் மண்டியேறும்

அந்தமுள்ள படத்துரகந் தோன்றியநா
ளறுபதில்தோலுரிக்கு மறுமதியில் (31)

குதித்திடும் விஷமெயிற்றில் ஈதிரண்டுங்
கொண்டவாளரவிற்குக் கண்டமென்பார்
கதித்திடும் மெயிற்றரவப் பல்லுத்தைக்குங்
கடிவாயின்குறிதனைக் கழறுகிறேன் (32)

கடிவாய்க்குறி.

காளியென்னும் பல்லுத்தைத்தவாய் புள்ளடியாம்
கடிவாயிற்பன்னீர்போல் வடிவாம்நீர்
மீளாத காளாஸ்திரி தைத்தவாய்
விளங்குமுக்கோணம்செந் நீர்கசியும் (33)

கோதாய நமனெனும்பல் தைத்தவாய்
கூர்முள்ளவ் வாயிற்செந் நீர்பொசியும்
தூதனென்ற பல்லுத்தைத்தால் விற்போலாஞ்
சுவடுகழுநீர்போல வடிவாகும். (34)

கடித்தல் முதலியன.

பசியுற்றால் பயந்தால்நொந்தால் கோபத்தால்
பல்லின்விஷமிகுத்தால் மெல்லமிதித்தால்
இசையுறு தேவர்முனிவர் காலனிவர்
ஏவலினால்வினை தாவலினால். (35)

செய்தநன்றி கொன்றபேரைப் பூருவ
சென்மப்பகையாளரை வன்மமுள்ளோரைப்
பையரவம் வந்துகடிக்கும் கடித்தொரு
பற்பட்டால்விஷந்தோலைப் பற்றியேறும். (36)

பல்லிரண்டு பட்டால்விஷம் மாமிசத்தைப்
பற்றியேறும் மூன்றுபற் பட்டால்விஷம்
வல்லெலும்பைப் பற்றியேறும் நாலுபல்
வகிர்ந்திடில்மூளைபுகுந் தேறும்விஷம் (37)

காற்கடி யொருபற்பட்டால் இருபல்லாற்
கடித்திடில் அஃதரைக்கடியாகும்
மூர்க்கமிகு மூன்றுபற்பட்டால் அந்தக்கடி
முக்காற்கடியென்றனர் மிக்கப்பெரியோர். (38)

முளைத்தபல் நான்கும்பட்டால் அந்தக்கடி
முழுக்கடியாமென்று வகுத்தனரே
துளைப்பல்லி லொருபற்பட்டால் அந்தக்கடி
தொடங்கித்தியானிக்க விடந்தீரும்.

இரண்டுபெற் பட்டவிஷத்தை மணிபதித்
தேற்குங்கருத்தினால் தீர்க்கலாமே
முரண்மிகு மூன்றுபற்றைததால் அந்தக்கடி
மூலிகலிக்கநசி யத்தால்தீரும் (40)

அரவின்பல் நாலும்பட்டால் மணிமந்திரம்
ஔஷதந் தெய்வச் செய லால்த்தீரும்
விரைவினி லரவம்வந்து கடித்திட்டால்
மீளாதகுறியிடம் விளம்புகிறேன். (41)

கடிமீளா உறுப்பு முதலியன.

உள்ளங்கால் உள்ளங்கைநெற்றி மார்புகழுந்
துதடுமூலைமூக்குப் புருவந்தொப்புள்
தெள்ளியநற் சந்துகுதிங்கால் இருசெவி
தோரடி ஆலமரத் தூரடியில். (42)

புன்னைபுளி மூங்கிலரசில் நாணலில்
புற்றிற்கிணற்றிலேரிப் புதுமடையில்
வின்னமுள பாழுங்கோயிலில் பாழ்வீட்டில்
விறகினிடத்திற்பிணஞ் சுடுமிடத்தில். (43)

நந்தவனம் பொதுமடத்தில் ஏரிக்கரை
நதிக்கரைசுனைக்கரை யாகசாலையில்
அந்தசந்தி முச்சந்தியில் உறக்கத்தில்
ஐயன்பிடாரிதுர்க்கை ஆலயத்திலும் (44)

மீளாதநாள் முதலியவை.

மாயவரிப் பாம்புகடித்தால் தீராது
மரணநாளுஞ்சொல்லிற் பரணிமகம்
ஆயிலியங் திருவோணம் மூலந்திரு
வாதிரைகார்த்திகைமுறஞ் சோதிசித்திரை. (45)

சென்மநாள் சென்மமுன்னாள் அனுசென்மஞ்
சேர்ந்திடுநாளும மாவாசை
வண்மைமிகு நவமிசஷ்டி குளிகனில்
வந்துகடிக்கிலது முந்திக்கொல்லும். (46)

தானேடிக் கடித்தரவம் ஆடினும்
தாழப்புரளினும்கடித் தந்தவிடத்தே
தானடிக் கிடந்திடினும் அந்தக்கடி
தப்பாமற்கொலலுமென்று செப்பலாமே. (47)

கடித்தவாய் தடிக்கிற்கொல்லும் வீங்கிக்கடுத்
தேறினுங்கொல்லுங்கண்டஞ் சோரினுங்கொல்லும்

குடித்தமருந் தெடுக்கிற்கொல்லும் கடிவாயிற்
குமிறியேசெங்குருதி பாயினுங்கொல்லும் (48)

விடங்குதிக் தொழுகிற்கொல்லும் நாவறண்டு
விழிசிவந்தால்நடுக்க மேவினுற்கொல்லும்
படங்கொண்ட பொறியரவின் நாலுபல்லும்
பதியப்படினுங்கொல்லும் பற்கடித்தவை (49)

கறுத்திடிற் கொல்லுமுரகம் சீறியே
கடித்தவுடன்மலநீர் விடுத்தாற்கொல்லும்
விறைத்துடல் கைகால்விரல் நிமிர்ந்திரு
விழிசொருகினுங்கொல்லு மேற்செயல்சொல்வேன் (50)

நச்சரவிலாண் கடித்தால் மேல்நோக்கும்
நயனம்பெண்பாம்பெனிற் கீழ்நோக்கும்
அச்சமில்லா மலடாகில் வேர்வைமிகும்
அலிப்பாம்பெனில்விஷங் கலிப்பாமே. (51)

சூலாகில் வயிறுளையும் முட்டையிட்ட
துட்டையெனில்கெட்டைவிழி முற்றச்சிவப்பாம்
வேலெயிற்றுக் காளைகடித்தால் வலதுகண்
வேதனைசெய்யுங்கிழச் சாதிகடித்தால் (52)

கடித்தவாய் வீக்கங்காணும் இளமைசேர்
கன்னியரவுக்கிடது கண்துயர்செய்யும்
துடித்திடுங் குட்டிப்பாம்பு கடித்திடில்
சோர்வுமயக்கமுடன பாரில்வீழ்த்தும் (53)

கருநாகங் கடித்ததென்றால் உடனிரு
காதுஞ்செவிடாகுமென் றேநினரே
ஒருநாகத் தடைவிதுவே பலவிஷத்
தூரகங்கள்சரித்திர முரைசெய்கிறேன் (54)

விரியன் முதலியவைகளின்பிறப்பு முதலானவைகள்.

விரியனி லாறுபேதம் சுத்திரி
விரியன்பெருவிரியன் ரத்தவிரியன்
பரிவுசெய் குறுவிரியன் புல்விரியன்
பன்னுஞ்சலவிரியன் என்னுமிவற்றுள் (55)

முரட்டுக் கத்திரிவிரியன் சூல்கொண்டு
முதுகுவெடித்துக்குஞ் சதுபொரித்தால்
காட்டோந்தி தேள்பூரம் நண்டுதெறுக்
காலுடன்சிலந்திபுலி முகப்பூச்சி (56)

செய்யானறு பொறிவண்டு முதற்பல
சீவசெந்துக்களதில் சென்மிக்குமே
மெய்யான பெருவிரியன் கடித்திடில்
வீங்கிக் கடுத்தெரிந்து வீறுங்குறுதி (57)

வடிந்திடுங்கடிவாயில் கண்ணுறங்கி
மயங்கியுடல் வெதும்பித் தியங்கிடுமே.
கடுத்திடும் ரத்தவிரியன பற்படக்
கடித்திடில் வாயின்வழி காணுமகுறுதி (58)

காற்றடக்கி லுடல்வீங்கிக் கடுத்திடக்
கலந்துவயிற்றுவலி பிறந்துகொல்லும்
மாற்றமிகு மூவிரியன் கடித்திடில்
வலித்துக் கடுத்தெரிந்து வீங்குங்கடிவாய் (59)

வழலைக்கு வாய்வழுக்கும் கடிவாயில்
வடியுமிரத்தங்கூரு வழலையெனில்
அழலென மேனிவெதும்பி வேர்வைமிருந்
தங்கையுங்காலுஞ்சிவந்து கண்களிருள (60)

மார்பினை யடைத்துக்கொல்லும் இரத்த
மண்டலியெனில்மயிர்க் கால்வழியில்
தாரைவிட் டொழுகுங்குறுதி சீதளந்
தருமண்டலிக்குடல் தான்குளிர்ந்து (61)

ஒழுகிடும் வெயர்வையெனுநீர் மூக்கனுக்
குதரமுதுகுகடி தடமுநொந்து
பழகிய வாயுங்கழுத்தும் இழுத்திட்டுப்
படருங் குரலுநெரிந் துடலதிரும் (62)

சுற்றுமயக் கரவாகில் இருகண்ணுஞ்
சுழன்றடிக்கடி மதிமயங்கிடுமே
பற்றுமுறுக் கரவாகில் உடல்முற்றும்
பதறித்திருகி முறுக்கிடும்பூரம் (63)

நின்றார்ந்து காகரக்கும் தேளுக்கு
நெறிகட்டிக் கடுத்தெரிந்திடும் வெயர்க்கும்
என்றூர் நண்டுதெறுக்கால் கடித்திடில்
எரிந்துகடுத்துக்குமி றிடும்வீங்கும் (64)

செய்யான்பற் பட்டகடிவாய் வீங்கியே
தேளிற்சதமடங்கோர் நாளுங்கடுக்கும்
பொய்யாச்செஞ் சோர்வுகடித்தால் உடல்முற்றும்
புள்ளிபோலெங்குந்தடித்துத் தெள்ளுசிவப்பாம் (65)

கறுத்திடுஞ் சோருவுக்குத் தேகமுற்றும்
கறுத்துத் தடிப்புபடர்ந் திடுந்திமிர்க்கும்
ஒறுத்திடுஞ் சிலந்தியெனில் கடிவாயில்
ஒருபொழுதிருபொழு தெரிந்தழலும் (66)

வண்டுக்கடி யுடல்முழுதும் சிலநாளில்
வட்டமிட்டுத் தடித்திட்டுப் படர்ந்தரிக்கும்
தண்டுநேர்செவ் வட்டை கடித்தால்! கடித்தவாய்
தடித்துச்சிவப்பேறித் திமிர்த்திருக்கும் (67)

வயது.

இன்ன மொருகோடியுண்டாம் அவையெல்லாம்
எடுத்தறிந் தோதுதற்கெவர்தரமாம்
பன்னகங்கள் வயதினையும் செருத்திடும்
பகையும் பிரிவினையும் பகருகிறேன் (68)

பார்ப்பாருக் காயிரத்தெட்டு பாராளும்
பார்த்திபற்கெண்ணூறுமாத்திரமாம்
வார்த்தை நயவைசியருக்கு ஐந்நூறு
வருத்த சூத்திரர்க்குமுந் நூறுவயதாம் (69)

பகை.

இருதலைமணியன் செந்நாய் மயிலன்னம்
எருதின்குளம்புமின்ன லிடிகீரி
கருமயிர்க் கரடிபன்றி செம்போத்துக்
கருடன்முதலையாந்தை காக்கைகூகை (70)

செயலுள்ள மாரிவெள்ளம் மனுமுதற்
செப்பியசத்துருவுக்குத் தப்பிப்பிழைத்தால்
வயதொரு நூற்றிருபதும் சாகாமல்
மண்மிலசைவாழ்ந்திருக்கும் உண்மையிதுவே (71)

மண்மீதில் நூற்றிருபது பருவமும்
வாழ்ந்தபிறகுடலந் தேய்ந்துகுறுகி
ஒண்மணிப் படஞ்சிறகாய்ப் பிறக்குமப்போ
துயர்ந்தசிகையின்மணி யொன்றுதோற்றும் (72)

தோற்றிய அந்தநாகம் புவிவிட்டுத்
தொடரும்வனத்தினும்விண் ணடர்வெற்பினும்
போற்றியே பணிகோடி சூழவே
புரவலன்போலிருந் தரசுசெய்யும் (73)

மாநாக மென்றுபேராம் கருடற்கு
மாத்திரம்பயப்படும் நேர்த்தியதாய்த்

தானன்கு பல்லின்விஷமும் இருகண்ணில்
தரித்திடும்பார்த்தவுட னெரித்திடுமே. (74)

பாம்பின்ராசாளியென்றும் புகலுவர்
பருவமமவை யொருநூற் றிருபதறத்
தாம்பெற்ற வாயுள்முழுதும் இருந்துபின்
சாலோகபதத்திற்கு மேலாமென்பார் (75)

தூதன் வரவுவடிவு முதலியன.

தூதன்வரவும் வடிவும் அவன்வாயாற்
சொல்லுங்குறிதொடுங்குறி பல்லின்குறியும்
நீதியுடன் சொல்லுகிறேன் ராகுகால
நிலையிற்பதறிவந்து நின்றுசொல்லினும் (76)

செய்யபூச் சூடிவரினும் கருந்துகில்
செய்யதுகிலைப்புனைந்து பையவரினும்
கையிற்றடி யூன்றிவரினும் கேடகம்
கத்திகையிற்பிடித்துத் தத்திவரினும் (77)

கண்ணில்நீர் வாரநிற்கினும் வாய்குழறிக்
கையைவிரித்துநின்று மெய்யுரைக்கினும்
விண்ணேக்கிப் பார்த்துநிற்கினும் தூணிலும்
விரகிலுஞ்சார்ந்திருந்து மெய்மைசொல்லினும் (78)

மண்ணினைக்கால் கொண்டுகீறினும் தலைகையிற்
வைத்துவரினுமுடை சுற்றிவரினும்
எண்ணெய் தலைக் கிட்டுவரினும் பாரில்வீழ்ந்
தேங்கிப்புலம்பியழு தோங்கிநிற்கினும் (79)

பாம்பின்பேர் முன்புசொல்லும் பாம்பின்பல்
பட்டவன்பேர்பின்புசொல்லி நெட்டுயிர்க்கினும்
சோம்புடன்கொட் டாவிவிடினும் மார்புசந்து
சொறியினுந்தன்மயிரைத் தூற்றிநிற்கினும் (80)

வந்துயரிடததில் நிற்கினும் நோயாளி
வரினும்மொட்டைத்தலையன் வந்துநிற்கினும்
அந்தகன்கைகால் தறிபட்டோன் மூக்குக்கா
தறுபட்டோன்ஒற்றைவிழி மறைபட்டோன் (81)

இங்கிவர்கள் வந்துசொல்லினும் பூனைக்கண்ணன்
இயம்பினுங்காலடிக்கடிச் செயலிதுவே
பாங்குடன் தூதன்வந்த ஆரூடம்
பதினாறுதிசைக்குநான் பகருகிறேன் (82)

### திக்காருட முதலியன.

அருக்கனில் நல்லபாம்பு தேள்வழலை
அலைநீர்ப்பாம்பரணை எலிமண்டலி
இருக்குநற் சாரைப்பாம்பு மாநாகம்
எறும்புமயக்கராவண் டிகன்றசெய்யான் (83)
பூரம்விரியன் சிலந்தி எனும்படி
பூர்வதிசையாதிபதி ருறுவரைக்கும்
ஆரூடமிதுவாகும் தூதனிலே
அறிந்தின்னசெந்துவென்று தெரிந்துகொள்வாய் (84)

முன்னம்வந்து நின்றதூதன் மூக்கையும்
முகத்தையுந்தொடில்நற்பன் னகமென்னலாம்
பன்னுசரந்தன்னைத் தொட்டிடில் வழலை
பருத்தவிரியனகும் உரத்தைத்தொட்டால் (85)

சந்தாகில் மண்டலியாம் இருமுழங்
தாளும்புடையனதன் கீழ்ச்சிலந்தி
வந்திந்திரன் யமன்வருணன் தனதனும்
வாழுந்திசையிற்சொன்னல் மன்னுமாண்பால் (86)

ஈசனங்கி நிருதிதிக்கில் சொல்லிடில்
ஏந்திழையாரையென்று தேர்ந்துறைத்தார்
வாசமிகு காற்றுத்திசையில் இயம்பிடில்
வனத்துமிருகங்களி னினத்தையென்றார் (87)

கீட்டிசை வருதூதன் அகரமுன்
கிளத்திலொருபல் யமன் திசைக்கிரண்டாம்
வாட்டமில் மேற்றிசையில் மூன்றுபல்
வடதிசைநாலுபல் வகிர்ந்ததென்பார் (88)

தென்திசை வருதூதன் இகரமூன்
செப்பிலொருபல்மேற் றிசைக்கிரண்டாம்
குன்றாத வடதிசையில் மூன்றுபல்
குணதிசைநாலுபல்லெண் றுணர்தரலாம் (89)

மேற்றிசை வருதூதன் உகரமூன்
விளம்பிலொருபல்வடக் கிரண்டுபெல்லாம்
தோற்றுங் கீழ்திசைமூன்று தென்திசையிற்
சொல்லிற்பல்நாலென்று சொல்லலாமே. (90)

வடதிசை வருதூதன் எகரமுன்
வழுத்திலொருபல்கிழக் கிரண்டுபெல்லாம்

திடமிகும் யமன்திசையில் மூன்றுபல்
தேங்கும்வருணதிசை நான்குபல்லாம் (91)

எண்டிசை வருதூதன் ஒகாமுன்
இயம்பிடிலொருபல்லு மில்லையென்னலாம்
பண்டைவெள்ளை யாடைபுனைந்து வந்தொருவன்
பதருமல்நின்றவிடஞ் சிதறிற்றென்றால் (92)

தூதன்சொன்ன சொல்லதனை எழுத்தெண்ணிச்
சூழ்ந்தொருமூன்றினி லீந்தசேடம்
ஓதுமொன்றேல் சாதல்திண்ணம் இரண்டெனில்
உயர்ந்துவிஷந்தலைக்கொண் டடன்மீளும் (93)

சரக்குறி முதலியன.

சரியாயிருந்ததென்றால் விஷமில்லை
சரக்குறி யிலக்கண முரைக்கிறேன்கேள்
சொரிதரு பூரணத்தில் வந்தொருவன்
சூனியதிசையிற் போனனென்றால் (94)

பற்பட்டோன் பட்டானென்பார் சூனியப்
பங்கில்வந்துபூரணத்தில் தங்கினனென்றால்
முற்பட்டா லும்விஷத்தால் மெய்மயங்கி
மூர்ச்சித்துக்கிடந்தாலுந் தீர்க்காயுமாம் (95)

இடக்கரத்து ரீங்காரத்தைக் கண்ணினல்
எழுதிப்பார்த்திட நிறம் வெளுக்கிலொன்று
வடித்தபொன் னிறமாகில் இரண்டுபல்
வண்ணஞ்சிவக்கில் மூன்று பல்லென்னலாம் (96)

கறுத்திடில் நாலுபக்கம் முகந்திடில்
கடிமலர்த்தாழை வாசனைகாணில்
மறித்தது நல்லபாம்பு பாதிரிப்பூ
மணக்கில்வழலைபுளி மணக்கில்விரியன் (97)

மல்லிகைப்பூ மண்டலியாம் மிளகுசுக்கு
மணத்திடில்சிறுபாம்பென் றுணர்த்திடலாம்
சொல்லியநற்பனம்பழத்தின் வாசனை
தொடங்கிடிலில்லையொருவிடந்தானும் (98)

முற்பக்கத் திரவினிமேல் புருடரைச்
சர்ப்பந்தொடர்வலத் தாளிற்கடிக்கும்
பொற்புறு மடவியரை அரவிடப்
புறத்தினிலேகடித் தொறுத்திடுமே (99)

நற்பகலி லாடவரை இடத்தினில்
நாரியரைவலத்தினில் நாடிக்கடிக்கும்
பிற்பக்கத் திரவானை இடத்தினிற்
பெண்ணினைவலப்புறம் நண்ணும்பகலில் (100)

வேகக்குறி.

கடித்திடும் ஆணைவலத்தில் பெண்களைக்
கடிக்குமிடப்புறத்தில் மடிப்பாக
பிடித்திடும் வேகக்குறி தனைச்சொல்வன்
பெலத்தெழுவேகமூ வகைப்படுமே. (101)

வாயுவின் வேகமெட்டுக் குளிர்தரு
வருணன்வேகந்தச வகையாகும்
தேயுவின் வேகம்பத்து மாத்திரை
தெரியின்மூவொன்பது வருணனுக்காம் (102)

காற்றினுக் கைம்பதாகும் தேயுவுக்குக்
காட்டியமாத்திரைதொண் ணூற்றெட்டாம்
சாற்றிய வாயுவின்முதல் வேகம்வந்து
சார்வுறில்மூர்ச்சித்து வேர்வரும்பும் (103)

இரண்டுக்கு வெதுப்பமுண்டாம் மூன்றிற்கண்
ணேறிச்சொருகுநான்கி லெடுக்குஞ்சத்தி
திரண்டைந்திற் கோழையடைக்கும் ஆறெனில்
சிறக்குமறிவழியும் விறைத்திடுமேழ் (104)

எட்டாகி லுயிர்போக்கும் வருணனில்
இயலுமாதிவேகம் மயிர்க்குச்சாய்
கெட்டுடல் முற்றச்சிவப்பாம் இரண்டுக்கு
நேயவுடல்கரிந்து வாயுமுலர்ந்து (105)

வெதும்பிடு மூன்றாகில் உள்மயக்கும்
விளங்கியநான்கெனி லுளங்கலங்கித்
ததும்பிடுங் கபமிகுக்கும் ஐந்தினில்
தலைசாய்நடுக்கும் நெஞ்சத் தறிவழிக்கும் (106)

ஆறாகிற் கண்விழித்து மேல்பார்க்கும்
அடுத்திடும்ஏழெனில் அங்கம்விறைக்கும்
கூறுன இருநான்கில் அடக்கமாம்
குதித்திடுஞ்சுக்கில மொன்பதுக்கென்பார் (107)

பத்தாகில் மரணமதாம் அங்கியின்
பகர்தருமுதல்வேகம் பார்வைசிவந்து

சத்தான முகங்கருகும் இரண்டினில்
தடித்திட்டுச்சிறுநீரும் சடுத்திறங்கி (108)

முகம்வெளுத் துடல்முழுதும் ரோமம்புல்
முளைத்தகெனத் தழைத்துக்கிளைத் துநிற்கும்
செகமதில் மூன்றுகில் வாய்குழறிச்
சிந்தைகலங்கியுடல் நொந்துவிழும் (109)

நாவினிற் குடவிரைந்து சோகமாய்
நாசியினீர்வடிந்து தேசுமாறும்
மேலெழு மைந்தில்விழி உடல்முற்றும்
வெடுவெடுத்தாட்ட முற்றிடுமோறில் (110)

பல்லுக்கடிப் புண்டாகும் விறைத்துடல்
பதைக்குமூக்கிரண்டிலுங் குதிக்கும்புனல்
சொல்லுரை கெடுமேழில் எட்டினில்
சுவாசமெழும்விழிமேல் துன்னிநோக்கும் (111)

ஒன்பதி லொடுங்குமுயிர் பத்தினில்
உடல்விட்டுப் பறந்திடும் உயிர்வானில்
என்புள்ள தேகமதில் அடக்கமாய்
இருக்குமுயிர்நிலையை யியம்புகிறேன் (112)

அடக்கக்குறி.

விடத்தகும் அடக்கமதில் இருவிழி
மேல்நோக்கில் உயிரது மேலாகுமே
மடக்கியே விழிகீழாய் விழித்திடில்
வாழ்வறுமுயிரது கீழாகும் (113)

பக்கத்தில் விழியொதுங்கில் சீவனும்
பக்கத்திருக்குமென்றார் தக்கபெரியோர்
சக்கெதிர் விழித்திருக்கில் சீவனும்
சடத்தினில்இல்லையென்று திடத்திற்சொல்வாய் (114)

ஒடுங்கிடுஞ் சடமதனைப் பிரம்புகொண்
டோங்கிஅடிக்கிலுடல் வீங்கிடினும்
சடந்தழலெனவெதும்பிச் சிவக்கினும்
தண்ணீரிற்போட்டிடத் தானமுந்தினும் (115)

குடத்தினீர் மேற்சொரியில் உடல்முற்றும்
குளிர்ந்துமயிர் பொடித்து வளைந்திடினும்
பிடித்தகை விரலில்நெட்டி பறியினும்
பெலத்திழுத்திட மயிர் வலித்துறினும் (119)

ஊன்றும் குடோரியிடில் செவ்விரத்தம்
ஒழுகிடில்நவதாதி லொன்றுநடக்கில்
தோன்றிடும் ஆவியுள்ளே அடக்கமாம்
சூட்சியிதுவேயதன் மாட்சியறியே. (116)

விருத்தம்.

அடக்கமென் றறிந்தபோதே யவர்தலை யுச்சிகீறிக்
குடத்தின்வா யோடமூத்திக் கொடும்புரை யடைத்தபின்னர்
வெடித்திடும் வேளைச்சாற்றை விட்டுமே லோட்டைவைத்துக்
கடுக்கன லெரிக்கமீண்டு கடிவிஷங் கடிவாய்காணும் (117)

சிந்து.

சிரசிற் குடோரியிட்டு வேளையின்
செழுஞ்சாற்றிற்சூதமொரு கழஞ்சுவிட்டு
விரிவா யோட்டைவைத்து அதன்மீது
வெய்யகரிக் கனலிட்டுப் பையவெரிக்கில் (118)

அடங்கிக் கிடந்தவுயிர் தோன்றிடும்
அனைவர்க்கும் அதிசய நினைவுறவே
விடங்கொளரவங் கடித்தே அடங்கிய
மிக்கடிகைமூன்றே முக்காற்குள்ளே. (119)

காலனை யோட்டித்துரத்தத் தந்திரங்
கற்றுணர்ந்தோர்கள்சொன்ன பெற்றியிதுவே
மேலான தந்திரந்தான் இன்னமொன்று
வித்தாரமாகச்சொல்வேன் தத்தைமொழியே. (120)

கேளாய்நீ ஆடவர்க்கு நாளமது
கிட்டுமாறுவிரலநீளந் திட்டமுடனே
வாளார்கண் மங்கையர்க்கு நாளமது
வலமிகும் எட்டங்குலநீளம் (121)

செப்பினிற் தகடடித்து வளர்கின்ற
செந்நெற்றுளின்பரு மன்னென்று
ஒப்பொன்று சிறுவிரலாம் இரண்டையும்
ஊமத்தைப் பூப்போ லுருப்படுத்தி (122)

அடக்கந் தனையறிந்து ஆடவர்க்
காறுவிர லுடைய நாளமதைத்
திடமுடன் கோசமதிற் செலுத்தியே
தீதிலரைக்கழஞ்சு சூதம்விட்டு (123)

நாளத்தின் மேற்புறத்தில் கரியுடன்
நல்லகனலையிட்டு மெல்லவெரிக்க

வேளையரை நாழிகைக்குள் சூதந்தான்
விரைவாயுட்புகுந்து மருவியபின் (124)

பணந்தா ழரவமது கடித்திட்டுப்
பறந்துபிராணன்விண்ணில் மறைந்திடமெய்
பிணமாய்க் கிடந்திடினும் உயிர்வந்து
பிறங்கிடுமேமிகு திறம்பெறவே (125)

பெண்கட்கு மிப்படியே செய்திடிற்
பிழைப்பாரல்லாமலுயி ரிழப்பாரோ
பண்புறு தயிலமொன்று புவியினில்
பட்டபிணமதனைத் தொட்டெழுப்பச் (126)

செய்யும் வகைகேளாய் ஒருபடி
செங்குன்றிமணித்தோ லங்ககற்றித்
துய்யபருப் பெடுத்துக்கொண்டே எருக்கிலை
சொலத்தகுவிழுதியி னிலைச்சாற்றை (127)

சரியாய்க் கலந்ததிலே பத்துநாள்
தரித்திருந்தூறவைத் தெடுத்துக்கொண்டே
அரிநேர் கொடிவேலி வேர்ப்பட்டை
அரைத்ததிற்கொமட்டிக்கா யளவதனை (128)

டொன்றுக் கலந்துகஞ்சப் பாத்திரத்
தொருபுறத்தப்பிரவி யொளிமுன்வைக்க
நன்றாய் விழுந்தயிலம் அதிற்பாதி
நண்ணுமிடைவாலுளுவை யின்னரிசிமாத் (129)

தயிலந் தனிற்சேர்த்துக் கொண்டதில்
தடுப்பரும்நாற்கழஞ் செடுத்துரசம்
இயலா வொருகழஞ்சி கெந்தகம்
இனியவொருவாக னிடைநிறுத்துக் (130)

கூட்டிநன்று யரைத்துக் கழஞ்சொன்று
குருக்கொண்டுவிளைவேலிப் பருத்திப்பஞ்சில்
ஊட்டியே யுலர்த்திக்கொண்டு நாளத்தை
ஒளிபெறுகோசத்தி னுட்செலுத்தி (131)

இருப்புச் சலாகையினுல் பஞ்சினை
எடுத்தந்தநாளத்தி லடக்கியிட்டு
நெருப்பினை மேலிட்டுக் கொளுத்திட
நேயவுயிரும்வருங் காயத்திலே (132)

சுடர்பெறு கெந்தகமும் காயமும்
சூதமும்எருக்கன்பால் சொரிந்தரைத்தே

அடைவுடன் வெண்டுகிலில் தடவியே
யவிர்திரியாக்கியே யனற்கொளுத்தி. (133)

புகையைநற் கோசந்தனில் நன்றாகப்
புகட்டிடில்சிவன்வந்து புகுந்திடுமே
வகையாய்க் குடோரிதனை முன்னவர்
வகுத்ததை தவிர்க்காமல் தொடுத்தேனே. (134)

விருத்தம்.

நச்சர வாதி யாக நண்ணூஞ்சிற் றெறும்பீ றாக
இச்சகத் தவரைத் தீண்டி யெரிவிஷந் தலைமேற் கொண்டால்
வைச்சமந் திரத்தி னாலு மருந்தினுந் தீரா விட்டால்
உச்சித மாகத் தீர்க்கு முவணத்தி யானஞ் சொல்வேன். (135)

கருடத்தியானம் சிந்து.

வேதியர்க் கநுகூலன் காசிபர்
வினதைபயந்தெடுத்த கனயோகன்
சாதுர்ய பக்ஷிராஜன் அருணற்குத்
தம்பியெனவுதித்த கெம்பீரன். (135)

அஷ்டமா நாகங்களைப் பாதாள
மளவுந்துரத்தி வெற்றி யதுபுனைந்தோன்
துஷ்டனும் இந்திரசித்து விட்டநாகம்
கட்டுவிட்டுத்தட்டழிய விட்டபெரியோன். (137)

பலத்தினில் சவுரியத்தில் ஒப்பிலாப்
பங்கயமாலைபணிந்த சிங்கவேறன்னான்
குலத்தினிற் பிரமகுலன் கீழ்க்கடல்
குடக்கடல்தென்கடல் வடகடலும். (138)

கொடியினிற் சுற்றிவருவோன் பாற்கடல்
நடுவினிற்பள்ளிகொள்ளும் நாரணற்குக்
கொடியும் ஊர்தியுமானோன் முன்னாளிற்
கோடியரக்கர்களைத் தேடிநுகர்ந்தோன். (139)

கதியிற் சூர்யகதியும் மனகதி
காற்றின் கதியுமிகப் போற்றிசெய்பவன்
திதிதரு மசுரர்களும் அதிதிதன்
சிறுவரும் பாற்கட லுறை யமிர்தம் (140)

கடைந்திட மந்தரத்தை வேரொடும்
பிடுங்கிமத்தாகநட்ட பெருமையினன்
மடந்தைதகத் தாருவினிடந் தாய்கொண்டு
மாற்றிடவேண்டுமென்று மனந்துணிந்து (141)

பறந்துவிண் ணுலகிற்சென்று இந்திரன்
பதியினிற் கருவூல மதிற்கதவைத்
திறந்துகொண் டுட்புகுந்து காவல்செய்
தேவகணங்களையுஞ் சிந்தவெருட்டிப் (142)

பொற்குடம் நிறைந்திருக்கும் அமிர்தத்தை
மெய்ப்புடனேயெடுத்து வெளியில்வைத்து
மற்கெதிர் புருகூதன் என்பவன்
உய்ப்பவரும் முப்பத்து மூன்றுகோடி. (143)

தேவர்கின் னரர்முனிவர் கந்திருவர்
சித்தரியக் கர்வளைந் துற்றவரைத்
தாவிநெடு மூக்கினாலும் சிறகாலும்
தடைக்கையி னாலுமிரு தாளினாலும் (144)

மலைந்தவர் வெருண்டோட வென்றுநல்
வாகை புனைந்துமனத் தோகையுடன்
தலந்தனிற் சிறுதாயாம் கத்துருமுன்
தங்கக் குடத்தமிர்த மங்குவைத்துச் (145)

சபதத்தை யறத்தீர்த்த சுத்தவீரன்
தானிந்தி ரற்கிளைய னைபுண்ணியன்
செபதப நியமம்பெற்றோன் கருடன்
சிறகிரண்டும் பச்சை நிறமாக (146)

விழிசிவப் பாகமேனி முற்றிலும்
வெண்ணிற மாகவிண் ணு மண்ணுமொன்றாக
சூழுமிய போல்நிமிர்ந்த உருவமும்
குடநிறை யமிர்தமதைக் கரத்தில்வைத்து (147)

பைந்நாக வணையுடையோன் கரத்தைந்து
படையுடையோன் கௌத்துவத் தொடையுடையோன்
பொன்னேடை ரத்னமகுடம் நூதலினும்
சென்னையி னுந்தரித்தோன் திருவுரத்தான் (148)

மாலோனைப் புயத்தில்வைத்து விழிகளில்
மருவுங் கருணைமிகப் பொழிதரவே
மேலான விண்ணிற்பறந்து திசையெட்டும்
விளங்கவே யிருளெனுங் களங்கமற (149)

வருபவ னாகநினைந்தே சிவஓம்சுவாகாயென
மனதிற் றியானஞ்செய்ய வல்லவிஷங்கள்
பரிதியைக் கண்டபனிபோல் நொடியினிற்
பறந்திடு மேவுயிர் சிறந்திடுமே (150)

### விருத்தம்.

துதித்திடும் பணிக ளுன்கின் றேற்றமு மொடுக்கந் தானும்
விதித்திடும் வெவ்வே றான சாதியின் விஷங்க டாமும்
பதித்திடு மெயிற்றால் வந்த பலன்களு முறைத்தோ மிப்பால்
கதித்திடும் விஷத்திற் கெல்லா மருந்தினைக் கழறுவோமே. ()

### சிந்து.

அத்தர்தென் மருதூரார் — காரணர்
சித்தர் புரமெரித்த தேவதேவர்
மத்தமொடு கடுக்கைதும்பை — கங்கைபிறை
வைத்த சடிலாதி கர்த்தரானோர் (152)

கடுமேவர் காளகண்டர் — மான்மழுக்
கரத்தர் சிறுபுலியை யுரித்துடுத்தோர்
நடுவனை யுரத்துதைத்தோர் — தேடிமுன்
நாரண ராரணர் தேரவரியார் (25?)

சேடனுக் காகவந்நாள் — ஸ்வயம்புத்
திருவுரு வாகவந்த செகதீசர்
வேடனுக் கருள்புரிந்தோர் — நாகைய
வேதியற் கன்றாச வாதம்புகன்றோர் (154)

தரித்திரந் தீரமதிமான் — எனும்வேந்தன்
தனக்குக் குறைவில்கிழி தனையளித்தோர்
கிரித்தனுப் படையுடையோர் — குளிர்ந்திடு
கிரியர சீன்றெடுத்த கிளிமொழியும் (155)

மலர்மகள் கலைமகளும் — அருந்ததி
வனதுர்க்கை யகலிகை வருசசியும்
தலமுண் ணும் நெடுமாலும் — கௌதமன்
சதுமுகன் பரிதிசந் திரன்முருகன் (156)

மாணிபத் திரன்கபிலன் — எட்டுத்திக்கு
மாநாகம் திசைபாலர் வாழகத்தியர்
சேணிலத் தமரர்களும் — முனிவரும்
தெரிசித்துப் பூசைசெய்யக் கதிகொடுத்தோர் (157)

மெய்யென நம்புமடியார் — தங்களின்
வெய்ய வினையகற்றி விளங்கவைப்போர்
பொய்யென நினைந்தவர்பால் — ஒருநாளும்
புகுதா தவர்வினை புகுதாதவர் (158)

கலியுக வரதரென்று — மொழிகின்ற
காரணத் தார்சதுா ராரணத்தார்

மலைமக ளிணைத்தமது நல்ல
வாமத்தில் வைத்துகந்த மகிமையினாற் (159)

பத்தர்பரி பாலரானோர் நாகலிங்கர்
பாதமல ரென்தலை மீதுவைத்து
சித்தர்கள் கொண்டாடும் நாகமுதற்
சிற்றெறும் பிறுதியாகச் சேர்ந்தவிஷங்கள் (160)

தீர்த்திட நசிகங்களும் ஒத்திடங்கள்
செய்யு மருந்தும்விஷந் தீண்டினவுடன்
மாற்றிடத் தூள்மருந்து மாத்திரை
மையுங்குழம் பாக்கிராணஞ் செய்யும்மருந்தும் (161)

சோற்றினிற் பாக்கிறகொடுக்கும் மூலிகை
துவளை முறுக்குங்கடி வாய்ப்பூச்சும்
சேர்த்திடும் வேதும்புகையும் வகையாகச்
செப்புகிறேன் யாரும் மெய்ப்புறவே (162)

சோதனைவேர்

சோதனை பங்கம்பாளை வேரினைத்
துய்க்கக் கசக்கிலில்லைத் தொடர்விஷமே
போதவே யினித்ததென்றால் நல்லபாம்பு
புளிக்கில் வழலைதுவர்த் திடில்விரியன் (163)

காழ்த்திடில் மயக்கரவாம் உவர்த்திடில்
கனத்த புடையன்மிள கெனில்மண்டலி
நேர்த்திய தாகவேதான் நாக்கினில்
நின்று கடுக்கில்நெடு மூக்கனுமே (164)

நசிகம்.

இப்படி யறிந்திடுநீ இசையவே
எல்லா விஷங்களுக்கு மேகநசிகம்
செப்பவுங் கேளணங்கே வெற்றிலை
சிறிய மிள்குகறி யுப்புங்கசக்கி (165)

கண்செவி மூக்கிற்பிழிய உடல்விட்டு
விண்புகுந் திட்டவுயிர் மீண்டும்வருமே
பண்ணிகர் மொழியனமே முருக்கிலை
பகரு மெருக்கினிலை தும்பையிலையும் (166)

பிழிந்திடு காசிதனில் உடல்விட்டுக்
கழிந்த வுயிரும்வந்து கலந்திடுமே
குளிர்ந்திடுந் துளசியிலை தும்பையிலை
கொடிய மிளகுகறி யுப்புங்கசக்கி (167)

நாசியிற் பிழிந்திடவே உயிர்விட்டுப்
பேசிடா தொழிந்திடு பிணமெழுமே
வீசிய முதல்வேகம் கண்சிவக்கில்
வெள்ளுள்ளி பெருமரப் பட்டைவசம்பு, (168)

பீநாறிப் பட்டைசிறுநீர் விட்டிடித்துப்
பிழிந்திடு மூங்கில்விஷ மொழிந்திடுமே
ஆறு லிரண்டு மூன்று வேகத்திற்கு
அழலு மிளகுசுக்குக் கடுகிந்துப்பு. (169)

சாரணை வெற்றிலையும் ஒன்றாகத்
தட்டி நசிகம்பண்ண விட்டோடுமே
காரண மானவேகம் நாலைந்து
கழறுமொ ராறேழுக் கிடுநசிகம். (170)

புகலுவ னிலுப்பைக்கட்டி தன்னைப்
பொடித்துச் சிறுநீர்விட் டிடமூக்கில்
அகன்றிடு மந்தவேகம் எட்டெனும்
அதிவேகம் வந்தெழுந்து மதிமயங்கில். (171)

கெந்தக முள்ளிவசம்பு மிளகுடன்
கெடியான தும்பையிலை துளசியிலை
தந்திடு முலைப்பாலும் நாசியில்
தட்டி நசிகஞ்செய்யக் கெட்டோடுமே. (172)

சிறக்கும் பெருமரப்பட்டை தைவேளை
சேர்த்துடன் எருக்கன்பால் வார்த்தரைத்து
நிறக்குந் துணியிற்றடவி உலர்த்திச்சிறு
நீர்விட்டு நாசியிலிடப் பார்விட்டோடுமே. (173)

புகை.

கொடிக்கள்ளிப் பாலதனைத் துகிலினிற்
குறையாமற் றோய்த்துலர்த்தி அறையும் வசம்பும்
அடித்திடும் பச்சைப்பாம்பும் சுக்கும்
ஆன புளியுமிள காயுமுப்பும் (174)

திரித்திரு துணியில்வைத்து அதனைத்
தீயிற் கொளுத்திப்புகை நாசியிலிட்டால்
மரித்திடும் பிணமெனினும் நொடியினிற்
கருத்துட னெழுந்திடுங் காலனில்லையே. (175)

ஒத்திடம்.

ஒத்திடம் வேலிப்பருத்தி தைவேளை
ஊருடன் முதலியார் பூனைவணங்கி

மத்தம்வெற் றிலையெருக்கும் பொன்னிறமாய்
வறுத்தொத்த விஷமெல்லாம் மாண்டுவிடுமே. (176)

துவளை.

கீழ்க்காய் நெல்லிதுளசி முருக்கிலை
கிளத்து மொடுவடக்கி யிவைநான்கும்
தாழாம லிடித்துக்கொண்டு பிழிந்தந்தச்
சாற்றினை யங்கமெங்குந் தேய்த்திடப்போம். (177)

பேய்ச்சுரை பேய்க்குமட்டி அலிஞ்சிலை
பேய்ப்பீர்க் குஞ்சிறுநீர் விட்டிடித்து
தேய்த்திடச் சடமுழுதும் விஷத்தினல்
செத்த பிணமுமெழுந் தத்தைமொழியே. (178)

முறுக்கிட யானைவணங்கி சமூலமும்
முன்ன மிடித்துப்பூசித் துன்னமுறுக்க
சுறுக்கெனும் விஷங்களெல்லாம் கையெடுத்துத்
தொழுது முழுதுமகன் றோடிடுமே. (179)

தூள்மருந்து.

உள்ளுக்குத் தூள்மருந்து கொல்லங்கோவை
ஊன்றுங் கிழங்குமப்பைக் கிளங்குடனே
தெள்ளிய தலைச்சுருளி வேரீவை
திருந்த விடித்துத்தெள்ளி வெறுகடிதூள். (180)

அள்ளியதை வெந்நீரில் கரைத்துக்
கொள்ள விஷங்களெல்லாங் குடிபோமே
வெள்ளைக்காக் கணமுழுதும் பொடிசெய்து
வெறுகடி கொண்டிட விஷமகலும். (181)

ஆக்கிராணம்.

மூக்கிலாக் கிராணஞ்செய்ய பச்சைப்பாம்பு
முழுது மிரண்டுபிள வாகவகிர்ந்து
தாக்கியே வெய்யிலிலே உலந்தபின்
சரியிடை மிளகிட்டுப் பொடியாக்கி. (182)

இடப்புறம் வலப்புறமும் மாருமல்
இரண்டும் வெவ்வேருக விலக்கமிட்டு
படப்பொறி யரவப்பல்லு வலப்புறம்
பதியில் வலதுதூள் வலமூக்கினும். (183)

பாக்கிற்கொடுக்குமருந்து.

இடப்புறந் தனிற்றீண்டில் இடதுதூள்
இடதுமூக் கினுமாக வேற்றிடவே

விடுமுயிர் பிறந்திடுமே பாக்கில்
விரவிக் கொடுக்கவட்டத் துத்திவேரும். (184)

கொம்மட்டி மாதுளைவேர் சிற்றவரை
கொடிய மிளகரணை வேர்நான்கும்
அம்மியி லரைத்துலர்த்தி விஷத்துக்கு
அடைக்காயிற் கூட்டி யருந்திடவே (185)

சோற்றிற் கொடுக்கு மருந்து.

தேரேறி வருகதிரோன் தனையெட்டித்
தீண்டு மிராகுவிஷந் தீர்ந்திடுமே
போரான விஷத்திற்கெல்லாம் சோற்றுடன்
பிசைந்து கொக்கப்பழு பாகற்கிழங்கும். (186)

சிந்தில்வேர் காட்டுக்கருணை அமுக்கிரா
சிறுகாஞ் சோரியெட்டி மருக்காரை
சாந்தமாங் கறிப்பாலை ஊமத்தை
சாரணை பேய்ப்பீர்க்குச் செப்புநெருஞ்சில், (187)

வெற்றிலை கானவாழை முட்புறண்டி
விளங்கு மவுரிபதி னறுவகையும்
பற்றற விடித்தெடுத்து வடிகட்டிப்
பழவரி சியிலரைப் படியெடுத்துத். (188)

தூளைப் படியெடுத்துக் கலந்துபின்
சோறு சமைத்துக்கொள்ள மீறிவிஷம்
ஊழ்வினைப் படிவரினும் ஓடிடும்
உண்மையீ தென்றுசொன்னார் வண்மைபெறவே. (189)

எள்ளிற் கொடுக்கு குருந்து

எள்ளினிற் றிருகுகள்ளிப் பால்கறந்
திரவி படவுலர்த்தி யரவுபல்லால்
மெள்ளவே கடித்ததென்றால் ஒருபிடி
எள்ளைக் கொடுக்கவிஷ மிறங்கிடுமே. (190)

பழந்துணி தனிற்றேற்றும் பழத்தினைப்
பதமாய்த் தடவியதை நிழலுலர்த்திப்
புழையுறு மெயிற்றரவங் கடித்திடில்
புனலிற் கரைத்துக்கொள்ளப் பொற்கொடியே. (191)

கலிக்கம்

எடுத்திடுங் கோழைக்கட்டு நெஞ்சடைப்பும்
இல்லைச் சிரத்துவிஷ மிறங்கிடுமே.
மடுத்திரு கண்ணிலிடக் கலிக்கம்
வயங்கித் தெரியும்படி யியம்புகிறேன். (192)

கந்தகமகிழ் விதையோ டாதமும்
கசிந்திடு பெருங்காயம் வசம்பதுவும்
உந்துபேய்ப் பீர்க்கன்சாற்றில் அரைத்ததைச்
சுந்தரி வயிறினிற் றூளைத் துவைத்துச் (193)

சந்துவாய் பொருந்தக்கட்டு முகட்டினில்
தட்டாமற் றாக்கிவைத் தெட்டாந்தினம்
தந்திர மாயெடுத்துக் குழிக்கல்லில்
தழுவ வரைத்துருட்டி நிழலுலர்த்தி. (194)

விடேந்தலைக் கொண்டுநின்றே பற்கிட்டி
விடிலுமிழ் நீரிலுரைத் திடில்மீளும்
மடந்தையே யினனமுஞ்சேவ் பெருங்காயம்
மருவுகந் தகமுடன் பொரிகாரம். (195)

தாரமு மாம்பிசினும் பேய்ப்பீர்க்கன்
சாற்றிலரைத் துக்கயிறு சேர்த்துலர்த்தி
கூரிய விஷத்திற்கெல்லாம் கண்களிற்
கொஞ்சமுரைத் திடஅவை யஞ்சியகலும். (196)

உள்ளுந்துத்தைலம்

வஞ்சியே தைலமொன்று செய்யும்வகை
மதித்துக்கேள்பேய்ப்பீர்க்கன் விதைப்பருப்பு
மிஞ்சாம லொருபடியில் ஐந்நூறு
வெற்றிலையின் சாறது விட்டரைத்துக் (197)

களிம்புறும் வெண்கலத்தில் அப்பியே
கதிரவன் முன்பேழு கன்னலிருக்க
வழிந்திடுந் தைலமதைப் பத்திரமாய்
வைத்திருந் தரவின்பல் தைத்தவுடன் (198)

சூதமுங் கந்தகமும் இருபங்கு
துங்கத் தைலம்நாலு பங்குகூட்டித்
தாதுயர் தைலமதைப் பணவிடை
தடவிநா வற்கொழுந்திற் றரவிஷம்போம். (199)

துடோரித்தைலம்.

வயங்குந் துடோரியிடுந் தைலத்தை
வாய்ப்பாகச்சொல்லுகிறேன் கேட்பாய்பெண்ணே
பயன்பெற மஜிஞ்சிவிதைப் பருப்பது
படியொன்று முடக்கற்றான் கொடியினிலை. (200)

உத்தம தாளியிலை இரண்டையும்
ஒருமிக்கச் சாறுபிழிந் துய்த்தரைத்துக்

சற்றுவின் பாலுங்கூட்டிப் பிசைந்தொரு
கலத்தினி லப்பியதைக் கதிர்முன்வைக்க. (201)

வடிந்திடுந் தைலமங்கே சிரசின்
மத்தியிலும் பிடரிலுங் குத்திக்கீளறி
மடிந்திடுஞ் சடமெனினும் தைலத்தை
மயலறத் தேய்த்திட வுயிர்வருமே. (202)

வாய் மூக்கில் விடுந்தைலம்.

வாய்மூக்கில் விடத்தயிலம் எட்டிவிதை
வழுவி லழிஞ்சிவிதை கழுதை யெலும்பு
ஒய்வறு குரலோரி முதுகெலும்
புந்து முதலையெலும் பைந்துவகையும். (203)

பானையிற் புதைதைலம் இறக்கியே
பரணி தனிலடைத்துப் பத்திரஞ்செய்து
மானிடர் தலையரவம் கடித்தேறி
மண்டை கொண்டால்விஷம் வாய்மூக்கினில். (204)

தைலஞ்சற் றேவெதுப்பி வசம்பினில்
தானனைத் தொருதுளி தனைவிடுக்கில்
செயலற்றுக் கிடந்தபிணம் உயிர்வந்து
திடமா யெழுந்திருக்கும் மடமாதே. (205)

முறுக்காவு கடிக்கு மருந்து.

முறுக்கர வதுதீண்டி உடல்முற்றும்
முறுக்கி நடுக்கிக்குளிர் பிறக்குமெனில்
உறைத்திடு மிளகுபொடி பாகற்சாற்
றுடன்கலந் தருந்திட விஷமகலும். (206)

மயக்காவு கடிக்கு மருந்து.

நிலப்பனங் கிழங்கரைத்துக் கொடுத்தாலும்
நெடிய முறுக்கரவின் விஷநீங்கும்
தலைப்படு மயக்கரவங் கடித்திடில்
தங்குகறிப் பாலையின்வேர் துங்கவிஷம்போம். (207)

பயப்படு மிளகுபொடி காய்ந்தவோட்டில்
படுத்தி முகத்திற்புகை கொடுப்பதுமாம்
செயப்படு விரியனெனும் அரவது
செனித்திடு மிடத்தினைச் செப்புகிறேன். (208)

நாரணன் சோதரியாள் திரிலோக
நாயகிபருப்பத ராயன்மகள்
காரணி பஞ்சபாணி திரிபுரை
கருணி தருணிவீரி கங்காளி. (209)

செகத்திலெண் ணுன்கறமும் வளர்த்தென்றும்
மகத்துவம் பெற்றிருக்கு மகமாயை
இகத்தினி லடியவர்க்குச் செல்வமும்
பரத்திற் கதியுமருள் பகவதிநீள். (209)

குஞ்சர முகமுடையான். தன்னையும்
குகனையும் பெற்றெடுத்த கொற்றவைநுண்
பஞ்சினு மெல்லியதாய்ச் சிவந்திடு
செஞ்சிலம் பலம்பிய சீறடியாள். (210)

மருத வனத்துறையும் ஈசர்தம்
வாமத்திலிருந்திடு மகராசி
சுருதியின் முடிவில்நின்ற திருமிகு
சுந்தரி நிரந்தரி துரந்தரியாள். (211)

அழகிய நாயகியாள் திருவரை
ஆடையி லேய்ந்திடு அரத்தமதில்
விரைவுடனே பிறந்து வளர்ந்திட்டு
விரியனெனப்பெயர்கொண் டெரிதவழும். (212)

விரியன்கடிக்குமருந்து.

கான்முற்றுந் திரிகின்ற உரகத்தின்
கடிக்கு நசிகமது கழறுகிறேன்
தேன்முட்டி யிலைநசிகம் விட்டிடன்
திரும்ப வரைத்துப்பூசத்திரும்விஷம். (213)

உள்ளுக்குப் பெருவாகைப் பட்டைச்சா
றுழக்குநெய் யாழாக்கொ டுமிளகு
விள்ளுமோர் காற்பலமும் பொடிசெய்து
விரவிக் கொடுக்கவிஷ மீண்டிடுமே. (214)

கசந்திடும் பாகலிலைச் சாறுரு
காற்படியிற் காற்பல மிளகரைத்துப்
பிசைந்துடன் கரைத்துக்கொள்ள உடலது
பசந்தவிரியன்விஷம் பறந்திடுமே. (215)

ஆப்பினை யறைந்ததுபோல் விரியன்பல்
அழுந்தக் கடித்துவிஷ மதிகரித்தால்
வேப்பெண்ணெய் யாழாக்குக் கொடுத்திட
மீண்டிடுங் கடிவாயின் வீக்கமும்போம். (216)

ஊழதின் வலியாலே விரியன்
ஊரத்துக் கடித்துவிஷஞ் சிரத்திற்கொண்டால்
வீழியின் பழமரைத்துப் பசுவின்
வெண்ணெய் தனிலருந்த மீண்டிடுமே. (217)

சத்திரந் தைத்ததுபோல் விரியன்
தாண்டிக் கடித்துவிஷ மூண்டுகொண்டால்
சித்திர மூலியின் வேர் பொடிசெய்து
தேனுவின் பாலிற்கொள்ளத் தீர்ந்திடுமே. (218)

உப்பு மருந்து

கறியுப்புப் பதக்களந்து காட்டுக்
கருணைக் கிழங்குகொடி வேலிவேரும்
பொறியுற்ற கோழியவரை வேரிவை
போதவே யாறுபலம் நிறுத்தெடுத்துக் (219)

குறைவற விடித்துக்கொண்டு உப்பினிற்
கூட்டிக் கலந்திரண்டு கூறுசெய்தே
சிறுத்திடும் பானையிலே ஒருபங்கைத்
திடமுட னேபரப்பிச் செகுத்திட்டதோர் (220)

மறமிகும் செருவிரியன் தனைவைத்து
மற்றொரு கூறுமதின் மேற்பரப்பித்
திறமுடன் வாய்மூடிச் சீலைசெய்து
திண்ணமாய் மண்டலம் மண்ணுள்வைத்தே. (221)

எடுத்து விரியன்கடிக்கு நீரினில்
இதமுடன் கரைத்துள்ளுக் கீந்திடவே
அடுத்திடும் விஷகடுங்கிப் பறந்திடும்
அன்ன புடையேகேளா யின்னமொன்று. (222)

வீக்கத்திற்குப் பூச்சிமருந்து

வீங்கிடிற் பூச்சுமருந்து தக்காளி
வேர்நீலி நாயுருவி வேருங்கூட்டிப்
பாங்குட னரைத்துக்கொண்டு வீக்கத்திற்
படிந்திடப் பூசவே வடிந்திடுமே. (223)

எருமையின் சாணிதனை எருக்கன்பால்
இளகவிட்டரைத்துக்கடி வாயிற்பூசக்
கருநிற நீர்விரியன் பற்பட்ட
தடிவாயின் வீக்கமது வடிவாகுமே. (224)

தேகத்தின் மேற்பூசப் பெருங்காயம்
சிறுசின்னி வசம்பிவை சிறுநீரில்
பாகமா யரைத்துடம்பிற் பூசிடப்
பறக்கும் விரியன்முறுக் கரவுக்குமாம். (225)

தக்காளி ரண்டுவகையும் காடிவிட்டுச்
சமூலந்துவைத்துச்சாறு தனைப்பிழிந்து

மிக்கான விரியன்விஷம் மெய்கலந்து
பீறிற் றுவாளையிட மாறிடுமே. (226)

ஆடுதின்னுப் பாளையிலை தன்னை
அடைவுடன் வச்சிரப் பாலிலிட்டுக்
கூடிய மூன்றுநாள் உலர்த்திச்
கூறும் விரியன்வகை யாறுவகைக்கும். (227)

நலம்பெறச் சூரணஞ்செய்து வேப்பெண்ணெய்
நாழியி லரைப்படிதாள் நன்றாயிட்டுக்
கலந்துவெந் திறக்கிக்கொண்டு தைலந்தைக்
கையி லெடுத்துடனே மெய்யிற்றடவப். (228)

பறந்திடுங் கொடியவிஷம் வீக்கத்திற்
பற்று மழலைதணியக் கட்டுமருந்து
சிறந்திடுங் கொவ்வையிலை தாளிப்பூத்
திருத்தவே காடிச்சோ றுடனரைத்துச், 229)

சேதாவி னெய்யுங்கூட்டி வீக்கத்தில்
திடமாகக் கட்டிடப்போம் மடமானே
மீதாகக் கடுத்தெரித்தால் பூச்சொன்று
விளம்புகிறேன்பச்சை முருக்கழிஞ்சி. (230)

பாலையிலை யகத்திதுழாய் இருதும்பை
பருத்தி யிருபாக லிருகொவ்வை
நீலிநற் சூலிகொடுப்பை உப்பிலி
நிகழ்த்திய விவையெல்லாந் துவைத்தெடுத்துக் (231)

தேள், மண்டலி,செய்யானுக்குமருந்து.

காடியிற் கரைத்தடுப்பிற் காய்வித்துக்
களலற வாற்றிக்கடி வாயிலிட
நாடியே விஷந்தீரும் தேள்விரியன்
நல்லமண் டலிசெய்யான் வல்லசோர்வுக்கும். (232)

ஆகாயத் தாளிற்புனல் விட்டிளக
அரைத்துக் கொதிக்கவைத்துக் கடிவாயில்
வாகாகப் பூசிடவே பூசினகை
வாங்குமுன் குளிர்ந்திடும் வீங்கிற்கடிவாய். (233)

ஏலஞ்சந் தனமுலைப்பால் பசுவின்பால்
இளநீர் பசலைநற் றாழைவிழுது
மூலமா மிருவேலி இவையெல்லாம்
முயன்றரைத் தெடுத்துக்கடி வாயிற்பூச. (234)

வீக்கமுங் கடுப்பெரிப்பும் தணிந்திடும்
மெல்லிய தானதலை மயிர்கருத்துக்

கோக்குல வெண்ணெய்கூட்டி வீக்கத்திற்
குழைத்துத்தடவக்குடி போய்விடுமே, (235)

ஆவிபிடிக்க.

ஆவியொன் றியம்புகிறேன் பாகலிலை
அழற்றும்பிரண்டையிரண் டினையுமொன்றாய்த்
தாவறவேயிடித்துக் காடிவிட்டுத்
தணலுற வேசவைத்துக் கீழிறக்கிச், (236)

சூலரவம் விரியன்செய்யான் மண்டலி
சுறுக்கிடுந் தேள்சிலந்தி நண்டுதெறுக்கால்
மேலெயிறு படக்கடித்துக் கடித்தவாய்
வீங்கிக் கடுத்தெரியில் வேதனைப், (237)

பிடித்திடக் கடிவாயின் கடுப்பும்
பெருத்திடும் வீக்கமுஞ் சிறுத்திடுமே
இடித்திடுங் கொவ்வையிலைச் சாறுடல்
எங்குந் துவாளையிட வங்கும்விஷம். (238)

தந்திடுங் குடோரிவித்தை தனைச்சொல்வன்
சுந்தரி பிடித்ததன் றோல்களைந்து
முந்திடும் உள்ளிவசம்பும் ஒன்றாக
நந்தாமல் நல்லெண்ணெயி னன்றாயிட்டு, (239)

வெந்திடக் காய்ச்சியிறக்கித் தைலத்தை
வெய்ய விஷமேறி மீறிச்செத்தால்
அந்தமா மவன்சிரத்தில் கீறியே
விந்தையுட னேதேய்க்கில் மீளுமுயிர். (240)

விரியன்கடிப் புண்ணிற்கு மருந்து.

விரியன் கடித்தவாயிற் கொப்புளித்து
விரிந்துபுண் ணாகிலுள்ளி வசம்புசுக்குச்
சரியிடை நிறுத்துக்கொண்டு சுந்தரிச்
சதையு மெடுத்துசமன் கூட்டிக்காய்ச்சும் (241)

கரியநல் லெண்ணெய் தன்னைப் புண்ணினிற்
காசிடை யந்திசந்தி பூசிடவே,
உரமலி புண்களெல்லாம் ஆறிடும்
உண்மையீதென்று சொன்னாருயர்சித்தராம் (242)

சஞ்சீவி யானதைலம் இன்னமொன்று
சாற்றுகிறேன்பச்சை பாம்புதனை
அஞ்சிடாதடித்தரைத்து வேப்பெண்ணெய்
அரைப்படி தனிலதைக் கரைத்துக்கொண்டு. (243)

வாட்டமில்லா தெரித்தே புண்ணிலிட
மாறிடு மென்றுசொன்னார் மடமானே
நாட்டினிற் கோழியின்கால் இம்பூரா
நவின்றிடும் கீழ்க்காய் நெல்லியின்வேர். (244)

மஞ்சள்மிள கிந்துப்பும் சமனிடை
மானேநல்லெண்ணெயிலே வாகாவிட்டு
எஞ்சவே கொதிக்கவைத்து முதிராமல்
இறக்கியே புண்ணிலிடப் பறக்குமென்பார். (245)

புண்ணிற்குக் கட்டுமருந்து

கட்டிடுகோழியிரால் நாளெட்டுக்
கடிவாயிற் புண்ணாறி யிடுமானே
துட்டனெனுஞ் சீதமண்டலி கடித்திட்டால்
சொல்லுகிறேன் கேள்வெகு நல்லமருந்து, (246)

சீதமண்டலிகடிக்கு மருந்து.

முற்றிய தேங்காயை அருந்திடச்
சற்றும்நில் லாமல்விஷந் தானகலுமே
முத்திருக்குஞ் செவியதனைக் காடியில்
முதிரவே வேகவைத் தாவிகொடுக்க. (247)

சொறிமண்டலி கடிக்குமருந்து.

விரவுட னகன்றிடுமே சொறியுறு
விஷமிகு மண்டலி கடித்ததென்றால்
நரைமிகு நன்னாரிவேர் பாலுடன்
நாள்மூன் றருந்திடத் தாழ்வாகுமே. (248)

வீங்கு மண்டலி கடிக்கு மருந்து.

வீங்குமண் டலிகடித்தே கடிவாய்
வீங்கிலமுக்கிரா வேர்சூரையின்வேர்
தாங்கிய புங்கின்வேரும் இண்டைவேர்
தக்காளி வேரிலுப்பை வேருங்கூட்டி (249)

திமிர்மண்டலி கடிக்கு மருந்து.

அமுரிவிட் டரைத்தெடுத்துப் பூசிட
அலர்ந்திடும் வீக்கம் தொலைந்திடுமே
திமிர்மண் டலிகடித்தே திமிர்ந்திடில்
தீரும்பொன் முசுட்டையின் வேரருந்தின். (250)

வழலை வகை நான்கின் கடிக்கு மருந்து.

வழலையோர் நான்குவகைக்கும் பாலினில்
வாரக் கிழங்கருந்திற் றீரும்விஷம்

பழகுசா ணகமூக்கன் விடத்திற்கும்
படர்ந்திடுங்கொம்பேறு மூக்கனுக்கும். (251)

சாணைக மூக்கனுக்கும் கொம்பேறு மூக்கனுக்கும் மருந்து.

வன்னியிலை தனைத்துவைத்துக் காடிவிட்டு
வடித்தெடுத் தரைப்படி கொடுத்ததனைச்
சென்னிமுத லுடல்முற்றுந் தேய்த்திடத்
தீரும்விஷ மென்றுசொன்னர் செய்யபெரியோர். (252)

புடையன் கடிக்கு மருந்து.

பிரண்டையின் வேரரைத்துப் புன்னைக்காய்
பிரமாணம் வெந்நீரிற் பருகிடினும்
திரும்பிடும் மூக்கன்விஷம் புடையனில்
செப்பிடு நால்வகைச் செந்துகள்தாம். (253

துள்ளியே பற்கள்படக் கடித்தவாய்
தூணென வீங்கியே வெயர்வரும்பில்
ஒள்ளிய காட்டுக்கருணைக் கிழங்கும்
உயர்ந்திடு புகையூரல் கொட்டைக்கரந்தை. (254)

இருப்பையின் பழக்கோதும் அமுரிவிட்
டிளக வரைத்துப்பூ சிடிலேகும்
வரியுறுங் கட்டைப்புடையன் கடித்திடில்
வசம்புகி னெருக்கம்பால் புற்றின்சோறும். (255)

புகைத்திட நாசியிலே விஷமது
திகைத்தோடு மென்றுரொரு கணத்தினிலே
பகைத்திடு நெடுங்கழுத்துப் புடையன்பல்
பதிந்திடக் கடித்திடிற் படமடக்கிக். (256)

கிழங்கினைப் பாலிலருந்த விஷம்விட்டுக்
கிட்டாம லோடிவிடுந் திட்டமுடனே
வழங்கிய புகையூரல் நீலியிலை
வடிகண்ண மிருப்பைக்கட்டி கொடிக்கள்ளிப்பால். (257)

விட்டரைத்துப் பூசிடவே வீக்கம்
விலகிடு மினியொன்றை விளம்பிடக்கேள்
ஒட்டுறும் வீழியின்பூ அரைத்துண்ண
ஒருநாளு புடையன்விஷ மொழிந்திடுமே. (258)

{ நாய், குரங்கு, பூனை, குதிரை, நரி, சிறுபுலி, முதலை, வேங்கை கடிக்கு மருந்து. }

நாய்வானரம் பூனை துரகம்
நரிசிறு புலிகரா பெருவேங்கை

தீயவிவ் வெட்டுலவகையும் கடித்திடில்
தேடிநீ லிவேராவின் பாலிலரைத்தே. (259)

சோர்வு கடிக்கு மருந்து.

மூன்றுநா ளருந்திடவே ஓடிடும்
மூர்க்க மிகுந்தசோர்வு கடித்ததென்றால்
ஊன்றிய பனைவெல்லத்தில் எருக்கம்பால்
ஓரேழு துளிவிட்டு உண்ணவெழுநாள். (260)

அகன்றிடுங் கருஞ்சோர்வு கடித்திட்டு
அங்கத்திற் கறுப்புற்றுத் தடித்ததென்றால்
சுகந்தநன் னரிவேரும் புங்கின்வேர்
சொல்லுஞ் சிறியநங்கை வேரும்பாலில். (261)

செய்யான் கடிக்கு மருந்து.

கலந்துண்ண மூன்றுதினம் நீங்கிடும்
கனற்றும் பெருஞ்செய்யான் கடித்ததென்றால்
நலம்பெறு கோவையிலை வெற்றிலை
நல்ல பருத்திக்கொளுஞ்சி வல்லுத்தாமணி. (262)

களங்கமில் முடக்கொத்தான் இவையாறும்
கசக்கிச்சாறுபிழிந்து காய்ச்சித்தடவக்
குளிர்ந்திடுங் கடுப்பெரிப்புத் தம்பலம்
கொட்டுவாயி லுமிழ்ந்தாலும் விட்டுவிடுமே. (263)

தூதுவேளை நாவலிண்டை வேரரைத்துச்
சுற்றிக் கடிவாய்தனிற் பற்றத்தடவத்
தீதுற்ற செய்யான்விஷம் உடன்விட்டுச்
சென்றிடு மென்றுரைத்தார் கெண்டைவிழியே. (264)

ஆறுபுள்ளி வண்டு கடிக்கு மருந்து

ஆறுபுள்ளி வண்டுகடிததே கடுத்தெரிப்
பாகிற்பழங்காடியிற் பாகலிலையை
மாறிட வேகவைத்து ஆவியை
வாகாக்கடி வாயிற்காட்ட வாங்கும்விஷம். (265)

காட்டிலுள்ள அட்டைக் கடிக்குமருந்து

சரக்கொன்றை வேரரைத்துப் பாலினில்
சாப்பிடக் கொடுவிஷந் தானகலுமே
நெருக்குற்ற வனத்தினட்டை கடித்திடில்
நேரும் புனமுருங்கை சூரியன்வேர். (266)

ஈதல்களுக்கு மருந்து.

ஆசிலா வேப்பம்பட்டைத் தயிலத்தில்
அரைத்துக் கொடுக்கவிஷ மகன்றிடுமே

வீசிய தேளினுக்கு சோழிபெச்சம்
வெற்றிலையிற்கொடுக்க விஷமகலும் (267)
கொல்லன்கோவை கிழங்கரைத்து கொடுத்திடக்
கொடிதான கருந்தேளின் விடமறுமே
கல்லுவெள்ளெருக்கம்பால் சிலையில்
நனைத்து மயிலிறகு தனிற்சுற்றியே. (268)
கோழிபெச்ச மேற்றடவி வைத்துலர்த்திக்
கொடியபன்னிரு தேளுங் கொற்றிற்றென்னிலவ்
வேளையிற் றீக்கொளுத்திக் கொட்டுவாயில்
மெல்லப்புகைககவிஷ மில்லைகடுப்பும். (269)
கட்டுவாய்க் காலிகொட்டிக் கடித்திடில்
நன்று வழுதலங்கா யொன்றுவெதுப்பிக்
கட்டிட விஷந்தணியும் எட்டிவிதை
கழற்சிக்காய்ப்பிரமாண மிழைத்துப்பூசக் (270)
கடுப்புட னெரிப்பொடுங்கும் பழம்புளி
காடிதனிற்கரைத்துச் சாடியிற்பெய்தே
அடுப்பினிற் கொதிக்கவைத்து கொட்டுவாயில்
ஆவிபிடிக்கவிஷம் போய்விடுமே. (271)
ஆகாசத்தாமரை யெருமைச் சாணிப்பால்விட்
டரைத்துக் கொதிக்கவிட்டவ்வாயில்
நீகாசினள வெடுத்துப் பூசிடில்
நின்றிடுங்கடுப்பெரிப் பகன்றிடுமே (272)

எலி கடிக்கு மருந்து.

எலிக்குலம் பதினெண்வகை அவைகளை
இயம்புகிறேனெவற்கும் நயம்பெறவே
வலிக்குங்கத் திரிமணியன் செம்முக்கன்
வள்ளிகுறட்டைகறுங் காற்றலைபன் (273)
விடவெலி செந்தலைமுத்தி செவ்வெலி
வீங்கெலி உலர்ப்பெலி தூங்கெலியும்
புடையெலி இரைப்பெலியும் செங்கண்ணன்
புள்ளி கரடன்குருங் காலெலியும். (274)
நச்செலி யீரொன்பதும் கடித்திட்டு
நாளுமேவிஷந் தானேறினல்
பச்சையா தாளையின்மணி ஒருபடி
பாலிலரைத்தருந்தி னலகலுமே. (275)
ஊமத்தம் விறகுகொணர்ந் திடித்ததை
ஒருபாண்டத் தினில்வைத் தொருகிடங்கில்

நேமித்ததனை யிருத்திக் சமுத்தின்கீழ்
நீடுகுழி வாய்மறைய மூடியிட்டுப் (276)

பக்கத்தில் நாள்வழிபோல் பறித்தந்தப்
பாண்டத்தின்கிழனல் மூண்டிடச்செய்து
தொக்கினிற் புகைத்திடவே எலிவிஷம்
கக்கிவியர்வுடனே கழிந்திடுமே. (277)

சிலந்தி கடிக்கு மருந்து.

சிலந்தியோ ரிருபதினில் அழல்வாய்ச்
சிலந்திக்குச் சுண்ணும்பும் பழம்புளியும்
கலந்தந்தக் கடிவாயில் தேய்த்திடக்
கடுப்புமெரிப்புமுடன் விடுத்திடுமே. (278)

ஆவிரை தாளிபசலை காடிவிட்
டவித்திட்டுக் கடிவாயில் குவித்துக்கட்ட
நாவுரை செயவேண்டுமோ எரிப்பெங்கும்
நாடிடுமோபறந் தோடிடுமே. (279)

இருபது வகைக்கு மொன்று மருந்தொன்
றேலவுரைப்பேன்பிராய்வேர் நீலியின்வேர்
சுரபியின் பாலிற்கொடுக்க முப்பொழுதில்
இறந்திடுமுயிர்வந்து சிறந்திடுமே (280)

வண்டு கடிக்கு மருந்து.

வண்டுகடி வெகுவிதமாம் அதற்கெல்லாம்
வண்டுகொல்லி மரப்பட்டை மைபோலரைத்துக்
கொண்டுபுன்னைக் காயளவு நாளெட்டுக்
கொடுத்திட வண்டுகடி விடுத்தோடுமே. (281)

சயந்திகழ் பங்கம்பாளை வேரினைக்
காசிடை யனுதினங் கடித்தருந்தப்
பயந்திடும் வண்டுக்கடி சங்கின்
பருத்திடுவேரின்மேற்றேல் முருக்கினெற்றம். (282)

குரங்கின் கடிக்கு மருந்து

அளவெட்டு நாளருந்தி உப்புப்புளி
அகற்றிடில் வண்டுகடி திகைத்திடுமே
குழுக்கொண்டு மரங்களிலே குதித்திடும்
குரங்குகடிக்கிற்சுக்குக் கொஞ்சியின்வேர். (283)

நீரினி லரைத்துடம்பிற் பூசிட
 நீங்கிடும் வீழியினிலைச்சாற்றிற்
கூறிய மிளகுபொடி ஒருபலம்
 குழைப்பி வெயிலில்வைத்துக் கொளுநுரையைப். (284)

புண்ணிற் பூசிடவே புலர்ந்திடும்
 பூசித்திடுங் கொஞ்சி விளாத்தியிலை
கண்ணிற்கண் டதைக்கொணர்ந்து ஆறுத்தொத்திக்
 கட்டவிஷந் தட்டுக்கெட்டு விட்டுவிடுமே, (285)

நாய்கடிக்கு மருந்து.

பச்சோந்தி கடித்திடினே கழுதாழை
 பண்ணை பாட்டையிலை நண்ணுஞ்சிறுநீர்
மிச்சமாய் விட்டரைத்துக் கடிவாயில்
 மெள்ளப்பூசி யாதகியிலைத் தெள்ளுபொடியை. (286)

நாய்கடிக்குமருந்து.

வெண்ணெய்தனி லிட்டுக்காய்ச்சி நாசியினில்
 விடுத்து வீக்கத்திற்றட விடக்குணமாம்
மண்ணின்மிசை ஞாளிகடித்தால் ஆசறு
 மருந்துநன் னரிவேர் கரந்தையிலை. (287)

உப்பெள்ளுப் புகையூரல் சிவந்நா
 யுருவியிவ் வகையாறு மொன்றுபடுத்திச்
செப்பமா யரைத்ததனைப் பூசியே
 உப்புச்சுண்டை யிலைநுவைத் துப்பினதனை. (288)

காட்டுத்தவளைகடிக்கு மருந்து.

வறுத்தொத்திக் கட்டநாயின் பற்பட்ட
 வாயிற் கடுப்புத்தணிக் தோயும்விஷம்
கறுத்திடுங் காட்டுத்தவளை கடித்துடல்
 கருகிச் சொறியெழும்பிற் கறியின்பொடி. (289)

கழஞ்சிரண் டகத்தியிலைச் சாறெரு
 காற்படி தனிலிட்டுக் கரைத்தருந்திப்
பழம்புகைத் தூளுமுப்பும் வேலியின்
 பருத்தி யினிலைச்சாற்றி லரைத்திடப்போம். (290)

அரணைநக்கலுக்கு மருந்து.

நக்கிடு மெனிலரணை உடல்முற்றும்
 நடுங்கிவெண்ணுரைதள்ளி நாக்குத்தடிக்கில்

சுக்கொடு வசம்பெடுத்துச் சுட்டபின்
சூரணித் தருந்திலுஞ் சாரணைவேர். (291)

துவைத்ததன் சாறுடம்பிற் பூசினும்
தொலையுங் குருந்துபனந் தொல்வேரும்
சுவைத்தருந் திடவரணை விஷமெல்லாம்
துடித்தொடுங் கிடும்நாக்குத் தடித்ததும்போம். (292)

## விஷக்கடியனைத்திற்குங் குழம்பு.

விடமென்னப் பட்டவைக்கெல்லாம் குழம்பொன்று
விளப்புகி றேன்வெள்ளைப் பாஷாணம்
நடமிடு மிரதங்கெந்தி மனோசிலை
நாறும்பெருங்காயமுடன் கூறுந்துருசு. (293)

நிம்பவிதை யுடனேழும் சரிநிறை
நேர்வாளஞ் சுத்திசெய் திரட்டிகூட்டி
நப்புமெருக் கம்பால்விட்டே அம்மியில்
நயந்தேழு நாழிகை நசுத்திப்பின்னும் (294)

வேம்பெண்ணெய் விட்டரைத்து வழித்தொரு
மேதிக்கொம் பின்சிமிழில் போதவடைத்து
பாம்புமுத லானவற்றின் பற்படும்
பலபல விடத்துக்கும் பயற்றளவு. (295)

வெற்றிலை தனிற்கொடுக்க உடன்விஷம்
மீண்டிடும் பற்கிட்டில் வெந்நீரில்
மத்திதது குழம்பதனைக் காற்றுவரும்
வாயி லொழுக்கிடவிஷ நோயகலுமே. (296)

## பாம்புபிடிப்பதற்குக் கடகம்

பத்திய மோருஞ்சோறும் கொடுப்பது
பாம்புகடி யாமலதைப் பற்றுதற்குச்
சித்தர்கள் செய்யுமுறை கைக்கடகம்
சேர்த்திட மூலிவகை சாற்றுகிறேன்- (297)

படர்ந்திடும் பங்கம்பாளை நீலிசுதிப்
பாலை கழற்சிசித்திர மூலியின்வேர்
கடிந்திடு மாதுளைவேர் சிந்திவேர்
கள்ளிவேர் கர்ப்பூர வள்ளியின்வேர். (298)

சிறுகிய நங்கையின்வேர் புள்ளியாரை
செப்பிடும் பேரெட்டியின் சிறுவேரும்
குறுகியபேய்ப்பீர்க்கின்வேர் குன்றிவேர்
கோடாசிலை சிவமூலி கூடியதேர். (299)

வேர்வகை பதினாறும் கொண்டுவந்து
விருத்தமாச் சுற்றிவலக் கரத்திலிட்டுப்
பார்தனி லெட்டுப்பணியும் பிடித்திடப்
பழுதைபோற் கிடந்திடும் பதையாமல் (300)

பாம்பின்வாய்கட்டவேர்.

மிதித்திடிற் கடியாமல் வாய்கட்ட
வோது சொல்லுகிறேன் பாரதனில்
உதித்திடுங் கதிர்வாரம் தனிற்கதிர்
உதயத்திற் சென்றிலஞ்சி யதனைச்சுற்றி. (301)

வடதிசை வேரினிலே காப்புக்கட்டி
மாலைப் பொழுதின்முக்கால் வலஞ்செய்து
உடன்பலி யிட்டுத்தறித்தே குளிசத்தின்
உள்ளடைத் திட்டுக்கட்டிக் கொள்ளவுரகம், (302)

மிதிக்கினுங் கடிக்கினும்வாய் திறவாமல்
மெலிந்திடுங் கண்டவுட னுலைந்திடுமே
மதிக்குநற் பச்சைப்பாம்பு பச்சோந்தி
வாலிரண் டுந்துணித்து மாறுமல். (303)

செம்பினிற் றகடடித்துப் பொதிந்துடன்
சிறுவிரற் கணிமோ திரஞ்சேர்த்து
நம்பிக்கை விரலிலிட்டுப் பணிகளை
நாடிப் பிடிக்கில்வாய் மூடிடுமே. (304)

விஷமிறக்கவும், ஏற்றவும் மோதிரங்கள்.

வெய்யவன் தனையரவம் பரிசிக்கும்
வேளையிற் செவ்வலரி நீளும்வடவேர்
செய்யநூற் காப்புக்கட்டிக் களைந்திட்டுச்
செம்பிற் பொதிந்தகி விடும்பொழுது. (305)

மேற்றிசை வேர்பிடுங்கி வெள்ளியின்
மின்னுதகட்டிற்பொதிந்து துன்னவிருத்திக்
கூற்றென வுரகம்பல்லால் வகிர்ந்திடின்
குடதிசை வேரடைக்குக் குளிசமதை. (306

சிற்முதற் கடிவாயின் வரைக்குநீ
தேய்த்திறக்கிடவிஷந் திரும்பிடுமே
வருமரவக் கடிவாய் முதற்சிர
மட்டும் வடக்குவே ரிட்டகுளிசம். (307)

மேனோக்கித் தேய்த்திடவே தீர்ந்திட்ட
விஷமிஞ்சி தலைக்கொண்டு மேவிடுமே
மாநாக முதலாகப் பலவிஷம்
மானிடர் தனைபற்றி வதைபுரிந்தால். (308)

மந்திர தந்திரத்தால் தியானத்தால்
மணியினால் மருந்தினால் தணிவுசெய்யும்
அந்தமில் புகழ்படைத்த மருத்துவர்
அனைவருந் திரைவளர் கனைகடல்சூழ், (309)

தரைமிசை யொருநூறு பருவமும்
சரிவர வேயிருந்து தான்வாழ்ந்து
திருமகள் விளக்கம்பெற்றுப் பதினறு
சிறுவரைப் பெற்றுமுத்தி பெறுவர்களே. (310)

விருத்தம்

வேதியன் முதனாற்சாதி விடவராக் கடியுண் டோருக்
கோதிய மந்திரந்தான் மருந்தினு லுறுநோய் தீர்த்தோர்
சாதியின் மிக்கவேதத் தலைவராய்ப் பிறந்து பின்னர்
போதில்வாழ் பிரமராகிப் புகழவிற் றிருப்பர் தாமே.

சித்தாரூடத்தில் மருந்து, மை கலிக்கமும், மந்திரசக்கரங்களும் அதனை செபிக்க வேண்டிய விதிகளும் ஏட்டுப்பிரதியில் இருக்கிறது. முன்ன ரச்சிட்டவர்கள் பாட்டுமட்டும் அச்சிட்டிருக்கிறார்கள் - இப்போது ஏட்டுப்பிரதிபின்படி சக்கரங்களுஞ் சேர்த்து அச்சிட்டிருக்கிறது. விஷந்தீண்டினவர்களுக்கு மருந்துமட்டுங்கொடுப்பது அவ்வளவு உசிதமல்ல. மணிமந்திரமென்னும் வாக்கியம் போல் மந்திரத்தினுலும் மருந்து மைகளினுலும் விஷத்தை யிரக்க வேண்டும்.

இதிற்கண்ட மந்திரத்தை நல்லதினம்பார்த்து குரு உபதேசம் பெற்று அப்பால் இதிற் குறித்த தினங்களில் ஆரம்பிக்க வேண்டியது.

## சகல விஷங்களையும் இறக்க கணபதி விஞ்சை மந்திர சக்கரம்.




மூலமந்திரம்

ஹரிஷ்ப்-ரீப்-கங்-செங்-கணபதியே நசிமசிசுவாஹா வென்று

உரு லெட்சம் செபிக்கவும்.

### பூஜை விதி.

சதுர்த்தியன்று இந்த சக்கரத்தை வெள்ளித் தகட்டில்வரைந்து காலை மாலை செபதபங்களை முடித்துப் பட்டுவஸ்திரந்தரித்து கிழக்குமுகமாய்வீற்றிருந்துவாழை இலைவிரித்து மஞ்சள்பிள்ளையார்பிடித்து, அதற்குகுங்குமம் புஷ்பஞ்சாத்தி அவல்கடலை பரப்பி தேங்காய் பழம்வைத்து தூபதீபங்கொடுத்து அனறு மந்திர தியானத்தை ஆரம்பஞ்செய்து 2500 உருவேற்றி மறுநாள் தொடங்கி ஒரு மண்டலத்திற்குள் லெட்சம் உருப்போட்டு முடித்து சித்திசெய்துக்கொள்ளவும். அதுவரை விரதமாக ஒரேவேளை சாப்பாடும் இரவு பால் பழம் பாயசம்வைத்துப் புசிக்கவும் இச்சாபத்தியம்.

இதிற் கண்டசக்கரத்தை உருவேற்றிச் சித்திசெய்துக்கொண்டால் பாம்பால் கடியுண்டவன்நெற்றியிலிருந்து கண்டஸ்தானம் வரை இச்சக்கரத்தை வரைந்து மந்திரிக்க விஷமிறங்கிவிடும்.

## அறுகோணச் சக்கரம்




மூலமந்திரம்

ஹரிஓம் சரஹணபவதேவநசிமசிசுவாஹா உருலெட்சம் செபிக்கவேண்டியது

### பூஜாவிதி.

இந்தச்சக்கரத்தை சந்திர கிரகணத்தன்று செம்புத்தகட்டில் வரைந்து காலைக்கடனை முடித்து பட்டுவஸ்திரந்தரித்து கிரகணம் ஆரம்பிக்கும்பொழுது கிழக்குமுகமாக வீற்றிருந்து குரு ஸ்தோத்திரம்புரிந்து வாழையிலை விரித்து இச்சக்கரத்துக்கு பால பழம பாயசம் வடை தேங்காய் முதலானது வைத்து தூபதீபுங்கொடுத்து மேற்கண்ட மந்திரத்தை 2500உருச்செபித்து அன்றுமுதல் லெட்சம் உருவேற்றி வைத்துக்கொண்டல் விஷங்க ளெதுவானாலும் இறங்கிவிடும். இதனால் சங்காதோஷங்களும் நிவாரணமாகும்.

சர்ப்பசாஸ்திரத்திற்கண்ட கெருடபஞ்சாட்சர விஞ்சை மந்திர சக்கரங்களையு முருவேற்றி சித்தியாக்கிக்கொள்ளவும்.

சித்தராரூடம் முற்றிற்று.

## அரும்பதங்கட்குப் பொருள்.

| | |
|---|---|
| அமுரி | சிறுநீர் |
| ஆகாயத்தூள் | ஒட்டடை |
| ஆதளை | எலியாமணக்கு |
| ஆனைவணங்கி | தேட்கொடுக்கு |
| இம்பூரா | சாயவேர் சிறுவேர் |
| இருவேலி | வெட்டுவேர் |
| உப்பிலி | உப்பிலாங்கொடி |
| ஊருண்றமுதலி | முருங்கை |
| கறி | மிளகு |
| கொடிவேலி | சித்திராமூலம் |
| கொடுப்பை | பொன்னாங்கண்ணி |
| கொல்லங்கோவை | ஆகாயக்கருடன்கிழங்கு |
| சிற்றவரை | கோழியவரை |
| சிவமூலி | பெருங்கிழங்கு |
| சுந்தரி | மூஞ்சூறு |
| சூலி | பொன்னாங்கண்ணி |
| சென்றிலஞ்சி | மலைப்புன்கு |
| தலைச்சுருளி | சாரணை |
| தேனு | பசு |
| தைவேளை | வேளை |
| நிம்பம் | வேம்பு |
| பங்கம்பாளை | ஆடுதின்னாப்பாளை |
| புகையூரல் | ஒட்டடை |
| புனமுருங்கை | காட்டுமுருங்கை |
| பூனைவணங்கி | குப்பைமேனி |
| பொரிகாரம் | வெண்காரம் |
| பொன்முசட்டை | வட்டத்திருப்பி |
| முத்திருக்கஞ்செவி | காட்டுச்சாமந்தி |
| வச்சிரம் | சதுரக்கள்ளி |
| வேலிப்பருத்தி | உத்தரமணி |

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

கௌசிகர் திருவாய்மலர்ந்தருளிய

# சர்ப்ப சாஸ்திரம் ௱.

மந்திர சக்கரத்துடன்.

இஃது

மதுரைத்தாலூகா கோச்சடை உள்க்கடை

பிராட்டிபத்து விஷரோக மாந்திரீகரும்

ப. திருமலைமுத்துப்பிள்ளை அவர்கள்

குமாரருமாகிய

கருப்பையாபிள்ளை அவர்கள்

ஏட்டுப்பிரதின்படி

மதுரை வித்வான்

த. குப்புசாமி நாயுடு அவர்கள்

பார்வையின்பேரில்

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக் கோனர்

அவர்களது

மதுரை வடக்குமாசி வீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

ரிஜிஸ்டர் 1922. காப்பிரைட்

உ

கௌசிகர் திருவாய்மலர்ந்தருளிய

# சர்ப்பாரூட சாஸ்திரம் ௫.

## மந்திரசக்கரத்துடன்.

அஷ்டநாகங்களின் விஷங்களை நிவர்த்திக்க கருடபஞ்சாட்சர விஞ்சையில் முதலாவது பிர்மதியான புருதிவு சக்கரம்.




மூலமந்திரம், ஹரிஓம்- கம்-லம்-மம்-லம்-சிப்-லப்-வப்-லய்-யப்-லய்-சிவஓம்பக்ஷிசுவாஹா வென்ற உருலெட்சம் போடவேண்டியது

### பூஜாவிதி.

ஆதிவாரத்தன்று நல்லதினத்தில்ஆரம்பஞ்செய்யவேண்டியது. காலைக்கடனைகழித்து மாலையில்ஸ்நானஞ்செய்து சிவப்புப் பட்டு வஸ்திரமுடுத்தி வடக்குமுகமா யிருந்துகொண்டு சக்கரத்தை வெள்ளித் தகட்டில் வரைந்து தேங்காய் பழம் வைத்துத் தூபதீபங் கொடுத்து பிர்மதேவனை தியானித்து மூலமந்திரத்தை தினம் 2500 உருவீதம் 40 நாளைக்குள் லெட்சம் உருச்செபித்து சித்தி செய்துக் கொள்ளவும்.

கருடபஞ்சாக்ஷர விஞ்சையில் 2-வதுவிஷ்ணுதியான அப்பு சக்கரம்




மூலமந்திரம்.

ஹரிஓம்-மம்-வம்-சிம்-வம்-வம்-வம்-யம்--வம்-நம்--ஹம்-சிவஓம் பட்சிசுவாஹா உரு லெட்சஞ் செபிக்கவேண்டியது.

பூஜாவிதி,

சோமவாரமன்று ஆரம்பித்து மாலையில் ஸ்நானஞ்செய்து பச்சைப் பட்டுடுத்தி வடமுகமாயிருந்து இந்தச்சக்கரத்தைத் தாம்பிரத்தகட்டில் வரைந்து தேங்காய்பழம் வைத்து தூபதீபங்கொடுத்து விஷ்ணுவைத்தியானித்து மூலமந்திரத்தை தினம் 1-க்கு 2500 உருவீதம் 40 நாளைக்குள் லெட்சம் உரு செபித்து சித்தியாக்கிக்கொள்ளவும் எந்தப்பாம்பு கடியுண்டு வந்தாலும் மந்திரித்தால்விஷமிறங்கிவிடும்.

---

கருடபஞ்சாக்ஷர விஞ்சையில் 3-வது உருத்திரதியான தேயுசக்கரம்




மூலமந்திரம் ஹரிஓம்-சிம்-ரம்-வம்-ரம்--யம்-ரம்-நம்--ரம்---மம்-ரம்-சிவஓம் பக்ஷிசுவாஹா உரு லெட்சஞ்செபிக்கவேண்டியது.

பூஜாவிதி.

சுபதினமாகிய மங்களவாரத்தன்று மாலை ஸ்நானஞ்செய்து மஞ்சப்பட்டுடுத்தி பஞ்சாக்ஷர மணிந்து கிழக்குமுகமாயிருந்து செப்புத்தகட்டில் இந்தக் சக்கரத்தை வரைந்து பாலபிஷேகஞ் தேங்காய் பழம் வைத்து தூபதீபங்கொத்து மூலமந்திரத்தைதியானித்து தினம் 1-க்கு 2500 உருவீதம் 40 நாளைச்கு லெட்சம்உருவேற்றிச் சித்தியாக்கிக்கொள்ளவும் மந்திரித்தால் சகலவிஷங்களு மிறங்கிவிடும்

கருடபஞ்சாக்ஷரவிஞ்சையில் 4-வது மகேஸ்வரதியானவாயுசக்கரம்




மூலமந்திரம்.

ஹரிஓம்-வம்-பம்-யம்-யம்-நம்-யம்-மம்-யம்-சிம-யம்-சிவஓம் சுவாஹா என்று உரு லெட்சம் செபிக்கவேண்டியது.

பூஜாவிதி.

குருவாரமான நல்லதினத்தன்று உதையகாலத்தில் ஸ்நானஞ் செய்து அநுஷ்டான முடித்து வெண்பட்டுடுத்தி வடக்கு முகமாயிருந்து தாம்பிரத் தகட்டிலிந்தச் சக்கரத்தை யெழுதி பாலாபிஷேகஞ் செய்து தேங்காய் பழம் வைத்து தீபதூபங்கொடுத்து மூலமந்திரத்தை தியானித்து தினம் 1-க்கு உதுநூறு உரு விதம் நாற்பது நாளைக்குள் லெட்சம் உருவேற்றி சித்தியாக்கிக் கொண்டால் எந்தவித விஷங்களுமிறக்கலாம்.

## கருடபஞ்சாக்ஷர விஞ்சையில் 5-வதாகிய சதாசிவ தியான ஆகாய சக்கரம்.




### மூலமந்திரம்.

ஹரீஹும்-யம்-ஹம்-நம்-ஹம்-மம்-ஹம்-சிம்-ஹம்-வம்-ஹம்" சிவஹும்-சுவாஹா என்று லெட்சம் உரு செபிக்கவேண்டியது.

### பூஜாவிதி.

சுக்கிரவாரங் காலையிற் குளித்து நீலநிறப்பட்டுடுத்திகிழக்கு முகமாயிருந்து வெள்ளித்தகட்டில் இந்த சக்கரத்தைவரைந்து தேங்காய் பழம் வைத்து தீபதூபங் கொடுத்து மூலமந்திரத்தைத் தியானித்து தினம் 1-க்கு 2500 உரு வீதம் நாற்பது நாளையில் லெட்சம் உருச்செபித்துமந்திரசித்தி செய்துக்கொள்ளவும். எவ்விதமானவிஷங்களு மிறங்கிவிடும்.

### கெருடபஞ்சாச்சர விஞ்சையின் மூலமந்திரத்திற்குரிய பலாபலன்கள்.

1-வது பிர்மதியான மூலமந்திரத்தினால் விஷங்களுமிறங்குவதுடன் புத்திர சந்தானங்களு முண்டாகும்.

2-வது விஷ்ணுதியான மூலமந்திரத்தினால் சகலவிஷங்களு மிறங்குவதுடன் குளிர்சுரங்களும் நிவாரணமாகும்:

3-வது உருத்திர தியான மூலமந்திரத்தினால் சகல விஷங்களு மிறங்குவதுடன் குளிர்சுரங்களும் நிவாரணமாகும்.

4-வது மகேஸ்வர தியானமூலமந்திரத்தினால்விஷங்களுமிறங்குவதுடன் சகல தோஷங்களும் நிவாரணமாகும்.

5-வது சதாசிவ தியான மூலமந்திரத்தினால் விஷங்க ளிறங்குவதுடன் குழந்தைகளின் பாலாரிஷ்ட தோஷங்களுந்நிவாரணமாகும்,

கெருட பஞ்சாக்ஷர விஞ்சைக்குரிய
பஞ்சபூதங்களின் விபரமும், அவைகட்குரிய அட்சரங்களும்,
ஆருதாரங்களும்

| பஞ்சபூதம் | பஞ்சாக்ஷரம் | பீஜாக்ஷரம் | உயிராக்ஷரம் | ஆருதாரம் |
|---|---|---|---|---|
| பிருதிவு | ந | லம் | அ | மூலாதாரம் சுவாதிஸ்டானம் |
| அப்பு | ம | வம் | இ | மணிபூரகம் |
| தேயு | சி | ரம் | உ | அனுகதம் |
| வாயு | வ | யம் | எ | விசுத்தி |
| ஆகாயம் | ய | ஹம் | ஒ | ஆக்கிணை |

உடலினது ஆருதார ஸ்தானமாவது தலை, கழுத்து, மார்பு, வயிறு, கால்வரை யவசிமந என்று மனக்கண்ணினல் லெழுதிஷெ மூலமந்திரம் பிரணவமாகிய ஓங்காரஞ் சேர்த்து தியானிக்க விஷமானது இறங்கும்.

மேற்சொன்ன பிரகாரம் அந்தந்த இடங்களில் அடிமுதல் சிரசுபரியந்தம் ஓம் நமசிவய வென்று மனக்கண்ணினல் ஷெ அட்சரத்தை ஓட்டி செபிக்க விஷமானது மேல் நோக்கிச் செல்லும் உடனே சிரசு முதல் அடிவரை அந்தந்த ஸ்தானத்தில் ஷெ அட்சரத்தை ஓட்டி செபிக்க விஷமானது இறங்கும்.

உ

பரமபதிதுணை.

அரிதிரு மருக னென்றும் அரன்மக னாகு மென்றும்
புரியுள நாகந் தன்னைப் பூணநூ லாகச் சாத்தி
பொரியுமுக் கனியுந் தேங்காய் பொங்கலோ டமுது செய்யும்
கரிநிற முடை தொந்திக் கணபதி காப்புத் தானே. (1)

மன்னிய விஷக்க டன்னால் மானிடர் வருத்தம் நீங்க
உன்னிய சிவத்தைப் போற்றி உறுதியாய்க் குருவின் பாதம்
சென்னிமேல் வைத்து நூலைச் சிறப்புடன் சொல்லு தற்குக்
கன்னிநா மகளென் நாவிற் கருணையா யிருப்பள் காணே: (2)

வேறு.

தாப்பாகச் சுந்தரர்தான் வடநூலாய்ந்து
சாற்றினார் சர்ப்பநூ லாயிரந்தான்
மூப்பாகச் சுருக்கியதை யிருநூறாக
மோனகுரு முனிவர்சொன்ன விஷத்துவித்தை
கோப்பாக வெளியில்விடா தந்தநூலைக்
குகைக்குள்ளே மறைத்துவைத்த குறிப்புணர்ந்து
மாப்பாகச் சினமடக்கி நூறுபாடல்
வழுத்தினேன் சித்தர்களுங் களிக்கத்தானே. (3)

வேறு.

அடமாக யானும் பன்னூ லாய்ந்துகட் செவி விடங்கள்
திடமாகக் குறிகுணங்கள் திரும்பவே மருந்து நோக்கம்
தடமாகக் குறுக்கி யெல்லாஞ் சாற்றினேம் நூறுபாடல்
இடமாகச் சித்தர்கூடி யிசைந்துகைக் கொண்ட நூலே. (4)

திருதியாய் வடநூ லொன்றிற் செப்பிடுஞ் சர்ப்ப நூலைச்
சுருதிபோற் கவுசி கன்றான் தொகுத்திடும் பாடல் நூறும்
கருதியே பார்க்க மீளுங் கடவுளைத் தொழுத பேர்க்கு
மிருதியும் விடத்தா லில்லை விளம்பினர் பெரியோர் தாமே. (5)

அழகா மனந்தன் வாசுகிதா னகுங் கார்க்கோ டகன்தக்கன்
குழகாற் பதுமன் மாபதுமன் குளிகன் சங்கபாலனுமே
பழகா நாக மிவ்வெட்டும் பாரில் நான்கு சாதிபதாம்
இழகா திந்த வகைப்பிரிவை யினமா யெடுத்துச் சொல்வேனே

மதிக்கு மறையோன் செம்மைநிறம் வாயுகெந் தந்தா னுண்ணும்
சதிக்கு மரசன் பொன்னிறமாம் தார்பூ வாசந் தானருந்தும்
பதிக்குஞ் செட்டி திங்கள்நிறம் பயந்தே பொசிக்கு மெலியோந்தி
கதிக்கு முழவன் கரிநிறந்தான் காணுந் தவ ளோடீனானே. (7)

ஊணும் பாப்பா னுகாயம் உயர்ந்தே பார்க்கும் நாவிமணங்
காணும் அரசன் தாழம்பூ கமழும் வாசம் செவ்வேதான்
நாணும் வசியன் பாதிரிப்பூ நாலு திசைகள் பார்த்தாமே
மாணும் உழவன் இலுப்பைப்பூ வாசம் தரையைப் பார்த்தாமே. (8)

ஆகவே வகைநா லுந்தா னுருமற் றவைக ளெல்லாம்
ஏகவே புலையின் சாதி யீசனார் விதியி னாலே
சாகவே சாபம் பெற்றுத் தரணியில்விஷங்கள் நீண்டும்
போகவே சித்தர்க்கெல்லாம் புகலுவேன் குறியைத்தானே.(9)

தாங்குங் கோவிற் பிறந்திடுநாள் சணமாஞ் சுடலை புளியடியில்
வாங்கும் நடுநாள் துவாதேசி வந்தா லருக்கன் ஐந்தேநாள்
நீங்கும் உச்சி யுள்ளங்கை நெற்றி கழுத்திற் கண்மூக்கில்
எங்கும் இந்தக் கடிவருகில் ஈசன் விதித்த படியென்னே. (10)

என்னே சனியு மாயுலியம் ஏழாம் நாளில் அட்டமியிற்
பின்னே பாழில் லரசடியிற் பிசமாங் காவிற் குதிநரம்பில்
முன்னே பாம்பு கடிக்ககடி மொழியி லிந்தக் குறிகண்டாற்
சொன்னே னறிந்து சித்தரெலாஞ் சூட்ச மாக மீள்வீரே (11)

மூலஞ் செவ்வாய் மூன்றேநாள் முந்து மம்மா வாசிமகம்
கோலச் சோதியி னுலோணங் கூடாக் கேட்டை பரணியுறிற்
காலன் வருவா னந்நாளிற் கடிக்கிற் கடினங் காசினியிற்
றால மறிந்து விஷதாரி சொல்வேன் சூட்சம் மீள்வீரே. (12)

விலகிய நாட்கள் பக்கம் விரைந்திடும் வார முற்றே
இலகிய தினங்க ளாகில் இரங்கிடும் இசைமுந் நாளேல்
கலகிய விஷமே மீறும் காலனு மேற்றுக் கொள்வன்
நலகிய சித்தர்க் கெல்லாம் நாமிதை நன்றாய்ச் சொன்னேன்.(13)

### தூதுலட்சணம்.

எட்டும் வருகில் விஷந்தீண்டும் இடையி லணுகில் விஷமில்லை
தொட்டும்வழலைதேள் பூரான் சோரவெலியும் நீர்க்கோழி [யில்
வெட்டும் புடையன் மண்டெலியும் விரியன் பலரும் கோணிடை
ஓட்டுந் தூத னுதுங்குதிசை யுடலிற்கண்ட குறிசொல்லே (14)

### தூதுவந்தவன் குறி

ஓடிவந்த தூதனுமே சூனியத்தில்
உரைத்துடனே பூரணத்தி லொதுங்கிநிற்கில்
நாடிவந்த அரவுகடி விடங்களில்லை
நடந்திடுகிற் சூனியத்தில் மீளாதென்கத்
தேடிவந்த திசைநா லும் அரவதாகும்
தீண்டிடுகி லாணும் கோணிற்பெண்ணும்
நீடிவந்த குறியறிந்து சித்தரெல்லாம்
நினைவாகத் திசையெட்டுந் தெளிந்துபாரே (15)

### வேறு

மதிமேல் வரினுந் தூ துவனும் வார்த்தை அகாரம் முன்னுரைக்கில்
அதிமே லரவங் கடியாகும் அரிவீர் கெந்த மொன்றாகும்
விதிமே லியம னிரண்டாகும் வெயிலின் திசைதான் மூன்றாகும்
பதிமே லானைத் திசைமேலும் பார்க்கப் பாம்பின் பல்நாலே. (16)

### வேறு

காரிய தூதன் றானுங் கடிகவே மறலி நோக்கில்
வீரிய மாகவந்து விளம்புவ திகார மாகில்
நேரிய கெந்த மொன்றாம் நீள்மனை தாளி ரண்டாம்
கோரிய யானை மூன்றாங் கொடியபல் நால தாமே (17)

### வேறு

ஆராய் மழைமே லொருதூதன் அசையு முகார மவனுரைமுன்
நேராய் கெந்த மொன்றாகும் நீளத் திசையா னிரண்டாகும்
தோரா வெயிலின் திசைமூன்றாம் துடியா மியமன் நாற்பல்லாம்
பாராய் திசையிப் படியெல்லாம்பகருந் தூதன்மொழிகாணே .(18)

குறியா யுரைக்க யானையின்மேற் கூறு மெகார முன்சொல்லில்
அறியாய் நீயு மொருபல்லாம் அடுத்தவெயிலி லிருபல்லாம்
பிறியா யியமன் பல்மூன்றாம் பிழையா துரைநீ மழைநாலாம்
நெறியா லுரையித் திசையெல்லாம் நேரே தூதன் மொழிபாரே (19)

நன்றெனலாம் ஓங்காரம் முன்னே சொல்லில்
நாடிவருந் தூதனுரை விடங்களில்லை
இன்றெனலாம் அவனுடையும் வெள்ளையாகில்
இனங்கிவருங் குறிநெறியு மறிந்துகொண்டு
சென்றிடலாம் விஷதாரி தீர்க்கவென்றால்
திசைகளெட்டுந் தெளிந்துமனந் தேர்ந்தபின்பு
வென்றிடலாங் குருவருளாற் கருவைநாடி
மீண்டிடுகில் விடங்களெல்லாம் மீளுந்தானே. (20)

தன்பாகம் வந்துநின்று சொன்ன தூதன்
தலைசொரிந்து மயிர்தூத்தி நடந்தானாகில்
துன்பாகச் செடிக்குள்ளே யிருந்தபாம்பு
தொட்டதுவே திரும்புவது அருமையாகும்
வன்பாகக் காதுதோள் தொட்டானாகில்
மரம்புடைக்குள் ளேவாழும் மாசுணந்தான்
பின்பாகக் காதுதோள் கையாற்றொட்டாற்
பெரும்பாதை தனிலிருந்த தென்றுசொல்லே. (21)

வல்லவன் வந்த தூதன் வலத்துவந் திடத்தே நின்று
பல்விடங்கொண்டாற்போல்முன்பகர்ந்திடில்வேறோர்சித்தன்
மெல்லவே மீண்டா னென்க மிகுயிடந் தன்னில் வந்து
சொல்லியே வலத்து நிற்கிற் றுஞ்சினா னென்பாய்தானே. (22)

கண்டில்லை யென்றொருவன் பிரஸியாகக்
கடியினுட லட்சணத்தைச் சொல்வீரென்றால்
உண்டில்லை யென்றறியத் திரும்பவிட்டு
உரைத்தகுறி யின்னதென்று அறியவேண்டித்
துண்டில்லை ஓங்காரம் அவன்பேர்முன்பிற்
சொல்லியிடக் கால்சொறிந்து யிடமிருக்கிற்
கொண்டில்லை யிப்படிநீ மாறிக்கண்டு
கூறிடுவாய் தப்பாது குறிப்பிதாமே. (23)

சூடுகல முரசு சங்கு தோன்றிய இருஷிபாப்பான்
கடுமணல் மழுவு சூலங் கயிறுமண் வெட்டி வைக்கோல்
இடுதடி சிலையும் வாழும் ஏந்துவோன் குருடன் அங்கி
நடுவழி யெதிரே கண்டால் நல்லதுந் தீதாங் காணே. (24)

கடிகுறி.

நீறிடுங் கடிவாய் தன்னில் நின்றுடன் ரெத்தம் பாய்ந்து
ஏறிடும் பக்கம் பற்றி யிரங்கிடு மமுதத் துள்ளே
சீறிடும் நயனம் ரெண்டுஞ் சிவந்துட னிருக்குமாகிற்
கூறிடும் பாம்பு கொட்ட குணமிது கண்டு கொள்ளே. (25)

மண்டியே அரவந் தீண்டி மயங்கியே விழுகு முன்னே
ஒண்டியே அமுதத் துள்ளே ஒதுங்கிடி லுயிரு மில்லை
சுண்டியே உயிர்தான் நிற்கும் சுற்றிலே பொதிந்து கொள்ளும்
கண்டியே மீளா தென்றங் கறிந்துநீ யடக்கம் பாரே. (26)

வற்றிமெய் சிவக்கினும் வாய்விழி யடக்கினும்
வானிலோடு மிரவிபோல் மாறிமாறி யோடினும்
இற்ற சோரை பாயினும் இறையிலொட்டி யோடினும்
ஏறுகாம சுக்கிலம் எச்சம்பக்க மாகினும்
பற்றுநீரிற் றூவினும் பாரவிந் தடக்கினும்
பைதிறந்து செய்மருந்து திடமிதுகண் டாகினும்
அற்றதில்லை யாவியும் அடக்கமுண்டு சித்தரே
ஆய்ந்தறிந்து பார்த்திடில் ஆவிமீள லாகுமே. (27)

மருந்து வகை.

கண்கலிக்கத்துக்கு குளிகை

அறவங் கடித்து உயிரொடுங்கி அமுர்தத் தடங்கித் திரும்பாமல்
இரவு பிணமுங் கொடுவந்தா லெழுதுங் கலிக்க மியம்பக்கேள்
கரமாம் வசம்பு துருசுகெந்தி கடுகு சின்னி நேர்வாளம்
திரவா யிரதம் பெருங்காயம் திப்பிலி சுக்கு மிளகுடனே. (28)

உடனே மடையன் வெடியுப்பு உமுவை யுள்ளி யிந்துப்பும்
கடனே காரங் குன்றிவிரை கயிந்த கொல்லி விரையுமக்கும்
நடனே சுண்டன் பச்சையகி நங்கை கெருடக் கொடிவேரும்
திடனே பாலை மகிழ்விரையுஞ் சிறந்த எட்டிப் பழஞ்சேரே. (29)

சேரும் வகைக்குக் கழஞ்சி ரண்டு தில்லைக்கழுதைப் பாலுமக்கும்
பாரும் அவுரி யிலைபங்கம் பாலைமேனி யிலையிடித்து
வாரும் வகைக்குச். சாறுமக்கு வலுவா யரைத்துக் குழம்பானாற்
றீரும் குளிகை உளுந்தளவிற் றிரட்டி வெயிலிற் றுணுலர்த்தே (30)

உலர்த்தும் நாள்மூன் றனதின்பின் னுருண்டையெடுத்துச்செப்பி
குலத்து அரவங் கடிகொண்டு குறுகியாவி யொடுங்கிடிலோ (வடை
பெலத்த நிம்பச் சாத்திலதைப் பேணி யரைத்துக்கண்ணிலிட
நிலத்திலோடும் நீர்ப்பாயும் நிசமே மீளுங் கடிபாரே. (31)

எட்டிக் குழம்பு.

எட்டியினி மரத்தைத் தோண்டி யிரதநேர் வாளங்காயம்
முட்டியவெள்ளை நாவி முப்பு மெரித்தான் நங்கை
தொட்டிய கெவுரி கெந்தி துருசுமாங் துருசி ளேடு
வொட்டிய நிருதார மொக்கவோர் சமனுய்க கூட்டே. (32)

கூட்டிய மருந்தை யெல்லாம் குப்பைமே னிச்சாற் வேளை
ஆட்டிவிட் டரைத்துக் கொண்டு அதனில்வேப் பெண்ணைசேர்த்து
நாட்டிய புளி பொதிந்து நலப்பெறப் புரையில் வைத்து
மூட்டியே மரத்தி னுலு முளையதி லடைத்து வையே. (33)

வையே மருந்தை மண்டலந்தான் மரத்தி லிருத்தி வைத்தபின்பு
செய்யே பொங்கல் பெலியிட்டுச் சிவஓம் நீல கண்டிநமோ
மெய்யாயிரத்தெட் டுருச்சொல்லிமீண்டுங் குழம்பைத்தானெடுத்து
வையே செப்பிற் பதனமாய் வருமே கடிக்கு மருந்திதுவே. (34)

இதுவே அரவங் கடிகொண்டு எடுத்தே பிணம்போற்கொடுவங்கால்
எதுநாம் செய்வோ மெனமனத்து ளேங்கி யிளைத்து நில்லாதே
பொதுவே குழம்பைக் காசிடைதான் பொருந்து நீரிற் கொடுமீளும்
வதுவே யிருக்குந் திருவாணை மண்ணோர் விடத்தால் மாளாரே. (35)

வீரம் பெரிய வெடியுப்பு வெள்ளைச் சவுக்கார ரஞ்சூதம்
காரம் பெரிய நெறிவிஷமும் கடுகு கெந்தி யிந்துப்பும்
வாரம் பெரிய திரிகடுகும் வாங்கும் நாவி பெருங்காயம்
தாரம் பெரிய நேர்வாளம் தக்க கன்னூர் மனோசிலையே. (36)

கன்னூர் கெவுரி காரகிலுங் கழறும் வசம்பு வெங்காரம்
குன்னூர் மடையன் அதிவிடயம் கூருந் துருசு வாலரிசி
பின்னு யுருவி கற்பூரம் பெரிய தொட்டிப் பாஷாணம்
சொன்னூர் சரக்குஇவையெல்லாம்தொடுத்துவிரைசேர்துறைபாரே

துறைசேங்கொட்டைமகிழ்விரையும்சுந்தரிசதையோ டெட்டிவிரை
குறைபா ரழிஞ்சி முசுறுமுட்டை குறிசேர் வேம்பு குன்றிவிரை
நிறைபார் மருந்து யிவையெல்லாம் நேரே சரக்கு மொருசமனும்
முறைபா ரறைக்க மூலிதனை மொழிவார் விபர மினியாமே. (38)

இனியா யவுரிச் சாறுவிட்டு இணங்கி யரைத்து யிவையெல்லாம்
தனியார் மேனி தைவேளை சாரணை பானை வீழியொடு
தொனியார் சங்குத்தோடையுடன் சொல்வார்நங்கைகோடகையும்
முனிவா ரிடித்து வடிகொண்டு முனிந்துவாரே தினமொன்றே. (39)

வாராய் தினமொன் றொருபாலாய் வடிய வரைத்துப் பாலீந்து
பாராய் குழம்பா யானதனைப் பயர்போ லுருட்டி யொருசமனுப்
சீராய் நிழலிற் றானுலர்த்திச் சிமிழி லடைத்துப் பலபேர்க்கும்
தோராய் விஷங்கள் சிங்கிமுதற் சொல்வார் சூட்ச மிதுநேரே. (40)

நேரே மூலா தாரமுடன் நின்ற சுவாதிஷ் டானவெளி
தாரே தொடுத்துப் போலேறித் தளர்ந்து மெய்யுங் கண்முடி
ஊரே பெரியோர் கைவிட்டு உற்றூர் குன்றி யழுதுவிழச்
சேரே குளிகை நாலதனைச் சிறக்கக் கலந்து வழிநீராம். (41)

வழிநீர் கலந்து கொடுநீயும் வாராய் மூக்கிற் செவியிலிடக்
கழிநீர் போல விடமோடிக் கடிவா யோடே கதறிவிழும்
பளிநீர் விரியன் கருவழலை பதினாறுகும் மண்டலியும்
தெளிநீர் சிவனார் தம்மாணைசெய்வாய் மருந்துதொழில்தானே. (42)

குடோரித்தமர்.

தானே விஷங்கள் மீறினபின் தலையிற் குடோரித் தமராடிக்
கோனே குளிகைக் குடோரிதனிற் குறியா லெழுதிக் தீயெரிய
ஊனே யிருந்த விஷமோடும் உயிர்தான் பரிந்து உறவாகும்
நானே சொன்னேன் விஷதாரி நாடிச் செய்வார் பெரியோரே. (43)

பெரிய விரியன் கருவழலை பேய்நாய் குரங்கு எலியரணை
எரியக் கடித்து விடமேறி யெங்குங் கலந்து விடமெல்லாம்
பொரியப் பொரியில் நொய்போலே பொடிபட் டோடும் புவிமீதில்
வரியச் சிறந்த குளிகைகொடு வகையா மனுப்பா னங்காணே. (44)

காணு தரவு குளிகையினூற் காலிற் றேய்த்துச் சென்றிடுகில்
நாணு தோடும் ஊமத்தில் நரிநாய் முதலை விஷந்தீரும்
தோணுய் பலதுந் தேடாதே சொன்னு ருலகிற் பெரியோர்கள்
வாணுள் தங்குங் குளிகையினல் வழங்குங் கடிகள் பலதாமே. (45)

நாசியில் நசியம் அடக்கத்துக்துப் புகை

மருகாய் விடமுந் தலைகொண்டு மயங்கியுயிரு மில்லாமற்
சருகாய்க் கிடந்த பிணமதனைத் தானேயெழுப்பத் தந்திரந்தான்
இருகாய் சொல்வேன் மருந்ததுகே ளெருக்கு நங்கை கொடிவேலி
தருகா யவுரி சாரணைவேர் சாரக் கோட கையின்வேரே. (46)

பாரா யினுஞ்சுக் தரிபச்சைப் பாம்புங் கீரிக் குளம்புடனே
ஏராய் முடிந்து மொருசமனுய் எட்டு முலர்த்தித் தூளாக்கித்
தேராய் சேலை வடிகொண்டு திடமாய் வைநீ கடிவந்தால்
கூராய் மூக்கிற் றூளதனைக் கொள்ளக்குணமாம் விஷந்தானே. (47)

சூதம் வசம்பு நேர்வாளம் துருசு மூஞ்சூர் பெருங்காயம்
வீதங் கெருடன் முசுருமுட்டை வெள்ளைக் காக்க ணங்கெவுரி
போத மவுரி மிளகுள்ளி பொருந்தங் கெந்தி சமனெல்லாம்
நீத மெருக்கம் பால்விட்டு நெருக்கி மருந்தைத் துணியூட்டே(.48)

ஊட்டுங் கழுதைப் பாலதிலே உலர்ந்த வுடனே திரிபண்ணி
மூட்டும் விஷத்தால் வருபவரின் மூக்கி னுள்ளே குழல்வைத்துக்
காட்டும் புகையைக் கண்டோடுங் கால னிழகி யுடன்பேசும்
ஆட்டுங் தில்லைச் சிவனுணை அடக்க மெழுப்பும் புகையிதுவே. (49)

ஆடு மாவந் தான்கடித்து ஆவி யொடுங்கி யவனியதிற்
கூடு மயர்ந்து கிடக்கையிலே கூட்டு மருந்து மில்லாட்டால்
நாடு முள்ளம் மயங்காதே நன்று மதற்கு வகைசொல்வேன்
நீடு மிரதம் வசம்புகெந்தி நேர்வா ளத்தை யுடன் சேரே. (50)

சேரே காயஞ் சமனெல்லாந் தில்லைக் கழுதைப் பாலுழக்கு
தாரே யெருக்கம் பால்விட்டுத் தனமா யரைத்துப் பழந்துணியிற்
சாரே மருந்தை மூன்றுதினந் தானே உலர்த்திற் திரியாக்கித்
தீராக் கடிக்குப் புகைபிடிக்கத் திடமாய் மீளுஞ் செய்வீரே. (51)

செம்புச் சிலாகை.

மீளச் செம்புச் சிலாகையுந்தான் மேலூ மத்தம் பூவதுபோல்
நீளம் புருடர்க் காறுவிரல் நிகழும் பெண்கட் கெட்டுவிரல்
தாளஞ் சிறுவைக் கோல்போலத் தானே பருமக் குழல்செய்து
ஆளச் சுக்கி லத்தினுளே அடக்க மாகச் செய்வீரே. (52)

செய்யவே குருவைப் போற்றிச் சிலாகையிற் பஞ்சு சுற்றி
நையவே தயிலந் தோய்த்து நடத்துநீ சுக்கி லத்துட்
பையவே செலுத்தி யுள்ளே பரர்த்து மூன் றங்குளந்தான்
உய்யவே புகையைக் காட்ட வுயிர்வந்து சேருந்தானே. (53)

தானே பலதுஞ் செய்தபின்பு சலனம் நெஞ்சில் நினையாதே
நானே சொன்னேன் புகைபறிந்து நாடிச் செய்ய வல்லீரேல்
ஊனே யிலகுங் காலனுந்தா னுடனே பேசுஞ் சிவனுணை
கோனே அரவின் கடிவந்தாற் குறிப்பை யறிந்து செய்வீரே. (54)

தியானம்.

சீறுஞ் சிகர வகாரமுமே சினந்து கடிக்கும் அகாரமுமே
பேறும் யகர ஓகாரமுமே பேண விரங்கும் மகாரமுமே
மாறும்விடத்தின் விடங்களெலாம் மறியே உசரங் கிலிநமாவென்
கூறும் நூறு பிரமுருவைக் குறித்துச் செபிக்கிற் கடிபோமே. (55)

கடியாது ஓங்சாங் கிலிநாவென்னக்
கடித்திடினு மேருது றீங்காரத்தை
இடியாது உகாரந்தான் உச்சியாகும்
இதமான சீயோடு நகாரம்நெஞ்சில்
துடியாது ஆம்இறீம் கிலியும்வாவா
சொல்லிடுகில் விஷமீளுஞ் சூட்சமாகும்
மடியாதே ஒருகோடி சித்திபண்ணி
மாசுணத்தின் கடிவருகில் மீளச்செய்யே. (56)

ஆதியே சிவாயவா னந்தரூபா
ஆம்ஆம்ஆம் புரோம்பிரியும் லுங்காயாவா
ஓதியே கடிவாயில் வகாரந்தன்னை
ஒட்டிவோங் காரமுன் சொல்லமீளும்
நீதியாய்ச் செபிக்கமந் திரங்களாகும்
நீணிலத்திற் சித்தர்களுக் காகச்சொன்னேன்
போதியே மந்திரந்தா னடக்கமாகும்
புயங்கத்தின் கடிமீளுந் திடங்கள்தானே. (57)

ஆமாமாங் கிலி அவ்வும் நமசிவாய
ஆகுமச் சரமாகச் செபிக்கநன்றும்
ஓமாமாம் இகாரமதை யுள்ளத்துன்ன
உனைக்கடியா தோடிவிடும் உரகமெல்லாம்

நாமாமாம் மகாரமுடன் அவ்வுஞ்சிவ்வும்
நவிலவே அரவாடி யடங்கிநிற்கும்
தாமாமாம் கலசஜலத் துருவதேற்றிச
சலந்தெளிக்கக் கடியிரங்குந் தடைதானேதே. (58)

பலமாக நூற்றுக்குள் ளடக்கியெல்லாம்
பாடினேன் வெளியாக அச்சாத்தைத
நலமாக நானிலத்திற் சித்தர்க்காக
நாட்டினேன் கண்டறிந்து விடங்கள்மீட்கப்
பிலமாக லெட்சமுரு செபித்தாயானால்
பிறக்குமே சித்தியுங்கை வந்ததாகும்
குலமாக நூற்றியெட் டுருவைப்போற்றக்
குண்டலியின் விஷமிரங்குங் கண்டுபாரே. (59)

காரிய மாகத் தானே கருதிலும் கிலிசி வாய
வாரிய காயல் கோவில் வாசலி லிருந்து கொண்டு
சாரிய வாயு மூலை தனைநோக்கிச் செபமே செய்ய
நேரிய ருத்தி ராட்சம் நெருங்கநூற் றெட்ட தாமே. (60)

பாகமாய் மருந்தும் பார்வை பாடினே னுலக மீது
தாகமாய்ச் சித்தர்க் காகச் சாகச மந்திரங்க
ளாகநூ ருயி ரந்தான் அட்சரஞ் சித்தி செய்தால்
நாகமாங் கடியிரங்கி நற்சுகம் பெறுவர் தாமே. (61)

பலபாம்பின் குணம்.

எரிந்திடுந் தீப்போல் மேனி யிருந்திடுங் கடிவாய் தன்னிற்
சொரிந்திடு முதிரம் வேர்வை சுழல்தலை செவியுங் கேளா
தருந்திடு மருந்துந் தங்கா தவன்மனங் குமட்ட லாகும்
தெரிந்துநீர் விரியன் பாம்பின் செய்கையீ தென்று செப்பே. (62)

விழிகருத் துடம்பு நொந்து வெதும்பியே கடிவாய் விம்மிக்
குழியுமே லூரல்கொண்டு கோபமாய் விரிந்து புண்ணும்
கழியுமே நீர் மலங்கள் கண்டிடு மிரத்த மாகில்
தெளியுமே சொன்னதெல்லாம் செகத்தில்வாழ் விரியனென்னே.

உழையுங் கடிவா யுதிரமதா பொழுகி யோடும் நாவுலரும்
அழையும் வயிறு கழியாது அகமே தாக மனல்மீறிக்
குழையுந் தலையு முயிர்குறையுங் கொண்டால் மருந்து குமட்டிடுகில்
நுழையு மிரத்த விரியனென துண்மை யறிந்து நுவல்வீரே. (64)

பொருமியே தேகமெல்லாம் போதவே தலைகழுத்து
இருமியே கக்க லாகி யிளகிடுந் துயரமாகும்
அருமையாந் தொண்டைவாயி லடிக்கடி விருவிருத்து
ஒருமையிக் கூறுகண்டா லுருபெரு விரியனென்னே. (65)

மூக்குவாய் நீராயோடும் முகமது வெளிருங் கண்கள்
நோககிலை வாய்பேசாது நோவுகான் கடிவாய் தன்னில்
ஆக்குமே தலையுஞ் சுத்தி யனத்திமெ வலிக்குந் தேகம்
தாக்குமிக் குறிப்பைக் கண்டாற் சாரிவாழ் விரியனென்னே. (66)

பட்டவாய் மேலேவாங்கிப் பறந்துடன் குமுரி யேறி
நட்டமாய் விழிகருத்து நாவுடன் குழறிப் பேசி
கட்டமா யுறக்கங்கொண்டு காய்ந்துட லபெரு மாகில்
திட்டமாய்ப் பொரிவி ரீசன் தீண்டிய குணம தென்னே. (67)

இரத்த விரியன் பெருவிரியன் இசைநீர் விரியன் செவ்விரியன்
வரத்த விரியன் பொரிவிரியன் வாங்குஞ் சாதி யிவையாறும்
நிரத்த வகைதான பதினாறும் நெருங்கக்கடித்து விடங்கொண்டால்
துரத்த மருந்து விஷமீளும் சொல்வே னறிந்து செய்வீரே. (68)

சதியான விரியன் தீண்டிற் றளர்ந்துந்த விடமே வந்தால்
மதியான வேளை குன்றி மருவவே யிடித்து மூன்று
புதியான சாருமுககு பொருந்தவே அருந்தச் செய்தால்
பதியான விரிய னாறும் பறந்திடும் விடங்கள் தானே. (69)

பொல்லாத விரியன் தீண்டிப் பூமியிற் சாய்ந்த போது
சொல்லாத வெண்சொழிஞ்சி சொர்தமாங் குன்றிமூலம்
இல்லாத வாகைப்பூவும் இடித்துநீ ருள்ளே கொள்ள
நில்லாது விஷங்க ளெல்லாம் நிமிடத்தி லோடிப்போமே. (70)

நாட்டமாம் விரியன் தீண்டில் நடுங்கிநற் றலைசுழற்றும்
காட்டமாம் பூனைப் பாகல் கரைத்துடன் கொடுத்துப்பாரு
ஒட்டமாம் விடங்க ளெல்லாம் ஒடுங்கு கடிவாய் விட்டு
வாட்டமாம் அவனிமீது வல்லபங்கண்டு கொள்ளே. (71)

பூனைக் கடித்த நீர்விரியன் பொருமி மிகவே வீங்கிவிடும்
ஊனைக் கோழிச் சாரத்தோ டுருமூக கரைச்சா ரணேவரும்
தானைக் குத்தி சங்குள்ளி சரியா யரைத்துச் சிறுநீரிற்
கோனைக் கொதிக்கப் பூசிடுகிற் கொண்ட விடங்க ளகன்றிடுமே(72)

**நசியம்.**

மிளகு வசம்பு வெள்ளுள்ளி மீறுஞ் சின்னி பெருங்காயம்
மளக விடித்து வடிகொண்டு மசந்தே விரிய னறுக்கும்
இளக நாசி செவியிரண்டி லீரக் குழலா லூத்திடுகிற்
புளக மருந்து விஷமீளும் புவியி லறிந்து செய்வீரே. (73)

குத்திலே சூரை வேருங் குன்றிவே ரெருக்குக் கொத்தான்
ஒத்திடை சரியாய் வேரை ஓரிலைச் சாற்று லாட்டிச்
சத்தியாய்க் கொதிக்க வைத்த சாறினைப் பூசத்தீரும்
சித்தியாம் சித்தர்க் கெல்லாம் செப்புவேன் கண்டுபாரே. (74)

தாவிலே விரியன் தீண்டித் தளர்ந்துனைத் தேடிவந்தால்
நாவிலை வீழி சின்னி நல்லதோர் கருத்த நொச்சி
மூவிலை யிலுப்பை கொத்தான் முறியவே யிடிதநுக் கொண்டு
வேவினில் வருத்து ஓத்த வீக்கமும் விஷமும் போமே. (75)

சின்னிவெங் காயஞ் சுக்கு சீர்சமன் வசம்பும் கூட்டி
உன்னியோ ரிலையின் சாத்தி லுறுதியா யுரைத்துப்பூச
அன்னிய சிறுநீர்தன்னி லருந்திட விஷமுந் தீரும்
சொன்னயச் சித்தர்க் கெல்லாம் சொல்லுவே னின்னந் தானே (76)

படவே கடித்துச் செவ்விரியன் படர்ந்து விடமுந் தலைகொண்டால்
அடவே தாளிக் கோவையிலை அவுரி முருக்குத் தலைசுருளி
கடவே பாளைச் சாரணைவேர் கருதும் மேனி வீழியொடு
சுடவே வருத்து வொத்திடவே சொல்லா தோடும் விஷங்களுமே.

கொல்லவே விரியன் தீண்டிக் குருதிதான் கொட்டுமாகில்
வெல்லவே பசலி கோவை வீழியும் பருத்தி யுள்ளி
அல்லவெள் ளாட்டின் பாலி லரைத்துடன் கொடுப்பீ ராகில்
சொல்லவே இரத்த மில்லை சூட்சமாய்க் கண்டு கொள்ளே. (78)

பருத்த கெருடக் கொடிவேரும் பாளை மிளகு வசம் புள்ளி
பொருத்த மாகச் சமனெல்லாம் பொருந்தப் பாலிற் கொள்வீரேல்
பெருத்த விரியன் கடிமீளும் பேணி மருந்து காடிதனில்
திருத்த மாகப் பூசிடுகிற் றீரும் பாந்தள் விஷம் போமே. (79)

சாரமா மலையில் வாழும் சர்ப்பத்தில் விரியன் தீண்டில்
பாரமாய் வீங்கு மாகிற் பருத்தசா ரணைவேர் குன்றில்
தாரமா மவுரி காரை தவசிவு மழிஞ்சி வீழி
வீரமாம் சிறுநீர் விட்டு விரைவினி லரைத்துப் பூசே. (80)

இடக்குள விரியன் தீண்டில் இயம்புவேன் மருந்துகேளாய்
வடக்குவே ரவுரி வீழி வாங்குநீ வேரி ரண்டும்
அடக்கமாய்ச் சிறுநீர் விட்டு அரைத்ததை யெடுத்துக் கொள்ள
முடக்கமாம் விடங்க ளெல்லாம் முறிபட்டு வோடுந் தானே. (81)

மலையாதே விரிய னுக்கு மருந்துதான் சொல்லக் கேளு
அலையாதே தவசி கீரி யானைப்புல் லாம ணக்குமே
கலையாதே சிறுநீர் விட்டுக் கவனமா யரைத்துக் கொள்ளக்
குலையாம லுயிர்தான் மீளுங் கொள்கையை யறிந்து பாரே. (82)

தாரினிற் றங்கி வாழுஞ் சர்ப்பத்தில் விரியன் றீண்டிற்
பாரினிற் சித்தர்க் கெல்லாம் பகருவேன் மருந்து கேளு
நேரினி லவுரி புங்கு நீண்டதக் காளி வேரும்
நீரினிற் கரைத்துப் பூச நிமிஷத்தில் விடமும் போமே. (83)

விரியன்கடி பழம்புண்ணுக்கு மருந்து.

பார விரியன் றன்கடித்துப் பழம்புண் ணாகித் தீராட்டால்
தார மிரதங் கெந்தகமும் தளர்ந்த காயந் துத்தமுடன்
வாரத்துருசு லசம்பெல்லாம் வகைக்குச்சமனாய்ச் சேர்த்தெடுத்துத்
தீரப் பச்சை யகிமூஞ்சூர் திடமா யுலர்த்திச் சமன் கூட்டே. (84)

கூட்டேநீம்பத்தெண்ணெய்விட்டுக் குழையவரைத்துக்குளம்பாக்கி
நாட்டே மருந்தைத்தேங்காய்க்குள்நலமாயடைத்தெருக்குழிக்குட்
போட்டே புதைத்து மண்டலந்தான் போனு லெடுத்துப் பூசிடவே
காட்டே விரியன் புண்ணாருங் கருத்தா யிதனைக் கண்டுணரே .(85)

வல்லீர் குழம்பை ஆறுநாள் வாக யழந்தக் காசிடைதான்
நல்லீர் கடிவா யுடன்பூசில் நாறும் புரையுந் தானாறும்
வெல்லீ ரிரெண் மண்டலியும் விளங்கு மெலிதான் பதினெட்டும்
சொல்லீர் மூக்கன் கருவழலை சுருக்காய் மீளுஞ் சொன்னேனே.

கூவிளம் பசலி கோவை குமரியு மிளநீர் பாலும்
தாவனம் புளியி லுப்பை சமனிடை வசம்போ டுள்ளி
நீவளங் காடி தன்னில் நெருங்கவே யரைத்துப் பூசக்
காவளம் விரியன் றீண்டுங் காந்தலுங் குளிர்ந்து போமே. (87)

குருதி யெடுக்கும் மயிர்க்காம்பில் குமுருங் கடிவாய் தனியெரியும்
மிருதி மிகவே தலைசுழலும் மெய்யு மயருஞ் செவிகேளா
சுருதி யுக்தி யனுபவம்பார் சுவையுமெரித்து நாவுலரும்
கருதிக் கடிக்கும் மண்டலியைக் கண்டோர் விண்ட கருத்தாமே.

மலங்கா திலங்கும் மண்டலிக்கு மருந்தொன் றுண்டுசொலக்கேளாய்
துலங்கா தவுரி குன்றியிலை சூழ்ந்து படருஞ் செருப்படியும்
அலங்கா துாலிற் றுணிடித்து அச்சா ருழக்குக் தானெடுத்துக்
கலங்காச் சாற்றைக் குடித்திடவே காணுதோடும் விஷங்களுமே. ()

வைப்பில் வாழும் மண்டலிதான வலுவாய்க் கடித்துக் குருதிவரில்
தப்பில் கோவை யிலைத்தயிருந் தானே அரைத்து உட்கொள்ள

ஒப்பில் விடங்கள் தானெல்லாம் ஒன்றுங்காணு தோடிவிடும்
செப்பிற் சுகமாம் விஷதாரி தெளியும் வகையைச் செய்வீரே. (90)

தாளாய் பார்மண் டலிசடித்துக் கடித்து வீங்கிக் குருதிவரில்
மீளாய் சூரை கோவையிலே மிளகு வசம்பு பெருங்காயம்
வாளாய் தும்பை துளசியுடன் வகைக்கு மருந்து சமனெல்லாம்
கோளாய் அரைத்துக் காடியதிற் கொதிக்கப் பூச விஷம்போமே ()

மண்டலத்திற் பன்னிரு மண்ட லிக்கும் மருந்தைக்கேள்
விண்ட அவுரி புங்குடனே வீழியிலையுஞ் செருப்படியும்
அண்ட வரைத்துப் பாக்களவு அருந்த விரியன் பதினாறும்
கண்ட மூக்கன் கருவழலை கருக்கக் கக்குங் கண்டீரே. (92)

சொறியுங் கடிவா யுடம்பெல்லாம் சுழற்றும் வாய்நீர் கக்கலதாய்
நெறியுந் திரண்டு அனல்மீறி நீருஞ் சிவந்து மலங்கழிந்தே
அறிவுங் குலைந்து வாய்குளறி அசந்தே விழியுஞ் சிவந்திருக்கிற்
குறியுஞ் சொறியும் மண்டலிதான் குணத்தைக் கண்டு செய்வீரே.

துடியாய்க்கடித்து மண்டலியுஞ்சொறிதானெடுக்க மருந்தைக்கேள்
பிடியா மிளகு திப்பிலியும் பெருத்த முசுட்டை நன்னாரி
மடியா மருந்து சமன்கூட்டி வளமா யரைத்து ஆட்டின்பால்
குடியாய்த் தினமும் வயிறூரக் கொள்வீ ருழக்கு குணமாமே. (94)

அடைத்திடு மிரண்டு வாச லதிகமாய விடங்க ளேறிப்
புடைத்திடுங் கிரிபோல் வீக்கம் பொருமியே உடம்பு ரோகும்
துடைத்திடு முகங்கள் மூக்குந் துற்குறி பலதுங் காட்டில்
நடத்திட நயமு மில்லை நாடிய மண்ட லிக்கே. (95)

வீறாய் மண்டலியுங் கடித்து வீங்கி லதற்கு மருந்தவுரி
கூறாய் முருங்கை தவசியின் வேர் கூட்டுந் தகரை சுருக்கிலைதன்
சாறு லரைத்துக் கொதிக்கவைத்துத் தானே பூச வல்லீரேல்
வாறு விடங்கள் கடிவாயில் வந்த வீக்கம் வற்றிடுமே. (96)

பாய்ந்திடுங் கடிவாய தன்னிற் பரபரப்பாக வேறில்
காய்ந்திடுங் குளிருந் தேகம் கருத்திடும் உதடுங் கண்ணும்
சாய்ந்திடுந் தலைதூக் காது தளர்ந்திரு செவிகே ளாது
ஆய்ந்திடு சீத முற்று லாகாது மண்டலிக்கே, (97)

காயுமுடம்பு வலிகாணுங் கடிவாய் கடுக்குங் குருதிவரும்
வாயு மெரிந்து வழுவழுத்து வயிறு பொருமித் துயாமுறும்

சாயு மயங்கிக் கண்மூடித் தானே மருந்து குமட்டிடிலோ
தோயுங் குணங்கள் வருவழலை சொல்லக் கடித்த குறிதானே

வெறுத்தே வழலை கடித்ததென்றால் விஷத்தையொழிக்க மருந்தைக்கேள்
மறுத்துப் பிலிகாக் கணத்தோடு மடக்கும் வராகிக் கிளங்குடனே
அறுத்தே சமனுக் காடிதனில் அரைததே புன்னைக் காயளவு
சிறுத்தே வெண்ணீ ருடனருந்தத் தீருங் காந்தல் விடம்போமே

காக்கணஞ் சிறியா நங்கை கருதிய வராகி மூன்றும்
ஏர்க்கவே வெள்ளாட் டின்பால் இசையவிட் டரைத்துக்கொண்டு
பார்க்கவே பலதும் வேண்டாம் பட்டவர் யெருமைச் சாணி
சேர்க்கவே விடங்கள் தீரும் செப்பினேன் தெளிந்து பாரே. (100)

சந்துடன் கைகாலெல்லாம் தான்வலி வாதம் போலே
நொந்துடன் கடிவாய் தன்னில் நோக்கவே நீரும் பாயும்
வந்துடன் மயக்க முற்றால் வருத்தங்கள் பலது முண்டாம்
முந்துடன் நாவு லர்ந்தால் மூககனென் றுரைக்க லாமே. (101)

வன்னிபிரண்டை வேருடனம் மருந்து மிரண்டுஞ் சரிசமனுய்
உன்னி யரைத்துக் காடிதனி லுழக்குக் கொள்ள வல்லீரேல்
துன்னி விடங்கள் தான்மீளும் சுருளும் புடையன் பல்விஷமும்
பன்னிக குதிக்கும் பாருலகிற் பார்தநுச் செய்வார் பெரியோரே.

பேராக யாவருக்கும் வழியாய்ச் சொன்னேன்
பிரிவாக அரவினுட செய்கை யெல்லாம்
நேராக அறிந்திடவே சித்தர்க்காக
நிலமையுறுங் குருவினுட பாதம்போற்றி
ஆராக வுலகதனில் விடந்தான் மீறி
அமர்ந்திருக்கப் பிரமனுந்தா னருளிச் செய்தார்
சீராக இந்தநூல் முடிவாம் நூறும்
திரமாகத் தோர்ந்திடவே தெளிவாய் முற்றே. (103

சர்ப்பசாஸ்திரம்.

முற்றிற்று.

மதுரைத் தாலூகா கோச்சடை உள்க்கடை பிராட்டிபத்து கிராமம் விஷரோக நிவர்த்திமாந்திரீகர் ப. திருமலைமுத்துப் பிள்ளையவர்கள் குமாரார் ☞ கருப்பையாபிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதி துணை.

கௌசிகர் திருவாய்மலர்ந்தருளிய

# மந்திராரூடம்.

இஃது
மதுரைத்தாலூகா கோச்சடை உள்க்கடை
பிராட்டிபத்து விஷரோக நிவர்த்தி மாந்திரீகரும்
ப. திருமலைமுத்துப்பிள்ளை அவர்கள்
குமாரருமாகிய
கருப்பையாபிள்ளை அவர்கள்
தன் அனுபவத்திற் கண்ட
மந்திர தந்திர எந்திர பூஜாவிதிகளுடன்
யாவரும் எழிதில் உணரும்படி எழுதிக் கொடுத்ததை,
மதுரை வித்வான்
த. குப்புசாமி நாயுடு அவர்கள்
பார்வையின்பேரில்

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்
இ. ராம.
குருசாமிக் கோனார்
அவர்களது
மதுரை வடக்குமாசி வீதி
ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

ரிஜிஸ்டர் 1922. காப்பிரைட்

## மந்திரசித்தி தெரிந்துகொள்ளும் விதம்.

---

ஓர் மண்டலம் இடைவிடாது ஜெபித்து வந்த மந்திரத்தைத் தனக்குச் சித்தியாச்சு தென்பதும், சித்தியாகவில்லை யென்பதும் தெரிந்துகொள்வதற்கு ஓர் வாழைத்தண்டை ஒன்றரைமுழம் நீள முள்ளதாய் நறுக்கி ஷை தண்டின்மீது அரவத்தைத் தீண்டவிட்டு ஷை தண்டின்மீது விஷம் ஏறியவுடன் சற்குருவைத் தியானம் பண்ணித்தான் முன் சித்திபண்ணி வைத்திருந்த மந்திரத்தை முன் சொன்ன விதிப்படி தெரிந்துகொண்டு ஷை தண்டை ஓரிடத்திற் சாத்தி அதன்கீழ் தாம்பாளம்வைத்து அதிற்கொஞ்சம் பால்விட்டு ஷை தண்டின் உச்சியில் மாகாரமும் மத்தியில் சிகாரமும் அடியில் நகாரமும் தன் மனக்கண்ணினால் எழுதி வேப்பிலைக் கொத்தைக் கையிற் பிடித்துக் கொண்டு ஷை தண்டின் உச்சியிலிருந்து மந் திரித்துக் கொண்டுவர ஷை தண்டின்மீது மேல்நோக்கிய விஷமா னது கீழே இறங்கிவரும், அப்போது தனக்குச்சித்திஆச்சுதென்று நினைத்துக்கொண்டு விஷந்தீண்டி வந்தவர்களுக்குப் பார்வைபார்க்க விஷமானது இறங்கும். அதாகுமத்தியில் தனக்குச் சித்தியாகும் வரை ஷை மந்திரத்தை ஜெபித்துக் கொண்டு வரவும்.

உ

பரமபதிதுணை.

கௌசிகர் திருவாய்மலர்ந்தருளிய

# மந்திராரூடம்.

மூலமந்திர யந்திர பூஜாவிதியுடன்.

சோதிமனோன் மணிபாதம் ஆத்தாள்பாதம்
துய்யகுரு முனிபாதம் மூலர்பாதம்
நீதியுள்ள என்குருவாம் நந்திபாதம்
நேர்மையுள்ள சுந்தரா னந்தர்பாதம்
ஆதியா யுதித்தெழுந்த நாதன்பாதம்
அன்புடனே பணிந்தேத்தி அறிவில்நின்று
கோதில்லா மந்திரமா ரூடந்தன்னைக்
குவலைபத்திற் சொல்லிவிட்டேன் குறிப்பாய்த்தானே.

### சித்திவிநாயகர் தியான மூலமந்திரம்.

ஹரிஓம்-ஒற்றைக்கொம்பா - சித்திவிநாயகா - சத்திதனையாளா சற்குருவே என்முன் நிற்கச் சுவாஹா- என்று தினம் ஒன்றுக்கு (108) உரு ஜெபித்துக்கொண்டு எந்திர பூசையில் உட்கார்ந்து உரு ஜெபிக்கச் சகல மந்திரங்களும் சித்தியாவதுடன் கோரிய வண்ணம் சகல காரியங்களும் அனுகூலமாகும்.

### சித்திவிநாயகர் தியான மூலமந்திர சக்கரம்.

பஞ்சாட்சரமாகிய விபூதியிலாவது, தாம்பிரத தகட்டிலாவது பிரணவமாகிய ஒங்காரம் போட்டு; அதனுள் வங்-சிங்-கங் என்ற அட்சரத்தை யெழுதி தன் புருவம் நோக்கி ஷெ சித்திவிநாயகர் தியான மூலமந்திரம் ஜெபிக்கவும்.

### பூஜாவிதி

பசுவின் சாணம் அல்லது மஞ்சளினால் பிள்ளையார் பிடித்து வைத்துத்தூபதீபம் நைவேத்திய முதலானவை கொடுத்து பூசை நிறைவேற்றவும். நினைத்த காரியம் சித்தியுண்டாகும்.

### மந்திரசாபம் நிவர்த்தி செய்துகொள்ள மூலமந்திரம்.

ஓங்-அங்-உங்-மங்-றிங்-சிவயவசி-வரவரத சுவாஹா: என்று (108) உரு ஜெபித்துக்கொண்டு ஏதாவதொரு மந்திரத்தை யந்திரத்துடன் ஜெபிக்க ஷெ மந்திரங்களின் சாபம் நிவர்த்தியாகித் தனக்குச் சித்தியாகும். இவ்விருலைக் கொள்ளியின் மூலமந்திரத்தை லெட்சமுரு மேற்றிச் சித்திபண்ணிக் கொண்டால் அஷ்ட கருமத் தொழிலும் இதனால் நடத்தலாம்.

### தியான சக்கரம்.

பஞ்சாட் சரமாகிய விபூதியிலாவது, தாம்பிரத் தகட்டிலாவது முக்கோண சக்கரம் வரைந்து சூலம் போட்டு அதனுள் ஓம்சிவயவசி என்று ஷெ சக்கரத்தைச்சுற்றி பிரணவம் போட்டு தன்புருவம் நோக்கி மூலமந்திர தியானம் செய்யவும்.

## பாம்பைத் தடுக்கக் கெருடதியான மூலமந்திரம்.

ஓம்-வட்டமிட்டான் கெருடன் - வளைந்துகொண்டான்-ஆதி சித்தன் வில்லாணை - சொல்லாணை-விரிசடையோன் தன்னாணை-சொல்லாணை-சுவாமியாணை நிற்கச் சுவா ஹா: என்று(உரு - 50000) செபிக்கவும். பாம்பு தடுப்பதற்குச் செய்யம்விதி.

ஓர் பிரம்புக்கோலால் தன்னைச் சுற்றிலும் ஓர் வட்டம்போட்டு மத்தியில் சூலமிட்டு, அச்சூலத்தினுள் தான் நின்றுகொண்டு பஞ்சாட்சரத்தைக் கையில் எடுத்து ஷை மூலமந்திரம் (உரு-108) ஜெபித்து அரவத்தின்மீது தூவ அந்தயிடத்தைவிட்டு நகராது இரையுமெடுக்காது.

## தடைமுறிக்க கெருடதியானம்.

ஓம்-வடக்கேயிருந்து வருகிறான் கெருடன், நாடு வெகு தூரம் நகரம் வெகு தூரம்,நானும் ஓட நீயும் ஓடச் சுவாஹா: (உரு50000) ஜெபிக்கவும். பாம்புத்தடை முறிப்பதற்குச் செய்யும்விதி.

ஓர்பிரம்பினால் தன்னைச்சுற்றிலும் வட்டக்கோடிட்டு மத்தியில் சூலம்போட்டு நின்றுகொண்டு ஷை மூலமந்திரம் முன் சொன்ன பிரகாரம் ஜெபித்து நான்குதிசைகளில் ஓர் திசையை நோக்கி ஓதிக்கிவிட ஷை திசையை நோக்கி அரவம் போய்விடும்.

## சித்தியான மூலமந்திர தியானங்களை அனுஷ்டித்து வரவேண்டிய முக்கிய விதிகள்.

இந்த சாஸ்திரத்தில் சொல்லியபிரகாரம் மந்திர-தந்திர-எந்திர மூலமந்திரங்கள் தனக்குச் சித்தியானபின்பு எவருக்கேனும் பந்திரிக்க வேண்டியதிருந்தால் முன்யந்திரங்களுக்குச் சொல்லப்பட்ட கட்டுத் தொகையையே ஆஸ்காரமாய்த் தனக்கு வைத்துக்கொண்டு ஷை தொகையிலிருந்து எவ்வளவு கடன் வாங்கப்படுகிறதோ அந்தத் தொகையை இவ்வளவென்று கணக்கிட்டுக்கொண்டு ஷை தொகை எவ்வளவாகிறதோ அவ்வளவிற்கு தான் ஜெபிக்கப்பட்ட மூலமந்திரத்தை ஜெபித்து முன் கட்டுத்தொகைக்குக் குறையாமல் வைத்திருக்கவேண்டியது அவசியமான காரியம். அதுவுந் தவிர தான் ஜெபிக்கப்படுகிற ஒவ்வொரு மூலமந்திரங்களுக்கும் மேற் சொல்லிய பிரகாரம் செய்துகொள்ளவேண்டியது.

ஒவ்வொரு மந்திரங்களுக்கும் ஏற்பட்ட கட்டுத்தொகையை தன்னிஷ்டப்படி செலவுசெய்துவிட்டு மறுபடியும் அதைப் பூர்த்தி செய்துகொள்ளாமல் எப்பொழுதும் மந்திரித்துக்கொண்டே வந்தால் நாளுக்கு நாள் வர வர ஷை மந்திரசக்தியானது குறைந்து உயிரில்லாமல் பலிதமில்லாமல் போய்விடுமென்பது திண்ணமென்று அனேக சித்தர்களாலும் முனிவர்களாலும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் குறைவுற்ற மந்திரசித்திக்கு உருவினால் மந்திர சக்தி ஏத்திக் கொண்டுவரவும்.

## சகல சர்ப்ப விஷங்களுமிரங்க அஷ்ட கணபதியின் ஆராதனைச் சக்கரம்.




இதின் குணம். சகல விஷங்களும் இறங்குவதுடன் சகல தெய்வங்களின் வசியமும், பேய், பசாசு முதலானவைகளை நிவாரணமாகுவதுடன் சகல காரியங்களும் சித்தியாகும்.

மூலமந்திரம். இச்சக்கரத்திலுள்ள வங் என்ற அச்சரத்தை உங் ஆக மாற்றுக ஓம்-கிலி—அங்-உங்—மூலாதாரக்கணபதி வருக வருக சுவாஹா (உரு-லெட்சம்)செபிக்கவும். பூசைவிதி.

இந்த சக்கரத்தை வெள்ளி-தாம்பிரம் இவ்விரண்டில் ஏதாவதொரு தகட்டில் ஷை சக்கரத்திலுள்ள அட்சரங்களை வரைந்து ஷை சக்கரத்துக்குப் பால் தேன் இளநீர் அபிஷேகஞ் செய்து தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு முதலானதுகள் வைத்துச் சாம்பிராணி சூடன் தூபதீபங் கொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை நாள் ஒன்றுக்கு (2500) உரு வீதம் லெட்சம் உருவேற்றினால் சித்தியாகும் ஷை பூசை முடிகிற வரையில் ஸ்திரீசம்போகம் தூர ஸ்திரீகளுடன் சம்பாஷணை இரவிற் போசனம் ஆகாது.

மேற்கூறிய யந்திரத்தை ஐந்து அங்குல நீளமும் ஐந்து அங்குல அகலமுமுள்ள முன் சொல்லப்பட்ட தகட்டில் வரைந்து தனது குருவைத் தியானம் பண்ணி புலித்தோல் ஆசனமிட்டு ஆதிவாரம் தொடங்கி வடமுகமாய் வீற்றிருந்து ஐந்துமுக உத்திராட்சமணியால் உருவேற்றச் சித்தியாகும். சுபம்.

## சகலவிஷங்களுக்கும் மந்திரிக்கவும் விபூதி முதலானவை போடுவதற்கும் ஐங்கோண சக்கரம்.




இதன் குணம்.—சகல விஷங்களும் இறங்குவதுடன் பூரண கடாட்சமும் உண்டாகும். குழந்தைகளுக்குத் தண்ணீரில் ஷெ யந்திரத்தை (108) உரு செபித்து முகத்தில் அடிச்சச்சகலதோஷங்களும்பரிகாரமாகும்.

மூலமந்திரம்.

ஹரிஓம்நமசிவாய மவ்வும் -நமசிவாய சுவாஹா உரு லெட்சம், செபிக்கவும்.

பூசைவிதி.

இந்தச் சக்கரத்தை பஞ்சலோகத் தகட்டில் வரைந்து ஷெ சக்கரத்துக்குத் தூபதீப நைவேத்தியங் கொடுத்து ஓர்நதி குளம் முதலானதுகளில் சுத்தமான இடத்தில் உட்கார்ந்து மேற்கண்ட மந்திரத்தை நாள் ஒன்றுக்கு (2500) உருவீதம லெட்சம் உரு வேற்றவேண்டியது. ஷெ ஜெபம் முடியும் வரை ஓர் வேளை அன்னம் புசிக்கவேண்டியது. ஷெ பூசை முடிவாகிற தினமாகிய அன்று ஐந்து ஆண்டிகளுக்கு அன்னமிட்டுத் தானும் ஓர்வேளையாய் அன்னம் புசிக்கவேண்டியது.

மேற் சொல்லப்பட்ட யந்திரத்தை ஐந்து அங்குல நீளமும் ஐந்து அங்குல அகலமுள்ள தகட்டில் வரைந்து தனதிஷ்டகுல

தேவதையை வணங்கி மான்தோல் ஆசனம் போட்டு ஆதிவாரம் தொடங்கி வடமுகமாய் வீற்றிருந்து ஆறுமுக உத்திராட்ச மணியால் உருவேற்ற அனுகூலமாகும்.

## சர்வசங்கார திரி அட்சரவிஞ்சை சக்கரம்.

### சகல விஷங்களுக்கும் மந்திரிக்கவும் ஏந்திர முதலியவை கட்டவும்.



மூலமந்திரம்,

முதலாவது இரண்டாவது வரைந்துள்ள சக்கரத்தின் பிரகாரம் அனுஷ்டித்து வரவேண்டியது.

மேற்சொல்லப்பட்ட யந்திரத்தை ஐந்து அங்குல நீளமும் ஐந்து அங்குல அகலமுமுள்ள வெள்ளித்தகட்டில்யெழுதி தனது குருவை வணங்கி புலித்தோல் ஆசனமிட்டு சோமவாரம் தொடங்கி வடமுகமாய் வீற்றிருந்து ஆறுமுக உத்திராட்ச மணியால் ஜெபம் செய்ய மந்திரசக்தியும் சித்தியும் உண்டாகும்.

இதன் குணம்.

1. அஷ்ட நாகங்களின் விஷமிறங்கும்.

2. ஷை சக்கரத்தைப் பிரம்பில தாக்கித் தான் எதிரிகள் முன் நிற்க ஷை எதிரிகள் ஓடிப்போவார்கள்.

3. ஷெ சக்கரத்தை வெள்ளித்தகட்டில் வரைந்து குளிசமாடி சிரசிலிருக்க விஷஜெந்துக்கள் கண்ணுக்குத் தெரியாது தீண்டாது.

4. ஷெ சக்கரத்தை முகத்தில்தாக்கித் தூங்ககனவுகாணாது

5. கருப்பவதிகளுக்கு எண்ணெயிலாவது வெண்ணெயிலாவது மந்திரித்து வயிற்றிற்றடவ வயிற்றில் இறந்தபிள்ளை விழும்

6. ஓர் கல்லையெடுத்து மந்திரித்து முடிந்துக்கொண்டு ஊர்ப்பயனம்போக திருடர் முதலானவர்கள் ஓடிப்போவார்கள்.

7. ஷெசக்கரத்தை வரைந்து குளிசமாடி போட்டுக்கொள்ள ஏவல் மரணம் விலகும்.

8. ஷெ எந்திரத்தை மனக்கண்ணிலெழுதி நோயுள்ளவருக்கு மந்திரிக்கச் சர்வரோகமுந் தீருவதுடன் பரு, பிளவை, வீக்கம், பெருவிபாதி, சுரம் முதலானவைகள் நிவாரணமாகும்.

9. ஷெ மந்திரத்தை விபூதி அல்லது தண்ணீரில் தியானம் பண்ணி அந்தி சந்தி சாப்பிட்டுவர சர்வரோகமும் தீரும்.

10. பஞ்சக வியத்தில் பிரயோகம் பண்ணி காக்கை வலிப்பு, குதிரை வலிப்பு முதலானவைகளுக்குக் கொடுக்க ஷெ வலிப்புகள் நிவாரணமாகும்.

11. முறத்தில் பின்புரமாகப் பஞ்சாட்சரத்தில் ஷெ சக்கரத்தைவரைந்து தியாணம் பண்ணி விபூதிபோட சுரம்' சன்னி, குளிர் முதலானவைகள் நீங்கும்.

12. காராவின் பால் நெய் தேன் இவைகளில் மந்திரித்து ஜன்னி தோஷங் கண்டவர்களுக்கு வேப்பெண்ணெய்யோடு கலந்து கொடுக்க ஷெ தோஷங்கள் நிவாரணமாகும்.

13. ஆவின்பால் நெய்யில மந்திரித்துஐந்துதிங்கள் கொடுக்கப் பிள்ளையில்லாதவர்களுக்குக் கருப்பமுண்டாகும்.

14. கிழங்கு மஞ்சளில் மந்திரித்துக் குளிக்கச் செய்யும்படி கொடுக்கக் கெற்ப உற்பத்தி யுண்டாக்கிக் குழந்தை பிறக்கும்.

15. ஷெ மந்திரம் கோடி உருசெபித்தவர்களிடத்தில் அவர் இருக்குமிடத்தில் விஷஜெந்துக்கள் வசிக்காது. அவர் பேர் சொன்னாலும் ஷெ விஷங்கள் தீண்டாது. சுபம்.

வாசக சாலை

16. திரி அட்சரம் வரைந்த எந்திர சக்தியினால் விதிமுறையின் வழி தெரிந்து அனுஷ்டித்துவர அஷ்டகர்ம சித்திகளும் விளையாடலாம்.

17. ஷெ சக்கரத்தைத் தங்கத்தகட்டில் வரைந்து ஒரு மண்டலம் லெட்சமுரு வேற்றிக் குளிசமாடி வலது கையில் கட்டிக்கொள்ள சகல வசீகரமு முண்டாம்.

18. ஷெ சக்கரத்தை வெள்ளி அல்லது தாம்பிரத் தகட்டில் வரைந்து ஒரு மண்டலம் லெட்சம் உருவேற்றிப் பொங்கல் முதலானது வைத்துப் புள்ளிச்சேவல் பலிகொடுத்துக் கொடிக்கால் (அதாவது) வெற்றிலைத் தோட்டம் பூந்தோட்டம் முதலானவைகளில் பச்சாளை செவ்வெட்டை முதலிய பூச்சிகள் பிடித்திருந்தால் அக்கினிமூலையில் ஷெ யந்திரத்தை ஸ்தாபிக்க அவைகள் விலகும்

19, சக்குவான்வந்த குழந்தைகளுக்குக் குருத் தோலையிற் ஷெ சக்காத்தை யெழுதி ஒருவாரம் பூசையில்வைத்து ஷெ குழந்தையின் கழுத்திலாவது அரையிலாவது கட்ட ஷெ சக்குவான் வியாதி நிவாரணமாகும்.

20. சீர் முதலான பிணிகள் வந்த குழந்தைகட்கு ஓர் லோட்டாச் செப்பில் வாய்பேசாமல் பிரமடைத தண்ணீர் கொண்டுவரச் சொல்லி அறுகம்புல்லினால் 108 தரம் 3 நாள் மந்திரித்து ஷெ ஜலத்தை முகத்தில் மூன்றுதரம் அரைய மேற்படி பிணி முதலானவைகள் நிவாரணமாகும்.

21. ஆவின் வெண்ணெய்யில் மேற்படி யந்திரத்தை உருவேற்றி இராஜபிளவை, துடைவாழை, முதலான வைகளுக்குப் போட உடனே பழுத்து உடையும்.

22. ஓர் செப்புக்குடம் நிறையத் தண்ணீர் கொண்டுவந்து அந்நீரில் மனக்கண்ணால் ஷெ சக்கரம் வரைந்து ஷெ மந்திரத்தை (1008) உருவேற்றிப் பேய்பிடித்த பெண்ணை அக்குட நீரில் ஸ்நானஞ்செய்வித்து சுத்தமான உடைவுடுத்திக்கொண்டுவரச் சொல்லி ஓரிடத்தில் பசுவின் சாணத்தினால் மெழுகி அதில் சக்கரம்வரைந்து ஷெ பெண்ணை அதிலுட்கார வைத்து தினம் 1-க்கு (2500) உருவீதம் ஒருவாரம் ஜெபித்து விபூதிபோட பந்தங்கொண்டு கொளுத்தியதுபோல் தேகத்தில் காந்தல் உண்டாகி ஷெ பெண்ணின்பேரில் நெடுநாளாய்த் தொடர்ந்த பிரமராட்சதப் பேய் முதலானவைகள் வசிக்காது தலைசுற்றியாடி அலறி அதன் இருப்பிடம்போய்ச் சேர்ந்துவிடும்.

28, ஷை யேந்திர சக்கிரத்தை பூமியில் மனக்கண்ணினால் வரைந்து ஓர் சிறிய லோட்டாவில் நிறைதண்ணீர் மொண்டுவைத்து அருகம் புல்லினால் 108 உரு ஜெபித்து ஓர் கரண்டியின் காம்பை உலை அடுப்பில் காயவைத்து ஷை கரண்டிக்காம்பை யெடுத்துக் கொண்டுபாலாரிஷ்ட தோஷம் யேற்பட்ட குழந்தையின் முகத்திற்கு நேராக ஷை கரண்டிக்காம்பை பிடித்துக்கொண்டு ஷைலோட்டாவின் ஜலத்தையெடுத்து மூன்றுதரம் முகத்தில்படும்படி அரைந்து ஷை ஜலத்தை 3 தரம் சாப்பிடும்படி மேற்படி குழந்தைகளுக்குக் கொடுத்து மேற்படி குழந்தையின் தாய் அமுதப்பால் ஊட்டும் கொடுக்கும் இடமாகிய ஸ்தானத்தில்மேற்படி தண்ணீரினால் 3தரம் சுத்திசெய்து அதன்பிறகு மேற்படி குழந்தைகளுக்குபால்கொடுக்க மேற்படி பாலாரிஷ்ட தோஷம் முதலானவை நிவாரணமாகிவிடும்.

24. நாய், நரி கடியுண்டவர்களுக்கு மேற்படி இடத்தில் 108 உரு ஜெபித்து அதின்பிறகு ஓர் வெல்லத் துண்டை யெடுத்து மந்திரித்து அதைப்பாகித்து ஓர் துண்டை கடியுண்ட நாய்க்குப் போட்டு மீதியிருக்கப்பட்ட துண்டை சாப்பிடச்செய்து மேற்படி கடிவாயில் நாயுருவி இலையுடன சுண்ணும்பு சேர்த்து அரைத்து மூன்றுவேளை போட மேற்படி விஷங்கள் நிவாரணமாகும். ஒரு வாரம் வரை கடுகு நல்லெண்ணெய் ஆகாது.

## அரவ உச்சாடனம்.

### அரவம் படமேடுக்கா திருககவும் நாவடக்கம் செய்யவும் தியான மூலமந்திரம்.

ஹரிஓம்-கா-கிலி-கா-சுவாஹா:என்று லெட்சம் உரு ஜெபித்துத் தனக்குச் சித்தியானபின்பு நாம் எவ்விடத்திற்காவது புறப்பட்டுப் போகும் வழியில் அரவம் நமக்கு நேரில் எதிர்ப்பட்டால்; உடனே பஞ்சாட்சரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு கணேச பகவானை மனதிற் றியானம்செய்து ஷை மந்திர தியானத்தை 108 உரு ஜெபிதது சர்ப்பப் படத்தின்மீது போட, படமெடுத்தாடாது நாவும் எழும்பாது ஆனல் நமக்குச் சித்தியாயிற்றென நினைத்து அவ்விதம் செய்யின் மகா பாதகம் வநது சம்பவிக்கும். ஆகையால் நமதுயிருக் காபத்துவரும் வேளையில் நம்முயிரைக் காப்பாற்றும் பொருட்டு அவ்விதஞ் செய்யலாமே யன்றி, மற்ற சமயங்களில் இவ்விதம் செய்தல் கூடாது என்று சுகபிர்மர் மறைபொருளாய்ச் சொல்லியதை, உலகோர் யாவரும் எழுதிலுணரும்பொருட்டு வெளியாகத் தெரிவித்தேன்.

## சகல விஷங்கள் இறங்குவதற்கும் விபூதி முதலானவை போடுவதற்கும்.

### முக்கோண சக்கரம்.




மூலமந்திரம்,

ஹரிஓம்-மங்-செங்-சிவாய-நமஹா, (உரு லெட்சம்.)

### பூசைவிதி.

இந்த எந்திரத்தைச் செப்புத்தகட்டில் வரைந்து மான்தோல் ஆசனத்தில் வடக்கு முகமாயிருந்து தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, சூடன், சாம்பிராணி இவைகளால் தூபதீபம் கொடுத்து நைவேத்தியஞ்செய்து இவ்வெந்திரத்தை முன்பாக வைத்துக்கொண்டு நாள் ஒன்றுக்கு (2500) உரு வீதம் 40 நாள் ஜெபம்செய்து வரசித்தியாகும்.

மேற்சொல்லப்பட்ட யந்திரத்தை ஐந்து அங்குல நீளமும், ஐந்து அங்குல அகலமுள்ள தகட்டில் வரைந்து தனது ஆசானை வணங்கி மேற்சொல்லப்பட்ட ஆசனத்தில் வீற்றிருந்து ஐந்துமுக உத்திராட்ச மணியால் ஜெபம் செய்ய மந்திரசித்தி யுண்டாகும்,

### இதன் பலாபலன்.

அரவு முதலிய விஷங்கள் இறங்கும். துடைவாழை, சிலந்திகள், பருவுகள் உடைந்து நிவாரணமாகும். குழந்தைகளுக்கு யந்திரிக்க சகல தோஷங்களும் நிவர்த்தியாகும்.

## சகல விஷங்களுக்கு மந்திரிக்கவும் பேய்பிசாசு முதலிய வைகளுக்கு எந்திரம் போடவும் அறுகோண சக்கரம்.



அதன் பிறகு செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடிக்க வேண்டியது. முதலில் நிறைகுடம் கண்ணாடிகொண்டுவந்து அதில் ஷடாக்ஷிரதகடு (1008) உருவேற்றி அவன் சிரசின் மீது வீட்டுச் சக்கிரத்தில் உட்காரவைக்கவும். பயப்பிராந்தி கொப்புளன் டாகும்.

மூலமந்திரம்.

ஹ்ரீஓம்-சரஹணபவதேவ நசிமசிசுவாஹா. (உரு லெட்சம்)

பூசைவிதி.

இச்சக்கரத்தை வெள்ளித் தகட்டில் முன் சொல்லப்பட்ட அளவின் பிரகாரம் வரைந்து மஞ்சளினால் பிள்ளையார்பிடித்து வைத்து ஓர் வாழை யிலையின் மீது தேங்காய், பழம், வெற்றிலைபாக்கு அவல் பொறிகடலை மாங் கனி முதலானவைகள் சேகரமாய் வைத்து ஊதுபத்தி கொளுத்திவைத்துத் தூபதீப நைவேத்தியங் கொடுத்து மான்தோல் ஆசனத்தில் வடக்கு முக மாய் உட்கார்ந்து மேற்சொல்லிய எந்திர சக்கரத்தை ஓர் மனதாய் மனக் கண்ணினாற் பார்த்துக்கொண்டு நாள் ஒன்றுக்கு (2500) உருவீதம் 40 நாள் சோமவாரம் தொடங்கி ஆறுமுக உத்திராட்ச மணியால் ஜெபம் செய்ய சித்தியாகும். இதன் குணம்.

அஷ்ட நாகங்களின். விஷமிறங்கும் பேய்பிடித்தவர்களை ஸ்நானஞ் செய்து வரச்சொல்லி ஓரிடத்தில் மெழுகிக் கோலம்போட்டு இந்த எந்திரத் தை விபூதியினால் அந்த யிடத்தில் வரைந்து ஷை பெண்ணை அதிலுட்கார வைத்து (1008) உரு வீதம் ஒருவாரம் ஜெபித்துக்கொண்டு வரத் தலையாடி வாய்பேசித் தன் பெயர் சொல்லி முடிக்கும்.

## சகல விஷங்களுக்கும் மந்திரிக்க

## பிருதிவ' சக்கரம்.

மூல மந்திரம்.



ஹரிஓம்-லம்-புரோம் சுவாஹா. (உரு லெட்சம்)

### பூசைவிதி.

இவ்வேந்திரத்தைத் தாம்பிரம் வெள்ளித்தகட்டில் வரைந்து தேங்காய் பழம், வெற்றிலைபாக்குச் சூடன் சாம்பிராணி முதலியவைகள் கேகரமாய் ஓர் வாழையிலையின் மீதுவைத்து தூபதீப நைவேத்தியம்கொடுத்து வடக்கு முகமாய் உட்கார்ந்து தன்னுடைய எண்ணங்களைப் பலவிடங்களிலுஞ் செல்லவிடாது மனதை ஓர்மைப்படுத்தி நாள் 1-க்கு (2500) உருவீதம் 40 நாள் தவறாது ஜெபித்திக்கொண்டுவரத் தனக்குச் சித்தியாகும்.

மேற்சொல்லப்பட்ட யந்திரத்தை ஐந்து அங்குல நீளமும் ஐந்து அங்குல அகலமுமுள்ள தகட்டில் வரைந்து தனது குருவைத்தியானம் பண்ணி, மான்தோல் ஆசனத்தில் வீற்றிருந்து சுக்கிரவாரம்தொடங்கி மேற்சொன்ன திசைமுகமாய் வீற்றிருந்து துளசிமணியால் உருவேற்ற சித்தியாகும்.

### இதன் குணம்.

சகல விஷங்களும் இறங்கும் குழந்தைகளுக்கு மந்திரிக்கப் பட்சி தோஷம், பறவை தோஷம் முதலானவைகள் சொஸ்தமாகும் பயம் நீங்கும்.

## சகல விஷங்களுக்கு மந்திரிக்கவும் விபூதிபோடவும்.

### ஆகாய சக்கரம்.



மூலமந்திரம்

ஹரி ஓம் கங் கங் கணபதய்ய சுசி சுசி சுவாஹா - (உரு 50000)

### பூசைவிதி.

இந்தச் சக்கரத்தை வெள்ளித்தகட்டில் வரைந்து தேங்காய், பழம், வெற்றிலைபாக்கு முதலானவைகள் ஓர் வாழையின்மீது வைத்துத்தூபதீபம் கொடுத்து நாள் 1க்கு (2500) உருவீதம் ஒருமண்டலம் ஜெபித்துவரச் சித்தியாகும் பூசைமுடியும் வரை ஓர் வேளை அன்னம் புசிக்க வேண்டியதுடன் 5-ஆண்டிகளுக்கு அன்னங்கொடுக்க வேண்டியது.

மேற்சொல்லப்பட்ட யந்திரத்தை ஐந்து அங்குல நீளமும் ஐந்து அங்குல அகலமுள்ள தகட்டில் வரைந்து தனது குருவைத் தியானம பண்ணி மான்தோல் ஆசத்தில் உட்கார்ந்து குருவாரம் தொடங்கி வடமுக திசையை நோக்கி ஐந்துமுக உத்திராட்சமணியால் உறுவேற்ற கைவல்யமாகும்.

### இதன் குணம்.

அரவு முதலான விரியன் விஷங்களுமிறங்கும் பிள்ளையில்லாதவர்களுக்கு மஞ்சளில் மந்திரித்துக் கொடுக்கக் கெர்ப்ப உற்பத்தியுண்டாகும் பில்லிசூனியம் விலகும் குழந்தைகளுக்கு மந்திரிக்கச் சகல பட்சி தோஷங்களும் நிவாரணமாகும் அநேக ரோகங்களும் தீரும்.

## சகல விஷங்களுக்கு மந்திரிக்கவும் பூதம், பேய், பிசாசு இவைகளால் பயந்தவர்களுக்கும் விபூதிபோடவும்

அப்பு சக்கரம்.




மூல மந்திரம்.

ஹரி ஓம்-வம்-புரோம்-சுவாஹா. (உரு லெட்சம்)

பூஜைவிதி,

இவ்வேந்திர சக்கரத்தை வெள்ளித் தாம்பிரத் தகட்டில் வரைந்து மஞ்சளினால் பிள்ளையார் பிடித்துவைத்து அதில் அறுகம்புல் சாத்தி தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு கூடன் சாம்பிராணி முதலியது வைத்துத் தூபதீப நைவேத்தியங் கொடுத்து நாள் ஒன்றுக்கு (2500) உருவீதம் 40 நாள் ஜெபித்துக்கொண்டுவரச் சித்தியாகும்.

மேற்சொல்லப்பட்ட யந்திரத்தை ஐந்து அங்குல நீளமும் ஐந்து அங்குல அகலமுள்ள தகட்டில் வரைந்து தன்னுடைய சற்குருவை தியானம் பண்ணி வில்வப்பலகை ஆசனத்தில் மங்களவாரந் தொடங்கி கிழக்கு முகமாய் வீற்றிருந்து படிக மணியால் உருவேற்ற அனுகூலமாகும்.

### இதன் குணம்.

சகல விஷங்களுக்கும் மந்திரிக்க விஷமிறங்கும் பூதம் பேய் பிசாசு இவைகளாற் பயந்தவர்களுக்கு விபூதி மந்திரித்துப் போடப் போறேன் போறேனென்று சத்தமிட்டு வாய்திறந்து வரலாறுகூறி விலகும் குழந்தைகளுக்கும் மந்திரிக்கச் சகல தோஷங்களும் நீங்கும், சுபம்.

## தேள் பூரான்கடிகளின் விஷமிறக்க முக்கோணச் சக்கரம்.

### தேள்விஷமிறக்கச் சக்கரம்.




### மூல மந்திரம்.

ஓம் கடுகடு தேளே கட்டையிற் கிடப்பாய் தேளே முட்டையுங் குஞ்சும் தெரிப்பாய் தேளே உன்னையும் என்னையும் படைத்த பரமேஸ்பரனாணை விஷமிறங்க நசிமசி சுவாஹா. (உரு 10008)

### பூஜாவிதி.

ஆறு நதி குளம் முதலிய இடங்களில் காலை 4 மணிக்கு எழுந்து ஸ்நானஞ் செய்து அனுஷ்டானம் முதலானவைகள் முடித்து ஓரிடத்தில் நிருவாண மாக வீற்றிருந்து தேங்காய் பழம் வெற்றிலைபாக்குச் சூடன் சாம்பிராணி முதலானவைகள் வைத்து ஷை மந்திரத்தை (10008) உருவேற்றிப் பூசை பண்ணச் சித்தியாகும்.

மேற்சொல்லப்பட்ட யந்திரத்தை செப்புத்கட்டில் ஐந்து அங்குல நீள மும் அகலமுமுள்ளதாய் வரைந்து சூரியந்திர பகவானைத்தியானம் பண்ணி சுக்கிரவாரம் தொடங்கி ஐந்துமுக உத்திராட்ச மணியால் உருவேற்றச் சித்தியாகும்.

### வேறுவிதம்.

ஓம்தேள் இந்திரன் தேள் சந்திரன் தேள் நாரணன்தேள் நான்முகன் தேள் நாள்வகைத்தேள் கடித்த விஷமானாலும், கணேஷபகவான் தன்னாணை அக்கினி பகவான் தன்னாணை வடபத்திரகாளி தேவி தனனாணை விஷமிறங்க இறங்கச்சுவாஹா உரு (10003)

### இதன் குணம்.

தேள் பூரான் நட்டுவக்காளி முதலான விஷங்களுக்கு வேப்பிலை கொண்டு மந்திரிக்க நெரி முதலான விஷங்கள் இறங்கும்.

## சகல விஷங்களும் இறங்குவதற்கு

### தியானமூலமந்திரம்-

1. ஓம்-கிலி-சிங்-மகாகணபதி வருக வருக சுவாஹா என்று உரு ஜெபித்தால் விஷம் காட்டேரிமுதலிய தேவதைகள் உன் முகம் கண்டால் வசியமாகும்.

2. ஓம்கிலி சவ்சத்திக்கணபதி வருகவருக சுவாஹா என்று உரு ஜெபித்தால் நோய்விஷம் பில்லிசூனியம் இவைமுதலியது நிவாரணமாகும்.

2. ஓம்-றீங்-கிலி வாலேகணபதி வருக வருக சுவாஹா என்று ஜெபித்தால் அஷ்டநாக விஷங்களும் சகலபில்லி சூனியங்களும் நிவாரணமாகும்.

4. ஓம்-கங்-ஊங்-சிஷ சிவாஹா - மம்-சிவானந்த சிவசிவய நமஹா என்று ஜெபித்தால் இரவு இருள்வழியில் அரவுதென் படாது விஷமிறங்கும்.

5. ஓம் ஸ்ரீயும் ஸ்ரீயும் சிவாயசி-கிலியும் நமஹா வென்று உரு வேற்றி வைத்துக் கொண்டால் சகலபாம்புகளின் விஷத்தையும் வெல்லலாம்,

மேலே காட்டிய மூலமந்திரங்களைத் தனித்தனி லெட்சம்உரு செபித்துச் சித்திபண்ணிக் கொண்டவர்களுக்குச் சித்தியாகும்.

ஒன்றுமுதல் மூன்றுவரை நம்பருள்ள கணபதி தியான மூல மந்திரங்களுக்கு மட்டும் முக்கோணச் சக்கரம் வரைந்து சூலமிட்டு அதைச் சுற்றி பிரணவமாகிய ஓங்காரம் போட்டு ஷை சக்கரத் துள் ஷை மூலமந்திர தியான அட்சரங்களை வரைந்து ஷை மூல மந்திரங்களை தனக்கு சித்திபண்ணிக் கொள்ளவும்.

ஓர் அரவத்தின் படத்தின்மீது தன் மனக்கண்ணினால் முக் கோண சக்கரம் வரைந்து அதனுள் ஹரிஓம் வங் சிங் கங் கணபதி என்று எழுதி ஷை சக்கரத்துக்கு ஓங்காரம் போட்டு ஷை சக்கரத் தையே விபூதியிலெழுதி ஹரிஓம் வங் சிங் கங் கணபதியே வசிய வசியநமஹாஎன்று 1008உருஜெபித்து முன் தனக்கு சித்திபண்ணிக் கொண்டு அரவத்தின் படத்தின்மீது ஷை மூலமந்திர தியானம் 108உருஜெபித்து அதன்மீதுவிபூதிபோடபழுதைப்போல்கிடக்கும்

## விஷத்தீண்டிய பேர்களுக்குப் பார்வை பார்த்து விஷத்தை யிறக்கவேண்டிய விதி.

விஷந்தீண்டியவனைத் தனக்கு முன்பாகக் கொண்டுவரும்படி செய்து குளிர்ந்தகாற்று வீசும்படியான ஓர் இடத்தில் அவனை உட்காரவைத்து சற்குருவை தியானம்பண்ணித் தன்னுடையநேத்திரத்தினால் ஷெ யானுடைய சிரசிலிருந்து உந்திவரை முன்வரையப்பட்டிருக்கிற 3வது எந்திர சக்கரம் வரைந்து நெற்றியில் மகாரமும் நெஞ்சிற் சிகாரமும், உந்தியில் நகாரமும்; எழுதி ஓர்பிடி வேப்பிலைச், கொத்தைத் தன்கையிற் பிடித்துக்கொண்டு சிரசிலிருந்து குழை அடித்துப்பார்வை பார்த்துக்கொண்டேவர விஷமானது இறங்கும்

அப்போது மிளகு மிளகாய் அரப்பு இவைகளில் ஏதேனும் ஒன்றைச் சாப்பிடும்படி கொடுத்துச் சோதித்துப் பார்க்க அது உரைப்பாயிருந்தால் விஷமிறங்கவில்லை யென்றும் நிதானித்துக் காரமுண்டாகும வரை ஷெ யானுக்கு மந்திரித்து விஷம் இறங்கி விட்டதென்று தெரிந்து குழையடிப்பதை நிறுத்திவிட வேண்டும்

தனக்கு சந்தேக மிருக்கும் பட்சத்தில் ஷெ யானுடைய இரு காதுகளின் துவாரத்தின் மீது சுண்டுவிரல்க ளிரண்டையும் வைத்துப்பார்க்க ஓர்வித இரைச்சலான சப்தங் கேட்கும் அப்படி கேட்குமாகில் விஷமிறங்கிய தென்றும், மேற்படி சப்தமானது குறைவுபட்டிருந்தால் விஷமிரங்கவில்லையென்றும் தெரிந்து விஷமிரங்கும் வரை மேற்படி வேப்பிலைக் கொத்தைக் கொண்டே சிரசிலிருந்து மந்திரித்துக்கொண்டே கீழேயிறக்கி கொண்டுவர மேற்படி விஷமானது இரங்கிப் பூரணகுணத்துக்கு வரும்.

## விஷமிரங்கியவுடன் மந்திரித்துத் தீர்த்தங் கொடுக்க வேண்டியவிதமும் பத்தியபாகமும்.

ஓர் சிறிய லோட்டாச் செப்பில் சுத்தமான ஜலம் கொண்டுவரச் சொல்லி ஷெ விஞ்சை மந்திரத்தை (108)தரம் உருஜெபித்து ஷெ தீர்த்தத்தை 3 தரம் உட்கொள்ளும்படி செய்து பின் மிளகு மந்திரித்துக் கொடுத்துச் சாப்பிட்டுக்கொண்டு வருவதோடு ஒரு வாரம்வரை பால்க்கஞ்சி சாப்பிடச்சொல்லவும். நல்லெண்ணெய் கடுகு கரப்பான் பதார்த்தங்கள் முதலானதும் இச்சாபத்தியமும் நீக்கவேண்டியது,

## அடக்கம் எழுப்ப உயிர்ப்பரீட்சை.

விஷந்தீண்டி இறந்தவனுடைய தேகத்தில்ஓர் பிரம்பைக்கொண்டு அடித்தால் கொழுக்கட்டைபோல் தடித்தாலும் அல்லது இரத்தம் போல் கார்நிறமாகச்சிவந்தாலும், அவன் சரீரங் குளிர்ந்திருந்தாலும் உயிர் அடங்கவில்லையென்று நினைத்து, கருஊமத்தை பூனைவணங்கி வேளை மூன்றுவிதப்பச்சிலையைச்சாபம் நீக்கிக்கொண்டுவந்துசிறுநீர் விட்டுத் தட்டிஓர் துணியில் வைத்து ஒரு சிறிய பொட்டணங்கட்டி நேத்திரத்திலும் காதிலும் நாசியிலும் நசியம்பிழிய அடங்கிய உயிர் திரும்பும் ஆனால் விஷந்தீண்டியவனை சிகிச்சைசெய்து அதன்பிறகு தான் தகனஞ் செய்யவேண்டுமேஅல்லாது அதற்குமத்தியில் தகனஞ் செய்யப்படாதென்பதாய் ஸ்ரீதேவியாரூடம் சற்பாரூடம் சத்தியாரூடமுதலிய சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

## விஷஸ்தம்பம் நாட்டுகிற சித்து

பட்டணங்களிலாவது கிராமங்களிலாவது விஷக்கல் ஸ்தம்பம் ஸ்தாபிக்கவேண்டியிருந்தால் தனக்குச் சித்தியான விஞ்சைமந்திரத்தை இதில்சொல்லப்பட்ட அளவின்பிரகாரம் தாம்பிரத்தகட்டில் வரைந்து நாற்பது நாள்வரை தினம் ஒன்றுக்கு 2500 உருவீதம் லெட்சம் உருசெபித்து பூசை முடியும்வரை ஒருவேளை விரதமிருந்து அன்னம்புசித்து அதன்பிறகு ஷெயந்திரத்திற்குக் கும்பாபிஷேக முதலானது செய்து பரதேசிகட்கு அன்னமிட்டபின் ஆறடி நீளமும் ஒன்றையடி சதுர அகலமுள்ள ஓர் ஸ்தம்பம்தயார்செய்து ஷெ ஸ்தம்பத்துக்கு உச்சியில் மகாரமும், மத்தியில் சிகாரமும் அடியில் நகாரமும் போட்டெழுதி ஷெ ஸ்தம்பத்துக்குப் பக்கத்தில் ஓம் குருவேசா-குருவேசா சகல ஜீவஜெந்துக்களின் விஷங்களும் நிவாரணமாக சுவாஹா யென வெழுதி 12000 உரு செபித்தபின் ஊருக்கு அப்பால் ஒருமையில் தூரமுள்ள சுத்தமானவிடத்தில் புண்ணியதானஞ் செய்து ஒரு கெஜ ஆழந்தோண்டி அந்த யிடத்தில் முன் பூசைசெய்து உருவேற்றியிருக்கிற தகட்டை ஸ்தாபனஞ் செய்து அதன்மீது ஸ்தம்பத்தை யெடுத்து ஊன்றினபின் சுற்றுப் பிரகாரமாகத் திட்டண்டாதபடி திருமதிலெடுத்து பந்தோபஸ்தாய் வைத்துக்கொண்டபின் விஷந் தீண்டினவர்கள் வந்தால் வுடனே அவ்விடத்திற் கழைத்துக்கொண்டுபோய் ஓர் செம்பில் தீர்த்தங் கொண்டுவந்து ஷெ ஸ்தம்பத்துக்கு முன்னே வைத்து21தரம் ஷெ ஸ்தம்பத்தைச் சுற்றிவரச்செய்து கற்பூரதீப ஆராதனைகொடுத்து தீர்த்ததை யெடுத்து கணேசனைத் தியானித்து முகத்தில் மூன்று தரம் புரோசித்து மூன்றுகைத்தீர்த்தம் உட்கொடுக்கவுடனே கடியுண்டவனுக்குச் சிரசின் மேல்நோக்கிச்சென்ற விஷமானது கெருடனைக்கண்டது போல்விஷமிறங்கிவிடும். உடனே பாலன்னங்கொடுத்து ஒருவாரம்வரை பத்தியமாக உப்பு புளி கரப்பான் பண்ட

முதலிய வைகளைத்தள்ளி அப்பால் எண்ணெய் ஸ்நானம்செய்து சங்க இலையும் உப்புஞ் சேர்த்து இளவருப்பாகவருத்து அரைஉப்பும் புளியைச் சுட்டுஞ் சேர்த்துக்கொள்க.

## சகலவிஷங்களு மிறங்குவதற்கு பிரம்பு உச்சாடணக் கோலின் சித்து.

ஒரு ரூபாய் அகலமுள்ள வெள்ளித்தகட்டில் ஆகாயசக்கரமாகிய விந்து வட்டம் போட்டு அதற்கு நான்கு பக்கங்களிலும் சூலம் போட்டு அதன் உச்சியில் மகாரமும் நடுவில் சிகாரமும் அடியில் நகாரமும் வரைந்து ஷெ சூலங்களைச் சுற்றிலும்ஓம் என்று நான்கு பக்கங்களிலும் வரைந்து ஒரு கெஜ நீளமுள்ள ஒருமொளிப்பிரம்பின் முனை உச்சியில் வைத்து அதன்மேல் மற்றொரு வெள்ளிப்பூண் கட்டி மாட்டி அடியில் வேறொரு வெள்ளிப்பூண் கட்டிமாட்டி நடுவில் வெள்ளித்தகடு சுற்றி ஷெ பிரம்புக்கோலுக்கு மூலமந்திரம் ஹரி-ஓம்- ரீங் நசி -மசி-சுவாஹா வென்று பதினாயிரத்தெட்டு உருவேற்றி சித்தி பண்ணிக்கொண்டு விஷந்தீண்டி வந்தவர்களுக்கு நெற்றியில்மகாரமும் நெஞ்சினில் சிகாரமும் உந்தியில் நகாரமும் மனதினால்போட்டு உச்சியிலிருந்து மந்திரித்துக்கொண்டுவர விஷமிறங்கும். அப்படி விஷம் இறங்கிவருகிற இடத்தை நிதானித்துத் தெரிந்தே இறக்கிக்கொண்டுவரவேண்டியது. ஷெபிரம்புக்கு வெள்ளிசெவ்வாய்க்கிழமைதோறும் சாம்பிராணி சூடன் போட்டுவரச்சித்தியாகும்.

## மந்திர தியானச் சித்து.

1 ஹரிஓம் நமசிவாய வசி! சுவாஹா வென்று தியானஞ் செய்ய தேகத்தில் நோயணுகாது.

2 ஹரிஓம் அம் கிலி சிவாயநமா சுவாஹா வென்று தியானஞ்செய்ய யோகசித்திகள் உண்டாகும்.

3 ஹரிஓம் இம் ஏ சிவாயநமா சுவாஹாவென்று தியானிக்க பேய்பிசாசுகள் பிர்மராக்ஷதைகளும் தன்னைக் கண்டாலோடும்.

4 ஹரிஓம் ஐயும் நமசிவாய சுவாஹா வென்று தியானஞ் செய்யப்புத்தி வித்தைகளுண்டாகும்.

5 ஹரிஓம் நமசிவாயா சுவாஹாவென்று தியானிக்க நினைத்தகாரியங்கள் சித்தியாகும்.

6 ஹரிஓம் நமசிவாய ஊம் நமசிவாய சுவாஹாவென்று தியானிக்க தேகத்தில் குளிர்தோஷ முதலியவைகள் நிவாரணமாகும்.

7 ஹரிஓம் அரகர நமசிவாய ஓம் சுவாஹா வென்று தியானிக்க தேகசித்தி காயசித்திகளுண்டாகும்.

283 TO 286 PAGES MISSING IN BOOK

## முதன்மையில் மந்திரங்கற்றுக்கொள்ள வேண்டிய தினங்கள்

மந்திரம் அனுஷ்டிக்க வேண்டியவர்கள் சூரிய-சந்திரகிரணங்களில் மந்திரங்களை தியானஞ் செய்துகொண்டுவர வேண்டியது.

அப்படி வாய்க்காவிடில் அமாவாசியும் கார்த்திகையும் எந்த மாதங்களிலாவது ஒன்றுசேர்ந்து வருங்காலத்தில் மந்திர தியானங்களை ஆரம்பஞ்செய்ய வேண்டியது.

பௌர்ணமியன்றும் ஞாயிறு, திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி இந்த கிழமைகளில் ஆரம்பம் செய்யவேண்டியது,

மந்திரசித்தி யடைவதற்கு மேலேகண்ட தினங்களுக்கு முன்னதாகவே மந்திரங்களை மணப்பாடமாக்கி குறிப்பிட்ட தினத்தில் மந்திரங்கள் அனுஷ்டிக்க வேண்டியது.

## விஷந்தீண்டியவர்களின் சோதனை

ஆடுதின்னாப் பாளையின் மூலிகையின் வேரைத்தட்டி விஷந் தீண்டியவனுக்குக் கொடுக்க இனிப்பாயிருந்தால் நல்லபாம்பு-புளிப்பாயிருந்தால் வழலைப்பாம்பு. துவப்பாயிருந்தால் விரியன்பாம்பு. கைப்பாயிருந்தால் மபக்கரவு கடியென்று சொல்லவும்.

## சகல விஷங்களுக்கு மருந்து.

கொல்லன்கோவைக் கிழங்கு தலைசுருளிவேர் விஷப்பட்டை வகைக்குப்பலம் கால் இவைகளை குளிர்ந்த ஜலம்விட்டரைத்து வடிகட்டி அரைமாகாணிப்படி சாறுயெடுத்து உள்ளுக்கு ஒருவேளை கொடுத்து அரைமணி நேரஞ்சென்ற பிறகு இளவெண்ணீர் சாப்பிடக் கொடுக்கவும் விஷங்கள் போய்விடும். எட்டுநாள் கடும்பத்தியமிருக்கவும்.

## கலிக்கம்

பெருங்காயம், இந்துப்பு, இரதம், தகட்டு அரிதாரம் மேற்கண்டவகை நான்கும் சமமாக யெடுத்துக்கொண்டு பேய்ப்பீர்க்கஞ் சாற்றாலாட்டி உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு விஷந்தீண்டினவர்களுக்கு உமிழ் நீரினால் உரைத்து இரு கண்ணிலும் கலிக்கம்போட தலைக்கு மேற்சாடிய விஷமானது உடனே கீழ்நோக்கி இறங்கிவிடும்.

## சஞ்சீவி உருண்டை.

துருசு துத்தம் மிளகு நேர்வாளம் சமனிடைசேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றிலூரவைத்து வடிகட்டு ஷை பழச்சாற்றினாலரைத்து சிறு உண்டை பண்ணிவைத்துக்கொண்டு விஷந்தீண்டினவர்களுக்கு இரண்டுகண்ணிலும் கலிக்கம்போட மிதமிஞ்சிய விஷமானது கீழேயிறங்கும்.

## நாள்ப்பட்ட விஷங்களுக்கு

வெள்ளெருக்கன்வேர், சிரியாணங்கைவேர், வெள்ளைக்காக்கணம்வேர் இவைகள் மூன்றும் வகைக்கு நெல்லிக்காய் பிரமாணம் எடுத்து அரைத்து எலுமிச்சங்காயளவு உள்ள வெல்லத்தில் வைத்துக்கொடுக்க விஷங்களெல்லா மிறங்கும்.

## கருடஅஞ்சனம்.

இந்துப்பு அரிதாரம் பெருங்காயம் இரதம் இவைகளை சமனிடையாக வெடுத்துக்கொண்டு பேய்ப்பீர்க்கஞ் சாற்றிலாட்டிஉருண்டைசெய்து வைத்துக்கொண்டு வெற்றிலைச்சாற்றில் மந்தித்து உள்ளுக்குக் கொடுக்கவும் ஷெ உருண்டையி லொன்றை அமுதப்பாலி லுரைத்து கண்ணிரண்டிலுங் கலிக்கமிட சகலவிஷங்களுமிறங்கும்.

## நல்லபாம்பு விஷத்துக்கு மருந்து.

மேனியிலை தும்பையிலை இரண்டையும் இடித்துகால்படிசாறு வாங்கி கெருடன் கிழங்கு சேர்த்து அரைத்து கொடுக்க விஷமிறங்கிவிடும் வெள்ளெருக்கு இலையை வாய்பேசாமல் நசி மசி சுவாஹா என்று 108 உரு ஜெபித்துப் பிடுங்கி ஒருவருக்குந் தெரியாமற் கையில் வைத்துக்கொண்டு அத்துடன் மிளகு சேர்த்து அரைத்து உள்ளுக்குக் கொடுக்க விஷமிறங்கிவிடும்.

## விரியன் கடிக்கு விஷத்துக் மருந்து.

சித்திர மூலிகையின் வேரைச் சூரணஞ்செய்து வெருகடிப் பிரமாணம் ஆவின்பாலிற் கொடுக்க விஷமிறங்கிவிடும். அவுரிவேரை மிளகுடன் சேர்த்துப் பசும்பால் விட்டரைத்து அரைக்கால்படி வீதம் மூன்றுவேளை கொடுக்க விஷமிறங்கும்.

## விரியன்கடி வீக்கத்திற்கு.

தக்காளிவேர் அவுரிவேர் நாயுருவிவேர் இவை மூன்றையும் எருக்கம்பாலில் அரைத்துப்பூச வீக்கம் வத்திவிடும். எருமைச் சாணத்தில் எருக்கம்பால் விட்டரைத்துப்பூச வீக்கம் தீரும். மணத்தக்காளி தக்காளி இரண்டையும் காடிவிட்டு இடித்து சாறு வாங்கி துவாலைபோட வீககந்தீரும்.

## விரியன்கடிப் புண்ணுக்கு மருந்து.

உள்ளி வசம்பு சுக்கும் சிற்றெலியின் சதையும் சமனிடை எடுத்து சமனிடையாய்க்காச்சி எண்ணெய்யை புண்ணிற்போட்டுக் கொண்டுவர ஆறிவிடும். கோழியின் ஈரலை வகிர்ந்து கடிவாய் புண்ணில ஒருவாரங்கட்ட புண்கள் ஆறிவிடும்.

## கொம்பேரிமூக்கன் சாரைமூக்கன் கடிவிஷத்துக்கு மருந்து.

பிரண்டையின் வேரை நெல்லிக்காயளவு பசுவின் பாலிற் கலந்து கொடுக்க விஷமிறங்கி விடும்.

## மூருக்கரவு கடிக்கு மருந்து.

பாகல் இலைச்சாற்றுடன் மிளகு சேர்த்து அரைத்து அரைக்கால்படி சாறு கொடுக்கவும் விஷமிறங்கும் இவை கடித்தால் தேகங் குளிரும் உடனே நிலப்பனைக்கிழங்கை யரைத்துபாலிற்கொள்ள விஷமுங் குளிரும் நீங்கிவிடும்.

## சகல பாம்புகடி விஷங்களுக்கு விஷ மை.

வெள்ளைப்பாஷாண ரசம் நெல்லிக்காய் கெந்தகம மனோசிலை பெருங்காயம் துருசு வேப்பவிதை அரிசி சுத்திசெய்த நேர்வாளம் ஆகச் சரக்கு எட்டும் வகைக்குப் பலம்-வ ஒன்று சேர்த்து அரைவீசம்படி வேப்பெண்ணெய்யி லொருசாமம் அரைத்துகொம்புசிமிளில் வைத்துக்கொண்டு உளுந்து பிரமாணம் வெற்றிலையிற்கொடுக்க விஷமிறங்கும் பத்தியம் பசுவின் மோருஞ் சோறும் உப்பில்லாமற் கொடுக்கவும் இதுவுமன்றிபச்சரிசி, பாசிப்பயறு பசும்பாலு மூன்றுஞ் சேர்த்து வேகவைத்துக் கொடுக்கவும் உப்பு, புளி, நல்லெண்ணெய், கடுகு, கரப்பான்பண்ட முதலானவைகளை ஒரு வாரத்திற்குத் தள்ளவும் எண்ணெய் முழுக்கு ஆனபின் எல்லாஞ் சேர்த்துக் கொள்ளலாம்.

## நேர் வாள சுத்தி.

நேர்வாளத்தைசாணிப்பாலிற் வேகவைத்து கழுவி தோடுபோக்கி உள்மூளையை யெடுத்துப் போட்டு மோரில் இரண்டு தடவை அவித்து கழுவி போகாத மூளை யெல்லாம் எடுத்துவிட்டு சேர்க்கவும். பாஷாணத்தை மூன்று சேலைசெய்து வெள்ளாவியில் வைத்தெடுத்து சுத்திசெய்துக் கொள்ளவும்

## விஷம் ஏறவும் இறங்கவும்.

சூரிய கிராணத்தின்போது செவ்வாளி வேரில் வடக்கே போகிற வேருக்குக் காப்புக்கட்டி சேவல் பலிகொடுத்து அருந்துபோகாமல் ஓம்சிவயநம நாராயணவென்று உருச்செபித்துவைத்துக் கொண்டு விஷங்கடித்தவர்களுக்குக் குளிசமாடி வேரை சிரசுமுதல் கடிவாய்வரை தேய்த்திட விஷமிறங்கிவிடும். ஷை. வேரை கடிவாய் முதல் சிரசுவரை மேல்நோக்கித் தேய்த்தால் விஷ மேலேறிவிடும். எப்பவும்விஷத்தை மேலேத்தப்படாது.

## பாம்பு பிடிக்கும்வில்-

வெங்காயத்தை எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரைத்துகையில் தடவி பாம்பின் முன்போனால் படமெடுக்காது வைக்கோல் பழுதைப் போல் கிடக்கும் கடியாது வசம்பை அரைத்து கையில் தடவிக்கொண்டு பாம்பைப்பிடிக்கக் கடியாது படமெடுக்காது வெள்ளைப்பூண்டு அரைத்து கையில் தடவி பாம்பைப்பிடிக்க கடியாது வேலிப்பருத்தி இலையும் வசம்பும் சேர்த்து அரைத்து உருண்டைசெய்து பாம்பின் முன்போட படமெடுக்காது அதை அரைத்து கையில் தடவி பாம்பின் சமீபம்போக படமெடுக்காது கடியாது மேற்கண்டவாடை பாம்புக்குப் பட்டால்தான் கடியாமலிருக்கும் ஜாக்கிரதையாய்நின்று வேலை செய்யவும்.

## விஷத்தீண்டினவர்களுக்குப் பத்திய பாகம்.

ஒருவருக்கு விஷந்தீண்டி மருந்துகொடுத்தால் அவர்கள் இரவு நித்திரை செய்யக்கூடாது சாப்பாட்டுக்கு குருவையரிசிச்சாதஞ் சேர்த்துக்கொள்ளவும் சங்கஇலையும் உப்பும் சேர்த்து வருத்து உப்பைக் கொஞ்சஞ் சேர்க்கவும் புளிசேர்க்கக்கூடாது கடுகு நல்லெண்ணெய் கரப்பான் பதார்த்தங்களை ஒரு வாரத்திற்குச் சேர்க்கப்படாது ஒரு வாரத்துக்குப் பின் உப்பு புளி சேர்த்துக் கொண்டபின் கரப்பான் பதார்த்தஞ்சேர்க்கலாம்

## விஷங்களுக்கு நசியங்கள்.

வெற்றிலை, மிளகு, உப்பு இம்மூன்றையும் கசக்கி துணியில் பொட்டணங்கட்டி மூக்கிலும் இரண்டுகண்களிலும்பிழிய அடங்கிய உயிரானது திரும்பும்.

முருங்கையிலை, எருக்கிலை, தும்பை, இவைகள் மூன்றையும் கசக்கி துணியில் பொட்டணங்கட்டி நசியமிட மேல்நோக்கிய விஷமானது இறங்கும் தைவேலையுடன் நவச்சாரஞ் சேர்த்து சாறுவாங்கி நசியமிட விஷமிறங்கும்,

துளசி, தும்பை, மிளகு, உப்பு சமனிடை சேர்த்து இவைகள் மூன்றையும் சிறுநீர் விட்டு தட்டி பொட்டணங்கட்டி மூக்கு கண் செவி இவைகளில் மூன்று சொட்டுப்பிழிய விஷம் கீழேயிறங்கும்,

உள்ளி, வசம்பு, மிளகு, தும்பை துளசி வெற்றிலை இவைகளை அமுதப்பால் விட்டு தட்டி நாசி கண் காது இவைகளில் பிழிய மயக்கந் தீர்ந்து விஷமிறங்கும்,

பெருமரத்துப்பட்டை, தைவேளை, குப்பைமேனி இவை மூன்றையும் வெள்ளெருக்கம்பால்விட்டரைத்து துணியிலூட்டி நிழலில் காயவைத்து சிறுநீர்விட்டு நனைத்து நாசியிலும் செவியிலும் பிழிய விஷமிறங்கும்.

நவச்சாரத்துடன் குப்பைமேனியிலை சேர்த்து சிறுநீர்விட்டு தட்டி கண் மூக்கு செவி இவைகளில் நசியமிட சகல விஷங்களுமிறங்கும்.

தைவேளை, உப்பு, மிளகு இம்மூன்றையும் சிறுநீர்விட்டு தட்டி பொட்டணங்கட்டி கண் மூக்கு செவி இவைகளில் நசியமிட விஷமிறங்கும்.

ஊமத்தை யிலை, தைவேளை, குப்பைமேனியிலை, வெற்றிலை மிளகு; உப்பு இவ்வாறையுஞ் சிறுநீர்விட்டுத்தட்டி பொட்டணங்கட்டி கண் மூக்குச் செவி இவைகளில் பிழிய அஷ்டநாகங்களின் விஷமுந் தீரும்.

காஞ்சிரை வேரும், பெருங்காயமும் எருக்கம்பால் விட்டரைத்து உருண்டை பண்ணி வைத்துக்கொண்டு கடிவாயில் பூச விஷமிறங்கும் ஷை உருண்டையை அமுதப்பாலில் உரைத்து கண் மூக்குகளில் பிழிய போன உயிர் திரும்பும்.

தும்பை, குப்பைமேனி, வெற்றிலை, நவச்சாரம் சேர்த்து தட்டி காது, கண், செவி இவைகளில் பிழியமேல் நோக்கிய விஷமிறங்கும் சன்னி தோஷ நிவாரணமாகும்.

செம்பருந்தின முட்டைக்குள் வாள்மிளகை வைத்து நன்றாய் மூடி அடிஆளத்தில் பூமிக்குள் புதைத்து அதை யெடுத்துக்கொண்டு மூக்கரச்சாரணைச் சாற்றால் ஆட்டி யெடுதது ஓர் சிமிழில் வைத்துக் கொண்டு விஷந்தீண்டி மேல நோக்கியவர்களுக்கு கண்ணிரண்டிலும் அமுதப்பால் விட்டரைத்துப் போட விஷம் கீழே நோக்கி யிறங்கிவிடும்.

இந்த நசியங்கள் அநேகஞ் சொன்னதாவது சமயம்போல் அகப்பட்ட மருந்துகளை வைத்து நசியமிட்டுக்கொள்வதற்காக சொல்லியிருக்கிறது எருக்கம்பால் அகப்படாத விஷயத்தில் அமுதப்பால் உபயோகித்துக் கொள்ளலாம்.

## தேள்விஷங்களுக்கு மருந்து.

எருக்கம்வேர்; சிறுகச்சை. கொடமட்டிவேர். பச்சைக்கற்பூரம் எட்டிவிரை இவைகளை யெருக்கம்பால் விட்டரைத்து உருண்டை செய்து வைத்துக்கொண்டு தேள்விஷந்தீண்டினவர்களுக்கு உருண்டையை அமுதப்பாலிலாவது எருக்கம்பாலிலாவது உரைத்து கடிவாயில் போட்டு சூடுபடத்தேய்த்துவிடக் கடுப்புந்தீர்ந்து நெரியுமிறங்கிவிடும்.

ஓர்கரண்டியில் நல்லெண்ணெய்வார்த்துக் காய்ச்சிவாய்பேசாமல் மேனியிலை வெற்றிலை உப்பு மூன்றும் வாங்கி ஷை எண்ணெயில் பிழிந்து கொட்டுவாயில் ஆவி பிடிக்க நெரியும் விஷமும் மிறங்கும்.

வெங்காயத்தை இரண்டு நாசியிலும் பிழிந்து பொட்டிலுப்பை நீரில் குழைத்து சாண்டியிற்காய்ச்சி கொட்டுவாயி லாவிபிடிக்கநெரியும் விஷமுமிறங்கும்.

நவச்சாரம், வெற்றிலை, மிளகு, உப்பு, சுண்ணாம்பு இவைகளை அரைத்துக் கொண்டு வாயில் சூடுபடத்தேய்க்க விஷமிறங்கும் நவச்சாரத்துடன் சுண்ணாம்பு சேர்த்து நாசியில் நசியமிட மருந்தைக் கொட்டுவாயில் தேய்க்க விஷமிறங்கும்.

தேத்தான்விரையை அரைக்கால்படி எருக்கம்பாலில்முங்கும்படி போட்டு மூன்று நாளூரவைத்து எடுத்து நிழலிலுலர்த்தி ஒரு பாண்டத்தில் வைத்துஷை பாலில் விரையை யூட்டி மறுபடியும் உலர்த்தி எடுத்து ஒருசீசாவில் வைத்து மூடிவைத்து ஷை விரையை விஷந்தீண்டினவர்களுக்கு அமுதப்பாலிலுரைத்து அந்த விதையை கொட்டுவாயில் வைக்க ஷை விதையானது ஷை விஷத்தை யிழுத்துக் கொண்டு விஷமிறங்கினவுடனே கீழேவிழும்.

புளியுடன் சுண்ணாம்பு சேர்த்து மத்திக்க ஓர்வித சூடு உண்டாகும அதையுடனே எடுத்து கொட்டுவாயில் நன்றாய்த் தேய்த்து ஷை மருந்தை கொட்டுவாயில் வைத்து கட்ட விஷமிறங்கிவிடும்

## நட்டுவக்காலி விஷ த்துக்கு மருந்து

அவுரிவேர், காஞ்சிரைவேர் இவ்விரண்டையும் சமமாயிடித்து பொடிசெய்து வைத்துக்கொண்டு வெருகடிப்பிரமாணம் வெண்ணீரில் கொடுக்க விஷமிறங்கிவிடம்.

வேலிப்பருத்தி ஆடுதின்னாப்பாளை இரண்டையும் சமனிடை தூள்செய்து வெண்ணீரில் கொடுக்க விஷமிறங்கும்.

கொல்லன்கோவை ஆடுதின்னாப்பாளை வேலிப்பருத்தி இவைகளைச் சூரணித்து வெருகடிப்பிரமாணம் வெண்ணீரில் கொடுக விஷமிறங்கிவிடும்.

கோழியின் பிசுபிசுப்பான மலத்தை வெற்றிலையில் வைத்து அத்துடன் கிராம்பு இரண்டுவைத்து வெற்றிலையை மடித்துக் கொடுக்க விஷமிறங்கும்.

கொல்லன் கோவைக் கிழங்கை வெண்ணீரி லரைத்து உள்ளே கொடுக்க விஷமிறங்கும்.

எட்டிவேர் பட்டையை நெல்லிக்காய்ப் பிரமாணம் அரைத் அரைக்கால்படி வெண்ணீரில் கரைத்து மூன்றுவேளை கொடுத்து கொட்டுவாயில் கத்திரிக்காயைச் சுட்டுக் கட்ட விஷமிறங்கிவிடு

## சீதமண்டலி கடிக்குமருந்து.

நெருகுத் தேங்காயைத்துருவி பாலெடுத்துக்கொண்டு சுக்கு மிளகு தட்டிப்போட்டு பாலைக்காய்ச்சி சாப்பிட விஷமிறங்கிவிடும்.

## சொறிமண்டலி விஷத்திற்கு.

நன்னாரிவேரை யரைத்து ஆவின்பாலுடன் கலந்து மூன்று நாள் சாப்பிட சொரி மண்டலி விஷந்தீரும்.

## வீங்குமண்டலி விஷத்திற்கு.

அமுக்கிலாவேர் சூரைவேர் புங்கின்வேர் இண்டுவேர் தக்காளி வேர் இலுப்பைவேர் இவைகளைச் சமனிடை எடுத்து அமுரி விட்டரைத்து கடிவாயிற் பூச விஷமிறங்கி வீக்கம் வற்றிவிடும்.

## ஆறுபுள்ளி வண்டுகடிக்கு.

பழங்காடியில் பாக இலையை வேகவைத்து ஷெ ஆவியை கடிவாயில் பிடிக்க விஷமிறங்கிவிடும். சரக்கொன்னைவேரை பாலினி லரைத்துச் சாப்பிட ஷெ வண்டுகடி விஷமகலும்.

## வண்டுகடிக்கு.

வண்டுகொல்லி மரத்துப் பட்டையை புன்னைக்காய் அளவு மைபோலரைத்துப் பசும்பாலில் ஒருவாரம் கொடுக்க ஷெ விஷ மிறங்கும் ஆடுதின்னாப்பாளையின் வேரை அரைத்து துட்டிடை ஆவின் பாலில் கொடுக்க விஷமிறங்கும்.

## பூனைக்கடிக்கு மருந்து.

குப்பைமேனி சமூலத்தை பசும்பாலிலரைத்து வேளையொன் றுக்கு வீசம்படிவீதம் மூன்றுநாள் சாப்பிடவும் அவுரிவேரை அரைத்து கடிவாயில் பூசவிஷமிறங்கும்.

## செய்யான்கடிக்கு மருந்து.

கோவையிலை வெற்றிலை பருத்தியிலை கொளுஞ்சியிலை வேலிப் பருத்தியிலை முடக்கொத்தானிலை இவைகளை சமமாய்ச் சாறுவாங் கிக்காச்சி கடிவாயில்தடவ கடுப்பு எரிவு மாறிவிடும் அத்துடன் வெற்றிலைத் தம்பலத்தை கொட்டுவாயில் உமிழ விஷமிறங்கிவிடும்.

## செய்யான் கடிக்கு.

கெருடன் கிழங்கை புன்னைக்காயளவு பசும்பாலில் அரைத்து மூன்று வேளை சாப்பிட விஷமிறங்கும்.

## அரணை கடிக்கு.

சுக்கு வசம்பு இவ்விரண்டையும் சுட்டுக் கரியாக்கி பொடி செய்து பசுவம் பாலிலாவது வெண்ணீரிலாவது கொடுக்க உடல் நடுக்கம் நுரை தள்ளுதல் தடிப்புக்காணுதல் முதலானவை நீங்கு வதுடன் விஷமிறங்கிவிடும்.

## பூரான்கடிக்கு மருந்து.

குப்பைமேனியிலையை பசும்பாலில் அரைத்து அரைக்கால்படி உள்ளே கொடுக்க எரிப்பு தடிப்பு மாறி விஷமிறங்கிவிடும்.

## சோர்வுகடிக்கு மருந்து.

பனை வெல்லத்தில் வெள்ளெருக்கம்பால் ஏழுதுளி விட்டு ஒருவாரஞ் சாப்பிட கடுஞ்சோர்வு விஷந்தீரும் ஷ்டி விஷமானது கருப்பாகத் தடிப்புக் காணில் நன்னாரிவேர் புங்கின்வேர் சிறியா னங்கையிலைவேர் இவைகளைப் பாலிலரைத்து மூன்று வேளை கொடுக்க விஷமிறங்கிவிடும்.

உலகததில் மானிடர்கள் பித்ததேகம் வாததேகம் வாதபித்த தேகம் வாய்வு தேகம் பித்தவாய்வு தேகமென நாலைந்து விதமுண்டு அதில் சிலர்களுக்கு ஒவ்வொரு மருந்து விஷத்தைக் கேட்டுங் கேளாமலுமிருககும் ஆகையால் ஒவ்வொரு பாகங்களையும் நிதானித்து ஒவ்வொரு மருந்தாய்க் கொடுத்து பார்த்து விஷத்தை இறக்கவும்.

## எலிகடி விஷத்துக்கு.

ஆதாளையின் விதையை பசும்பாலிலரைத்து மூன்று நாள் சாப்பிட விஷமிறங்கிவிடும்.

அமுககிராவேரை புன்னைக்காய்ப் பிரமாணம் பசும்பாலிலரைத்து மூன்றுவேளை கொடுக்க பதினெட்டுவகை எலிகடி விஷங்கள் தீரும்.

புங்கம்வேர் வெள்ளைக்காக்கணம் வேர் இரண்டும் சமனிடை சேர்த்து பசும்பாலிற் கொடுக்க விஷமிறங்கிவிடும்.

அவுரிவேரை கொட்டைப்பாக்களவு பசும்பாலி லரைத்துக் கொடுக்க எலிகடி விஷ மிறங்கிவிடும்.

## எலிகடி பதினெட்டுக்கு.

முருங்கப்பட்டை முருங்கையிலை முருங்கைப்பூ வகைக்குப் பலம் அரையும் வைத்துக்கொண்டு மூன்று வைப்புவைத்த பெரிய கோழியை யறுத்து அந்த இரத்ததைவிட்டு மூன்றுஞ்சேர்தது அரைத்து முழு உருண்டை செய்து வைத்துக்கெண்டு அரப்பு நல்லெண்ணெய் வெந்நீரியுந் தயாரிததுக்கொண்டு எலிகடித்தவர்களை உட்காரவைத்து எண்ணெய்யை தேய்த்துக் கொண்டிருககும் போதே ஒரு உருண்டையும தண்ணீர் விடும்போதே ஒரு உருண்டையும் கொடுக்கவும் தலைதுவட்டினதின்மேல் கீழேமிதிககப் படாது செருப்புப்போட்டுக் கொள்ளவும் ஏழு நாளைக்கு உப்பு புளி காப்பான் பண்டமாகாது வெருங்கஞ்சி மிளகாயை சுட்டுக் கடித்து சாப்பிடவும் எட்டாநா ளாரப்போட்டு ஒனபதாநாள் ஸ்நானஞ்செய்து உப்பு புளி காப்பான்பண்டம் சோக்கவும் விஷ

மிறங்கிவிடும் எலிகடிச்ச வுடனே இரவானாலும் பகலானாலும் முருங்கமரத்தருகில் கிளறு பிறந்தகோலத்துடன் அந்த முருங்க மரத்தை மூன்றுதாரஞ்சுற்றி மூன்றாவது சுத்தில் முருங்கப்பட்டை யைக் கடித்து மென்றுமிறக்க விஷமிறங்கிவிடும்.

## வெறிபிடித்த நாய் நரி குதிரை மாடுகடித்த விஷத்திற்கு மருந்து.

ஊமத்தையிலையை நெல்லிக்காய்ப் பிரமாணம் அரைத்து அரைக்கால்படி பசும்பாலிற்கலந்து கடித்தவர்களுக்கு கொடுக்க வும் சாப்பிட்டவுடனே அவர்கள் சாப்பிடக்கூடிய பதார்த்தங்க ளெல்லாம் அன்றே பத்தியம அன்னியில் கொடுக்கவும் மருந்து சாப்பிட்ட அன்று வெறிவரும் பயப்படாமல் இருபத்தியொரு குடங் குளிர்ந்த தண்ணீர் கொண்டுவந்து மருந்து கொடுத்தவர்க ளுக்கு சிரசின்மேல் தண்ணீர் ஊற்ற வெறிவிலகும். மருந்து சாப் பிட்ட அன்று சாப்பிட்ட பதார்த்தங்களை மட்டுந்தான் சாப்பிட வேண்டும் சாப்பிடாத பதார்த்தங்க ளெல்லாம் நாற்பது நாளைக் குச் சேர்க்கக்கூடாது. நாற்பதாநாள் ஸ்நானஞ்செய்து சகலமும் சேர்த்துக்கொள்ளலாம்.

## மாடுகளுக்கு விஷந்தீண்டினால்.

தலைசுருளி வேர் விஷப்பட்டை இவ்விரண்டும் ஒரு பங்கும் கொல்லன் கோவைக்கிழங்கு இரண்டு பங்கும் சேர்த்து குளிர்ந்த தண்ணீர் விட்டரைத்து காலேயரைக்கால்படி வடிகட்டி எடுத்து கொட்டத்தில் வைத்து ஊத்தவேண்டியது வைக்கோல் போடவும மருந்து கொடுத்து ஒருநாளிகை கழித்து நாலுபடி தண்ணீர் அதி கச் சூடில்லாமற் காயவைத்து கொட்டத்தில் வைத்து ஊத்த விஷ மிறங்கிவிடும் பத்தியம் பச்சைப்புல் பருத்திக்கொட்டை ஊரலா காது.

## கொழுப்பட்ட மாடுகளின் விஷத்திற்கு.

உழவுமாடுகளுக்கு காலிற் கொழுப்பட்டால் ஓர் செம்பில் நிறைமடைத் தண்ணீர் கொண்டுவந்து அருகம்புல்லினால் அந்தத் தண்ணீரில் இதிலிருக்கிற மூன்றாவது விஞ்சை சக்கரம் வரைந்து நந்திபகவானை தியானித்து ஹரிஓம் கங் கெங் கணபதியே நசிமசி சுவாஹாவென்று மூலமந்திரத்தை ஆயிரத்தெட்டு உரு ஜெபித்து ஷெ தீர்த்தத்தை கொழுப்பட்ட இடத்தில் மூன்றுதரந்தெளித்து மாட்டின் முகத்திலு மரைந்துவிட விஷமிறங்கிவிடும் வேப்பெண் ணெய்யில் சேங்கொட்டையைத் தட்டிப்போட்டு காச்சி மூன்று வேளை கொழுப்பட்ட இடத்தில் போட வீங்கியிருந்த போதி லும் வற்றி புண்ணும் ஆறிவிடும்.

கெருடன் கிழங்கென்பது கொல்லன் கோவைக் கிழங்காகும் அதைச் சேர்க்க வேண்டிய இடத்தில் அரைக்கால்பலம் சேர்த்துக் கொள்ளவேண்டியது.

## மந்திரசித்தி யடையவிதி.

நீதிவழுவாது நற்குணம் நன்னடை நல்லொழுக்கத்துடனிருப்பவர்களுக்கும் பிறர் தாரதிச்சை யில்லாதவர்களுக்கும் மந்திரியான சித்தியில் விருப்ப முடையவர்களுக்கும் மந்திராரூடம் சித்தியாகும்.

## மந்திராரூடம்.

முற்றிற்று.

---

இந்த சாஸ்திரமானது மதுரையைச் சேர்ந்த கோச்சடைக் கிராமம் உள்க்கடை பிராட்டியார் பத்து கிராமத்தில் வேளாளர்களின் பஜனை மடம் உபாத்தியாயரும் விஷவைத்திய மாந்திரீகருமாகிய தி. கருப்பையா பிள்ளை யவர்களிடமிருந்து ஏட்டுப்பிரதி வாங்கி அச்சிடலானது. இதில் ஏதாவது தெரிந்துகொள்ள வேண்டுமானல் மேற்படியாரிடம் போய்க்கேட்டுத் தெரிந்துகொள்ளளாம்

## விளம்பரம்.

விஷவைத்திய ஆரூடம் எட்டு அதில் சித்தராரூடம் சர்ப்பாரூடம் மந்திராரூடம் இந்த மூன்றும் ஒரே புத்தகமாக அச்சிட்டிருக்கிறது சத்தியாரூடம் கெருடாரூடம் கெருட பஞ்சாட்சர ஆரூடமும் சக்கரத்துடன் மூன்றுஞ்சேர்த்து ஒருபுஸ்தகமாகவும் தேவியாரூடமும் நாகாரூடமும் சிவஆரூடமும் இந்த மூன்றுஞ்சேர்த்துச் சக்கரத்துடன் ஒரு புஸ்தமாகவும்தனித்தனி அச்சிட்டுத் தயாரிலிருக்கிறது.

## தேவரிஷி முனிசித்தர்கள் வயித்திய வாத யோக ஞான சாஸ்திரங்கள்.

பதினெண் சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய சாஸ்திரங்களின் சூஸ்திரங்களெல்லாவற்றையும் ஒன்ருய்த்திரட்டிப் பதினெட்டுச் சித்தர்களுக்கும் பதினெட்டுப் புஸ்தகமாக வெளியிடத் தீர்மானித்து இதுவரை ஏட்டுப்பாகம் அச்சிட்டுத் தயாராக இருக்கிறது ஒருபாகம் 1-க்கு ரூ 1—0—0 மற்றபாகங்கள் பத்து அச்சுப்போட்டுக்கொண்டுவருகிறேன் இதுவுமன்றிப் பெருநூற்களும் அச்சிட்டுக்கொண்டுவருகிறேன். அம்நேகபெருநூல்களும் அச்சிட்டுத்தயாரிலிருக்கிறது.

இப்படிக்கு

இ. ராம. குருசாமிக்கோன்

புஸ்தகஷாப், புதுமண்டபம் மதுரை.